இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


கூடங்குளம் அணு உலை
பக். 12


சமூக வலுவூட்டல் விருது கொமர்ஷல் வங்கி வசம்
பக். 13


மனோகரா இளைஞர் அணி உதைபந்தாட்டத்தில் சம்பியன்
பக். 26


20/20 போட்டியில் எப்போது டோனி அரைச்சதம் அடிப்பார்?
பக். 27


# உதயன்

பக்கம் : 56

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 110 வள்ளுவர் ஆண்டு: 2045 பங்குனி 02 , ஞாயிறு 16.03.2014



உதயன் அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே...


## கறுப்புப்பட்டி போராட்டமும் கவனயீர்ப்பும்

யாழ்ப்பாணம்,மார்ச் 16
கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று சந்தேகிக்கப்படும் கோப்பாயைச் சேர்ந்த ஆசிரியர் கார்த்திகேசு நிரூபனின் சாவுக்கு நீதி வேண்டி இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை கறுப்புப்பட்டிப் போராட்டத்தில் ஈடுபட உள்ளது. அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு யாழ். நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றைச் சங்கம் நடத்த உள்ளதாகவும் அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். கடந்த செப்ரெம்பர் மாதம்

25 ஆம் பக்கம் பார்க்க

## கொலைக்களமானது நேற்று பொன் அணிகளின் போரிடம்

*பற்றிக்ஸ் பழைய மாணவன் அடித்துக் கொலை.*
*3 பேரைத் தேடுகிறது பொலிஸ். 4 பேர் நேற்றிரவு வரை சரண்*

யாழ்ப்பாணம்,மார்ச் 16
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பொன் அணிகளின் போர் துடுப்பாட்டத்தில் பழைய மாணவ ரசிகர்கள் இடையே ஏற்பட்ட கைகலப்பில் இளம் தந்தை ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலை செய்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களில் 4 பேர் நேற்றிரவு வரை பொலிஸாரிடம் சரணடைந்

25 ஆம் பக்கம் பார்க்க

## உண்மைப் போர்களாகின பெரும் போர் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 16
வடக்கில் இடம்பெற்ற இரண்டு பெரும் போர்களும் நேற்றைய தினம் குழப்பத்திற்குள்ளாகி கைவிடப்பட்டன.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் மாபெரும் போர் என்று வர்ணிக்கப்படும் துடுப்பாட்டம் குழப்பம் காரணமாக முடிவடையாமலேயே கைவிடப்பட்டது.
போட்டியின் மூன்றாம் நாளான நேற்று, நடுவர் வழங்கிய ஆட்டமிழப்பு தொடர்பில் ஏற்பட்ட

25 ஆம் பக்கம் பார்க்க

# பிடியை இறுக்கியது அமெ. வந்தது 2ஆவது வரைவு

## ஐ.நா. விசாரணைக்கு மேலும் அழுத்தம்; கூட்டமைப்பின் திருத்தங்களும் உள்ளடக்கம்

ஜெனிவா, மார்ச் 16
இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்தின் இரண்டாவது வரைவு திட்டமிடப்பட்டபடி வெளியானது. இந்த வரைவு, இலங்கையில் நடந்த மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.
முதலாவது வரைவில் திருப்தியில்லை என்று தமிழர் தரப்பில் எழுப்பப்பட்ட கடும் விமர்சனத்தைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் தூதர்களைக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியபோது வலியுறுத்திய விடயங்களும் இரண்டாவது வரைவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று ஜெனிவாவில் நிற்கும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.
பிரேரணையின் அனைத்து அம்சங்களையும் கவனித்து நடவடிக்கை எடுக்கும் விதத்தில் அந்தத் திட்டத்தின் செயற்பாட்டை முழுஅளவில் விரிவுபடுத்த வேண்டும் என்ற புதிய தொடர் சேர்க்கப்பட்டுள்ளது.

25 ஆம் பக்கம் பார்க்க

## ரயில் மோதி இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச், 16
தென்மராட்சி, மிருசுவிலில் ரயில் மோதி இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.
தற்போது அமைக்கப்பட்டு வரும் புகையிரதப் பாதையைக் கடக்க முற்பட்ட சமயம் அவர் ரயிலில் மோதுண்டார் என்று கூறப்படுகிறது. படுகாயம் அடைந்த அவர், வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட சில மணி நேரத்தில் உயிரிழந்தார்.
கொடிகாமம் பெரிய நாவலடியைச் சேர்ந்த சிவராசா ஜெகன் (வயது 32) என்பவரே உயிரிழந்தார். கடந்த வாரமும் வவு

25 ஆம் பக்கம் பார்க்க


வவுனியா பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

## ஜெயகுமாரியை விடுவிக்கக் கோரி வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
கிளிநொச்சியில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயகுமாரியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியும், சட்டவிரோத கைதுகளைக் கண்டித்தும், காணாமற்போனோரைக் கண்டுபிடித்துத் தருமாறு வலியுறுத்தியும் வவுனியா நகரில் நேற்று முற்பகல் 11.30 அளவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.
கிளிநொச்சி தருமபுரத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து பா.ஜெயகுமாரியும்

26 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவை வழங்க வேண்டும்

*இந்திய அரசிடம் பிரிட்டன் நேரடியாகக் கோரிக்கை*

லண்டன்,மார்ச் 16
இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானத்துக்கு இந்தியாவின் ஆதரவைப் பிரிட்டன் நேரடியாகவே கோரியுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம், பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
பொதுநலவாய நாள் நிகழ்

25 ஆம் பக்கம் பார்க்க

## கச்சதீவில் நேற்று 5,300 பேர் குவிவு

கச்சதீவு, மார்ச் 16
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று மாலை திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் ஆரம்பமானது. இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து நேற்றிரவு வரையில் 5300 பேர் கச்சதீவை வந்தடைந்திருந்தனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் நெடுந்தீவு பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடற்படையினர் வந்திருந்த அனைவருக்கும் உணவுப் பொதிகளை வழங்கினர்.

26 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவை சீண்டுகிறார் மஹிந்த

கொழும்பு,மார்ச் 16
காலி - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலையை நேற்றுத் திறந்து வைத்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு உரையாற்றும்போது இந்தியாவைச் சீண்டிப் பார்க்கும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார்.
ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தவறான வெளிவிவகாரக் கொள்கைகளால்தான் வெளிநாட்டு இரா ணுவம் நாட்டுக்குள் நுழைய சந்தர்ப்பம் கிடைத்தது என்று தெரிவித்துள்ளார்.
இந்திய இராணுவம், இலங்கையின் வடபிராந்தியத்துக்குள் வந்தமையினால், இலங்கை இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்க வேண்டி ஏற்பட்டதாகவும், இது இலங்கை

25 ஆம் பக்கம் பார்க்க

## கஜீபனுக்கும் ஜெயகுமாரிக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை

*அவரது மாமனார் கருத்து*

யாழ்ப்பாணம்,மார்ச் 16
கிளிநொச்சி தருமபுரத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஜெயகுமாரிக்கும், பயங்கரவாத பொலிஸாரால் தேடப்பட்டு வருபவரான கஜீபனுக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென கஜீபனின் மாமனார் பாலகுருபரன் தெரிவித்தார்.
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் தேடப்பட்டு வரும் கஜீபனின் மனைவியான சர்மிளா (வயது -26) கடந்த 12 ஆம் திகதி திருகோணமலையில்

26 ஆம் பக்கம் பார்க்க

## கைதாகும் முன் ஜெயகுமாரி சனல் -4இற்கு நேர்காணல்

*கடந்த மாதம் அவரது காணொலி அனுப்பப்பட்டுள்ளது*

யாழ்ப்பாணம்,மார்ச் 16
தேடப்படும் குற்றவாளி ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட ஜெயக்குமாரி,தான் பின்தொடரப்படுகிறார் என்றும் அச்சுறுத்தப்படுகிறார் என்றும் பிரிட்டனின் சனல் - 4 ஊடகத்துக்கு காணொலி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.
ஜெயகுமாரியின் நேர்காணல் அடங்கிய அந்தக் காணொலியை சனல்-4 ஊடகம் இப்போது வெளியிட்டுள்ளது.

26 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

# ஏ- 9 வீதியை மறித்து மக்கள் போராட்டம்

### இந்துபுரத்துக்கு மின்சார வசதியை ஏற்படுத்தக்கோரி

கிளிநொச்சி, மார்ச் 16

முல்லைத்தீவு இந்துபுரம் கிராம மக்கள் தமது கிராமத்துக்கு மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக்கோரி நேற்று வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மீள்குடியேற்றம் இடம்பெற்று நான்கு வருடங்கள் கழிந்த நிலையிலும் தமது கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. நீண்ட நாள்களுக்கு முன்னர் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள போதிலும் மின்சாரம் வழங்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனைவிட அடிப்படை வசதிகள் எவையும் கிராமத்தில் ஏற்படுத்தித் தரவில்லை என்ற காரணங்களைக் கூறியே மக்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர். காலை 9 மணிக்கு கூடிய மக்கள் ஏ-9 பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதால் சுமார் ஒரு மணி நேரம் வரை அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

இதனை அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினர். இதன்போது மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் உங்களது கோரிக்கைக்கு தீர்வுகாண வலியுறுத்துகிறோம். வீதியில் போக்குவரத்துக்கு இடையூறு செய்யாதீர்கள் எனக் கோரினர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ-18)

# விபூசிகாவையும் தாயாரையும் விடுவிக்க சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 16

உண்மையை உலகுக்கு எடுத்துரைத்தமைக்காக கைது செய்யப்பட்டுள்ள சிறுமி விபூசிகா மற்றும் அவரது தாயாரான ஜெயகுமாரி ஆகியோரை விடுவிக்க ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தி உள்ளார்.

மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் விசேட ஊடக மாநாடு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமற்போன தனது அண்ணனைத் தேடி ஆர்ப்பாட்டம் செய்த விபூசிகா என்ற சிறுமியையும், அவரது தாயாரான ஜெயகுமாரியையும் கைது செய்து இலங்கை அரசு பாவச்சாதனை படைத்துள்ளது. இவர்களது கைது மக்கள் கண்காணிப்பு குழுவுக்கும், இந்த நாட்டு மற்றும் வெளிநாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும் எந்த வித ஆச்சரியத்தையும் ஏற்படுத்தவில்லை.

வட பகுதியில் நடைபெற்ற காணாமல் போனோரது குடும்ப அங்கத்தவர்களின் ஆர்ப்பாட்டங்களில் சிறுமி விபூசிகாவும், அவரது தாயாரும் பிரதான பங்கு வகித்திருந்தனர்.

இதனை கடந்த வருடம் அரசின் அழைப்பை ஏற்றுஇலங்கை வந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும், பொது நலவாய மாநாட்டுக்கு வந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும், நேரடியாக அவதானித்துச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து தன்னை மர்ம நபர்கள் தொடர்வதாகவும், தனக்கும் மகளுக்கும் அச்சுறுத்தல் உள்ளதாகவும் ஜெயகுமாரி, மக்கள் கண் காணிப்பு குழுவுக்கு தகவல் அனுப்பி இருந்தார். அத்துடன் அவர் தனது நிர்க்கதி நிலைமை தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கும், கொழும்பில் உள்ள தூதரகங்களுக்கும் அறிவித்திருந்தார் என்பதும் எமக்கு தெரியும்.

**திட்டமிட்ட நடவடிக்கை**

காணாமற்போன தமது உறவுகளை தேடி ஆர்ப்பாட்டம் செய்யும் குடும்ப அங்கத்தவர்களை கைது செய்து தடுத்து வைக்கும் நடவடிக்கையாகவே நாம் இதை கருதுகிறோம்.

பயங்கரவாதிகளை தேடி அழிக்கின்றோம் என்ற போர்வையில், காணாமற்போன தம் உறவுகளை தேடி அலைபவர்களை நீண்ட நாள் வேவு பார்த்து, அச்சுறுத்தி கைது செய்வதை நாம் ஏற்க முடியாது.

**அச்சப்படும் அரசு**

சிறுமி விபூசிகா மற்றும் அவரது தாயாரான ஜெயகுமாரி ஆகியோர், ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு சாட்சியம் அளித்து விடுவார்களோ என்ற அச்சம் காரணமாக அரசு அவர்களைக் கண்காணித்து அச்சுறுத்தி தற்போது கைதும் செய்துள்ளது.

**அண்ணன் உயிருடன் இருப்பதாக கண்டுபிடிப்பு**

விபூசிகாவின் கடைசி அண்ணன் இராணுவத்திடம் சரணடைந்தவர் என்றும், அதன்பிறகு அவர் காணாமற் போயிருந்தார் என்றும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்ட புனர்வாழ்வு அளிக்கப்படுவோர் புகைப்படத்தில் அவர் உயிருடன் இருக்க காணப்படுகிறார் எனவும், அவரை தங்களுக்கு காட்டுங்கள் எனவுமே விபூசிகாவும், அவரது தாயாரான ஜெயகுமாரியும் குரல் கொடுத்து வந்தனர்.

**சாட்சிகள் பாதுகாப்பு**

நடைபெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாக சாட்சியம் கூறி, சர்வதேச சமூகத்துக்கு தங்கள் துயர்களை எடுத்துச் சொல்லும் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது சர்வதேச நியதி. இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும், பொதுநலவாய மாநாட்டுக்கு வந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் இதையே கூறிச் சென்றனர். இந்த நிலையிலேயே விபூசிகாவுக்கும் அவரது தாயாருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே உத்தரவாதம் அளித்துச் சென்ற சர்வதேச தலைவர்களே இவர்களது பாதுகாப்புக்கும் விடுதலைக்கும் பதில் கூற வேண்டும் - என்றார்.

இந்த ஊடக மாநாட்டில் மக்கள் கண்காணிப்பு குழுவின் ஏற்பாட்டாளரான மனோ கணேசனுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிறிதுங்க ஜயசூரிய, அசாத் சாலி, விக்கிரமபாகு கரு ணாரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ -5)



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தைக் கண்டித்து அரச ஆதரவு குழுக்களைத் திரட்டி எதிர்ப்புப் பேரணி ஒன்று நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் நடைபெற்றது. (ஐ-421)

## கோஷ்டி மோதலால் கர வெட்டியில் 11 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 16

கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 5 பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியில் வசிக்கும் இரண்டு தரப்பினருக்கு இடையே நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவர்கள் நேற்றுமதியம் மோதலில் ஈடுபட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர்களை நாளை திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# நேற்றும் தொடர்ந்தது வன்னியில் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 16

கிளிநொச்சியில் நேற்று பதற்ற நிலை சற்றுத் தணிந்திருந்தாலும், சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி தருமபுரத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து, அந்தப் பகுதி முழுவதும் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டிருந்தன.

மேலும் வீதிகள் தோறும் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு மக்கள் மறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதனால் முல்லைத்தீவு கிளிநொச்சிப் பகுதிகளில் பதற்றநிலை கடந்த இரண்டு நாள்களாக அதிகரித்து இருந்தது.

நேற்று பதற்ற நிலைமை சற்று தணிந்திருந்தாலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் தமது சோதனை நடவடிக்கைகளை தொடர்ந்தனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ- 5)

## ஸ்கான் கிளினிக் நாளை இல்லை

தென்மராட்சி, மார்ச் 16

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை ஸ்கான் கருவி பழுதடைந்துள்ளது. இதனால் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஸ்கான் கிளினிக் நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## இளைஞரைத் தீண்டியது பாம்பு

தென்மராட்சி, மார்ச் 16

பனம் பாத்தி பிடுங்கியவர் அதனுள் மறைந்திருந்த பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சுபமாறன் வசீகரன் (வயது 18) என்ற இளைஞனே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-9)

# இலங்கை அரசு மீது ஒரு நாள் சர்வதேச விசாரணை வந்தே தீரும்

### கூட்டமைப்பின் மட்டக்களப்பு எம்.பி. நம்பிக்கை

எருவில், மார்ச் 16

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், அவற்றுக்கு பொறுப்புக் கூறாது இழுத்தடித்தல் போன்ற காரணங்களால் இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை ஒன்று தவிர்க்கமுடியாதது. அந்த விசாரணை இலங்கை அரசு மீது ஒருநாள் வந்தே தீரும் இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன்.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 25ஆவது கூட்டத்தொடர் தற்போது ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது. இதில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முக்கியமாக ஆராயப்படுகிறது. இந்த நெருக்கடியான நிலையில் இலங்கை அரசு தம்மை அந்த ஆபத்திலிருந்து தப்ப வைக்க வடக்கு கிழக்குப் பகுதிகளில் பல்வேறு சூழ்ச்சி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக ஐ.நா. சபைக்கு எதிராக தமிழ் மக்கள் போராட்டம் நடத்துவது போல் காட்டுவதற்காக தமிழ் மக்களை ஏமாற்ற அரசு முயற்சித்து வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் இவ்வாறான ஆர்ப்பாட்டம் ஒன்றை பொதுபல சேனா [illegible] அரசு நடத்தியுள்ளது. இதை சர்வதேச சமூகம் நன்றாகவே புரிந்துகொள்ளும்.

ஐ.நா. சபை மூலம் இலங்கைக்கு எதிராக இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை கொண்டுவரப்பட வேண்டும். இதன் மூலம் இலங்கையில் நடைபெற்ற போரால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்துக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களை மறைக்கும் வகையில் அரசு செயற்பட்டுவருகிறது. காலத்தை இழுத்தடித்து வருகிறது. சர்வதேச நாடுகள் சிலவற்றின் ஆதரவுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மறைப்பதற்கும் முயற்சித்து வருகிறது.

எது எப்படியென்றாலும் இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை ஒன்று [illegible] வந்தே தீரும் [illegible] தமிழ் மக்களுக்கு நீதி [illegible]டைக்கும்-என்றார். (ஐ-31)



புகைத்தலுக்கெதிரான விழிப்புணர்வுப் பேரணியில் கலந்துகொண்டோர்.

## காரைநகரில் புகைத்தலுக்கு எதிராகப் பேரணி

காரைநகர், மார்ச் 16

காரைநகர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில் புகைத்தலுக்கெதிரான விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி முன்றலில் ஆரம்பமான இந்தப் பேரணி காரைநகர் வலந்தலைச் சந்தியில் நிறைவு பெற்றது. பேரணியில் இந்துக் கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளின் மாணவர்கள், பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றின் ஊழியர்கள் சுகாதாரத் தொண்டர்கள், மருத்துவமாதுக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

'புகை மரணக்குகை' என்ற தொனிப்பொருளிலான இந்த விழிப் புணர்வுப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் புகைத்தலுக் கெதிரான பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் புகைத்தலால் வரும் தீமைகள் தொடர்பாக சுட்டிக்காட்டி மக்களை புகைத்தலில் இருந்து விடுபடுமாறு கோரினர். (ஐ-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் குவிந்தனர் இலங்கை இந்திய பக்தர்கள்...

படங்கள்: கச்சதீவில் இருந்து சோபனா, தட்சா



கச்சதீவில் பதிவுசெய்யும் கடற்படையினர்



இந்தியாவில் இருந்து கச்சதீவில் கரையிறங்கும் பக்த அடியார்கள்





நேற்று மாலை கச்சதீவில் இடம்பெற்ற சிறப்பு வழிபாட்டின் போது.



அந்தோனியாரின் ஆசிவேண்டி வழிபடும் அடியார் ஒருவர்




நேற்றிரவு இடம்பெற்ற வழிபாட்டின் பின் திருச்சொரூப பவனி

# வடக்கில் ராணுவத்தை அகற்ற அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

## ஆஸி. அதிகாரிகளிடம் வடக்கு அமைச்சர்கள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கில் காவலரண்களையும் சிறு முகாம்களையும் மூடிவிட்டு இராணுவத்தினர் பெரிய முகாம்களுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர். இதனைப் படைக் குறைப்பு என்று சொல்ல முடியாது. இந்த உண்மையைப் புரிந்துகொண்டு ஆஸ்திரேலிய அரசு வடக்கிலிருந்து படைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு ஆஸ்திரேலிய அதிகாரிகளிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர் வடமாகாண அமைச்சர்கள்.

இரு நாள் பயணமாக வட பகுதிக்கு வருகை தந்திருந்த, ஆஸ்திரேலிய அரசின் வெளிவிவகாரத் திணைக்கள நிறைவேற்று அதிகாரி ஜொன் பொனர், ஆஸ்திரேலிய தூதரகத்தின் அரசியல் பிரிவுத் துணைச்செயலர் எட்வினா சின்கிளெயர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் ந்ஸ்ரீன் மரிக்கார் அகிய மூவரும், வடக்கு மாகண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரை முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.



வடக்கு அமைச்சர்களுடன் ஆஸி. பிரதிநிதி

இந்தச் சந்திப்புத் தொடர்பாக விவசாய அமைச்சர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

எமது மக்கள் இந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்வதை நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால் எமது இளைஞர்களுக்கு அவர்களது தரத்துக்கு ஏற்ப வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள இங்கு சாதகமான நிலை இல்லை. தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலையான போராளிகள் இங்கு தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்றே உணருகின்றனர். இதனால்தான் தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

போர் முடிந்து ஐந்து ஆண்டுகளைத் தொடவுள்ள நிலையிலும் இன்று வடக்கில் இராணுவ மேலாதிக்கமே நிலவுகிறது. அரசு காவலரண்களையும் சிறு முகாம்களையும் மூடிவிட்டுப் படைக்குறைப்புச் செய்ததாகச் சொல்லுகிறது. ஆனால் இதில் எந்த உண்மையும் இல்லை. இராணுவத்தினர் தற்போது பெரிய முகாம்களுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர் என்பதுதான் உண்மை. இன்று சிவில் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் இராணுவம் தலையிடுகின்றது. தொழில் முயற்சியில் இராணுவம் ஈடுபடுகின்றது. இதனால் எமது இளைஞர்களின் வேலைவாய்ப்புப் பறிக்கப்படுகின்றது. வடக்கில் பெரும்பான்மையான மக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு காலத்தில் விவசாயத்தைத் தான் மேற்கொண்டு வந்தனர். ஆனால் இன்று போர் எல்லாவற்றையும் சீர்குலைத்து விட்டது. வடக்கின் மிக வளமான பகுதியான வலி. வடக்கில் 6 ஆயிரத்து 400 ஏக்கர் காணியை பொதுமக்களிடம் இருந்து இராணுவம் அபகரித்து வைத்திருக்கிறது.

விவசாயப் பண்ணைகள் பலவற்றை இராணுவமே ஆக்கிரமித்து வைத்திருக்கிறது.

போரின் போது கைது செய்யப்பட்ட இளைஞர்களையும், யுவதிகளையும் கணிசமான அளவில் அரசு விடுதலை செய்திருப்பது உண்மைதான். அவர்களுக்குப் புனர்வாழ்வில் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டதாக அரசு கூறி வந்தாலும் அந்தப் பயிற்சி களைக் கொண்டு அவர்களால் வருவாய் தரும் எந்தத் தொழிலையும் தேடிக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது. விடுதலையான போராளிகளை மீளவும் கைது செய்யும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன. இவை போன்ற காரணங்களால்தான் தமது எதிர்காலம் குறித்த நம்பிக்கையில்லாமல் மக்கள் தங்கள் உயிரைப் பணயமாக வைத்து ஆஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்கின்றனர். இது தான் உண்மை நிலை. இதை ஆஸ்திரேலிய அரசு புரிந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்கள் இவ்வாறு புலம்பெயர்வதை கட்டுப்படுத்த வேண்டும் எனின் ஆஸ்திரேலிய அரசு வடக்கில் இருக்கும் இராணுவத்தை மீளப் பெறுமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும். இதன் மூலம் தான் தமிழ் மக்களது நிம்மதியான வாழ்வை வடக்கில் நிலைநாட்ட முடியும் என்று தாம் சுட்டிக்காட்டியதாக, அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-18)

## வர்த்தகர் கடையை விட்டு தலைமறைவு

தென்மராட்சி, மார்ச் 16

சாவகச்சேரி நகரின் வர்த்தகர்களில் மேலும் ஒருவர் தலைமறைவாகியுள்ளார். வியாபார வீழ்ச்சியினால் கடன் தொல்லை அதிகரித்ததனால் குடும்பத்தினருடன் அவர் தலைமறைவாகிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு முன்னரே வர்த்தகர் தலைமறைவாகிய போதிலும் வர்த்தக நிலையம் தொடர்ந்து இயங்கி வந்ததாகவும் கடந்த வாரம் இரவிரவாக வர்த்தக நிலையத்தினுள் இருந்த பொருள்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு நிலையம் மூடப்பட்டுள்ளதாகவும் சாவகச்சேரி வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, குறித்த புடைவைக் கடையின் உரிமையாளர் சிகிச்சை பெறுவதற்காக மனைவியுடன் இந்தியா சென்றுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

சாவகச்சேரி நகரில் ஏற்கனவே வேறு வர்த்தகர்கள் சிலரும் கடன் தொல்லையால் இவ்வாறு தலைமறைவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் தொடரில் முல்லை.ம.வியை வீழ்த்தி முள்ளியவளை வித்தியானந்தா அபார வெற்றி

முல்லைத்தீவு,மார்ச்16

முள்ளியவளை வித்யானந்த கல்லூரி அணிக்கும் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வித்யானந்த கல்லூரி அணி 233 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

முன்னதாக நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வித்யானந்த கல்லூரி அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய வித்யானந்த கல்லூரி அணி 48.1 பந்துப்பரிமாற்றங்களை எதிர் கொண்டு 298 ஓட்டங்களை பெற்று சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அதிக பட்சமாக அணித்தலைவர் அஞ்சயன் 69 பந்துகளை சந்தித்து 12 ஆறு ஓட்டங்கள் 10 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 128 ஓட்டங்களைப்பெற்றார். விதுசன் 18 பந்துகளை எதிர் கொண்டு 3 ஆறு ஓட்டங்கள் 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 51 ஓட்டங்களையும், தயானன் 84 பந்துகளை எதிர் கொண்டு 1 ஆறு ஓட்டம் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 41 ஓட்டங்களையும் அணி சார்பாக பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணி சார்பாக துஷ்யந்தன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற பந்து பரிமாற்றங்கள் அடங்கலாக 47 ஓட்டங்களைகொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஜனிசன் 10 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 48 ஓட்டங்களைக்கொடுத்து 3 இலக்குகளையும் வேணுப்பிரியன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 50 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் அணி சார்பாக பெற்றனர்.


வித்தியானந்தா அணி

பதிலுக்கு 299 ஓட்டங்கள் என்னும் கடினமான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மகா வித்தியாலய அணி, வித்யானந்த கல்லூரியின் பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் 25.2 பந்துபரிமாற்றங்களை மட்டும் எதிர்கொண்டு 65 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அதிக பட்சமாக அனுசன் 11 ஓட்டங்களையும் ஏனையோர் ஒற்றை இலக்க ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் வித்யானந்த அணி சார்பாக அருணா 4.2 பந்துபரிமாற்றங்கள் பந்து வீசி 1 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றம் அட்ங்கலாக 11 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும் அஞ்சயன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 1 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றம் அட்ங்கலாக 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் இப்ராஷ் 8 பந்துபரிமாற்றங்கள் பந்து வீசி 1 ஓட்டமற்ற பந்துபரிமாற்றம் அட்ங்கலாக 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டத்தின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதையும் போட்டியின் ஆட்ட நாயகன் விருதையும் வித்யானந்த கல்லூரி அணித்தலைவர் அ.அஞ்சயனும் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை ப.அருணாவும் பெற்றுக் கொண்டனர். (ஜ)

## நீரை வழங்குவதற்கு ஒட்டுசுட்டானில் எதிர்ப்பு

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட பெரிய மற்றும் சிறிய குளங்களில் உள்ள நீரை பயிர்ச் செய்கைகளுக்கு கெனத் திறந்துவிட வேண்டாம் என கிராம மட்ட அமைப்புக்களிடம் பொதுமக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மழையின்மை காரணமாக இந்தக் குளங்களில் சிறிதளவு நீரே காணப்படுகின்றது. இக் குளங்களின் கீழ் சிறு தானியப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்து சிலர் முயன்று வருகின்றனர். இதில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்காது விட்டால் இப் பிரதேசத்தின் கால் நடைகள் நீரின்றி அழவை எதிர்கொள்ளும் போதும் இங்குள்ள கால் நடைகள் இக்குளங்களை நம்பியே வாழ்கின்றன. மழையின்மைகாரணமாக இவ்வருட சிறு போகச் செய்கைகள் இல்லாததால் கால் நடைகள் குளத்தையே நாடிச் செல்வதால் இக் குளங்களின் கீழ் பயிர்ச் செய்கைக்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் மக்கள் தெரிவித்தனர். (க-500)

# வெடிப்பொருள்களை அகற்றி மயானத்தை பயன்பாட்டுக்கு விடுமாறு கோரிக்கை

### *பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச மக்கள் சுமார் 5 கிலோமீற்றர் செல்லவேண்டிய நிலை*


பளை, , வேம்பொடுகேணி, குருடியன்காடு இந்து மயானத்தில் காணப்படும் வெடிப் பொருள்களை அகற்றி மயானத்தை பொதுமக்கள் பாவனைக்கு விடுமாறு பச்சிலைப் பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மேற்கில் உள்ள கச்சார்வெளி, செல்வபுரம், இத்தாவில், வேம் பொடுகேணி, இந்திராாபுரம், முகமாலை தெற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பயன்பாட்டிலிருந்த இந்து மயானம் வெடிப் பொருள்கள் அகற்றப்படாததால் பொது மக்கள் பயன்பாட்டுக்கு இன்னமும் விடப்படவில்லை இதனால் மீளக் கூடியமர அனுமதிக்கப்பட்ட கச்சார்வெளி, வேம்பொடுகேணி, செல்வபுரம், இத்தா வில் பகுதி மக்கள் இந்து மயா னம் இல்லாததால் சுமார் ஐந்துகிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இந்து மயானத்துக்கு சடலங்களை கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

2002 - 2006 காலப் பகுதியில் இப் பகுதி மக்கள் புலோப் பளையில் உள்ள சேமக் காலையில் ஒரு பகுதியில் தகனக்கிரியைகளை மேற்கொண்டு வந்தனர் தற்போது அந்த சேமக்காலையில் தகனக்கிரியை செய்வதற்கு நிர்வாகம் மறுத்து வருகிறது.

இத்தாவில், புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய இடங்களில் கிறிஸ்தவ மக்களின் பயன்பாட்டுக்கென் சேமக் காலைகள் உள்ளதாகவும் பளைப்பிரதேச மக்களின் பயன்பாட்டுக்கு பளை நகர்ப் பகுதியையும் மடத்து தம்பகாமம் இந்து மயானத்துக்கு உடல்களை கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மீளக்குடியமர்ந்த மக்களின் நலன் கருதி வேம்பொடு கேணி, குருடியன்காடு இந்து மயானத்தில் காணப்படும். வெடிப்பொருள்களை அகற்றி பொதுமக்களின் பாவனைக்கு வழங்குமாறு சம்பந்தப் பட்டவர்களை பிரதேசத்தவர்கள் கோரியுள்ளனர். (ஒ-9)


*வடமராட்சி இன்பருட்டிக் கடற்கரையில் மணல்ஓங்கில் என அழைக் கப்படும் சுமார் 16 அடி நீளமான ஒருவகை மீன் இறந்து உருக்குலைந்த நிலையில் நேற்றுக் கரையொதுங்கியது. நேற்றுக் காலை தொடக்கம் அதனை ஏராளமான பொதுமக்கள் சென்று பாரவையிட்டனர்.*

*(ஜ-4 -173)*

# 12 வருடகாலமாக நிரந்தர கிராம சேவகர் இல்லை

### *இணுவில் பிரதேச கிராமத்தவர் சிரமம்*

இணுவில்,மார்ச் 16

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இணுவில் ஜே/189 எனும் கிராமத்துக்கு 12 வருட காலத்துக்கு மேலாக நிரந்தர கிராம சேவகர் ஒருவர் நியமிக்காதது குறித்து அப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஜே/190 கிராம சேவகரே இந் தக் கிராமத்துக்கும் தற்காலிகக் கடமை புரிந்து வருகின்றார். இதனால் கிராம மக்கள் அவசரமாக தேவைப்படும் நற் சான்றி தழைப் பெறுவதில் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். என்றும் குறிப்பிட்ட சில நாள்களில் மட்டுமேகிராமசேவகர் வருகை தருவதால் பல்வேறு அசௌகரியங்களை தாங்கள் எதிர் கொள் வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தற்போது வழங்கவுள்ள புதிய கிராம சேவகர் நியமனத்திலாவது நிரந்தர கிராம சேவகரை நியமிக் குமாறு அப் பகுதிமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (ஓ-423)

**காணி விற்பனைக்கு**
உரும்பிராயில் காணி விற்பனைக்கு உண்டு. T. P : 078 2828388, 077 7750318

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் 4 அறைகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :077 0090425

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

மானிப்பாய் Commercial Bank முன்பாக...
**Micro System**
Development Centre
Alady Junction, Jaffna Road, Manipay.
Optical Mouse - 199/=
Keyboard - 499/=
Card Reder - 99/=
Phone Charger - 199/=
Phone Cover - 99/=
Phone Battery-299/= up to
Dongle Prolink 21.6
Dongle STC 7.2
FLASH DRIVE
KINGSTON,SanDisk,imation
4GB:- 899/=
8GB:- 999/=
16GB:- 1799/=
Warranty - 01year
இன்னும் பல பொருட்கள் நம்பமுடியாத விலையில்!!!
CALL NOW...
Hotline - 077 2487082, 021 2256165

**காணி விற்பனைக்கு**
கோண்டாவில் சந்திக்கும், திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்குமிடையில் பலாலி வீதிக்கு அண்மையில், $1^{1/2}$, 3 பரப்புத் துண்டுகளாக காணிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 075 0422158

**காணி உடன் விற்பனைக்கு**
கோண்டாவில் கிழக்கில் பலாலி வீதிக்கு கிழக்கில் FARM SCHOOL, சுற்றாடலில் பலாலி வீதியி லிருந்து 4 ஆவது காணியாக 3 காணித் துண்டுகள் (2,2.5,2.5 பரப்புக்கள்) விற் பனைக்குண்டு.
தொடர்பு : 077 7037058

**வேலை வாய்ப்பு**
* கணினி இயக்குநர்கள்
* புத்தகம் கட்டுதல்
* உதவியாளர்கள்
யாழில் கொழும்பு பிறிண்ரேர்ஸ்
666, கே.கே.எஸ். வீதி, யாழ்.
T.P : 077 1974875

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி நடராஜா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடராஜா நேற்று (15.03.2014) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு. 021 490 5642 (45810) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சைமன் சாள்ஸ் போல்ராசா (ராசன்)



சென். ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாள்ஸ் போல்ராசா நேற்று (15.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சைமன் மற்றும் நாகம்மா தம்பதியரின் மகனும், சண்முகம்-மரியம்மா தம்பதியரின் மருமகனும், மரீனாவதனியின் அன்புக் கணவரும், சாளினி, சுபாந்தினி, றம்மியா, சலக்ஸ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்தவராசா, சுதர்சன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுப் பூதவுடல் புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். ஜேம்ஸ் வீதி,
இளவாலை. (சி/12729) (10)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் சுந்தரேசன்

(Former Manufacturing Director,
Pfizer Pharmaceuticals, Sri Lanka.)

பொன்னம்பலம் சுந்தரேசன் 13.03.2014 வியாழக்கிழமை Sydney Australia இல் காலமாகிவிட்டார்.

அன்னார் குமுதினியின் அன்புக் கணவரும், Dr. பூர்ணிமா, அருணன் (Chartered Acct-Aus.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேசிகா, அஞ்சலா ஆகியோரின் அன்பு மாமனும், டிலன், கிரன், றோவன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சாரதாதேவி (SL), சிவானந்தி (SL), Dr. குமரநாயகன் (UK), வரதராஜன் (Aus), Dr. திருவுடையான் (UK) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.03.2014) சனிக்கிழமை காலை 9.30 - 11.45 வரை Camellia Chapel, Macquarie Park Crematorium, Sydney இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/12460)(10.6.3)

Tel: +94 117 539 825 (SL)
+61 416 248 266 (AUS)

## திருமதி குலதேவி தர்மகுலசிங்கம்



நந்தாவில் ஒழுங்கை, தாவடியைப் பிறப் பிடமாகவும் சுவிஸ் Lausanne ஐ வதிவிட மாகவும் கொண்ட திருமதி குலதேவி தர்மகுல சிங்கம் 14.03.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பாலசிங்கம் (ஓய்வூதியர்), காலஞ்சென்ற விஜயமலர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (ஆசிரியர், புங்குடுதீவு)- செல்வராணி தம்பதியரின் மருமகளும், தர்மகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், வாகீசன், காருண்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி, அபிராமி (பிரான்ஸ்), பானுமதி (காணி மாவட்டப்பதிவகம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற முரளிகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஞானசீலன்(பிரதேச தலைமைக் காரியாலயம், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), மனோகரன் (பிரான்ஸ்), தயாளன்(ஆதவன் றேடர்-தாவடி), நாகேஸ்வரி, எதிர்வீரசிங்கம் (கனடா), ஜெகநாதன்(ஜேர்மனி), சிவபாதசுந்தரம்(ஜேர்மனி), புவனராணி(சுவிஸ்), காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சிவகலை (கனடா), பதுமநிதி, யமுனா(ஜேர்மனி), முத்துலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், இந்துஜா, அபிஷன், சாதுரியன், பிரணவி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், சர்மிகா, கஜன், மயூரன், சனுஜா, அஜித்தா, நிரோசினி, சுஜீவன், நிஷாந் ஆகியோரின் அன்புச் சித்தியும், வசந்தநாதன், ரவிச்சந்திரநாதன், நளினி, நந்தினி, கோகிலா, சிந்துஜா, பிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (15.03.2014) முதல் Cimetiere de Montoie, Maladiere 1007 Lausanne, Switzerland இல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, 19.03.2014 புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மலர் அகம்"
நந்தாவில் ஒழுங்கை,
தாவடி, கொக்குவில். (45787) (3.6.4)

தகவல்:
சி.அ.பாலசிங்கம்(தந்தை)

# மரண அறிவித்தல்

## திருமதி சாந்தசிவரூபி சற்குணநாதன்



சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி சாந்த சிவரூபி சற்குணநாதன் நேற்று முன்தினம் (14.03.2014) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் சற்குணநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-இராசம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சர்மிளா, சியாமளா, சிவகரன் ஆகியோரின் ஆருயிர் தாயும், கனகேஸ்வரன், சண்முக ரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும், தனுஷனின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் பூமணி, தெய்வேந்திரன், மகேந்திரன், டிசம்பரநாதன், தவராசா, வசந்தா, தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயலட்சுமி, பரராஜசிங்கம், தவமணி, நகுலேஸ்வரி, சந்தனராசா, நந்தினி, மங்களேஸ்வரி, பரயோகலிங்கம், தியாகேஸ்வரி ஆகியோரின் பாசம் நிறைந்த மைத்துனியும், காலஞ் சென்ற ஏகாம்பரம் மற்றும் யோகரஞ்சிதம் ஆகியோரின் சகலியும், துவாரகா, அருண் ஆகியோரின் அன்புச் சித்தியும், தயானி, ரதீபன், தட்ஷினி, வாகினி, குருராம், மயூரன் ஆகியோரின் அன்பு அத்தையும், சரணின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.03.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் ஒழுங்கை,
சங்கத்தானை, சாவகச்சேரி.
T.P: 077 319 3602.

தகவல்: அன்புக் கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை,
அன்புச் சகோதரர்கள். (45780)

# நெளுக்குளத்தில் அறநெறிப் பாடசாலை இன்று திறப்பு

வவுனியா, மார்ச் 16

வவுனியா மரக்காரம்பளை வீதி நெளுக்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் அ.திரிபுவனன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட கலாசார உத்தி யோகத்தர் இ.நித்தியானந்தன் கலந்து கொள்வார். (ஓ-421)

# மூலஸ்தானத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா, மார்ச் 16

வவுனியா நேரியகுள ஸ்ரீவீரமாகாளி அம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும். (ஓ-421)

# பொதுச் சந்தை திறப்பு விழா

ஊர்காவற்றுறை சுயகற்றல் அபிவிருத்தி செயற்பாட்டு மண்டபம், பொதுச் சந்தை மற்றும் வடக்கின் வசந்தம் விசேட செயற்றிட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட அண்ணா சனசமூக நிலையம், முன்பள்ளி மற்றும் தம்பாட்டி காந்திஜீ முன்பள்ளி என்பவற்றின் திறப்பு விழாக்கள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மற்றும் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், அமைச்சரின் மாவட்ட இணைப்பாளர் கே.வீ.கே. குகேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஓ)

# மணவாளக் கோல விழா

நெல்லியடி, மார்ச் 16

நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய மண வாளக்கோல விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

நவிண்டில் குலனைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து இளைஞர்கள், முதியோர்கள், ஆனந்தக் காவடி ஆட்டத்துடனும், பெண்கள் வயது வேறுபாடின்றி பாற்காவடிகளுடனும் முருகன் ஆலயத்தை வந்து அடைவார்கள். 1008 சங்காபிஷேகம், வசந்த மண்டப பூசைகள் சிறப்பாக இடம்பெறவுள்ளதுடன் அடியார்களுக்கு மதியம் அன்ன தானமும் வழங்கப்படும் என்று பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-35)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா குருபரஞ்சோதிநாதன் (குரு)



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குருபரஞ்சோதிநாதன்(குரு) 07.03.2014 வெள்ளிக்கிழமை இரவு சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்- யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை) - அம்பிகைப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை (வைத்தியர்) - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், மோகனராணி (ஆசிரியர், யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை)யின் பாசமிகு கணவரும், பிரதாயினி (2ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), பிரசோபனன் (பழைய மாணவன் - யாழ்ப்பாணக் கல்லூரி), ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அராலி மேற்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் அராலி பூனாவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (45786)(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
021 490 4472

## திருமதி மகேஸ்வரி அரியகுட்டி



நல்லூர், அரசடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அரியகுட்டி 13.03.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான பொன்னர்-செல்லாச்சி தம்பதி யரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னர் அரியகுட்டி அவர்களின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான துரையம்மா, கமலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், சந்திரமலர், காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் மல்லிகாதேவி, சீவரத்தினம்(இத்தாலி), பாலசுப்பிரமணியம் (கனடா), சிவனொளிபாதம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் நித்தியானந்தம், சறோஜாதேவி, சிறீரஜனி(கனடா), நாகரஞ்சிதம்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இரஞ்சினி-கணேசன், சறோஜினி-சிவகுமரன், நந்தினி-சிவநிதிச்செல்வன், ஜயந்தி-அலன்கியூமார், உஷந்தி-ஜெனிதரன், கஜந்தி-றமணேஸ்வரன், சுபர்ணா, சுஜீபனா, கிரிஷாந், கிருசிகா, நிஷாந், அனுகேஷ், சுரேக்கா, தீபிகன், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிருசிகன், மகிழினி, நிதுஷா, பவிசன், ஐஸ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லை றோட்,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (45772)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற கனவை
உங்கள் A/L பெறுபேறுகள் பாதித்துள்ளனவா?
கவலையை விடுங்கள்! ஏனெனில் பட்டதாரியாகும் வாய்ப்பு
ஆசிரியர்களுக்கு, மிக அருகில்.....
காப்புறுதி, வங்கி
அரசாங்க, தனியார்
அலுவலர்களுக்கு
விசேட ஒழுங்குகள்
HND
தகைமையுடையவர்களும்
குறுகிய காலத்தில்
பட்டதாரியாக முடியும்!
NORTH LANKA IIT
உடன் இணையுங்கள்! பட்டதாரியாகுங்கள்!!
உங்கள் பட்டச்சான்றிதழ்கள்....
✓ சர்வதேச தரம் வாய்ந்தது
✓ UGC அங்கீகாரமுடையது
Courses
B.Sc. in Computer Science
B.Com. with Comp. Application
PG. Dip. in Comp. Application
M.Sc. MBA >> DBA
ஆரம்பம்
23-03-2014
New Batch @ North Lanka IIT
Phone: 02156 77774 Mob: 0777592666
Main Road,
CHANKANAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDU CONSULTANCY INTERNATIONAL

UK , NEW ZEALAND மற்றும் AMERICA ஆகிய நாடுகளுக்கு Student Visa சேவை வழங்கப்படும்.

Minimum Qualification



- O/L
- IELTS (4.5 Band)

மேலதிக விபரங்களுக்கு கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

(சி.12455)

FLEX Graphic

பிரகாஷ் (LLB)

Tel: - 0776 493 164

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கில் இரண்டரைப் பரப்பு காணியுடன் வீடும், புத்தூர் வடக்கில் ஒன்றரைப் பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக்குள்ளன. (தரகர் வேண்டாம்) (சி/12457)(7.6.3) தொடர்பு: 077 509 2601

## கோழிக்குஞ்சு விற்பனை

தென்பகுதியில் அரச திட்டங்களுக்கு குஞ்சுகள் விநியோகிக்கும் பிரபல பண்ணையான Lanka farm இன் கோழிக்குஞ்சுகள் தற்போது யாழ்ப்பாணத்திலும் கிடைக்கின்றது.

கினிராஜ் கோழிக்குஞ்சு-75/=

வாத்துக்குஞ்சு -150/=

(45777)(3.6.4)

தொடர்பு:077 753 1344,077 466 9669

## விற்பனைக்கு

NP VH-xxxx, TVS SCOOTY STREAK, Red

தனிப்பாவனையிலுள்ள நல்ல நிலையானது. விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 775 3856 (45781)(3.6.4)

## உடன் தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா மேசன்/தச்சர்/வெல்டர்/பெயின்டர்/இலற்றீசியன்/கம்பி பாஸ்/செடலின் பாஸ் (1200/=, 1500/=) கை உதவியாளர் (900/=, 1100/=) (யாழ்/கொழும்பு/ஜயல/கண்டி) தேவை. வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

தொடர்பு: 077 556 1883 (43214)(7.6.3)

## கட்டடம் வாடகைக்கு/ குத்தகைக்கு

யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் 4000 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கட்டடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. (தேவைக்கு ஏற்ப பகுதிகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்) Show Room, Supermarket களஞ்சிய சாலை போன்றவற்றுக்கு சிறந்த இடம்

தொடர்பு: 0777 304 545 (45726)(6.2)

## வீடு வாடகைக்கு

32, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 5அறைகள்(இணைந்த குளியலறையுடன்) மலசலகூடம், ஒரு களஞ்சிய அறை, கராஜ் மற்றும் பெரிய ஹோல் கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. நிறுவனங்களும் விரும் பத்தக்கது.

தொடர்பு:077 869 1635,077 160 6360 (45773) (3.6.4)

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் றோமன் கத்தோலிக்க (R.C) குடும்பத்தைச் சேர்ந்த 27 வயது 4'8" உயரமுடைய, பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி ஆசிரியர் அல்லது அரசாங்க உத்தியோகத்தர் அல்லது வங்கி உத்தியோகத்தர் மணமகன் தேவை. தொடர்பு:-021 300 2204 (45771)(2.6.3)

## விற்பனைக்குண்டு

a) உயர்தர அஸ்பல்ட்-வியரிங் பைண்டர் (Asphalt Wearing Binder)
b) ABC ¾" கருங்கல்
c) சிப்(Chip)
d) டஸ்ட் (Dust) அனைத்தும் நியாயமான விலைகளில் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம்.

இடம்: வவுனியா

T.P:077 075 6712, 077 338 1890 (43207)(3.6.4)

## காணி விற்பனை

நெல்லியடியில் மாலுசந்தி-வதிரி வீதியில் நிலப்பரப்பு 04 குளி 15 விஸ்தீரணம் கொண்ட கல்வீடு, கிணறு அடங்கிய ஆதனம் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு:077 087 0098 (53406)(3.6.4)

## PIONEER HOUSE FOR PUBLISHING &DISTRIBUTION (Pvt)Ltd.

### Jaffna & Vavuniya

### Sales & Marketing Executives (Male / Female)

We offer exciting income potential and career opportunities. We are represented throughout 21 countries in Asia.

- Age 19-30 years.
- Basic Salary Travelling Commission.
- Comprehensive Training Provided.
- Management Position within 09 Months
- Overseas travels for achievers
- Given Priority for after A/L's (School Leavers)
- The candidates from Jaffna, Kilinochchi and Vavuniya will be given priority.
- The candidates from Batticaloa, Trincomale and Kalmunai will be provide Accommodation free.

No.100,2nd Floor, Manipay Road,Jaffna.

Call For an Interview:

Branch Manager - G.Anthany : 021 567 1130 / 077 356 6835

Manager - Arshan 077 074 4177

## வேலைவாய்ப்புக்கேற்ப வெளிவாரிப் பட்டக் கல்வி

கொழும்பு பல்கலைக்கழகம் வேலைவாய்ப்புக்கேற்ற கல்வியை வழங்குவதாக கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். இதனாலேயே பல்கலைக்கழக உள்ளக அனுமதி கிடைக்காத மாணவர்கள் மட்டுமன்றி பல்கலைக்கழகத்தில் வேறு துறைகளில் பயிலும் மாணவர்களும் வெளிவாரி கற்கை நெறியான கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கைநெறியைப் பயின்று வருகின்றனர். வெட்டுப்புள்ளிகள் உயர்வும் அதனால் வினாத்தாள்களில் கடினத்தன்மையின் அதிகரிப்பினாலும் தற்போது பல மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடையத் தவறி விடுகின்றனர். ஆனால் அவர்களிற்கெல்லாம் வரப்பிரசாதமாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கைநெறி அமைகின்றது. அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் அடிப்படைக் கணினிப் பயிற்சி நெறியொன்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் தமது பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும். இவர்கள் அரச பட்டதாரி நியமனங்களில் உள்வாங்கப்பட்டும், பல்கலைக்கழகங்களில் வேலை, மேற்படிப்பு என்பவற்றை மேற்கொண்டும் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் உயர்ந்த சம்பளத்துடனான பணிநிலைகளில் காணப்படுகின்றனர். யாழ் MCS வளாகம் மாணவர்களை மேலும் உயர்ந்த வேலைவாய்ப்பினைப் பெறும் பொருட்டு மைக்ரோ சொப்ற், கணினிப் பொறியியலாளர், Oracle Java, Cisco, BCS, IEEE கற்கை நெறிகளையும் மேலதிக கற்கைநெறிக் கட்டணமின்றி வழங்கி வருகின்றது. தமது சிறப்பான செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து விருதினையும் வென்றிருக்கின்றது. புலமைப் பரிசில் பதிவுகளிற்கு உங்கள் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை 077 239 5895இற்கு SMS அனுப்பவும். மேலதிக விவரங்களிற்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS நிலையத்தில்.

முகநூலில் தொடர்வதற்கு: mcsitcampus (சி/12713)(7.6.3)

## ZOA

RELIEF | HOPE | RECOVERY

www.zoa-international.com

### IMMEDIATE RECRUITMENT OF SUITABLE CANDIDATES FOR NORTH DISTRICTS

**All candidates applying for the positions listed below must possess team spirit to work in a multi disciplinary team, cultural sensitivity, concern for human welfare and respect for human dignity.**

### Project Officer - Livelihood

*( 1 position – based in Mullaitivu (Kokkilai)*

**Tasks;**

- Establish contacts with the most vulnerable families within our target areas;
- Explore suitable and viable livelihood opportunities and develop the business case;
- Provide input to get the livelihood initiatives off the ground and provide ongoing support for successful implementation;
- Sensitize CBOs to be inclusive of the vulnerable group;
- Empower the vulnerable group to be active in the CBOs;
- Work closely with the Gender Focal person to implement the above.

**Requirements;**

- Minimum 2 years experience in agriculture/livelihood development;
- Capacity to live among and work closely with rural communities;
- Passion for community development work is essential;
- Fluency in Tamil and ability to speak read and write fairly well in English. Working knowledge of Sinhala is an added advantage.

### Project Officer – Gender

*( 1 position – based in one of the working areas - Kilinochchi, Mannar, Mullaitivu (Kokkilai) and Vavuniya North (Nedunkerny and frequent travelling to these areas)*

**Tasks;**

- Ensure livelihood program implementation for female headed households, differently able and vulnerable individuals;
- Support the project gender staff to implement initiatives to raise gender awareness among ZOA staff and communities;
- Guide program staff on how to use indicators to monitor and evaluate the impact of mainstreaming of gender in all activities;
- Organise and facilitate quarterly discussions at field offices on gender related topics;
- Provide ongoing advise and training to staff and beneficiaries on gender issues;
- Actively promote gender equality practises and support gender awareness raising among staff and communities;
- Ensure active participation of our beneficiaries in civil society activities in their community;
- Work closely with project staff on improvement and compliance with rights and gender aware approaches;
- Ensure that a rights-based and gender aware approach is mainstreamed in the program, organizational process and procedures through awareness-raising and capacity-building of staff;
- Help influence other stakeholders to promote gender equality through networking at the local levels;
- Guide staff to undertake activities in the field of awareness raising and legal education on gender justice issues and mechanisms;
- Participate in the identification of gender issues and prepares an overall gender strategy/action plan and prepares advocacy, communication materials, as needed on particular issues;
- Liaise with CBOs, relevant government authorities and other humanitarian/development agencies for effective collaboration.

**Requirements;**

- Minimum 2 years work experience in gender sensitive planning, gender mainstreaming and promotion of gender equality in NGO sector;
- Qualification in the field of Community Development, Governance and Gender is desirable;
- Good report writing and documentation skills;
- In-depth knowledge of gender equality and women empowerment issues and knowledge of local culture;
- Capacity to live among and work closely with rural communities;
- Passion for community development work is essential;
- Fluency in English and Tamil. Working knowledge of Sinhala is an added advantage;
- Familiarity with Women capacity development/empowerment approaches;
- Willingness to be based in a remote working village and travel extensively to other working areas.

(C/12721)

**Female candidates are encouraged to apply for the positions.**

Please send a cover letter with your motivation for this job along with a complete C.V. and the names and contact numbers of two non related referees **ASAP by email to jobs@zoasrilanka.org or by fax to 011 4518827 – ATTN: HR Officer.**

Please indicate the position in the subject line of the e-mail. **ONLY SHORTLISTED CANDIDATES WILL BE NOTIFIED.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## வவுனியா – கோயில்குளம்
## அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர்
## திருக்கோயில்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 16.03.2014

### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் வவுனியாவிலே கோயில்குளம் எனும் பதியிலே அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ அகிலாண்டேஸ்வரராக எழுந்தருளி, வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

வழிபடும் அடியார்களின் அல்லல் நீக்கியருளும் அகிலாண்டேஸ்வரருக்கு இன்று தேர்த்திருவிழா. அழகிய ரதத்திலே ஆரோகணித்து வீதிவலம் வரும் அழகு காணக் கிடைக்காத ஒன்று. வவுனியா வாழ் அடியார் பெருமக்கள் அனைவருக்கும் அருள்புரியும் அகிலாண்டேஸ்வரரின் அருட்பதம் பணிந்து எல்லோரும் சுகமே வாழ வகை செய்யுமாறு அருளாசி நல்கி வந்தித்து சேவித்து, வாழ்த்தியருளி மகிழ்கின்றோம். பேரானந்தப் பெருவாழ்வில் மூழ்கித் திளைத்து நல்வாழ்வு சிறக்க அகிலாண்டேஸ்வரர் அருள்புரியட்டும். ஆனந்த புஷ்பம் சொரிந்து அகிலமே சிறக்க நல்லருள்புரியுமாறு வணங்கி, வாழ்த்தி அகிலாண்டேஸ்வரரின் பொற்கமலபாதங்களைப் போற்றித் துதிக்கின்றோம். நல்லைக் குருமணியின் திருத்தாள் வணங்கி வவுனியா வாழ் மக்கள் எல்லோரும் நலமே வாழ வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்.

**இன்று காலை 8.00 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் காலை 9.00 மணிக்கு ஆரோகணிப்பார்**

### குருக்களின் ஆசி உரை



எல்லாம் வல்ல அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் சுவாமியின் பாதக் கமலங்களைப் பணிந்து பாலில் நெய்யாக இருக்கும் இறைவனை ஆன்மாக்கள் வழிபடும் பொருட்டு வவுனியா நகரின் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கோயிற்குளப்பதியில் அருளாட்சி செய்து வருகின்ற அகிலாண்டேஸ்வரப் பெருமானுக்கு மஹோற்சவம் என்று சொல்லப்படுகின்ற பெருவிழாவிலே தேர்த்திருவிழாவில் இறைவனின் ஐந்தொழில்களில் அழித்தல் தொழிலை உணர்த்தும் உற்சவத்தைக் கண்டுகளித்து ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை நீக்கி இப் பூவுலக மக்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்றுவாழ எம்பெருமானை என்றென்றும் வணங்கி எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ இரகுநாத. கமலேஸ்வரக்குருக்கள் -
திருக்கோயில் பிரதமகுரு

### வாழ்த்துரை



திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பெற்ற ஈழமணித் திருநாட்டில் வவுனியா, கோயில்குளம் என்ற சிறப்புப் பெயரைக் கொண்ட இடத்தில் காஞ்சிப் பெரியார் இத் திருத்தலத்துக்கு அருள்மிகு அகிலாண்டேஸ்வரர் சமேத அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் என்ற நாமத்தைச் சூட்டி மூல மூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானையும் அம்பாளையும் தமது ஆசியுடன் பிரதிஷ்டை செய்வதற்கு கிடைத்தது இத் தலத்துக்கு ஒரு தனிச் சிறப்பாகும். கொடியேற்றத்துடன் ஆரம்பமான சிவனுடைய பெருந்திருவிழா இன்றைய தினம் தேர்த் திருவிழாவுடன் சிறப்புறுகின்றது. இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் அடியார்களுக்கு எம் பெருமானின் தேர்விழாக் காணக் கிடைத்தது ஒரு பெரும் பேறான நாளாகும். தேரில் வீதியுலா வரும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப் பொருமானை நினைத்து வழிபடும் அனைவருக்கும் அருள்புரிவாராக என்று வாழ்த்தி வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

*தந்தையும் தாயும் ஆகி வளர்த்தனை போற்றி.*

ஆ.தியாகராசா (பரம்பரை அறங்காவலர்), ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

### வவுனியா கோயிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர்
## திருக்கோயிலின் சிறப்பு



அருள்மிகு மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் பூசகர் பரம்பரையில் அநாதியாக விளங்கிய பட்டர் மரபில் வந்தவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் பரம்பரைத் தர்மகர்த்தாவாகவும், ஆதிப்பூசகராகவும் விளங்கிய நயினாப்பட்டரின் வழிவந்த ஸ்ரீமான் முத்துக்குமாருவின் மகனான காசிப்பிள்ளை ஆறுமுகம் அவர்களின் ஐந்தாவது தவப்புதல்வராக உதித்தவரும், வவுனியா கோயில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலின் பரம்பரைத் தர்மகர்த்தாவாகவும், கௌரவ செயலாளராகவும் உயர்திரு. ஆ. நவரெத்தினராசா அவர்கள் செயற்படுவது இறை சித்தியேயாகும்.

வவுனியா மத்திய பஸ்நிலையம், புகையிரதநிலையம் இரண்டு பாதைவழியும் வந்திறங்கியவர்கள் அதிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் வீதியில் முதலாம் கட்டையை அடைந்தால் (இத்தூரம் நடந்து செல்லலாம்) தென்படுவது மூன்று பாதைகள் கொண்ட முச்சந்தி இதிலிருந்து பிரிந்து செல்வது தான் அந்தத் தவப்பேறு பெற்ற கோயில் குளக் கிராமம். இந்தக் கிராமத்தின் முகப்பிலே தென்படுவதுதான் அண்டசராசரங்களைத் தன் வயப்படுத்தும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்.

இக் கோயிலின் மகாகும்பாபிஷேக பிரதம குருவாக நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வராக் குருக்களைக் கொண்டு 01.05.1996 இல் ஆவர்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகமும் இனிதே நடத்தி முடிக்கப்பட்டது. இவை யாவும் "முன்னவன் முன்னின்றால் முடியாதது ஒன்றுமில்லை" என்பதுபோல் கருணைக்கடலாம் சித்தி விநாயகர் பேரருளோடும், அம்மையப்பனின் கருணைக் கடாட்சத்தாலும் தான் இனிது நிறைவெய்தின. தொடர்ந்து இவ்வாலயத்தில் சிவாகம முறைப்படி சகல பூசைகளும் நடைபெற்று வருகின்றது என்றால் அது அம்மை அப்பனின் திருவருளே. அதன் பிரகாரம் அம்மை அப்பன் இன்று தேரேறி வீதியுலா வருகின்றார்கள் ஆன்மாக்களை ஆசீர்வதிப்பதற்காக.

- ஆ. நவரெத்தினராசா, அறங்காவலர்.

(C/12641)(2.6.3)



# கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற உலகநீதிவாக்கு மற்றும் நாவுக்கரசரின் "திருக்கோயில் இல்லாத திருவிலூரும்" என்ற தேவாரம் மற்றும் மூதுரை சொன்ன எமது குலத்தின் முதல் மகளான ஔவைப்பாட்டியின் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" போன்றன இதனை அர்த்தப்படுத்துகின்றன. அப்படி என்னதான் சிறப்பு இந்த ஆலயங்களுக்கு? கோயில்களின் தனிச் சிறப்பே கோபுரங்கள் எனலாம். தொலைவில் இருந்து வருபவர்களுக்கு ஆலய கோபுரங்கள் அங்கே ஒரு சிறந்த கிராமம் அமைந்திருப்பதைப் பறைசாற்றும். பசியோடு வருபவர், வேலை தேடி வருபவர் என்று சகலரையும் வரவேற்கும் முகமாக கோபுரங்கள் அமைந்துள்ளன. மிக உயர்ந்த நீண்ட நெடிய கோபுரத்தை ஏன் கட்டினார்கள்.? கோயில்கள் சிறியதாக இருந்தாலும் கோபுரங்களை நெடிதுயர்ந்ததாகவே அமைத்தார்கள் நம் மூதாதையர்கள். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. மழை காலங்களில் இடிமின்னல்கள் ஏற்படுவது இயற்கை. அவை மிக உயர்ந்த கட்டடங்கள், மரங்கள் மலைகள் என்பவற்றைத் தாக்கிப் பூமியை அடைந்து அமைதி பெறும். அத்தகைய இடிகளின் இறங்குவாயாக கோபுரங்கள் திகழ்கின்றன. கோபுரங்களைத் தாக்கிய இடி தரையை அடைந்து சாந்தமடைந்து விடுவதால் அருகிலுள்ள வீடுகள் காக்கப்படுகின்றன. மக்களுக்கு ஏற்படும் பேராபத்து நீங்கி விடுகிறது. ஆகவேதான் கோயில்களைச் சுற்றி மக்கள் தங்கள் வீடுகளை அமைத்து வாழ்கிறார்கள். தனியே தூரத்தில் வீடுகளை அமைப்பதை அவர்கள் தவிர்த்தார்கள். கோயில் என்பது அரசன், அரண்மனை, அரசியல் என்று பொருள் தருவதை பழந்தமிழ் நூல்கள் நன்றாக விளக்குகின்றன.

*"மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்*
*அறத்துறை விளங்கிய அந்தணர் பள்ளியும்"*

என்ற சிலப்பதிகார அடிகள் அதனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

மன்னராட்சிக் காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமான எந்தக் கட்டடமும் இருக்கக்கூடாது என்று ஒரு எழுதாச்சட்டம் இருந்ததாம். இதற்கு என்ன காரணம்? கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னினால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களிலும் அதில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை கலசங்களுக்குக் கொடுக்கின்றன. நெல், கம்பு, திணை, வரகு, சோளம், சாமை, எள், கேழ்வரகு என்பவற்றைக் கொட்டும் போது குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாக கொட்டினார்கள். காரணத்தைத் தேடிப் போனால் வரகு மின்னலைத் தாங்கும் அதீத ஆற்றலைப் பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகின்றது.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகின்றன. இதை இன்றைக்கு சம்பிரதாயமாக மட்டுமே கடைப் பிடிக்கிறார்கள். காரணத்தை [illegible] வருடங்கள் தான் சக்தி இருக்கின்றது. அதன் பின்பு அது செயலிழந்து விடுகின்றது. அன்று இதை எப்படி ஆராய்ந்தார்கள்? இதை விட இன்றைக்கு பெய்வதைப் போல மூன்று நாள்களா மழை பெய்தது அன்று? மூன்று மாதங்கள் மழை பெய்தது. ஒரு வேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அமிழ்ந்து போனால் மீண்டும் எதை வைத்துப் பயிர் செய்வது இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பே இல்லை மீண்டும் இதையே எடுத்து விதைக் கலாமே. ஓர் இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடிதாங்கியோ அதுதான் முதலில் "புவித் தொடுப்பு" ஆகும். மேலும் அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது.

கோயிலின் பிரதான வாசலாகிய கோபுரவாசலானது ஊடுருவிக் கதிர் ஆய்வுக் கருவி போல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதனால் நாம் கோபுர வாயிலினூடாக செல்லும் போது கண்ணுக்குப் புலப்படாத ஊடுருவிக் கதிரானது காந்த அலைகளாக நம் உடல் மீது செல்கின்றது. இதனால் தான் நாம் கோயிலுக்குள் நுழையும் முன்பாக கை, கால்களைச் சுத்தம் செய்வது வழக்கமாகும். குதிக்கால்களை மேலிருந்து கழுவுவதால் ஏற்படும் விஞ்ஞான பூர்வமான காரணம் என்னவென்றால் குதிக்காலில் தான் நமது மூளையில் அமைந்துள்ள பிட்யூட்டரி சுரப்பியுடன் தொடர்புள்ள முக்கிய நரம்பு அமைந்துள்ளது. நாம் உட்பிரகாரத்தில் செல்லும் போது வேகத்தைக் குறைத்து நிதானமாக நடுவில் வைக்கப்பட்டிருக்கும் வாயில் படிகளை ஈரக்கால்களுடன் குனிந்து தொட்டுச் செல்லுதல் வேண்டும். அப்படிக் குனிந்து தொடும் போது ஏற்கனவே கோபுரகலசங்களின் ஊடாக சேர்க்கப்பட்டிருக்கும் மின்கதிர்களின் முழுப்பயனையும் அடையமுடியும். மிக நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய நம் கோயில்கள் பல இன்னும் நம் பழம் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய கோயில்களை மக்கள் சார்ந்திருக்கும் பொழுது அவர்கள் வாழ்வை வறுமையும் பேராபத்துக்களும் தாக்காது என்ற உயரிய நோக்கத்திலேயே "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று தீர்க்கமாக தீர்மானித்திருக்கிறார்கள் நமது அறிவுசார் முன்னோர்கள். நாம் அவர்கள் வழித்தோன்றல்கள் என்பது எத்தனை பெருமைக்குரியது.

- நன்றி:- இந்து ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்களுக்குத் தொடர்பில்லாத விஷயம் குறித்து, நண்பரிடம் பேச வேண்டாம். வாக்குறுதி நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** சிரமங்களைச் சரிசெய்து சாதனை புரிவீர்கள். பொது நலப் பணியிலும் ஈடுபாடு வளரும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். பணவரவுடன் நிலுவைப்பணம் கிடைக்கும்.

**மிதுனம்:** புதியவர்களிடம் நட்புப் பாராட்டுவதில் நிதானத்தைப் பின்பற்ற வேண்டும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்ற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.

**கடகம்:** உங்கள் நலம் விரும்புவோரை சந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுக்குத் தாராளமாக பணம் செலவு செய்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** உங்களின் சாமர்த்தியமான பேச்சு நன்மையைப் பெற்றுத் தரும். புதிய திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி உருவாகும்.

**கன்னி:** உங்கள் மனதில் புகழ்பெறுகின்ற எண்ணம் அதிகரிக்கும். செயல்களில் தற்காப்புடன் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நேரம் தவறாமையைப் பின்பற்ற வேண்டும்.

**நாளை**

பங்குனி-3 திங்கட்கிழமை 17.03.2014
திதி: பிரதமை மு.இ.12.11 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.02.37
சுபநேரம்: 12.19- 01.49 வரை
இராகுகாலம்: 07.49.-09.19 வரை

**துலாம்:** உங்கள் உறவினரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும். அதிக விலை மதிப்புள்ள பொருளைக் கவனமு டன் பயன்படுத்த வேண்டும்.

**விருச்சிகம்:** இனிய எண்ணங்களால் மனதில் உற்சாகம் கொள்வீர்கள். ஓய்வைத் தவிர்த்து ஆர்வமுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்குப் பூர்த்தியாகும்.

**தனுசு:** வாழ்வில் எளிய நடைமுறையைப் பின்பற்றுவீர்கள். இனிய பேச்சால், சில நன்மை உருவாகும். தொழில், வியாபாரம் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடையும். நிலுவைப்பணமும் கிடைக்கும்.

**மகரம்:** எதிர் மனப்பான்மை உள்ளவரிடம், அளவுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சிறு குறுக்கீடு வந்து, உங்கள் முயற்சியால் சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** உங்களுக்கு அறிமுகம் இல்லாத எவருக்கும் புத்திமதி சொல்ல வேண்டாம். தொழிலில் பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவை முக்கிய செலவுக்குப் பயன்படுத்துவது நல்லது.

**மீனம்:** உங்களின் அணுகுமுறை மாற்றத்தால் முக்கிய செயல் நிறைவேறும். தொழில், வியாபாரம் செழிக்க, அதிக பணிபுரிவீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 5 | | | 1 | | | 2 |
| 7 | 4 | 2 | | 9 | | | | |
| 1 | | | | | 2 | 4 | | |
| | 7 | 9 | | | 5 | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | 3 | 5 | |
| | | 6 | 1 | | | | | 5 |
| | | | | 6 | | 2 | 7 | 3 |
| 3 | | | 8 | | | 1 | 6 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 2 | 7 | 1 | 6 | 5 | 9 | 4 |
| 6 | 5 | 4 | 9 | 2 | 8 | 1 | 7 | 3 |
| 9 | 1 | 7 | 5 | 4 | 3 | 2 | 6 | 8 |
| 1 | 6 | 3 | 2 | 9 | 4 | 8 | 5 | 7 |
| 2 | 9 | 5 | 8 | 7 | 1 | 4 | 3 | 6 |
| 4 | 7 | 8 | 6 | 3 | 5 | 9 | 1 | 2 |
| 7 | 4 | 6 | 1 | 5 | 2 | 3 | 8 | 9 |
| 5 | 2 | 9 | 3 | 8 | 7 | 6 | 4 | 1 |
| 8 | 3 | 1 | 4 | 6 | 9 | 7 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




அபான்ஸ் – டைட்டான் நிறுவனத்தின்
அனுசரணையுடன்
இலங்கை விமானப்படை நடத்தும்
பெண்களுக்கான
துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி
எதிர்வரும் 22.03.2014 ஆம் திகதி
காலை – 8.00 மணிக்கு
துரையப்பா மைதானத்தின் அருகில் ஆரம்பமாகி 38 கி. மீற்றர்கள்
பெறுமதி வாய்ந்த பரிசில்கள்
காத்திருக்கின்றன
கலந்துகொள்ளும் அனைவருக்கும் ஊக்கத்தொகையாக
1,000 ரூபாவும் ரிசேட் ஒன்றும் வழங்கப்படும்
உங்கள் விண்ணப்பப் படிவங்களை அருகிலுள்ள
அபான்ஸ் காட்சியறையில் பெற்று
பூர்த்திசெய்து 20.03.2014 ஆம் திகதி
நண்பகல் 12.00 மணிக்கு முன் கையளிக்கவும்.
Abans

**மேல்மாடிவீடு வாடகைக்கு**
ஏ9 கண்டி வீதியில்(கச்சேரிக்கு மிக அருகில்) அமைந்துள்ள மேல் மாடி வீட்டில் 6 அறை, 2பெரியகோல், சமையலறை, இணைந்த குளியலறை, வாகனத்தரிப்பிடத்துடன் சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீடு வாடகைக்குண்டு.
அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 221 1141, 076 675 8002
(45398) (3.6.4)

**மணமகள் தேவை**
கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஐம்பத்து ஆறு வயதுடைய விவாகரத்துப் பெற்ற சுமார் இருபது வருட காலமாக ஓமானில் களஞ்சியப் பொறுப்பாளராகத் தொழில் புரியும் நபரொருவர் மறுமணம் புரியும் நோக்குடன் இல்லறத்துணையொன்றினைத் தேடுகிறார். 45-50 வயதெல்லைக்குள் தொழில் புரியும் பெண்ணொருவரை அல்லது கணவரை இழந்த ஆசிரியத் தொழில்புரியும் பெண் ஒருவரை எதிர்பார்க்கிறார். ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
077 287 0825
(45701)(3.6.4)

திறப்பு விழா அழைப்பு
வடபகுதியில் புத்தக புரட்சிக்கு புதியதோர் உதயம்
அம்பிகை புத்தக நிலையம்



நிகழும் மங்கலகரமான விஜய வருடம் பங்குனித்திங்கள் 02ஆம் நாள்
இன்று (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.50 மணி வரையுள்ள சுபவேளையில் இறையருள் துணையுடன் நாம்
அம்பிகை புத்தக நிலையம்
எனும் நிறுவனத்தை ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
திறப்பு விழாவை முன்னிட்டு 15% இற்கும், 20% இற்கும் மேற்பட்ட விலைக் கழிவுகள்.
பழைய ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம் சஞ்சிகைகள் 20/= இற்கு பெற்றுக்கொள்ளலாம்.
தங்கள் நல்வரவை நாடும்.
246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தி.தியாகன் - 077 887 5357
வே.ஜெகன் - 077 834 9507


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nestlé NESTUM
Junior Cereal for Breakfast

# காலையில் நெஸ்ரம்!

நெஸ்ரம் குழந்தைகளுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட சுவையான போசாக்கு நிறைந்த காலை உணவாகும்.....
உள்நாட்டு அரிசி, வல்லாரை மற்றும் பழ வகைகளினால் தயாரிக்கப்பட்ட நெஸ்ரம் பிள்ளைகள் வளருவதற்குத் தேவையான விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்களை உள்ளடக்கியுள்ளது. நீங்களும் ஒவ்வொரு நாளும் காலையில் நெஸ்ரம் சகிதம் பிள்ளைகளின் நாளை ஆரம்பியுங்கள்.

பதனச்சரக்குகள் மற்றும் செயற்கை நிறமூட்டிகள் சேர்க்கப்படவில்லை*

Like us on www.facebook.com/nestum.lk

ஒரு பக்கெற்றின் ஆ.சி.விலை ரூ. 315/- இலிருந்து மேல்.



Nestlé Good Food, Good Life
metropolitan

TOKYO SUPER MIX
READY MIXED CONCRETE
BEST IN QUALITY
(Only River Sand is Used)
WIDEST AVAILABILITY
FROM THE MARKET LEADER

A Strength that Binds... A Lifetime of use



இலங்கை மற்றும் பிரித்தானியாவின் தரநிர்ணய கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக தயாரிக்கப்படும், என்றும் தரத்தில் முன்நிலை வகிக்கும் ரெடிமிக்ஸ் கொங்கிறீட்டை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :-
எழுதுமட்டுவாழ் தெற்கு.
மிருசுவில். யாழ்ப்பாணம்.
021 720 0208

நிமலன் 077 346 62 62
கனேந்திரன் 077 309 99 53

NIPPON CEMENT
TOKYO CEMENT GROUP
TOKYO SUPER ORDINARY PORTLAND CEMENT

micromax



விரல்களின் தொடுகையில் விரியும் உலகம்
விரும்பியதைத் தெரிவுசெய்ய புதிய மைக்ரோமெக்ஸ் டச் ஃபோன்களின் வரிசை




X367
X457
X501
Blue Tooth

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 159

# உயர்குருதியமுக்கம் பற்றி அறிந்து கொள்வோம்



"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கூறப்படுகின்றது. ஆனாலும் இன்றைய கால கட்டத்தில் நோய் என்று கூறிக்கொள்வது நிறைவான நவநாகரிகமாக மாறி வருகின்றது. அபிவிருத்தியடைந்த செல்வந்த நாடுகளில் மட்டுமன்றி இலங்கையிலும் கூட தொற்றா நோய்களின் (Non Communicable Diseases) தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றமை கண்கூடு.

ஒருவரின் உடல்நிறை, உயரம் என்பன தனித்துவமானதாக, அவருக்கே உரியதாக இருப்பதைப் போன்று, குருதியமுக்கமும் தனிநபருக்கு உரியதொன்றாகும். சாதாரண நபரொருவரின் நியமக் குருதியமுக்கமானது <120/80mm Hg ஆக இருத்தல் சிறந்தது எனவும், 120-129/<80-84 mmHg சாதார ணம் எனவும், 130-139/85-89mm Hg ஆக இருத்தல் உயர்குருதிய முக்கத்துக்கான முன்நிலை எனவும் >140-90 mmHg ஆக இருத்தல் உயர் குருதிய முக்கத்துக்கான முன் நிலை எனவும், >180-110 mmHgஇருப்பின் தீவிரமான, உயிராபத்தை ஏற்படுத்த வல்ல உயர்குருதியமுக்கம் எனவும் வரை நிர்ணயிக்கப்படுகின்றது.

பெரும்பாலான (80-90 வீதம்) நோயாளிகளில் அடிப்படை உயர் குருதிய முக்கமே (Essential hypertension) ஏற்படுகின்றது. இதற்கு பரம்பரைக் காரணிகள், குறைந்த பிறப்பு நிறை மற்றும் சூழற் காரணிகளான உயர் உடற்றிணிவுச் சுட்டி, அதிக மதுபானப் பாவனை, அதிகமாக சோடியம் நிறைந்த உணவுகளை உட்கொள்ளல், மன அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்றவை காரணிகளாகின்றன. மாற்ற முடியாத காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும், மாற்றக் கூடிய சூழற் காரணிகளை நியம மட்டத்தில் பேணுவதனூடாக உயர் குருதியமுக்கம் ஏற்படுதலைத் தாமதிக்க அல்லது ஏற்படாது தவிர்க்க முடியுமல்லவா?

உயர் குருதியமுக்கத்தின் விளைவாகப் பல சிக்கலான நோய் நிலைமைகள் உருவாகின்றன. உடலின் முக்கியமான அங்கங்களின் செயலிழப்புக்கு உயர்குருதியமுக்கம் ஏதுவாகின்றது. சிறுநீரகம், இதயம், மூளை, கண், குருதிக்கலன்கள் போன்றவை பாதிப்புக்கு உள்ளாகின்றன. நீண்ட காலச் சிறுநீரக நோய்கள் ஏற்படுவதற்கும், மாரடைப்பு, இதயச் செயலிழப்பு ஏற்படுவதற்கும், வலிப்பு, பாரிசவாதம் (stroke) ஏற்படுவதற்கும், கண் பார்வை இழப்புக்கும், பெருநாடி வெடிப்பு போன்ற உயிராபத்தை



ஏற்படுத்த வல்ல நிலைமைகள் உருவாவதற்கும் கட்டுப்பாடற்ற உயர்குருதியமுக்கம் காரணமாகின்றது.

குருதியமுக்கம் அதிகரித்த நிலையில் காணப்படும் போது, வைத்திய உதவியுடன் மருந்துகள் ஊடாக குருதியமுக்கத்தை நியம மட்டத்தில் பேணுவது அவசியமாகும். உயர் குருதிய முக்கத்துக்கு இரண்டாந்தரக் காரணி கள் இருப்பின் அவை கண்டறிப்பட வேண்டும். உயர்குருதியமுக்கத்துக்கான முன்னிலையில் (Pre hypertension) உள்ளவர்கள் வருடாந் தமும், மற்றையோர் ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்கு ஒரு முறையாவது உடற் குருதியமுக்கத்தைப் பரீட்சித்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

**அத்துடன் பின்வருவனவற்றையும் கையாண்டு ஆரோக்கியமானவராக வாழுங்கள்.**

- உங்கள் உடற்திணிவுச் சுட்டி 20-25 இற்குமிடையில் பேணப்படுவதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- தினமும் ஆகக் குறைந்தது 30 நிமிடமாவது காற்றுள்ள உடற்பயிற்சிகளில் (Aerobic exercise) ஈடுபடுங்கள். உதாரணம் வேகநடை, நீந்துதல், சைக்கிள் ஓடுதல்.
- கொழுப்புணவுகளையும், நிரம்பிய கொழுப்புணவுகளையும் தவிருங்கள். உப்புப் பாவனையை நன்கு குறையுங்கள் (<10mmol/day)
- மதுபானப் பாவனையைக் குறையுங்கள் அல்லது தவிருங்கள்.
- தினமும் பசுமையான காய்கறிகளையும் பழங்களையும் உண்ணுங்கள் (5 பகுதிகளுக்குக் (portions) கூடவாக)
- புகைப்பிடிக்காதீர்கள்.
- உங்களது நோய் நிலைமைகளுக்காக வழங்கப்படும் மருந்துகளை ஒழுங்காக உட்கொள்ளுங்கள்.
- குருதிக் குளுக்கோஸ் மட்டத்தை நியம அளவில் பேணுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்படும் மருந்துகளால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள் பற்றி வைத்தியரிடம் கேட்டுத் தெரிந்து கொள் ளுங்கள்.
- வலிப்பு, தொடர்ச்சியான தலையிடி, திடீரெனக் கண்பார்வை மாங்குதல், நெஞ்சுவலி, சிறுநீருடன் குருதி வெளியேறல், சிறுநீர் நுரைத்தல் போன்றவை ஏற்படுமிடத்து வைத்திய உதவியை உடனடியாக நாடுங்கள்.

**Dr. தேவரஞ்சனா புவனேந்திரன்,**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

# அதிக நோவு ஏற்படாமல் இன்சுலின் ஏற்றிக் கொள்வது எப்படி?

> **"இன்சுலின் குப்பியைக் கையாளுவதற்கு முன்பாக கைகளை சவர்க்கார நீரினால் கழுவிக்கொள்வது நல்லது. ஊசி குத்தும் இடத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டால் மீண்டும் ஊசி குத்தும் போது கூடியளவு வலியைத் தரும்."**

நீரிழிவு நோய்க்கு பல்வேறுபட்ட சிகிச்சை முறைகள் காணப்படுகின்றன. அதாவது மருத்துவ முறைகள் மற்றும் மருத்துவம் தவிர்ந்த முறை கள் என அவை வகைப்படுத்தப்படும். மருத்துவ முறைகள் என்று பார்க்கும் போது சில மருந்துகள் வாய் மூலமாக உள்ளெடுக்கப்படுகின்றன. சில மருந்துகள் ஊசி மூலம் உடலில் ஏற்றப்படுகின்றன. இன்சுலின் என்பதும் ஊசி மூலம் உடலில் ஏற்றப்படும் மருந்தாகும்.

முதலாவது வகை நீரிழிவு நோயாளர்களும் வாய் மூலம் எடுக்கப்படும் மருந் துகளால் கட்டுப்படுத்தப்பட முடியாத இரண்டாவது வகை நீரிழிவு நோயாளர்களும் இன்சுலின் ஏற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகின்றார்கள். இன்சுலின் ஏற்ற வேண்டும் என்று கூறும்போது பலரது மனதில் எழு கின்ற முதற்கேள்வி, ஊசி மூலம் இன்சுலின் ஏற்றினால் நோவு ஏற்படும் என்பது தான். ஆனால்ஏற்படும்நோவினை குறைப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன.

இன்சுலின் தோலின் கீழான பகுதியில் ஊசி மூலம் ஏற்றப்படும். இதற்கென மிகக் குறைவான வலியை ஏற்படுத்துகின்ற மிக மெல்லிய (29 கோஜ்) ஊசிகள் விசேட சிரிஞ்சுடன் கிடைக்கின்றன. ஊசி, சிரிஞ்சுடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்கும். இவ்வகையான (29 கோஜ்) ஊசிகள் கிடைக்காவிடில், கோஜ் 27 மற்றும் கோஜ் 28 வகை ஊசிகளைப் பாவிக்கலாம். கோஜ் 27 இற்கும் குறைவான ஊசிகளைத் தவிர்த்தல் நல்லது. ஏனெனில் இவை கூடியளவு நோவை ஏற்படுத்துவனவாகும்.

இன்சுலின் பேனா எனப்படுகின்ற விசேட இன்சுலின் செலுத்திகளும் புழக்கத்தில் உள்ளன. இவை மிக மெல்லிய (31 கோஜ்) ஊசிகளைக் கொண்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி இன்சுலின் ஏற்றும் போது, மிகக் குறைந்தளவு நோவே ஏற்படுகின்றது. அத்துடன் இதனைக் குளிர் சாதனப் பெட்டியினுள் வைத்துப் பாதுகாக்க வேண்டிய தேவையில்லை. மேலும் பிரயாணம் செய்யும் போதும் இதனை உடனெடுத்துச் செல்ல முடியும்.



இன்சுலின் ஏற்றிக் கொள்வதற்கு 10 - 15 நிமிடங்களுக்கு முன்பதாக குளிரைக் குறைப்பதற்காக இன்சுலின் வைக்கப்பட்டுள்ள பெட்டியைக் குளிர் சாதனப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து வைக்க வேண்டும். ஏனெனில் குளிரான இன்சுலினை ஏற்றிக் கொள்ளும் போது அது மிகவும் கூடியளவு வலியை ஏற்படுத்தும்.

இன்சுலின் குப்பியைக் கையாளுவதற்கு முன்பாக கைகளைச் சவர்க்கார நீரினால் கழுவிக்கொள்வது நல்லது. ஊசி குத்தப்படும் இடத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டால், மீண்டும் ஊசி குத்தும் போது கூடியளவு வலியைத் தரும். அத்துடன் குளித்த பின் அல்லது உடம்பைக் கழுவிய பின்னர் அல்லது ஏற்றிக் கொள்ளும் இடத்தைச் சவர்க்கார நீரினால் கழுவி நன்கு உலர்ந்தபின்னர் இன்சுலின் ஏற்றிக்கொள்வது நல்லது. அத்துடன் தினமும் ஊசி ஏற்றிக் கொள் ளும் இடத்தை ஸ்பிரிட் (Surgical spirit)போட்டுத் துடைத்தல் நன்மை பயக்காது. தொடர்ச்சியாக ஸ்பிறிட் பாவிப்பதால் அவ்விடத்திலுள்ள தோல் தடிப்படைகின்றது. மீண்டும் இன்சுலினை ஏற்றிக்கொள்ள கூடியளவு விசை பிரயோகிக்கப்படுவதனால் கூடியளவு நோவு ஏற்படும்.

இன்சுலின் ஏற்றிக்கொள்ள, பொருத்தமான இடத்தைத்தெரிவுசெய்யவேண்டும். மேற்கை. (Upper arm) மேற்தொடையின் முன் பக்கம் மற்றும், வெளிப்பக்கங்கள், தொப்புளிலிருந்து 2 அங்குல தூரத்துக்கு வெளியே அதன் இரண்டு பக்கங்களிலும், கீழ்ப் புறமும் இன்சுலினை ஏற்றிக்கொள்ளலாம். இன்சுலின் ஏற்றிக் கொள்ளும் உடற் பகுதியை 2 - 3 மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றிக் கொள்ளல் வேண்டும். அத்துடன் குறித்த ஓர் இடத்தில் ஊசி ஏற்றிக் கொள்வதை ஒவ்வொரு தடவையும் மாற்றிக் கொள்ளுங்கள். ஒரே புள்ளியில் ஒவ்வொரு தடவையும் ஏற்றிக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இது அந்தப் புள்ளியுள்ள இடத்தின் தோலை தடிப்படையச் செய்வதால் இன்சுலின் சரியான முறையில் உடலில் உறிஞ்சப்படவும் இயலாத நிலை ஏற்படுகிறது. அத்துடன் அது கூடியளவுநோவையும் ஏற்படுத்தும். குறித்த ஒரு புள்ளியை 3-4 கிழமை களுக்கு ஒரு தடவையே பாவிக்க முயற்சி செய்தல் நன்மை தரும்.

இன்சுலின் ஏற்றிக் கொள்ளும் போது ஊசி தோலுக்குச் செங்குத்தாக (at 90 degrees) இருத்தல் வேண்டும். விரைவாகவும் குத்துதல் வேண்டும். ஊசி ஏற்றிக் கொண்ட பின்னர் ஊசியைக் கழற்றுதல் கூடாது. 5 செக்கன்களின் பின்னர் கழற்றலாம். (Withdrawal) விரைவாகவும், நேர்த்தியாகவும், கழற்றுதல் அவசியமாகும். மெதுவாக ஊசியை ஏற்றிக் கொள்ளும் போதும், கழற்றும் போதும் கூடியளவு நோவு உணரப்படும்.

இவ்வாறான சில நுட்பங்களைக் கையாள்வதன் மூலமாக இன்சுலினை நோவு இல்லாமல் ஏற்றிக்கொண்டு நீரிழிவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும்.

***Dr. கஜேந்தினி வேலுப்பிள்ளை,***
***நீரிழிவு சிகிச்சை நிலையம்,***
***போதனா வைத்தியசாலை,***
***யாழ்ப்பாணம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மருந்து வகைகளில் அதீத இலாபம்; தக்க வேளையில் அரசின் நடவடிக்கை

இறக்குமதி செய்யப்படும் பெரும் எண்ணிக்கையான மருந்து வகைகளின் விலைகளை, அரசாங்கம் குறைத்துள்ளது. உடன் நடைமுறைக்கு வரும் வகையில் அவற்றின் கட்டுப்பாட்டு விலைகளை அது நிர்ணயித்து உள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, புதிய கட்டுப்பாட்டு விலைகளை வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார். மருந்துப் பொருள்களின் புதிய விலைகளை நுகர்வோர் அதிகாரசபை நிர்ணயித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் விலைகளை தனியார் மருந்தகங்களும், தனியார் ஆஸ்பத்திரிகளும் தன்னிச்சையாக நிர்ணயித்து விற்பனை செய்வதால் நோயாளர்கள் பெரும் அளவில் பாதிக்கப்படுவதாக நீண்ட காலமாக குற்றம் சாட்டப்பட்டு வந்தது; அதிருப்தி நிலவியது.

மக்களை-நோயாளர்களை-பாதிக்கும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டே, கட்டுப்பாட்டு விலைகள் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துவகைகளின் விலைகள், மருந்தகத்துக்கு மருந்தகம் வித்தியாசமாக இருந்த நிலைமையும் இதன்மூலம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விவரித்து உள்ளார்.

மக்களை, நோயாளர்களை மிகப் பெரிய அளவில் பாதித்த இறக்குமதியாகும் மருந்துகளின் விலைகளின் வேறுபாடு களைத் தடுப்பதற்கு, விரைந்து செயற்படுமாறு ஜனாதிபதியும் இதற்கு உந்து சக்தியாக இருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பிட்ட ஒரு மருந்து வகையை, மக்கள் அதிக பணம் செலுத்தாமல் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்த போதிலும்கூட, தாம் கொள்ளை இலாபம் பெறுவதற்காக, மருந்து இறக்குமதியாளர்கள் அந்த வாய்ப்பை இல்லாமல் செய்து வந்ததாகவும் அமைச்சர் குற்றஞ்சாட்டி உள்ளார். மருந்து வகைகளை இறக்குமதி செய்யும் சில நிறுவனங்கள் 800 சதவீத இலாபம் வைத்துக்கூட அவற்றை நோயாளர்களுக்கு விற்பனை செய்து வந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார்.

அதேவேளை, வெளிநாட்டு மருந்து வகைகளை இறக்குமதி செய்வதில் சில நிறுவனங்கள் குறிப்பிட்ட சில உத்திகளைப் பயன்படுத்தி, நோயாளர்களிடம்-அவர்களின் உறவினர்களிடம்-கொள்ளை இலாபம் அடிப்பதை வழக்கமாக்கி இருந்ததாகவும் அமைச்சர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் விலைகளை மட்டுமன்றி, நோய்களைக் குணமாக்குவதற்கு உதவும் வைத்திய உபகரணங்களுக்கும் கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்படும் என்றும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அறிவித்துள்ளார்.

மக்களின் மிக அத்தியாவசிய தேவைகளில் உணவுக்கு அடுத்துத் தவிர்க்க இயலாத தேவை, மருந்தும் மருத்துவமும் ஆகும். இறக்குமதியாகும் மருந்து வகைகளின் விலைகளை மட்டுப்படுத்துவதில் அக்கறை காட்டுவது மிகவும் வேண்டப் படுவதும் பொருத்தமானதும் ஆகும்.

அதே வகையில், வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்படும் உணவு வகைகள், அவற்றுக்கான உப பொருள்களின் இறக்குமதியையும் கண்காணிப்பதில் நாட்டம் கொள்ள வேண்டும். உடன் தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்கள் (Fast Foods), இப்போது எமது சுதேசிய உணவுகளைத் தட்டி வீழ்த்தி, பாவனையில் உயர்த்தியாகி வருகின்றன. அதிக வசதி உள்ளவர்கள் அவற்றை நாடுவதனைப் பார்த்து, ஏனையோரும் தமது உடல் நலத்தை நாளாந்தம் அரித்து எடுக்கும் அந்தப் பண்டங்களை, நாடும் நிலைமை வேகமாகப் பரவியது.


எமது பிரதேசங்களைச் சேர்ந்த மிகப் பலரும் அவற்றை வயிற்றுக்குள், உடலுக்குள் தள்ளி, தமது சுக நலத்தை பல்வேறு வழிகளாலும், வகைகளாலும் கெடுத் துக் கொள்கிறார்கள். மேற்குறிப்பிட்ட பண்டங்க ளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்து வதற்கும் நடவ டிக்கை மேற்கொள்வது இன்றைய முக்கிய தேவைகளில்-அரசின் பொறுப்புகளில்-ஒன்றாகும் என்பதனை மறந்துவிடலாகாது.

---

கட்டுரை

# கூடங்குளம் அணு உலை

## கூடாத விளைவுகளின் உறைவிடம்



சேரலாதன்

இந்தியாவின் தென்பகுதியில் அமைந்திருக்கும் தமிழ் நாட்டில் ரஷ்யாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட அணு உலை தொடர்பாக மக்கள் தமது கவலையையும், எதிர்ப்பையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர்.

அப்போதைய காலகட்டத்தில் அடங்காத பிள்ளையாக வலம் வந்து பல நாடுகளிலும் தனது ஆயுத பலத்தால் அட்டகாசம் புரிந்து வந்த ஜப்பான் நாட்டின் வாலை ஒட்ட நறுக்கும் பொருட்டு, 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆறு மற்றும் ஒன்பதாம் திகதிகளில் அமெரிக்காவால் ஜப்பான் நாட்டின் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்களின்மீது வீசப்பட்ட அணு குண்டுகளால் ஏற்பட்ட பேரழிவுகள் இன்றும் கூட நெஞ்சைப் பதற வைக்கின்றது. அணுகுண்டுகள் வீசப்பட்டதை அடுத்து எழுந்த வெப்பம் காரணமாக அங்கு காணப்பட்ட உலோகங்கள் உருகி உலோகக் கலவைகள் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியதாகக் கூறுவார்கள். அந்தப் பகுதிகளில் காணப்பட்ட கட்டடங்கள் யாவும் தகர்ந்து வீழ்ந்தன. மரம், செடிகொடிகள், புல்லினங்கள் யாவும் எரிந்து மீண்டும் தலையெடுக்க முடியாதவாறு நாசமாகின. இந்த நிலையில் அங்கு வாழ்ந்த மக்களின் அவல நிலையைக் கூறவும் வேண்டுமா? கோரத் தாண்டவம் ஆடிய அணுக்கதிர்களாலும், வெப்பத்தினாலும் லட்சக் கணக்கானவர்கள் சாம்பல் மேடாக்கப்பட்டனர். பலர் உருக்குலைந்து விகாரமான தோற்றத்தை அடைந்தனர். தாயின் கருவிலிருந்த சிசுக்கள் கூட அணுக்கதிர்களால் பாதிக்கப்பட்டதாகக் கூறு வார்கள். அணுகுண்டுகள் வீசப்பட்ட பிரதேசங்களில் அணுவின் பாதிப்புக்கள் இன்றும் கூடக் காணப்படுவதாகவும், அங்கு வசித்த மக்களும், அவர்களின் சந்ததியினரும் பாதிக்கப் பட்ட நிலையிலேயே வாழ்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இதனால்தான் அணு என்ற சொல்லை உச்சரிக்கவே மக்கள் அஞ்சும் நிலை இன்று காணப்படுகின்றது. இந்த நிலையில் கூடங்குளத்தில் அமைக்கப்பட்ட அணு உலை தொடர்பாக அச்சம் வெளியிடப்பட்டு வருகின்றது. இந்த அச்சத்துக்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. 1986 ஆம் ஆண்டு ரஷ்யாவின் செர்னோபிலில் இடம்பெற்ற அணு உலை விபத்தின் தாக்கம் இன்றும் அங்கு காணப்படுகின்றது. தண்ணீரிலும், காற்றிலும் பரவிக் காணப்படும் அணுக்கதிர்கள் இன்றும் கூட மக்களின் உயிர்களைக் காவுகொண்டு வருகின்றன. ஜப்பான் நாட்டில் சுனாமி ஏற்பட்ட போது அங்கு அமைக்கப்பட்டிருந்த முக்கியமான அணு உலை ஒன்று பாதிப்புக்களை எதிர்கொண்டதால் அந்த நாடு அதிலிருந்து மீண்டெழ முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கின்றது. எதையும் நேர்த்தியாகச் செய்வதில் திறமை படைத்த ஜப்பான் நாட்டுக்கே இந்தக் கதி என்றால், இந்தியா எம்மாத்திரம் எனவும் அணு உலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கூடங்குளம் அணு உலையில் பாதிப்புக்கள் ஏற்படும்போது, அதனால் இன்னல்களை எதிர்கொள்பவர்கள் தமிழர்கள் என்பதுதான் நெஞ்சை நெருடுகின்றது. ஏனென்றால் இந்த உலைக்கு அருகில் தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ் மக்களும், இலங்கையின் வடபகுதி யைச் சேர்ந்த தமிழர்களும் தான் வசிக் கின்றார்கள். போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடபகுதித் தமிழர்கள் இன்னுமொரு அவலத்தை எதிர்கொண்டு நிற்கின்றனர்.

இந்த அணு உலை அமைக்கப்பட்டதால் சில நன்மைகளும் உள்ளன என்பதை மறுக்க முடியாது என்ற போதிலும், அதனால் ஏற்படும் தீமைகள் நன்மை களைவிடப் பல மடங்கு அதிகமான வையாகும். மேலும், இந்த அணு உலைகள் தடையில்லாத மின்சக் தியை உருவாக்கும் பொருட்டே அமைக் கப்படுகின்றன. புனல் மற்றும் அனல் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் போதாமையால், அணு உலைகளைத் தஞ்சமடைய வேண்டியதொரு நிலை ஏற்பட்டதால் இந்த அவலத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஜப்பானில் சுனாமி ஏற்பட்டபோது அணு உலைகள் பாதிப்புக்களை எதிர்கொண்ட தால் உலகின் வளர்ந்த நாடுகள் பலவும் அணு உலைகளைப் புதிதாக அமைப்பது தொடர்பாக மீள்பரிசீலனை செய்து வருவதுடன் ஏற்கெனவே அமைக்கப்பட்டவற்றைப் படிப்படியாக மூடி விடுவதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட் டுள்ளன. அணு உலைகளை இன்னும் பத்து ஆண்டுகளில் மூடிவிடப்போவதாக ஜேர்மனி தெரிவித்துள்ளது. இத்தாலியில் அணு உலைகள் தொடர்பாக மக்களிடை[illegible] நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 90 சத[illegible] மான மக்கள் அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஏனைய பல நாடுகளிலும் இந்த நிலைதான் நீடிக்கின்றது.

> இந்தக் கூடங்குளம் அணு உலையில் பாதிப்புக்கள் ஏற்படும் போது அதனால் இன்னல்களை எதிர் கொள்பவர்கள் தமிழர்கள் என்பதுதான் நெஞ்சை வருடுகின்றது. ஏனென் றால் இந்த உலைக்கு அருகில் தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ் மக்களும், இலங்கையின் வடபகுதி யைச் சேர்ந்த தமிழர்க ளும் தான் வசிக்கின் றார்கள். போரினால் கடு மையாகப் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடபகுதித் தமிழர்கள் இன்னுமொரு அவலத்தை எதிர்கொண்டு நிற்கின்றனர்.



இந்த நிலையில் இந்தியா் போன்ற நாடுகள் புதிது புதிதாக அணு உலைகளை அமைப்பதில் ஆர்வம்காட்டி வருகின்றமை மக்களின் மீது அவற்றின் அக்கறையின்மையையே எடுத்துக்காட்டுகின்றது. அதிலும் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களின் உயிர்களுக்கு உலை வைக்கக்கூடிய இந்த ஆபத்தான முயற்சியில் இந்திய மத்திய அரசு இறங்கியுள்ளமை பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்போது அதில் ஒருபகுதி இலங்கைக்கு வழங்கப்படவிருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. இந்தியா இலங்கைக்கு மின்சாரத்தை வழங்குவது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு எவ்வித மனக்குறை[illegible] இல்லை. ஆனால் எவரோ மின்சாரத்தைப் பெறத் தாம் பாதிக்கப்படுவதா என்ற கேள்வியே அவர்கள் முன்னால் எழுந்து நிற்கின்றது.

எனவே இந்திய மத்திய அரசு இந்த அணு உலையை இயங்கச் செய்வது தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. இதனை மக்கள் தமது போராட்டங்கள் மூலமாகத் தான் எடுத்துக்கூற வேண்டும் என்பதில்லை. ஆட்சியாளர்கள் தீர விசாரித்து எடுக்க வேண்டிய முடிவுதான் இது என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடமேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலுவூட்டல் விருது கொமர்ஷல் வங்கி வசம்


புதுடில்லியில் விருது வழங்கப்பட்டவேளை...

கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியம் (சி.எஸ்.ஆர்) பெறுமதிமிக்க பொறுப்பான ஆசிய தொழில் முயற்சி விருதை (ஏ.ஆர்.ஈ.ஏ) வென்றுள்ளது.

புதுடில்லியில் இடம்பெற்ற 2014க்கான விருது வழங்கும் விழாவில் சமூக வலுவூட்டல் பிரிவில் இந்த விருது வழங்கப்பட்டது. இது இந்த நாட்டுக்கு கொமர்ஷல் வங்கி பெற்றுக் கொடுத்துள்ள மற்றொரு சர்வதேச கீர்த்தியாகும்.

பொறுப்பு வாய்ந்த தொழில்முயற்சிக்கான ஆசியாவின் தலைமை விருதாகக் கருதப்படும் ஏ.ஆர்.ஈ.ஏ. விருது வருடாந்தம் ஏழு பிரிவுகளில் வழங்கப்படுகின்றது.

என்டர்பிரைஸ் ஏஸியா என்ற அரச சார்பற்ற நிறுவனம் இந்த விருதை வழங்குகின்றது. ஆசிய பிராந்தியம் முழுவதும் தொழில் முயற்சி அபிவிருத்திகளை மேம்படுத்தும் வகையிலேயே இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

நிலைத்து நிற்கக் கூடிய தொழில் முயற்சிகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதில் சர்வதேச நியாயங்களையும் ஒழுக்க விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பதே இதன் குறிக்கோளாகும். இலங்கையின் கல்வித்துறைக்கு கொமர்ஷல் வங்கியின் அளப்பரிய பங்களிப்புக்கான அங்கீகாரமாகவே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. மூன்று தேசிய மட்டத் திட்டங்களின் மூலம் கொமர்ஷல் வங்கி இந்தப் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

பாடசாலைகளுக்கான தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை அன்பளிப்புச் செய்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கான வருடாந்த புலமைப் பரிசில் மற்றும் மடிக் கணினிகள் விநியோகம், மற்றும் கிராமப்புற பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வி மேம்பாட்டுத் திட்டம் என்பனவே அவையாகும். (து)

# செலான் வங்கியின் சிறுவர் சந்தை




செலான் வங்கி சாவகச்சேரி கிளையின் ஏற்பாட்டில், மாணவர்களின் ஆளுமை விருத்தியை அதிகரிக்கும் நோக்குடன் மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் 'சிறுவர் சந்தை' அண்மையில் நடைபெற்றது.

இந்தச் சிறுவர் சந்தையை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆரம்பித்து வைத்தார்.

இந்தச் சிறுவர் சந்தையில் சிறுவர்கள், மரக்கறிகள், ஓலைகளால் செய்யப்பட்ட பொருள்கள், பலசரக்குப் பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி, பாட சாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-9)

# ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் நிகர இலாபம் ரூபா 362 மில்லியன்

ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனமானது, 2013 டிசெம்பர் மாதத்துடன் முடிவடைந்த நிதியாண்டில் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 362 மில்லியனை ஈட்டிக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. இது கடந்த நிதியாண்டில் அடையப்பட்ட இலாபமான 73 மில்லியன் ரூபாவைவிடக் கணிசமான அளவு அதிகமானதாகும்.

சொப்ட்லொஜிக் குழுமத்தின் நிதிச் சேவை துறையின் ஓர் அங்கமான ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் நிறுவனம், இலங்கை பொருளாதாரத்தின் நேர்மறை அடிப்படைகள் மற்றும் காப்புறுதி துறை குறித்து தொடர்ச்சியான வணிக மூலோபாயங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டின் செயற்றிறனானது. வணிகத் திட்டம் மற்றும் நிறுவனத்தின் நிலையான வளர்ச்சி மீதான உறுதியான நிலைப்பாட்டினை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் 2013 ஆம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட வெகுமதி த்தளம் ரூபா 4.07 பில்லியன் வளர்ச்சி அடைந்துள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 26 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது. மேலும் ஆயுள் காப்புறுதி வெகுமதித் தளம் ரூபா 2.5 மில்லியனைப் பெற்று 24 வீதத்தால் அதிகரித்துள்ளது. மற்றும் பொதுக்காப்புறுதி வெகுமதித் தளம் ரூபா 1.5 பில்லியனைப் பெற்று 31 வீதத்தால் அதிகரித்திருந்தது. இந்த வளர்ச்சி விகிதங்கள் அனைத்தும் 2013 இன் 3வது காலாண்டில் ஆயுள் வளர்ச்சி 9.5 வீதமாகவும், முழு ஆண்டிற்குமான பொதுக்காப்புறுதி 9.1 வீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

கடந்த 2013ஆம் ஆண்டு முடிவுகளின்படி, நிகர ஈட்டிய கட்டுப்பணம் ரூபா 3.24 பில்லியனைப் பெற்று 35 வீத வளர்ச்சியையும், மொத்த தேறிய வருவாய் ரூபா 4.23 பில்லியனைப் பதிவு செய்து 48 வீத அதிகரிப்பையும் பெற்றிருந்தது. அதேவேளை மொத்தச் சொத்து ரூபா 7.47 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த வருடத்தில் பெற்றுக்கொண்ட ரூபா 5.89 பில்லியனை விடவும் இது 28 வீத அதிகரிப்பாக உள்ளது. (து)

# சிறந்த நிதிச்சேவை வழங்குநராக பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ்

எட்டாவது தடவையாக இடம்பெற்ற எஸ்.எல்.ஐ.எம் நீல்சன் மக்கள் விருதுகள் 2014 நிகழ்வில், தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக ஆண்டின் சிறந்த நிதிச் சேவைகள் வழங்குநராக பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கும் வைபவம் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றது. மக்கள் விருதுகள் என்பது மக்களின் மனம் கவர்ந்த வர்த்தக நாமங்களை அவர்களே தெரிவு செய்யும் வகையில் அமைந்த விருது வழங்கும் நிகழ்வாக அமைந்துள்ளது. இந்த விருதைத் தனதாக்கியிருந்ததன் மூலம், பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, மக்களின் மனமறிந்த நிதிச் சேவைகள் வழங்குநர் என்பது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம், மக்கள் வங்கியின் உறுதிப்பாடு, உறுதுணையுடன் சேவைகளை முன்னெடுத்திருந்தது. தற்போது இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் உறுதியான நிலையில் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி திகழ்கிறது. 2011ஆம் ஆண்டு பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டிருந்ததுடன், இலங்கையில் செயற்படும் வங்கி சாராத மாபெரும் நிதியியல் நிறுவனமாகத் திகழ்கிறது. பிட்ச் ரேடிங் மற்றும் ஸ்டான்டர்ட் அன்ட் புவர் எனும் இரு சர்வதேச தரப்படுத்தல்களையும் இந்நிறுவனம் பெற்றுள்ளது. சந்தை மூலதனவாக்கத்தைக் கருத்தில் கொள்ளும் போது, இலங்கையில் காணப்படும் சிறந்த 25 நிறுவனங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்படும் சிறந்த ஆண்டறிக்கைக்கான தங்க விருதினையும் 2013ஆம் ஆண்டு பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி தனதாக்கியிருந்தது. (து)



விருது வழங்கும் நிகழ்வில்

# அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் நிறுவனம் மூலம் நியூ ஹொலண்ட் உழவு இயந்திரங்கள் இலங்கையில்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான பங்களிப்பைச் செய்து வரும் அசோஷியேட்டட் மோட்டர்வேய்ஸ் பிறைவேட் லிமிட்டட், இந்த நாட்டின் மோட்டார் வாகனத் துறைக்கு உலகப் புகழ்பெற்ற வர்த்தகப் பெயர்களிலான வாகனங்களைப் பெற்றுக்கொடுப்பதில் நீண்ட காலமாக முன்னணி வகிக்கிறது. இந்த வகையில், இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயப் பெருமக்களின் நன்மையை முன்னிட்டு, உலகத்தரம் வாய்ந்த, உழவு இயந்திரங்களையும் உபகரணங்களையும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் புதிய முயற்சியொன்றையும் ஏ.எம்.டபிள்யூ ஆரம்பித்துள்ளது. இதற்காக, உலகளாவிய சி.என்.எச் இண்டஸ்ட் ரியல் குழுமத்தின் ஓர் அங்கமான நியூ ஹொலண்ட் பயட் இந்தியாவுடன் சென்றஆண்டு டிசெம்பர் மாதம் பங்காளித்துவ உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டது.

இந்த உடன்படிக்கையின் அமுலாக்கத்திற்கான முதல் நடவடிக்கையாக, 2014 மார்ச் 6ஆம் திகதி நியூ ஹொலண்ட் இயந்திரங்களின் விற்பனைக்கான பிரதான கிளை அனுராதபுரத்தில் திறந்துவைக்கப்பட்டது.

ஏ.எம்.டபிள்யூ குழுமத்தின் முகாமைப் பணிப்பாளர் சமந்த ராஜபக்ஷ, அனுராதபுரம் மாநகர முதல்வர் திரு. எச். பி. சோமதாச, நியூ ஹொலண்ட் பயட் இந்தியா பிறைவேட் லிமிட்டட்டின் விற்பனைக்குப் பிற்பட்ட சேவை சிரேஷ்ட பொது முகாமையாளர் ராமகுமார் ஆகியோரும், அரச அதிபர் மஹிந்த செனவிரத்னவும் இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். அனுராபுரம், லும்பினி, ஜயந்தி மாவத்தையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் ஏ.எம்.டபிள்யூ நிறுவனத்தின் முகாமைத்துவ உறுப்பினர்கள், இந்திய நியூ ஹொலண்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகள், வர்த்தக முகவர்கள், வாடிக்கையாளர்கள், குத்தகைப் பங்காளிகள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். அனுராதபுரம், விவசாய சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் என்ற காரணத்தினாலேயே வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அனுராதபுரம் நகரில் பிரதான கிளையை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது.

ஏ.எம்.டபிள்யூ நிறுவனமும், நியூ ஹொலண்ட் நிறுவனமும் ஏற்படுத்தியுள்ள இந்தப் பங்காளித்துவ முயற்சியின் கீழ் உழவு இயந்திரங்கள், பொருள்களின் கையாளுகைக்கான உபகரணங்கள், அவசியமான நிதிச் சேவைகள் என்பன வழங்கப்பட இருக்கின்றன. சிறந்த அறுவடையைப் பெற்றுக் கொள்வதற்காக, விவசாயிகளுக்குத் தரமுயர்ந்த இயந்திர சாதனங்கள் வழங்கப்படுவதால் இந்த நாட்டின் விவசாயத் தொழிற்றுறை மேலும் வலுவடையும் என்று இந்த இரு நிறுவனங்களும் நம்புகின்றன. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் மகுடம்போல் விளங்கும் யாழ்.நகரில் சிவ வழிபாட்டின் மேன்மையைப் புலப்படுத்தும் ஆலயங்கள் பல. அவற்றுள் ஒன்றான வண்ணையம் பதியில் கோயில்கொண்டு அருளாட்சிபுரியும் ஸ்ரீமதி வாலாம்பிகா உடன் உறை வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயமாகும். உலகெலாமுணர்ந்து ஓதற் கரியவனாகிய சிவபெருமான் வழிபடும் அடியார்களின் துயர்போக்கி அருள்புரியவென்று அமர்ந்திருக்கும் அற்புத தலமான வைத் தீஸ்வரன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்சவம் இன்றாகும்.

மகோற்சவமானது ஆலயத்தில் நடைபெறும் நைமித்திய கிரியைகளில் மிகவும் சிறப்பான ஒன்றாகும். இம் மகோற்சவத்தின் அதி சிறப்பாக இரதோற்சவம் விளங்குகிறது. இந்த ரதோற்சவத்தில் கலந்து வடம் பிடிக்கும் அடியார்கள் தமது பிறவிப்பிணியை நீக்கி வாழ்வில் உயர்வு பெறக்கூடிய உன்னத நிலையை அடைவீர்கள். ஆகவே இப் பஞ்சரத ப் பவனி காணவரும் அடியார்களுக்கு எல்லாம் வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் திருவருட் கடாட்சம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

சிவாகம ஞானசாகரம், ஈசான சிவாச்சாரியார் சிவப்பிரம்ம ஸ்ரீ சோ.இ.விக்னேஸ்வரக்குருக்கள்
மகோற்சவ குருவும், தேவஸ்தான பிரதம குருவும்.

நல்லை...

எழுந்தரு...
மகிமை ம...
செட்...
முகாமை...
செய்யப்...
வானளா...
காட்சி த...
எம்...
வாழ்வு...
பிரார்த்தி...
ஸ்ரீ ...
கிடைக்க...

## வண்ணை வைத்[...]ஸ்வர...

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், கோபாலச் செட்டியாரின் திருமகனான வைத்திலி...
வருடங்களுக்குமுன் (கி.பி 1790) கட்டுவிக்கப்பட்டது. பெரும் பொருள் ஈட்டி தனவ...
அமைக்க எண்ணிய போது கூழங்கைத்தம்பிரான் செட்டியாரிடம் உன்னை இந்த நி...
பெருமானுக்கும் தையல் நாயகித் தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைக்க வேண்...
ஆலயங்களை இடித்தும், சைவசமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்தை பரப்பி...
முற்பட்ட வைத்திலிங்கச் செட்டியார்அவர்கள் தனது செல்வாக்கினைப் பாவித்து வண்ணை...
அனுமதி யைப் பெற்றார். 1787 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1790 இல் வேலையினைப் பூர்த்...
பரிவாரக் கோயில்களையும் அமைத்து, அதே ஆண்டிலேயே (1790) சாதாரண வருட...
நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்வித்தார். நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடை...
ஆலயத்தை தாமே இனிது பரிபாலித்த பின், தமது புத்திரர்களான ஸ்ரீகோபாலச் செ...
விட்டுத் தமது அந்திம காலத்தைக் காசியிற் கழிக்க விரும்பி அங்கு சென்று சில கால...
உணர்ந்து கருங்கல்லினால் ஒரு தொட்டி அமைப்பித்து, அத் தொட்டியில் ஆரோகணித்...
புருஷர் உலகில் முன்னும் பின்னும் இருந்ததில்லை என்றால் மிகையாகாது. பின் கோ...
செட்டியார், வைத்திலிங்கச் செட்டியார் ஆகியோர் பரிபாலித்து, சில காலம் வைத்தியல...
ஆச்சி அவர்களாலும், பின்னர் அவர்களது புதல்வர் கந்தப்புச் செட்டியாராலும் கோபால...
ஆம் ஆண்டு வரையப்பட்ட சாசனத்தின்படி அவரது (வழித் தோன்றல்களால்) தொடர்...
நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார். அவ...
புராணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப் பையர் சுவாமிகள் செய்து வந்தார்கள். நல்...
தம்பிரான் ஸ்வாமிகள், துறவு பூணும் வரை முத்தமிழ் மணி சி.எஸ் எஸ். மணிபாகவதர்என...
வசந்தமண்டபத்திலே செய்து வந்தார்கள். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஓ...
மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இலங்கையின் ஏனைய பாக...
இவ்வாலயத்தைப் பின்பற்றி நித்திய நைமித் தியங்கள் நடத்துவதற்கு [...]கோயிலே...
பாலாம்பிகை (தையல்நாயகி) அம்பாளோடு வைத்தீஸ்வரப் பெருமான் கோ[...] கொண்...

2002 ஆம்...

அனுசரணை: தேர்த்திருவிழா உபயகாரரும்,

கிருஷ்ணா நகை மாளிகை
தங்கப் பவுண் நகை வியாபாரம்
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டிவீதி யாழ்ப்பாணம்
கிளை -கிருஷ்ணா அடகு கடை, 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

சாரங்கா நாணயமாற்று சேவை
(Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
சாரங்கா நகைமாடம்
நவீன அழகிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6972 T.P: 222 6972, Fax.No: 222 8869

காரிருள் அகற்றி நிற்கும் கதிரவன் நீயென்றோ
உமா களஞ்சிய...
Uma Stores
இல.378 (250), கே.கே.எஸ்...
யாழ்ப்பாணம்.

KKJ Work Shop & Sales Center
புதுவருடத்தை முன்னிட்டு அனைத்துத் தளபாடங்களும் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொழிலகம்: இல.11, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே. 077 9037 203

சண்முகம் சைவ உணவகம்
கன்னாதிட்டி(சிவன் கோயிலடி)யாழ்ப்பாணம்.

சிறி நதியா நகை மாளிகை
Sree Nathiya
01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 2709
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 6744

ஜெகன் கள...
இல.477 காங்கேசன்துறை ...
தொ.பே: 021 2...

நதியா நகை மாடம்
இல.02, இல.149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 3479 T.P. 021 221 7189
கிளை: கவுசன் நகைமாடம்
இல. 129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தவம் போட்டோ அன் கலர் லாப்
THAVAM PHOTO & COLOR LAB
162, Navalar Road, 362, Kasthuriyar Road, Jaffna 0777 570 123

மருதா பொலிமர் றபர் சீல்
இல.452(318), கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

நீல...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ...ணம் வண்ணை
# ...ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்
# ...பு மலர் - 16.03.2014

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



பரங்கருணைத் தடங்கடலான ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எல்லாம் வல்ல சிவன் தம்மை வழிபாடு செய்கின்ற அடியவர்களுக்கு அருள்புரிந்து வைத்தியநாதராக எழுந்தருளி வீற்றிருக்கும் இந்த ஆலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற மகிமை மிக்க தல மாகும்.

செட்டியார் பரம்பரையிலான தர்மகர்த்தாவும் உரிமையாளரும் முகாமையாளரு மான க.வைத்திலிங்கம் செட்டியாரால் பரிபாலனஞ் செய்யப்பட்டு வரும் இந்த ஆலயம் மிக்க சிறப்போடும் ஆழகிய வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்தோடும் விளங்கி கோலாகலக் காட்சி தரும்பாங்கு சொல்லி முடியாது.

எம்பெருமான் ஆலய அடியார்களுக்கு திருவருள் புரிந்து மங்கள வாழ்வு அருள வேண்டுமென அருளாசிகள் நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஸ்ரீ வைத்தீஸ்வரனின் திருவருட் கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## ...ஸ்வரன் கோயில்

...வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் இற்றைக்கு இருநூற்றுப்பதினொரு ...ட்டி தனவந்தரான வைத்திலிங்கச் செட்டியார் தனக்கென ஒரு மாளிகை ... இந்த நிலைக்குக் கொண்டு வந்த பரம பிதாவாகிய வைத்தியநாதப் ...மக்க வேண்டும் என்று கூறினார். செட்டியார் அதற்குச் சம்மதித்தார். சைவ ...தை பரப்பி வந்த ஒல்லாந்தர் மத்தியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க ...து வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் ...னைப் பூர்த்தி செய்து, வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கான ...ரண வருடம் சித்தரை மாதம் பூர்வபட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச ...ர்க நடைபெற்றுவரச் செய்தார்.

...பாலச் செட்டியார், ஸ்ரீகந்தப்பச் செட்டியார் அவர்களிடத்து ஒப்புவித்து ...று சில காலம் சீவித்த பின், திருவருளால் தமது உடல் நிரியாணத்தை ...ரோகணித்துக் கங்கையில் இறங்கினார். இவர் போன்ற மகா புண்ணிய ...து. பின் கோபாலச் செட்டியார், கந்தப்பச் செட்டியார்,பொன்னுச் சாமிச் ...வைத்தியலிங்கச் செட்டியாரின் மனைவியார் திருமதி வை.கண்ணம்மா ...ம் கோபாலன் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் அவர்களால் 1805 ...ல்) தொடர்ந்தும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. நல்லைநகர் ஆறுமுக ...ப்தார். அவர்களுக்கு பின் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை ...ர்கள். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன நிறுவுனர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ...பாகவதர்என்ற பூர்வாஸ்சிரம நாமத்துடன் சமயப் பிரசங்களை இவ்வாலய ... மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றது. இத் தலத்திற்கு தீர்த்தம் வண்ணை ...ரணைய பாகங் களிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள சைவத் தலங்களெல்லாம் ...கோயிலே ...ாரமாக விளங்கியது. இத் தலத்தில் உலக மாதாவாகிய ... கொண்டெழுந்தருளி சைவ நன் மக்களுக்கு கருணை சுரந்தருளுகிறார்.

...02 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரின் பிரதியாக்கம்

## தாய் போன்று காத்த வைத்தீஸ்வரர்

சைவ ஆகம முறைப்படி பரிவாரத் திருக் கோயில்களை வெவ்வேறு திக்குகளில் கொண்டு, யாழ் நகரின் மத்தியில் நடுநாயகமாக அமைந்திருக்கும், செட்டியார் சிவன்கோயில் என அழைக்கப்படும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் உறையும் ஸ்ரீமத் வாலாம் பிகா சமேத வைத்தீஸ்வரப் பெரு மானை வணங்கி, எனது உணர்வுகளை இங்கு வெளிப்படுத்தலாம் என எண்ணுகிறேன். சைவத்தை வளர்க்க வேண்டும், அதனைப் பரப்ப வேண்டும், பக்தர்களைப் பெருக்க வேண்டும், மதமாற்றத்தை ஒழிக்க வேண்டும் என்று எம்முள் பலர், முன்னெடுத் துச் செல்கின்ற போதிலும் சிவம் என்பதை உணரவேண்டும் என்பதுதான் முதன்மை யானது ஆகும்.

புதிதாக அமைக்கப்பட்ட, புனரமைக்கப் பட்ட ஆலய நிர்மாண வேலைகளில் காலத்தால் ஏற்பட்ட பல புதிய மாற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. வெகுவாகப் பாதிப்படைந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை ஆகம விதிமுறை வழுவாது புனர் நிர்மாணஞ் செய்யும் பாக்கியம் கிடைக்கப் பெற்றமை நாங்கள் செய்த புண்ணியமென்றே குறிப்பிடவேண்டும். புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருத்தொண்டர் அறுபத்து மூவருடனும் 27.01.2002 இல் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்ற இவ் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மூன்று வீதிகளைக் கொண்டு அமைந் திருப்பது முக்கியமானதாகும். உள்வீதி, இரண்டாம் வீதி, வெளி வீதி என அழைக்கப்படும் இவ் வீதிகளில் இரண்டாம் வீதியில் தீர்த்தக்கேணி சித்தாமிர்த புஷ் கரணிக் கட்டடமும், களஞ்சிய விநாயகரும், கற்பக விநாயகரும் வாகன சாலையும் அமைந்திருக்கின்றன. மூன்றாம் வீதி கடைத் தெருவில் (காங்கேசன்துறை வீதி- மானிப்பாய் வீதி- சிவன் வடக்கு வீதி) அமைந்திருக்கிறது.



வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு காலத்திற்குக் காலம் ஏற்பட்ட (1985-1996) பாதிப்புக்களை உற்று நோக்கும் பட்சத்தில், இந்த யாழ் நகருக்கு வர இருந்த அனர்த்தங்களை, தன் மேல் தாங்கி, எம்மைத் தாயெனக் காத்தவர் வைத்தீஸ்வரரே.

வைத்திலிங்கச் செட்டியார் கந்தப்பச் செட்டியார், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம். 2002 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரின் பிரதியாக்கம்

...தம், விளம்பரதாரர்களும் ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

...நீயெயன்றோ? உன்பணி வாழ்க
...ஞ்சியம்
...கே.கே.எஸ் றோட்,
...ாணம்.

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
சகல நாடுகளுக்குமான
விமானப்பயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113
புதிய கட்டடத் தொகுதி
இல.10, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3536

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
சு.நாகலிங்கம் ஆச்சாரி
(கலாபூஷணம் (2013)
316, காங்கேசன்துறை,
யாழ்ப்பாணம்
சு.வடிவேல் ஆச்சாரி
மானிப்பாய் வீதி,
அரசடிச் சந்தி,
யாழ்ப்பாணம்
நா.சுதர்சனன் ஆச்சாரி
ஆபரண தொழிலகம்
22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
ராஜா தியேட்டர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
கோயிலுக்குரிய கொடிமரம், கலசம், திருவாசி, வெள்ளி அங்கிகள்,
கிரீடங்கள் மற்றும் பித்தளை வேலை செய்பவர்கள்.

களஞ்சியம்
...ன்துறை வீதி, யாழ்ப்பாணம்
021 222 5035

கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
பட்டாபி படமாடம்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7821.
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4351.

மங்களா காட்சியறை
Mangala
Office & Home Furniture
MANGALA SHOW ROOM
536, K.K.S. Road, Jaffna.
021 222 8367, 021 492 1099, 0777 286069
mangalashowroom@gmail.com
Authorized Dealers For

பாடசாலை சீருடைகளை பளிச்சிடும் வெண்மையாக்கும்
MILK WHITE
மில்க் வைற் நீல சோப்
பாவியுங்கள், மேலுறைகளைச் சேகரியுங்கள்
மில்க் வைற், யாழ்ப்பாணம்.

பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள், புத்தகங்கள்
அனைத்து பொருள்களும் சாயிறாதிகள் யாவும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234 கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
021 222 2573

அபிராமி
சூ சென்ரர்
ABIRAMI SHOE CENTRE
155, 156 Model Market, Power House Road, Jaffna. 021 222 3525

மேனகா
பிறிண்டேர்ஸ்
...கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

சிவாஸ் நகையகம்
ஓடர் நகைகளை
22 கரட் தங்கத்தில்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.
இல.08, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குண்டு

இல.114, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்குண்டு. நேரில் பேசித்தீர்மானிக் கலாம்.
தொடர்பு: 077 662 1727
(45721) (12.3.6)

## வீடு வாடகைக்குத் தேவை

பொலிஸார் நீதியுடன் நடந்து கொள்ளவில்லை என்று கருதிய அவர்கள் அது தொடர்பில் முறையிடுவதற்காக நேரடியாக உதயன் பணிமனைக்கு வந்திருந்தனர். "கொலையாளிகள் ஓடிப்போக, அவர்களைத் துரத்திச் செல்லும் பொலிஸார் நடந்து சென்றனர்" என்று அவர்கள் கோபத்துடன் தெரிவித்தனர். தமது பாடசாலை அதிபர் மைதானத்தில் இருக்கவில்லை என்றும் மைதானத்தில் இருந்த யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பொலிஸார் துரித நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தனர் என்றும் சுட்டிக்காட்டிய பழைய மாணவர்கள், இவற்றின் காரணமாகவே அமல்ராஜ்ஜின் இறப்பு நிகழ்ந்தது என்றும் குற்றஞ் சாட்டினர்.
இருப்பினும் கொலையில் தொடர்புபட்டவர்கள் என்று கருதப்படுபவர்கள் தலைமறைவாகி உள்ளனர் என்றும் அவர்களைத் தேடி வலை விரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.
இதற்கிடையே இந்த வேண்டத்தகாத சம்பவத்தைத் தாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறார் என்றும், இது ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவம் என்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் சட்டத்தரணி கே.சுகாஸ் தெரிவித்தார். (உ-5)

### கறுப்புப்பட்டி

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியாவிலிருந்து புறப்பட்ட, வவுனியா நேரியகுளம் மகாவித்தியாலய ஆசிரியர் நிரூபன் (வயது-30) அதன் பின்னர் காணாமற்போயிருந்தார். 5 மாதங்களின் பின்னர் மாங்குளம் காட்டுப் பகுதியிலிருந்து அவரது மண்டையோடு, எலும்புக்கூடு, உடுதுணிகள் என்பன மீட்கப்பட்டன. அவர் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.
அவரது சாவு தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரியே போராட்டம் நடத்தப்படவுள்ளது. "வடக்கு மாகாண ஆசிரியர்கள் அன்றைய தினம் கறுப்புப் பட்டியுடன் சென்று பாடசாலையில் கடமையாற்ற வேண்டும். அன்று மாலை 2 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக நடைபெறும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அனைத்து ஆசிரியர்களும் கலந்துகொள்ள வேண்டும்" என்று ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
ஆசிரியர்களின் இந்தப் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், மாணவர்கள் என சகல தரப்பினரும் தமது ஆதரவைத் தந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-5)

### ரயில் மோதி

னியா புளியங்குளத்தில் ரயில் மோதி தந்தையும் மகனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தனர்.
மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் ஏ-9 பிரதான வீதிக்குச் செல்ல முற்பட்டு ரயில் தண்டவாளத்தைக் கடந்தபோது ரயிலில் மோதுண்டார்.
விபத்தையடுத்து படுகாயமடைந்த ஜெகன் மிருசுவில் வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
இதேவேளை, கோண்டாவிலில் இராணுவ அம்புலன்ஸ் வாகனம் மோதியதனால் படுகாயமடைந்த மூன்று பேரும் யாழ். போதனா வைத்திய சாலையில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் ஒருவர் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார். (உ-4 -9)

### இந்தியாவை

யின் மோசமான வெளிவிவகார கொள்கையினால் ஏற்பட்டதொன்று என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
"முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் பெயரையோ, இந்தியாவின் பெயரையோ அவர் தனது உரையில் வெளிப்படையாகச் சொல்லவில்லை. கடந்த அரசுகள் கைக் கொண்ட வெளிவிவகாரக் கொள்கையினால், வடக்கிலே புலிகளுக்கு எதிரான போரில் வெளிநாட்டுப் படைகள் களமிறங்கின. இதனால் இலங்கை இராணுவம் முகாம்களுக்குள் முடங்கியது. மோசமான வெளிவிவகார கொள்கையினால், வெளிநாட்டவர்கள் இலங்கையின் வான்வெளியை ஊடறுத்ததுடன், வடக்கில் பருப்புக்களையும் கொட்டினர்" என்றார் மஹிந்த ராஜபக்ஷ.
1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'மிராச்' ரக விமானங்கள் மூலம், இந்திய அரசே பருப்பு பொட்டலங்களைப் போட்டிருந்தது.
போரின் பின்னரான நாட்டின் அபிவிருத்தியை கொள்ளையடிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்றும் சர்வதேச சமூக அழுத்தங்கள் ஐ.நா. தீர்மானங்கள் எல்லாம் அவற்றின் ஓர் அங்கமே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். இதற்கு எதிர்கட்சிகளும் ஒத்துப் போவதாக அவர் சாடினார். (உ-5)

### உண்மைப்

சர்ச்சையால் இந்த நிலைமை ஏற்பட்டது. யாழ். மத்திய கல்லூரி ஆதரவாளர்கள் மைதானத்தினுள் புகுந்து நடுவரைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இதைத் தொடர்ந்து இரு பாடசாலைகளின் ரசிகர்களும் மைதானத்தில் புகுந்து குழப்பம் விளைவித்தனர்.
நடுவரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதில் இரு அணியினருக்கும் இடையில் இணக்கம் ஏற்படவில்லை. போட்டி மீள ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடல் நடத்தப்பட்ட போதும், சமரசம் ஏற்படவில்லை. இதனால் போட்டியைக் கைவிடுவது என்று தீர்மானிக்கப் பட்டது.
பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான ஒரு நாள் ஆட்டத்தில், இரு பாடசாலைகளின் ரசிகர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்து இந்த ஆட்டமும் கைவிடப்பட்டது.
இதேபோன்று கண்டியில் சென் அன்ரனிஸுக்கும், ரினிற்றி கல்லூரிக்கும் இடையிலான பெரும் போரில், வீதியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமைக்காவும் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமைக்காகவும் 50 மாணவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் 5 பேர் மட்டும் எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனையோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர்களின் வாகனங்களும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டன. (உ-5)

### பிழையை

இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக வடக்கு மாகாண சபை திறம்பட செயற்படுவதை உறுதி செய்யுமாறு இலங்கை அரசைக் கோருகிறது. - என்ற வகையில் ஆறாவது செயற்பாட்டுப் பந்தி திருத்தப்பட்டுள்ளது. முன்னைய நகலில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் தேவைப்பாட்டுக்கு அமைய வடக்கு மாகாண சபைக்கும் அதன் முதலமைச்சருக்கும் தேவையான வளங்களையும், அதிகாரங்களையும் வழங்க இலங்கை அரசை ஊக்குவிக்கிறோம். - என்றிருந்த வாசகம் இப்போது மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படி திட்டவட்டமாக அரசைக் கோரும் விதத்தில் அமைந்துள்ளது. முதலாவது நகல் பிரேரணையில் செயற்பாட்டுப் பந்தி 8 இலேயே இலங்கை அரசு மீதான தாக்கமான பிரேரணை வாசகம் அமைந்திருந்தது. தற்போது திருத்தப்பட்ட இரண்டாவது நகல் பிரேரணையில் அது மேலும் இறுக்கமாக - வெளிப்படையாக - அமையும் வகையில் பின்வருமாறு திருத்தப்பட்டி ருக்கின்றது:-
தொடர்ந்து இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயத்தில் தெளிவான பேறுகளைத் தரக்கூடிய தேசிய மட்ட நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால் சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியமாகின்றது என்ற ஆணையாளரின் பரிந்துரையையும் முடிவையும் கவனத்தில் எடுத்து -
அ) இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரத்தைத் தொடர்ந்து கண்காணித்து, சம்பந்தப்பட்ட தேசிய மட்ட நடவடிக்கையின் முன் னேற்றத்தை மதிப்பிட்டு -
ஆ) இலங்கையில் இரு தரப்புக்களினாலும் இழைக்கப்பட்டவை அல்லது துஷ் பிரயோகமாகப் புரியப்பட்டவை என்று கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் அதேபோன்ற குற்றங்கள் குறித்து பரந்தளவிலான விசாரணையை முன்னெடுத்து - தண்டனை விலக்களிப்பிலிருந்து தப்ப முடியாத வகையிலும் குற்றப் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் வகையிலும், அத்தகைய மீறல்கள் இடம்பெற்றமை தொடர்பான உண்மைகளையும், சூழ்நிலை சந்தர்ப்பங்களையும், சம்பந்தப்பட்ட நிபுணர்களின் உதவியைப் பெற்று நிலைநிறுத்தும்படியும் -
இ) தற்போதைய இந்தப் பிரேரணையின் நடைமுறைப் படுத்தல் தொடர்பாக மனித உரிமைகள் சபைக்கு அதன் 27 ஆவது அமர்வில் வாய்மூல அறிக்கை யையும், 28 ஆவது அமர்வில் தொடர்ந்து கலந்துரையாடல் ஒன்று இடம்பெறக்கூடிய விதத்தில் பரந்தளவிலான எழுத்து மூல அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு - ஆணையாளரைக் கோருகிறோம். - என்று அந்த 8 ஆவது பந்தி திருத்தப்பட்டிருக்கின்றது.
இம்மாத ஆரம்பத்தில் அமெரிக்கா, பிரிட்டன், மொறீஸியஸ், மொண்டிநிக்ரோ, மஸிடோனியா ஆகிய நாடுகள் கூட்டாக முனவைத்த முதல் வரைவு வாசகங்கள், பல நாடுகளின் பிரதிநிதிகளின் கருத்துக்களை உள்வாங்கி தற்போது மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன. அந்த புதிய வடிவத்திலேயே, இலங்கையை மேலும் இறுக்கும் வகையில் - இலங்கைக்கு எதிரான விசாரணைகள் தொடர்பில் ஆணையாளருக்குத் திட்டவட்டமான ஆணைகளை மனித உரிமைகள் சபை வழங்கும் விதத்தில் மாற்றியமைக்கப் பட்டிருக் கின்றன.
தமது பிரேரணையின் முதல் நகல் வடிவம் தொடர்பில் பல்வேறு நாடுளினதும் பிரதிநிதிகளின் கருத்துக்களை உள் வாங்குவதற்காக பரந்தளவிலான இரண்டு கலந்துரையாடல்களை அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஏற்கனவே நடத்தியிருந்தன. எதிர்வரும் 18ஆம் திகதி இறுதியான கூட்டம் ஒன்று நடக்க இருக்கிறது. அதன் பின்னரே தீர்மானத்தின் வரைவு இறுதி செய்யப்படும்.
இரண்டாவது வரைவில் இலங்கை அரசின் செயற்பாட்டை வரவேற்கும் என்பது காணிப் பாவனை மற்றும் உரிமை என்று மாற்றப்பட்டுள்ளது. சிவில் சமூகத்துக்கு எதிரான அச்சுறுத்தல், பதிலடி நடவடிக்கைகள் தொடர்பாகக் கவலை தெரிவித்திருக்கும் வாசகத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பொறிமுறையுடன் ஈடுபட்டு பணிபுரிவோரும் அத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்வது பற்றிய குறிப்பும் சேர்க்கப்பட்டிருக்கின் றது. இந்துக்கள், முஸ்லிம் கள், கிறிஸ்தவர்கள் உட்பட்ட சிறுபான்மை மதக் குழுவி னர் மீதான தாக்குதல் குறித்து அபாய எச்சரிக்கை எழுப்புகின்ற வாசகத்தில், தாக்குதல்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு அலையாக எழுந்திருப்பது பற்றிய சொற்றொடர் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட தேசியத் திட்டம் தொடர்பான பிரேரணை வாசகத்தில் அந்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் அனைத்து அம்சங்களையும் கவனித்து நடவடிக்கை எடுக்கும் விதத்தில் அந்தத் திட்டத்தின் செயற்பாட்டை முழு அளவில் விரிவுபடுத்த வேண்டும் என்ற புதிய தொடர் சேர்க்கப் பட்டுள்ளது.
இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக வடக்கு மாகாண சபை திறம்பட செயற்படுவதை உறுதி செய்யுமாறு இலங்கை அரசைக் கோருகிறது. - என்ற வகையில் ஆறாவது செயற்பாட்டுப் பந்தி திருத்தப்பட்டுள்ளது. முன்னைய நகலில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் தேவைப்பாட்டுக்கு அமைய வடக்கு மாகாண சபைக்கும் அதன் முதலமைச் சருக்கும் தேவையான வளங்களையும், அதிகாரங்களையும் வழங்க இலங்கை அரசை ஊக்குவிக்கிறோம். - என்றிருந்த வாசகம் இப்போது மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப் படுத்தும்படி திட்டவட்டமாக அரசைக் கோரப்பட்டுள்ளது.
முதலாவது நகல் பிரேரணையில் அரசின் பரிந்துரைகளில் கூறப்பட்டுள்ள 8 இலேயே இலங்கை அரசு மீதான தாக்கமான பிரேரணை வாசகம் அமைந்திருந்தது. தற்போது திருத்தப்பட்ட இரண்டாவது நகல் பிரேரணையில் அது மேலும் இறுக்கமாக்கப்பட்டிருக்கிறது.
இந்த வரைவு அப்படியே நிறைவேற்றப்பட்டால் மனித உரிமைகள் சபையால் எடுக்கப் படக்கூடிய அதிஉச்சமான பெறுபேறாக அது இருக்கும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். அடுத்தடுத்த வரைவுகளில் தீர்மானம் இன்னமும் நீர்த்துப்போகச் செய்யப்படலாம் என்பதும் கவனத்துக்குரியது என்று சுட்டிக்காட்டினார் அவர். (உ-5)
(இது பற்றிய விவரமான கட்டுரை சூரிய காந்தி பக்கம் 25 இல்)

### ஐ.நா.

வில் பங்கெடுப்பதற்காக பிரிட்டன் சென்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.
அமெரிக்காவுடன், இணைந்து இலங்கைக்கு எதிராக பிரிட்டன் தீர்மான வரைவை முன்வைத்துள்ள நிலையில், இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குமாறு நட்பு நாடுகளிடம் பிரிட்டன் நேரடியாகவே கோரி வருகிறது. குறிப்பாக ஐ.நா. மனித உரிமை உறுப்பு நாடுகளுக்கு பிரிட்டன் பிரதமர் கடிதம் மூலம் ஆதரவைக் கோரியுள்ளார்.
இந்த நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர், ஜெனிவா தீர்மானத்துக்கான இந்தியாவின் ஆதரவைக் கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.
இதேவேளை, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது, இந்தியாவின் அண்டைநாடுகள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாக, இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.
பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு, இரண்டு நாடுகளும் தமக்கிடையில் ஒத்த நிலைப்பாட்டை கொண்டிருப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.
(ஐ- 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மத்தி., சென்.பற்றிக்ஸ் துடுப்பாட்டத்தில் சமநிலை

குருநகர், மார்ச் 16

யாழ்.மத்திய கல்லூரிக்கும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் 19 வயதுப் பிரிவில் நடைபெற்ற சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தப் போட்டி கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 64.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 154 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இந்த அணி சார்பாக அபின்ராஜ் 36 ஓட்டங்களையும், ஜேந்திரன் 31 ஓட்டங்களையும், நிரோஜன் 24 ஓட்டங்களையும், சௌமிதரன் 19 ஓட்டங்களையும், யூனியஸ் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 8 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினரின் பந்துவீச்சில் தர்சன் 18 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், ஜெரிக்ஸன் 12.3 பந்துகளில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கரன்சன் 13 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், கொலின்ஸ் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களை கொடுத்து ஓர் இலக்கையும், கபிலன் 10 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ரன் அவுட் மூலம் ஓர் இலக்கு வீழ்த்தப்பட்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் தமது நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் 90.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் சுபநேசன் 71 ஓட்டங்களையும், தனுஸன் 33 ஓட்டங்களையும் கரன்ஸன் 32 ஓட்டங்களையும், ஜெரிக்ஸன் 27 ஓட்டங்களையும் துஸானந்த் 20 ஓட்டங்களையும் கொலின்ஸ் 16 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகத் தமதணிக்குப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 16 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்.மத்திய கல்லூரி அணியினரின் பந்து வீச்சில் மதுஸன் 28 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 76 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் பிரியந்தன் 21 பந்துப் பரிமாற்றங்களில் 27 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் அலன்ராஜ் 13.2 பந்துப் பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சௌமிதரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கனீஸ்ரன் 4 பந்துப் பரிமாற்றங்களை வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸ்"காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் ஆட்டநேர முடிவுவரை 38 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றனர். யாழ். மத்திய கல்லூரி அணியின் சார்பில் துடுப்பெடுத்தாடிய ஜேந்திரன் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களையும், அலன்ராஜ் 26 ஓட்டங்களையும், கனீஸ்ரன், நிரோஜன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும் தமதணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினரின் பந்து வீச்சில் கொலின்ஸ் 6 பந்துப் பரிமாற்றங்களை வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கரன்ஸ்ரன் 7 பந்துப் பரிமாற்றங்களை வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும், டானியல் 2 பந்துப் பரிமாற்றங்களை வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் திஸானந்த் 2 பந்துப் பரிமாற்றங்களை வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இந்த நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (ஐ-51)



யாழ். மாவட்டத்தில் பளு தூக்குநர் சங்கம் நடத்திய பளு தூக்கும் போட்டி அண்மையில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது.
இதில் பெண்களுக்கான 63 கிலோ எடைப் பிரிவில் பங்குபற்றி 80 கிலோ எடையைத் தூக்கி இரண்டா மிடத்தைப் பெற்ற சுண்டுக்குளி மாணவி ஆஷிகா விஜயபாஸ்கரன். (சு-23)

# மனோகரா இளைஞர் அணி உதைபந்தாட்டத்தில் சம்பியன்

கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியது.

இந்த இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மனோகரா இளைஞர் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.

இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதன் போது இரண்டு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்றமையால் சமநிலை தவிர்ப்பு உதையும் சமன் ஆனது. இதனால் இரண்டு அணிக்கும் மேலதிகமாக ஓர் உதை வழங்கப்பட்டது.



மனோகரா இளைஞர் கழக அணி

இதில் மனோகரா இளைஞர் கழக அணி கோலைப் பெற்றுக் கொண்டது.

இதன் மூலம் ஆட்டநேர முடிவில் மனோகரா 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியன் ஆனது. (ஐ-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் அளவெட்டி கும்பளை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் தையிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோண் டாவில் மறுமலர்ச்சி விளை யாட்டுக் கழக அணி மோத வுள்ளது. (ஐ-231)

* * *

மாங்குளம், மார்ச் 16

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக் கிடையே நடத்தப்பட்டு வந்த கபடி, உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணிக்க யா/ நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கபடிப் போட்டியின் இறுதியாட்டதில் மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொமேர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது. (ஐ-422)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கஜீபனுக்கும்

வைத்து, பயங்கரவாத தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டார். 4 ஆம் மாடிக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்ட அவர், தற்போது பூஸா தடுப்பு முகாமுக்கு மாற்றப் பட்டுள்ளார். கர்ப்பிணிப்பெண்ணான சர்மிளா தற்போது பூஸா முகாமில் விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்த நிலையில், இராணுவப் பேச்சாளர், தேடப்பட்டு வரும் சந்தேகநபரான கஜீபனுக்கு, தருமபுரத்தில் கைது செய்யப்பட்ட ஜெயக்குமாரி அடைக்கலம் கொடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சர்மிளாவின் தந்தை பாலகுருபரனிடம் கேட்ட போது, கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டவர்களுடன் எங்களுக்கோ, தேடப்பட்டு வருபவரான கஜீபனுக்கோ எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களை யாரென்றே தெரியாது - என்றார். (ஐ -5)

### கைதாகும்

இது தொடர்பில் சனல் - 4 ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜெயகுமாரியின் வாழ்க்கை கடினமானது. அவருக்கு மூன்று மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். மூத்த மகன் போரின் போது இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். இரண்டாவது மகன் இறுதிக் கட்டப் போரின் போது சாவடைந்திருந்தார். மூன்றாவது மகன் மகிந்தன், ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகளுடன் இணைந்து போரின் முடிவில் இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தார்.

ஜெயக்குமாரி தனது சரணடைந்த மகனைத் தேடித்திரிந்த வேளையில், அவரது ஒளிப்படம் நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்ட புத்தகத்தில் இருந்தது. இதன் பின்னர் அவர்கள் தமது மகனை விடுவிக்குமாறு கோரி எல்லாப் போராட்டங்களிலும் பங்கெடுத்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த மாதம், ஜெயகுமாரி சனல் - 4 ஊடகத்துக்கு நேர்காணல் வழங்கியிருந்தார். அதில் அவர் இனந்தெரியாதோரால் தான் பின்தொடரப்படுகிறார் எனவும் அச்சமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார் எனவும் தெரிவித்திருந்தார். போராட்டங்களிலும் பங்கெடுக்கும் தன்னைப் பலர் அச்சுறுத்தும் வகையில் ஒளிப்படம் எடுத்தனர் என்றும். ஆனால் அவர்கள் எல்லோரையும் தனக்குத் தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

"என்னைப் பல இடங்களில் பின்தொடர்கின்றனர். நான் எனது மகளுடன் பயங்கரமான வாழ்க்கையை வாழ்வதாகவே உணர்கின்றேன். நான் இந்த நேர்காணலை சனல் - 4 ஊடகத்துக்கு முழு மனதுடனேயே வழங்குகிறேன்" என்று அந்தக் காணொலியில் ஜெயகுமாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரிட்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் சனல் - 4 ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். பொதுநலவாயத்தின் தலைமைப் பதவியிலுள்ள இலங்கை, பொது நலவாயத்தின் விழுமியங்களில் ஒன்றான கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் ஜெயகுமாரியின் கைது ஏன் நடந்தது என்று, வெளிவிவகார அமைச்சரிடம் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

அதற்கு, இது நீதிமன்ற பரிசீலனையில் உள்ள விடயம் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பதிலளித்துள்ளார். ஆவணங்களைப் பரிசீலிக்காமல் இதற்குப் பதிலளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (உ-5)

### ஜெயகுமாரியை

அவரது மகளான விபூசிகாவும் கடந்த வியாழக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் தாயாரை 18 நாள் தடுப்பில் வைக்க பாதுகாப்பு அமைச்சினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவரது மகளான விபூசிகா சிறுவர் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கப்படுகிறார். 13 வயதான அந்தச் சிறுமி இரண்டு வாரங்களுக்கு முன்னரே பூப்படைந்திருந்தார். பொதுவாகவே அவ்வாறான நிலையிலுள்ள ஒரு சிறுமிக்கு விசேட கவனிப்பு வழங்கப்படவேண்டியது கட்டாயமாகும். இது மருத்துவ ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவிடயம். அவ்வாறான நிலையில் அவரிடம் இருந்து தாயாரைப் பிரித்துக் கொண்டு சென்று தடுப்பில் வைத்துள்ளனர்.

அவ்வாறான நிலையிலுள்ள அந்தச் சிறுமி எவ்வளவு வேதனைப்படுவாள். அந்தச் சிறுமியின் தாயாரை விடுதலை செய்யவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். தவிர அவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச்செயலாளர் பாஸ்கரா, வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்கள், வைத்திய கலாநிதி சி.சிவமோகன், ரவிகரன், தியாகராசா, மனித உரிமைச் செயற்பாட்டாளர் பிரிட்டோ, பெண்கள் மனித உரிமை அமைப்பினர், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் செபமாலை அடிகளார், வவுனியா மாவட்ட காணாமற்போன உறவுகளை தேடும் சங்கத் தலைவி பாலேஸ்வரி, வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் கி.தேவராசா, மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பின் தலைவர் மகேந்திரம் ஆகியோரும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-4)

### கச்சதீவில்

இரவுத் திருப்பலி நெடுந்தீவுப் பங்குத் தந்தை அந்தோனிப்பிள்ளை அன்ரன் அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு, கும்பகோணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அத்துவான் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். புங்குடுதீவு பங்குத் தந்தை லியோ ஆம்ஸ்ட்ரோங்கும் உடனிருந்தார்.

தமிழகத்தில் இருந்து 125 அருட்தந்தையர்களும் 60 அருட் சகோதரிகளும் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தனர். வடக்கிலிருந்து 5 அருட் தந்தையர்களும் 3 அருட் சகோதரிகளும் வந்திருந்தனர். 95 படகுகளில் 3,200 பேர் தமிழ்நாட்டில் இருந்து நேற்றிரவு வரையில் கச்சதீவுக் கரையை அடைந்திருந்தனர். அவர்கள் தீவுக்குள் வருவதற்கு வசதியாக தற்காலிக இறங்குதுறை ஏற்பாடுகளைக் கடற்படையினர் மேற்கொண்டிருந்தனர். குறிகாட்டுவான் மற்றும் நெடுந்தீவில் இருந்து 84 படகுகளில் 2,101 பேர் கச்சதீவைச் சென்றடைந்திருந்தனர்.

இன்று காலை இடம்பெறும் திருப்பலிப் பூசையுடன் கச்சதீவு அந்தோனியார் திருவிழா முடிவுக்கு வரும். யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் காலை 6.30 மணிக்கு நடைபெறும் திருப்பலியை தமிழக அருட் தந்தையர்களுடன் இணைந்து ஒப்புக்கொடுப்பார். அதைத் தொடர்ந்து நடக்கும் திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் திருவிழா முடிவுக்கு வரும்.

இந்த ஆண்டு அதிகமான எண்ணிக்கையிலான பக்தர்கள் கச்ச தீவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் பக்தர்களின் எண்ணிக்கை இருந்தது என்று அதிகாரிகள் கூறினர். (உ-10.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டோனி

## 20/20 போட்டியில் எப்போது டோனி அரைச்சதம் அடிப்பார்?

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி இறுதிக் கட்டங்களில் அதிரடியாக ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றி பெறச் செய்வதில் வல்லவர்.

நிர்ணயிக்கப்பட்ட பந்துப் பரிமாற்றங்களில் கடைசிக் கட்டத்தில் வெளுத்து வாங்கும் டோனி, சர்வதேச 20/20 போட்டிகளில் இன்னமும் ஓர் அரைச்சதம் கூடப் பெறவில்லை எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

டோனி பெரும்பாலும் 5 அல்லது 6 ஆவது துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குவார். இதனால் குறைவான பந்துகளை மட்டுமே சந்திக்க முடியும். எனவே அரைச்சதம் அடிப்பது கடினமான விடயமே. டோனி விளையாடிய 43 சர்வதேச 20/20 போட்டிகளில் 16 முறை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்துள்ளார். ஆனால், அதற்குள் பந்துப்பரிமாற்றங்கள் முடிவடைந்தமையே அரைச்சத வாய்ப்பு நழுவியதற்கான காரணம்.

டோனியை அடுத்து தென்னாபிரிக்கச் சகலதுறை ஆட்டவீரர் மோர்கல், அயர்லாந்தின் கேரி வில்சன், தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா, ஆஸ்திரேலிய இலக்குக் காப்பாளர் பிரட் ஹடின், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டரன் சமி ஆகியோர் அதிக ஓட்டங்களை பெற்றும் அரைச் சதம் அடிக்காதவர்கள் பட்டியலில் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர்.

இதுவரை 64 ஆட்டங்களில் விளையாடியுள்ள நியூஸிலாந்தின் பிரண்டன் மக்கலம் 1,959 ஓட்டங்களுடன் அதிக ஓட்டங்கள் பெற்றவர்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளார். 1,335 ஓட்டங்கள் அடித்துள்ள இலங்கையின் ஜெயவர்த்தன இரண்டாவது இடத்தில் உள்ளார். சர்வதேச 20/20 போட்டிகளில் இதுவரை 13 துடுப்பாட்ட வீரர்கள் மட்டுமே ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். இந்திய வீரர்களில் கௌதம் கம்பீர் அதிகபட்சமாக 932 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (சு)

# பாகிஸ்தான் அணியே சிறந்தது

உலகில், பாகிஸ்தானை விட சிறந்த ஒரு நாள் போட்டி அணியை நான் பார்க்கவில்லை என அந்த அணியின் அதிரடி வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார். "பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் இரண்டிலும் நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோம். ஆனால் களத்தடுப்பில் மட்டுமே தவறுகளைச் செய்கிறோம். அதில் முன்னேற்றம் காணவேண்டியது அவசியம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். லாகூரில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

காயத்தில் இருந்து தேறி வரும் அப்ரிடி, அடுத்த வாரத் தொடக்கத்தில் பங்களாதேஷ் சென்று 20/20 அணியுடன் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (சு)

> “பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் இரண்டிலும் நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோம். ஆனால் களத்தடுப்பில் மட்டுமே தவறுகளைச் செய்கிறோம்.




அப்ரிடி



மிச்செல் ஜோன்சன்

## மிச்செல் ஜோன்சன் ஆடுவது சந்தேகம்

ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் மிச்செல் ஜோன்சன் தோள்பட்டைக் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். எனவே அவர் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவது கேள்விக்குறியாகியுள்ளது. கேப்டவுனில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடிய போது காயத்தால் அவதிப்பட்ட ஜோன்சன் தற்போது பேர்த் நகரில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலை குறித்து இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள்கள் கழித்தே சொல்ல முடியும் என்று அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா ஆஷஸ் தொடரை 5-0 என்ற கணக்கிலும், தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை 2-1 என்ற கணக்கிலும் வெல்வதற்கு மிச்செல் ஜோன்சன் மிக முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## 20/20 ஆரம்ப விழாவில் ஏ.ஆர். ரஹ்மான்



ஏ.ஆர். ரஹ்மான்

20/20 உலகக் கிண்ணப் போட்டி ஆரம்ப விழாவில் இரண்டு ஒஸ்கார் விருதுகளை வென்ற இந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் புகழ்பெற்ற பாடகர் ஏகான் ஆகியோர் கலந்து கொண்டு மாபெரும் இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளனர்.

இந்த நிகழ்ச்சி பங்களாதேஷ் பங்காபந்து மைதானத்தில் நடக்கிறது. இது தொடர்பாக ரகுமானைச் சந்தித்து பேசிய பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, ஏ.ஆர்.ரகுமானைச் சந்தித்ததில் தான் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகவும் அவர் பங்குபெறுவதன் மூலம் இப்போட்டிக்கு உலக அளவில் மிகப்பெரிய வரவேற்புக் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (சு)

## இந்தியாவுக்கு இரட்டைத் தங்கம்

இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர்கள் செயின் சிங், ஹீனா சித்து ஆகிய இருவரும் குவைத் நகரில் நடைபெற்று வரும் ஏழாவது ஆசிய ஏர்கன் துப்பாக்கி சுடும் போட்டிகளில் தங்கம் வென்றுள்ளனர்.

இந்தியாவுக்கு, அணிகள் பிரிவில் ஒருவெள்ளியும், ஒரு வெண்கலமும் கிடைத்துள்ளன. ஆடவர் ஏயார் ரைபிள் பிரிவில் செயின் சிங் தங்கம் வென்றார். உலக சாதனை படைத்த ஹீனா சித்து எயார் பிஸ்டல் பிரிவில் தங்கம் வென்றார். போட்டி தொடங்கியது முதல் இருவருமே ஆதிக்கம் செலுத்தினர். ஹீனா சித்து தகுதிப் போட்டிகளில் 386 புள்ளிகள் எடுத்து முதலிடத்தில் இருந்தார். இருப்பினும் தகுதிப் போட்டிகளில் பெற்ற புள்ளிகள் இறுதிப் போட்டிகளில் கணக்கில் எடுத்துக் கொள் ளப்படமாட்டா.

ஹீனா சித்து இறுதிச் சுற்றுகளில் 200.3 புள்ளிகள் எடுத்து வென்றார். அவர் சீன வீராங்கனை சியா யிங்வு என்பவரை விட இரண்டு புள்ளிகள் கூடுதலாக எடுத்து தங்கத்தை வென்றார். ஓமனின் வாதா அல் பலுஷி வெண்கலத்தை வென்றார்.





யாழ் softlogic காட்சியறையில்
100 மில்லியன் பெறுமதியான இலவச கூப்பன்கள்
ரூபா 4000/= பெறுமதியான பரிசுக் கூப்பன் (நீங்கள் விரும்பியவாறு பொருள்களை கொள்வனவு செய்யும் வாய்ப்பு)
தொடர்பு: softlogic காட்சியறை
0777 397 734
இல.63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
Dell Inspiron 3521 Core i3
Intel Core i3 4th Generation Processor
- 4GB DDR3 | 500GB HDD
- 15.6" HD LED Display
Free BAG
விஷேட விலை 74,990/=மட்டுமே.
ஆரம்பக் கட்டணம் 15,000/= மட்டுமே.
மாதாந்த கட்டணம் 5,530/=
15 மாதம் வட்டியில்லாக் கொடுப்பனவு
(C/12105)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையான தூண்களை கொள்ளையடித்த பிக்கு

## திரும்ப ஒப்படைக்க ஜனாதிபதியிடம் சம்பந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 16

திருகோணமலையிலுள்ள பழைமை வாய்ந்த இந்து ஆலயத்தின், தூண்கள் பொலி ஸாரின் உதவியுடன் பௌத்த பிக்கு ஒருவரால் கொள்ளை யிடப்பட்டுள்ளதாக தெரிவித் துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திரு கோணமலைமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், இது தொடர் பில் தகுந்த நட வடிக்கை மேற் கொள்ளுமாறு கோரி ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பழைமை வாய்ந்த கிராமமான திரியாயில் அமையப்பெற்றுள்ள கணபதிகோயில் மிகவும் புராதனமான இந்து ஆலயமாகும். இந்தக் கிராமத்தை விட்டு வெளியேறிய மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்த நிலையில் கோயிலை புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது புராதன மண்டபத்தின், தாழ்வாகஇருந்தகூரையை உயர்த்துவதற்காக அதை தாங்கியிருந்த பழைமையான ஆறு தூண்கள் நீக்கப்பட்டு புதிய, உயரமான தூண்கள் நிர்மாணிக்கப்பட்டன. நீக்கப்பட்ட பழம்பெரும் தூண்கள் கோயில் வளாகத்துக்குள் வைக்கப்பட்டிருந்தன. இதன்போது பொலிஸார் சிலருடன் கோயிலுக்குள் நுழைந்த பௌத்த பிக்கு முதல் நாள் மூன்று தூண்களையும் மறுநாள் மூன்று தூண்களையும் எடுத்துச் சென்றுள்ளார்.

ஒரு மதத்தின் புனிதத்தைப் பேணும் வகையிலும் அதன் பழமையைப் பேணும் வகையிலும் அதன் வரலாறுகள் நிலைநாட்டப்படுகின்றன. இந்த அடிப்படையிலேயே பழைமையான தூண்களை கோயிலில் வைத்து பேண நிர்வாகத்தினர் முடிவு செய்தனர். ஆனால் பௌத்த பிக்கு எவரது அனுமதியும் இன்றி அடாத்தாக தூண்களை எடுத்துச்சென்றுள்ளார். இது ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். எனவே தாங்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி அபகரிக்கப்பட்ட அந்தத் தூண்களை மேற்படி கோயிலின் நம்பிக்கையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ-5)

### வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளுடன் கூடிய வீடு குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதியில் வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிட வசதி உண்டு.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொ.பே.: 0766516049

### Mobile Repairing

100% Job Oriented Studies

Duration - 2Months

SofTech

புதிய பிரிவுகள் 18.03.2014 செவ்வாய் கிழமை முதல் ஆரம்பமாகின்றன

Tuesday,Thursday Evening : 4.00 - 5.30

Hardware and Software Complete Studies Package

14 வருட அனுபவமிக்க ஆசிரியர் மூலம் யாழ்ப்பாணத்தில் இதுவரை கற்பிக்கப்படாத கல்வி நுட்பங்களுடன் தொழில்முறை பயிற்சிகள் வழங்கப்படும்

அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

மேலதிக விபரங்களுக்கு:

306, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.

021-221-1220, 077-9122997

www.softtech-edu.com

### வீடு வாடகைக்கு

மானிப்பாய் றோட்டுக்கும் காங்கேசன் துறை றோட்டுக்கும் இடையில் 25, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணையில் சுற்றுமதில் கிணறு, 5 அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 071 8246941/071 521 3888/ 077 594 6777/011 220 5223-4

(சி/12453) (7.6.3)

### ஜேர்மன், சுவிஸ் மொழி வகுப்புகள்

Goethe Institute இல் கல்வி கற்ற ஆசிரியரால் மிக இலகுவாக A1 பரீட்சைக்கு ஏற்ற வகையில் சாவகச்சேரி, நெல்லியடிப் பகுதியில் கற்பிக்கப்படுகின்றன.

தொடர்பு:

ஆசிரியர் R.Mayoorathan

TP: 077 645 4998

(29787) (13.3.6)

### German Language Academy

(ஜேர்மன் கல்லூரி)

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள்

A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு இலகு வழியில் கற்பிக்கப்படுகின்றது.

தொடர்பு: பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

077 970 7322

(சி/12698) (10.6.3)

### டுபாய் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

டுபாய் நாட்டில் உள்ள முன்னணி Juice company இல் Helpers 20பேர் உடன் தேவை.

(Global Shipping Logistics in Dubai)

அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம் (8/10 ஒரு மாதத்துக்குள் பயணம்.

வயது 18 - 30. எதிர்வரும் 21ஆம் திகதி டுபாய் நாட்டவர்களால் கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

உடன் தொடர்புகொள்ள: LANKA VOICE

077 058 4658/077 792 9475

(43215) (12.3.6)

### மனம் வருந்தும் இதய அஞ்சலி

யாழ்ப்பாணக்கல்லூரி "பிக்னல்" மைதானத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற துடுப்பாட்ட நிகழ்வின் போது இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தில் உயிர் நீத்த

சென்பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவன்

**ஜெயரட்ணம் தனுசன் அமலன்**

அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைச் செலுத்தவதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும், பாடசாலை சமூகத்தினருக்கும் ஆறுதல் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யாழ்ப்பாணக்கல்லூரி.

குறிப்பு : இந்நிகழ்வில் நடைபெற்ற அசம்பாவிதத்திற்கு மனம்வருந்துகின்றோம் நாளைய தினம் (17.03.2014) திங்கட்கிழமை துக்கதினமாக அனுட்டிக்கப்படவிருப்பதனால் பாடசாலை அன்றையதினம் நடைபெறமாட்டாது என்பதை அறியத்தருகின்றேன்.

அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சர்வானந்தன்

(ஓய்வுபெற்ற நிதி உதவியாளர், கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்)



யாழ்.புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், கொழும்பு கதிரேசன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சர்வானந்தன் 12.03.2014 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தனலக்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற இரத்தினபுரி வேலாயுதம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அருந்ததி அவர்களின் பாசமிகுகணவரும்,ரமேஷ்(சுவிஸ்), பிரிய தர்ஷினி (சுவிஸ்), மிருணாளினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகுதந்தையும், வீரசிங்கம்(ஓய்வுநிலை அதிபர்), அகிலேஸ்வரி (ஓய்வு நிலை பதில் அதிபர்), பிரேமாவதி (ஓய்வு நிலை ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜனா (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், லோகராசா (லண்டன்), தவராசா (சட்டத்தரணி - கொழும்பு), கேதாரகௌரி (கொழும்பு), யோகராசா (சுவிஸ்), உமாதேவி (சுவிஸ்), கனகராசா (சுவிஸ்), வரலக்ஷிமி (ஓய்வுநிலை ஆசிரியர்), பரமலிங்கம் காலஞ்சென்ற விஷ்ணுகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தி (லண்டன்), கௌரிசங்கரி (சட்டத்தரணி LLB - கொழும்பு), மல்லிகாதேவி (சுவிஸ்), ஞானவேல் (T.N.G Brother's), தவச்செல்வம் (சுவிஸ்), துசிகலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் நடைபெற்று, பின்னர் பொரளை கனத்தை இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

81/2, பிறவுண்வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(45768)(12.3.6)

தகவல்: சகோதரர்கள் -
சு.வீரசிங்கம், ப.அகிலேஸ்வரி, வி.பிரேமாவதி,
077 984 5820/021 222 8890

### UK Student visa with work Permission

நீங்கள் ஏன் Exponet இனை தெரிவுசெய்ய வேண்டும்

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- நீங்கள் தெரிவு செய்வது கல்லூரியாயின் 2-3 வருட காலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- எம்மிடம் Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு IELTS வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிக திருத்தமாக சமர்பிக்கபடின் இரு மாதகாலங்களில் உங்கள் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்
- Student Visa தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்

2001 14 YEARS 2014 EXCELLENCE

May / June இற்கான அனுமதிகள் தற்போது ஏற்று கொள்ளப்படுகின்றன

Colleges
- IELTS Overall : 4.5

Universities
- IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0

வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ்கிளையினூடாக முற்றிலும் இலவசமான UK Student Visa தொடர்பான ஆலோசனைகளை பெற்றுகொள்ள முடியும்

EXPONET Overseas Consultants

#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk

#197, Arasady Road, Jaffna. 021 7538395 | 021 2227230 Web: www.expogroup.lk

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA (AF)

Only Official FRENCH Centre in Northern Province

பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு

Alliance française de Jaffna

French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium செல்பவர்கள், French கற்க விரும்புவோர் எமது அங்கிகரிக்கப்பட்ட Certificates பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில்... உடன் பதிவுசெய்யுங்கள்...

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 809
(கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

### மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளான சவூதி, கட்டார், டுபாய், ஓமான் போன்ற செல்வந்த நாடுகளில் பாதுகாப்பான, கௌரவமான வீடுகளில் வீட்டுப்பணிப் பெண்ணாகப் பணிபுரிய அரியசந்தர்ப்பம். House Maid (வீட்டுப்பணிப்பெண்) 10பேர் உடன் தேவை. உணவு, தங்குமிடம், மருத்துவம், விமானப் பயணம் என்பன முற்றிலும் இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம், விஷேடமாக முன்கூட்டிய கொடுப்பனவும் வழங்கப்படும். மலேசியா நாட்டிலும் கௌரவமான வீடுகளில் வீட்டுப்பணிப்பெண்கள் தேவை.

நீங்களும் இரண்டு வருட விரைவில் கை நிறைய சம்பளத்துடன் திரும்பிவர விரையுங்கள். உடன் தொடர்புகளுக்கு: LANKA VOICE 077 058 4658

(43210)(12.3.6)

### AQUA CAR SHOWROOM

Hotline 077 3 169 433

AquaHolding.lk

www.aquaholding.lk

ஜப்பானில் இருந்து நேரடியாக வாகனங்கள் இறக்குமதி செய்து தரப்படும். (பெமிட் (Permit) மற்றும் ஹைபிரிட் (Hybrid) வாகனங்கள் உட்பட)

உங்களது ஜப்பான் நாட்டுத் தயாரிப்பு வாகனங்களுக்கான சகல உதிரிப்பாகங்களும் நேரடியாக ஜப்பானிலிருந்து பெற்றுத் தரப்படும்.



உங்கள் வீட்டிற்கே வருகிறது உங்கள் கனவுக் கார்

Raja Plaza, 74, Palaly Road, Kondavil East, Jaffna You Too Can Have A Car

### VACANCY
### AT SANKEN NORTHERN BRANCH

The following vacancies are available at Sanken Northern Branch. If you think, you are eligible for these vacancies, please apply to below address,

* Plant Manager for Ready Mix Concrete Plant: Should have the experience in concrete related jobs.



* Maintenance Officer: Should have experience in maintainability of super luxury apartment and knowledge in computer and all three languages (Tamil, English and Sinhala)



* Surveyor Helpers: Manage to handle the surveyor instruments



Apply to below E-mail ID or Address:-

E-mail: adminjaffna@sanken.lk

OR

Sanken Construction (Pvt) Ltd.
No. 31, Wyman Road,
Nallur, Jaffna.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

ஞாயிறு சிறப்பிதழ்
16.03.2014



# வரைவில் உள்ளதே அதிக நன்மை தரும்

## சுமந்திரன் எம்.பி. ஜெனிவாவில் வைத்து உதயனுக்குச் சிறப்புச் செவ்வி

செவ்வி:
சண் தவராஜா

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் ஒன்றின் மூலம் ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதிலும் பார்க்க, அப்படிப்பட்ட விசாரணையை முன்னெடுக்கும் அதிகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கொடுப்பது அதிக நன்மை அளிக்கக்கூடியதும், இலகுவானதும், தமிழர்களுக்குப் பலனளிக்கக்கூடியதுமாகும் என்று கூறுகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இராஜதந்திர நகர்வுகளுக்காக தற்போது ஜெனிவாவில் தங்கியிருக்கும் அவரிடம் தற்போதைய அரசியல் சர்ச்சைகள் குறித்த பேட்டி என்றதும், அட்டகாசமான ஒரு சிரிப்புடன் தயாரானார். மனித உரிமைகள் சபை வளாகத்தில் இருந்து அவர் வழங்கிய செவ்வி இங்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை அமெரிக்கா முன்மொழிந்திருக்கிறது. அந்த தீர்மானத்துக்கான முதல் வரைவு தமிழ் மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை வழங்கியுள்ளது. சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றைக் கோரவில்லை என்பதே தமிழ் மக்களின் விமர்சனத்துக்கான காரணம்.

கடந்த தீர்மானத்தின் போதும் சரி, இந்த அமர்விலும் சரி இந்த விடயங்களில் அதிகம் ஈடுபாடுகாட்டியவர் நீங்கள். ஏன் இந்தத் தவறு நிகழ்ந்தது?

முதலாவதாக இதனை இலங்கைக்கு எதிரான தீர்மானமாக நான் ஒருபோதும் வர்ணிப்பதில்லை. இதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களும், தற்போதைய தீர்மானமும் இலங்கையிலே பொறுப்புக் கூறுதலையும், நல்லிணக்கத்தையும் முன்னேற்றுவதற்கான தீர்மானங்கள் மட்டுமே. நாட்டில் நல்லது நடக்க வேண்டும் என்றுதான் சர்வதேச சமூகம் வலியுறுத்துகிறதே அன்றி நாட்டுக்கு கேடு விளைவிப்பது தீர்மானங்களின் நோக்கமல்ல. இரண்டாவது, மூன்றாவது தீர்மானத்துக்கான வரைவில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை என்கிற விடயம் இல்லையென்று மக்கள் ஏமாற்றம் அடைந்துவிட்டனர் என்று கூறப்படுகின்றது. அது பிழையானது. இந்தத் தீர்மானத்தின் முதல் வரைவை கவனமாக ஆராய்ந்து படித்துப் பார்த்தால் அதிலே சர்வதேச விசாரணைக்கான பொறிமுறை மறைபொருளாக உண்டு. வரைவின் எட்டாவது பரிந்துரையிலே ஒரு உள்நாட்டு விசாரணையை மேற்பார்வை செய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கும் மேலாக அவரது அலுவலகம் தானாகவே ஒரு விசாரணையை மேற்கொள்வதற்கான அதிகாரமும் கொடுக்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஒரு விசாரணையை நடத்துகிறது என்றால் அது சர்வதேச சுயாதீன விசாரணையே. அதனை வேறு எந்த விதத்திலும் வியாக்கியானப்படுத்த முடியாது. மக்கள் ஏமாற்றம் அடைந்தார்கள் என்றால், இதனை மக்களுக்கு எடுத்துக்கூறவேண்டியவர்கள் அதனைச் செய்யவில்லை என்று அர்த்தம்.

மூன்றாவது தீர்மானத்துக்கான வரைவில் சர்வதேச விசாரணை ஆணைக்குழுவை நியமிப்பதற்கான ஆணை நேரடியாகக் கோரப்படவில்லை என்பது உண்மைதான். அப்படி ஒரு ஆணைக்குழுவை தீர்மானத்தின் ஊடாக நியமிப்பதாக இருந்தால், அதன் உறுப்பினர்கள் யார்? ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் அதிகாரம் என்ன? அதன் செயற்பாட்டு எல்லை என்ன? என்பதெல்லாம் விவரமாகச் சொல்லப்பட வேண்டும். பின்னர் அதனை சபையின் 47 அங்கத்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் அங்கீகரிக்க வேண்டும். அது கடினமான விடயம். அப்படித் தீர்மானம் ஊடாக ஒரு ஆணைக்குழுவை நியமித்து அதற்கு அதிகாரங்களைக் கொடுப்பதாக இருந்தால், என்ன நடக்கும் என்பதும் அதனை யார் எல்லாம் பலவீனப்படுத்தி சிதைத்து நீர்த்துப் போகச் செய்வார்கள் என்பது உங்களுக்கே தெரியும். அப்படி ஒரு தீர்மானத்தின் ஊடாகக் கொடுக்கப்படக்கூடிய அதிகாரம் மகிவும் குறைவானதாகத்தான் இருக்கும்.

எனவே தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனை ஒரு தீர்மானத்தின் மூலமாகச் சர்வதேச விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதைவிடச் சிறந்தது என்றே நான் நினைக்கின்றேன். ஏனென்றால் இப்போதுள்ளதின்படி, யார் அந்த ஆணைக்குழுவிலே இருக்கப் போகிறார்கள்? அந்த ஆணைக்குழுவுக்குக் கொடுக்கப்படுகின்ற அதிகாரம் என்ன? விசாரணை எல்லைப்பரப்பு என்ன என்ற விடயங்களைத் தீரமானிக்கும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமே கொடுக்கப்படுகிறது. அவர் நீதியாக நடப்பார் என்று நம்பலாம்.

சிறந்ததொரு பொறிமுறை உருவாக்கப்படுவதற்கான சாத்தியம் இதிலே முழுமையாக இருக்கிறது. ஆகையாலே அதற்கு முழுமையான ஆதரவை நாங்கள் கொடுக்க வேண்டும். இது நல்லதொரு முன்னேற்றமான படிமுறை. ஆகையாலே மக்கள் ஏமாற்றம் அடையாமல் இந்தத் தீர்மானத்தை விமர்சித்துக் குழப்பத்தை ஏற்படுத்தாமல் அதனை நிறைவேற்றுவதற்கான வேலைகளில் ஈடுபட வேண்டும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களே தாயகத்திலும் இங்கு ஜெனிவாவிலும்கூட இந்தத் தீர்மானத்தைக் கடுமையாக விமர்சித்து வருகிறார்களே! அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?

இப்படிக் கடுமையாக விமர்சிப்பதால் பல நாடுகள் குழப்பமடைந்திருக்கின்றன. இந்தத் தீர்மானத்தால் தமிழர்களுக்கு நன்மை ஏதும் கிடையாது என்கிறார்கள் இதனை விமர்சிப்பவர்கள். இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மற்றுமொரு திட்டம், இலங்கையிலே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் இதன் நோக்கம் என்றெல்லாம் கூறுகிறார்கள். இலங்கை அரசும் இதையேதான் சொல்கிறது. இந்தத் தீர்மானம் இலங்கையின் நன்மைக் காகவோ, தமிழ் மக்களின் நன்மைக்காகவோ கொண்டுவரப்படவில்லை, இதன் உண்மையான நிகழ்ச்சிநிரல் இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முன்னெடுப்பதுதான் என்று அரசும் சொல்கிறது. ஆக தீர்மானம் இரு பக்கங்களாலும் ஒரே மாதிரியான கடும் விமர்சனங்களைச் சந்திக்கின்றது.

இதனால் பல நாடுகள் எங்களிடம் கேட்கின்றன. தமிழ் மக்களுக்கும் இந்தத் தீர்மானம் தேவையில்லை அரசும் அதையே கூறுகிறது. பின்னர் ஏன் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்? என்று.

மூன்றாவது தீர்மானமும் இலங்கை அரசுக்கு மேலும் ஒரு வருட கால அவகாசத்தை வழங்குகின்றது. இதுவும் தமிழர்கள் விசனப்படுவதற்கான காரணம். போர் முடிந்து 4 வருடங்களாகி விட்ட பின்னரும் இன்னும் கால அவகாசம் வழங்குவது தேவையா? தடயங்களை மறைப்பதற்காகவா இந்தக் கால அவகாசம் வழங்கப் படுகின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியிலே உள்ளது.




மனித உரிமைகள் சபையில் உறுப்பு நாடுகளாக உள்ள 47 நாடுகளிலே ஐந்தாறு நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளுக்கு இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் முழுமையான தெளிவு கிடையாது. பலருக்கு இலங்கை என்ற நாடு எங்கு இருக்கிறது என்று அறிந்து கொள்வதில்கூட அக்கறை கிடையாது. அத்தகைய நாடுகளின் மனதிலே, இந்த விமர்சனங்கள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. இரு தரப்புக்களும் ஏற்றுக்கொள்ளாத ஒரு தீர்மானத்தை ஏன் ஐ.நா. நிறைவேற்ற வேண்டும் என்று அவை கேட்கின்றன. இது மிகவும் தூரதிரஷ்டவசமானது. இந்தத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு அவசியமானது என்பதைத்தான் நான் இங்கு இப்போது பல நாடுகளைச் சந்திக்கும்போது கொடுக்க வேண்டியிருக்கிறது. தமிழர்கள் தீர்மானத்தை வரவேற்கிறார்கள் என்பதை நாடுகளின் பிரதிநிதிகளுக்குத் திடமாகச் சொல்லி வருகிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையை அவர்களிடம் கையளித்து தமிழர்களின் நிலைப்பாடு இதுதான் என்று தெளிவுபடுத்துகின்றேன். பல நாடுகளிடையே தற்போது குழப்பத்தை நீக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டி ருக்கிறது.

மூன்றாவது தீர்மானமும் இலங்கை அரசுக்கு மேலும் ஒரு வருட கால அவகாசத்தை வழங்குகின்றது. இதுவும் தமிழர்கள் விசனப்படுவதற்கான காரணம். போர் முடிந்து 4 வருடங்களாகி விட்ட பின்னரும் இன்னும் கால அவகாசம் வழங்குவது தேவையா? தடயங்களை மறைப்பதற்காகவா இந்தக் கால அவகாசம் வழங்கப் படுகின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியிலே உள்ளது. மனித உரிமைக் காவலர்களும் இதே கேள்வியைக் கேட்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

இந்தத் தடவை கால அவகாசம் வழங்கப்படவில்லை. கடந்த இரண்டு தடவைகளும் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. சர்வதேச சட்டங்களின் பிரகாரம் ஒரு உள்நாட்டுப் பொறிமுறைக்கு எப்போதுமே முதன்மை இடம் வழங்கப்படவேண்டும். அதற்குப் போதிய இடம் கொடுத்துத்தான் சர்வதேசப் பொறிமுறை ஏற்படுத்தப்படும். ஐ.நாவின் பொது வழக்கத்தில் நாடுகளின் உள்நாட்டுப் பொறிமுறைக்கு அப்பால் மேலதிக அறிக்கை ஒன்றை ஐ.நா. வழங்கும் மாதிரியே சகல இடங்களிலும் உள்ளது. ஆகையினாலே உள்நாட்டுப் பொறிமுறையையும் அனுமதிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்தத் தீர்மானம் அதனை மனித உரிமைகள் ஆணையாளர் மேற்பார்வை செய்யவேண்டும் எனக் கேட்கிறது. அப்படிச் செய்யும்போது அது இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுப்பதாக இருக்காது. இலங்கை அரசு தனது விசாரணையை உடனடியாகச் செய்ய வேண்டி இருக்கும். ஏனென்றால் ஆணையாளர் தனது சொந்த விசாரணையையும் இதே காலப்பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால்தான் தீர்மானத்தில் "..அத்தோடு ஆணையாளரும் விசாரணையை முன்னெடுக்கவேண்டும்" என்ற வாசகம் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இலங்கை அரசு ஏமாற்ற முடியாது. இந்தக் [illegible] ஒரு விசா ணை [illegible]

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி நவநீதம்பிள்ளை இலங்கை விடயத்திலே தனிப்பட்ட ஆர்வம் கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டும் கூறப்படுகிறது. அவர் கடந்த ஆண்டு இலங்கை சென்று திரும்பியிருந்தார். அதன் அடிப்படையில் சர்வதேச விசாரணை ஒன்று வேண்டும் என்று கோரியிருக்கிறார். விரைவில் அவரது பதவிக் காலம் முடிவடைய உள்ளது. தற்போது முன்மொழியப்பட்டுள்ள தீர்மானத்திலோ இலங்கை தொடர்பில் இந்த வருடம் செப்ரெம்பரிலும், அடுத்த வருடம் மார்ச் மாதத்திலும் அறிக்கையிடப்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. வேறு ஒரு நபர் இந்தப் பதவிக்கு வந்தால் அவரும் நவிப்பிள்ளை அளவுக்கு இந்த விடயத்தில் ஆர்வம் காட்டுவார் என்று நினைக்கிறீர்களா?

முதலாவதாக திருமதி நவநீதம்பிள்ளை இது விடயத்தில் தனிப்பட்ட கரிசனை எடுத்தார் என்று நான் சொல்ல மாட்டேன். அவ்வாறு நான் நம்பவில்லை. அப்படிச் சொல்லுவது பொருத்தமற்றது. இலங்கை அரசு சுமத்துகின்ற குற்றச்சாட்டாகவும்கூட அதுவே இருக்கிறது. அவர் ஒரு தமிழ்ப் பின்னணியில் இருந்து வந்த பெண் என்ற காரணத்தினாலேயே இலங்கை அரசும் அவர் மீது குற்றஞ்சாட்டுகிறது. ஆனால் உண்மை அப்படியல்ல. உலகத்திலே எந்தப் பகுதியில் இவ்வாறான மனித அவலம் இடம்பெற்றிருந்தாலும் அவர் இதே கரிசனையை, இதே நிலைப்பாட்டை எடுத்திருப்பார்; எடுத்திருக்கிறார்.

இனிவரும் காலத்தில் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் எவராக இருந்தாலும் அவரும் மனித உரிமைகளிலே மிகவும் நாட்டமுள்ளவராகவே இருப்பார். எனவே, எவர் வந்தாலும் நடவடிக்கைகளிலே மாற்றம் ஏற்படாது.

அடுத்தது, நவநீதம்பிள்ளையின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை மாதமே முடிவடைகிறது. அதற்கு முன்னதாக ஒரு விசாரணைப் பொறிமுறை அமைக்கப்படலாம். அத்தகைய பொறிமுறையை அமைக்க 24 மணிநேரம் போதும்.

மனித உரிமைச் சபையின் கூட்டத்தொடரிலே கலந்து கொள்வதற்காகக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பலர் ஜெனிவா வந்திருக்கிறார்கள். வடமாகாணசபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம் வந்திருக்கிறார். திருமதி அனந்தி சசிதரன் வந்திருக்கிறார். நீங்களும் வந்திருக்கிறீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனும் வந்திருக்கிறார் என்று அறிகின்றோம். எல்லோரும் தனித்தனி நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே வந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது. ஏன் இப்படி?

ஒன்றாகச் சேர்ந்து திட்டமிட்டு ஒழுங்குபடுத்துவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதேசமயம் மக்கள் பிரதிநிதிகளான அவர்கள் நாங்கள் வரப் போகிறோம் என்று கூறும்போது தடுக்க முடியாது. ஜெனிவாவிலே அரசியலும் இருக்கிறது. தங்களும் ஜெனிவாவிலே குரல் கொடுத்தார்கள் என்னும்போது அதனால் நன்மை ஏற்படக் கூடும் என்று நினைப்பதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதிலே தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை.

அதேசமயம், இங்கு யார் வந்தாலும் என்ன பேசினாலும் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் குழப்பகரமான - திரிபுபடக்கூடிய - மாறுபாடான - செய்திகளைக் கொடுக்கக் கூடாது. கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை திடமாக கூட்டமைப்பின் தலைவரும் வட மாகாண முதலமைச்சரும் சேர்ந்து கைச்சாத்திட்ட இரண்டு செய்திகள் கொடுக்கப்பட்டுள் என. இங்கே வரும் எவராக இருந்தாலும் அதிலே இருந்து மாறாமல் கருத்துத் தெரிவிப்பதே தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளின் சதியா?




தொகுப்பு: அதிரன்

வழமைபோன்று இயங்கிக்கொண்டிருந்த இரண்டுவிமானநிலையங்கள் கடந்த 8 ஆம் திகதி அதிகாலையில் திடீரெனப் பரபரப்படைந்தன. மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனத் தலைநகர் பீஜிங்குக்குப் புறப்பட்ட மலேசியன் எயார் லைன்ஸ் விமானம் தனது இலக்கை குறித்த நேரத்தில் எட்டாததை அடுத்தே இந்தப் பரபரப்பு ஏற்பட்டது. தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்ததோ என்ற மன ஏக்கத்தில் பீஜிங் விமான நிலை யத்தில் தவிமிருந்தனர் மக்கள். விமானம் என்ன ஆனது என்று தெரியாமல் பதைபதைத்தனர் மலேசியன் எயார் லைன்ஸ் நிர்வாகத்தினர். அந்தப் பரபரப்புக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

கடந்த அதிகாலை 12.40 மணிக்கு மலேசியன் எயார்லைன்ஸைச் சேர்ந்த போயிங் 777-200 விமானம் கோலாலம்பூரில் இருந்து பீஜிங்குக்குப் புறப்பட்டது. ஆனால் அதிகாலை 1.30 மணியளவில் தெற்குச் சீனக் கடல் பகுதியில் பறந்துகொண்டிருந்தபோது எவ்வித அபாய சமிக்ஞைகளையும் அனுப்பாமல் ராடர்களில் இருந்து அது மாயமானது. விமானிகள் எந்தவித அபாய சமிக்ஞைகளையும் அனுப்பவில்லை.

## திசை மாறிய விமானம்

ராடரில் இருந்து மாயமாவதற்குச் சில நொடிகளுக்கு முன் விமானம் தனது பாதையில் இருந்து கோலாலம்பூருக்குத் திரும்பியிருக்கிறது. ஆனால், விமானிகள் விமானக் கட்டுப்பாட்டு அறைக்கு எந்தவிதத் தகவல்களையும் தெரிவிக்கவில்லை. இது ஏன் என்பது இன்னும் மர்மமாக உள்ளது.

விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதா? நடுவானிலேயே வெடித்துச் சிதறியதா? கடலில் விழுந்ததா? தொழில்நுட்பக் கோளாறா? இந்தக் கேள்விகளுக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. கப்பல்கள் மற் றும் விமானங்கள் மூலமாகத் தீவிரமாகத் தேடப்பட்டாலும் விமானத்தின் எந்த ஒரு பாகம் கூட இப்போது வரை கடலிலோ, தரையிலோ கண் டெடுக்கப்படவில்லை.

விமானம் ராடரில் இருந்து மறைவதற்குச் சில நொடிகளுக்கு முன்னர் பாதையில் இருந்து மாறிச் சென்றிருப்பதால் தேடும் இடத்தின் பரப்பளவு தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இப்போது இந்து சமுத்திரத்தில் அது தேடப்படுகிறது. இந்த இடம் விமானம் கடைசியாகப் பறந்த இடத்தைவிட மேற்கில் உள்ளது. ஏன் சம்பந்தம் இல்லாமல் இங்கு தேடுகிறீர்கள்? என்று மலேசிய சிவில் போக்குவரத்துத் துறைத் தலைவர் அசாருதீன் அப்துல் ரகுமானிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, சில விடயங்களை மட்டுமே உங்களிடம் சொல்ல முடியும். சில விடயங்களை என்னால் உங்களிடம் சொல்ல இயலாது என்றார்.

## எங்கே மாயமானது?

மலேசியாவைச் சேர்ந்த பெரிதா ஹரியன் நாளிதழுக்கு விமானப் படைத்தளபதி ராட்சலி தவுத் அளித்த பேட்டியில், இராணுவ ராடரில் அதிகாலை 2.40 மணிக்கு விமானம் மலாக்கா நீரிணையின் வடபகுதியில் இருக்கும் புலாவ் பெராக் தீவின் அருகே கடைசியாக இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

சிவிலியன் ராடரில் இறுதியாகப் பதிவான இடத்துக்கும் இராணுவ ராடரில் பதிவான இந்த இடத்துக்கும் கிட்டத்தட்ட 300 கிலோ மீற்றர் தூரம். மலேசியாவின் கோட்டா பாரு பகுதியைத் தாண்டியதும் வழிமாறிய விமானம், அதன்பின் தாழ்வாகப் பறந்து மலாக்கா நீரிணையை நோக்கித் திரும்பியது தற்போது உறுதியாகியுள்ளது.

தற்போது 10 நாடுகள் விமானத்தைத் தேடி வருகின்றன. மலேசியா இந்தத் தேடுதல் பணியை முன்னின்று நடத்துகிறது. சீனா, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, வியட்நாம், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் மலேசியாவுடன் இணைந்து தேடுகின்றன.

## தேடும் பணி

தேடுதல் பணியின்போது கடலில் எண்ணெய்ப் படலங்கள் மிதந்துகொண்டிருந்ததைப் பார்த்த தேடுதல் குழுவினர், அதை ஆராய்ச்சி செய்ததில் அது விமானத்தின் எரிபொருள் அல்ல என்று தெரிவித்துள்ளனர். இப்போதைய நிலவரப்படி விமானத்தின் ஒரு பாகம்கூடக் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

மாயமான மலேசிய விமானத்தின் விமானியின் பெயர் ஜஹாரி அஹமத் ஷாஹ். 33 வருடங்களாக விமானியாக இருக்கும் இவருக்கு 53 வயது ஆகிறது. மொத்தம் 18,365 மணி நேரங்கள் விமானம் ஓட்டிய அனுபவம் கொண்டவர். விமானம் ஓட்டுவதை தொழிலாகப் பார்க்காமல் விருப்பத்தின் பெயரால் செய்தவர். தற்போது தான் இயக்கிய போயிங் 777 விமானத்தின் மீது பெரும் ஆர்வம் கொண்ட இவர், வீட்டில் அதே விமானத்தின் சிமுலேட்டரை அமைத்து, அதில் பயிற்சி பெற்று வந்தார் என்கின்றனர் அவருடன் வேலை பார்த்தவர்கள்.

பயிற்சி பெறும் மற்ற விமானிகளுக்குப் பரீட்சை வைக்க, மலேசிய சிவில் போக்குவரத்துத் துறையினால் ஜஹாரி அஹமத் ஷாஹ் அங்கீகரிக்கப்பட்டவர் என மலேசியன் எயார்லைன்ஸில் உள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். 33 வருடங்களாக மலேசியன் எயார் லைன்ஸில் பணியாற்றும் இவர் போக்கர் , எயார் பஸ் மற்றும் போயிங் 737 போன்ற பலதரப்பட்ட விமானங்களை இயக்கிய அனுபவம் கொண்டவர். மலேசிய விமானம் மாயமானதற்கு விமானிகளின் தவறு காரணமாக இருக்கவே வாய்ப்பில்லை என்று விமானிகளிடம் தொடர்பில் இருந்தவர்கள் கூறுகின்றனர்.

## தீவிரவாதிகளின் சதியா?

தீவிரவாதிகள் இந்த விமானத்தைக் கடத்தியிருக்கவோ அல்லது மூழ்கடித்திருக்கவோ கூடும் என்ற கோணத்திலும் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. விமானத்தில் பயணம் செய்த இரண்டு பேர் போலிக் கடவுச்சீட்டில் பயணம் செய்தது ஏற்கனவே தெரிந்த விடயம்தான். இதில் ஒரு கடவுச்சீட்டு இத்தாலியையும், இன்னொரு கடவுச்சீட்டு ஆஸ்திரியாவைச் சேர்ந்தவர்களுடையது ஆகும். இரண்டு கடவுச்சீட்டுகளினதும் உண்மையான உரிமையாளர்கள் விமானத்தில் பயணிக்கவில்லை. இத்தாலியைச் சேர்ந்தவருடைய கடவுச்சீட்டு 2012ஆம் ஆண்டிலும், ஆஸ்திரியாவைச் சேர்ந்தவருடைய கடவுச்சீட்டு 2013ஆம் ஆண்டிலும் தாய்லாந்தில் திருடப்பட்டுள்ளது. இந்த இரு கடவுச்சீட்டுகளுமே இன்ரர்போலின் பட்டியலில் உள்ளன. எப்படி போலிக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் ஒரு பன்னாட்டு விமானத்தில் ஏற முடிந்தது என இன்ரர்போல் கேள்வி எழுப்பியுள்ளது.

திருடப்பட்டுள்ள கடவுச்சீட்டில் பயணித்த ஒருவர் ஈரானைச் சேர்ந்த புவாரியா என்ற 19 வயது இளைஞர். இவருடைய தாயார் பிராங்[illegible] விமான நிலையத்தில் மகனுக்காகக் காத்திருந்திருக்கிறார். அவரிடம் விசாரித்ததை வைத்து இந்த ஈரானியர் எந்தத் தீவிரவாதக் குழுவையும் சேர்ந்தவர் இல்லை என்பது தெரியவந்துள்ளது. மேலும், புகலிடம் தேடித்தான் அவர் போலிக் கடவுச்சீட்டு மூலம் பயணித்தார் என்று சொல்லப்படுகிறது. இன்னொரு போலிக் கடவுச்சீட்டின் உண்மையான உரிமையாளர் கிறிஸ்ரியன் என்ற ஆஸ்திரியர் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டார். எனவே போலிக் கடவுச்சீட்டில் பயணித்த இருவரும் புகலிடம் தேடியே ஐரோப்பாவுக்குப் பயணித்தது உறுதியாகியுள்ளது. மேலும், தீவிரவாதச் செயலுக்கான எந்தவிதமான தடயங்களும், ஆதாரங்களும் இதுவரை கிடைக்கவில்லை. விமானத்தில் கடைசியாக பெப்ரவரி 23ஆம் திகதி வழக்கமான பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்போது விமானத்தில் எந்தவித கோளாறும் காணப்படவில்லை என்று மலேசியன் எயார்லைன்ஸ் அதிகாரி அஹமத் ஜௌஹரி யாயா தெரிவித்துள்ளார். போயிங் 777-200 விமானம் சர்வதேச அளவில் மிகவும் பாதுகாப்பான விமானம் எனத் தகவல்கள் கூறுகின்றன.

## தாழ்வாகப் பறந்த விமானம்

இந்நிலையில், மலேசியாவைச் சேர்ந்த இருவர் வழக்கத்தைவிட வேறு ஒரு வழியில், வானத்தில் தாழ்வாகப் பறந்த விமானம் ஒன்றைப் பார்த்ததாகக் கூறியுள்ளனர்.

மலேசியாவின் கெடெரே பகுதில் வசிக்கும் அப்துல் ஹதி என்ற ஒருவர் அதிகாலை 1.45 மணி அளவில் தன் வீட்டில் இருந்து விமானங்கள் மேலே எழும்பும்போதும், தரையிறங்கும்போதும் ஒளிரவிட்டு இருக்கும் பளீரென்ற வெளிச்சம் ஒன்றைப் பார்த்ததாகத் தெரிவித்துள்ளார். அந்த வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக உயரம் குறைந்து வந்ததாகவும், வழக்கத்தைவிட மாற்றுவழியில் பச்சோக் என்ற கடலை ஒட்டிய பகுதியை நோக்கி அந்த வெளிச்சம் சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் காணாமற்போன இந்த விமானம் தொடர்பான மர்மம் இன்னும் நீடிக்கிறது. தேடுதல் பணிகளும் தீவிரமாகியுள்ளன. இதற்கான விடை விரைவில் கிடைக்குமா என்பதே விமானத்தில் பயணித்தவர்களின் உறவினர்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலி.வடக்கு இராணுவ நடவடிக்கையின் பின்னணிகள் கிளப்பும் சந்தேகங்கள் பல

■ தி.ராஜ்

எப்பொழுதும் தமிழினத்தை நம்ப வைத்து கழுத்தறுப்பது, சிங்கள அரசுக்கு கை வந்த கலையாகவே இருக்கின்றது. போர் தந்த வேதனையிலிருந்து தமிழ் மக்கள் முற்றிலுமாக மீண்டெழுவதற்குள்ளேயே. இராணுவம் அடுத்த பேரிடியைக் கொடுத்திருக்கின்றது.

வலி. வடக்கு மக்கள், கால் நூற்றாண்டின் பின்னராவது தமது சொந்த நிலத்தில் கால் மிதிக்கலாம் என்ற எண்ணத்தை உருவாக்கிய இராணுவமே அதனை தவிடு பொடியாக் கியிருக்கின்றது. இந்த ஏமாற்றம் வலி. வடக்கு மக்களை மீளவும் மீளாத் துயருக்குள் தள்ளி விட்டிருக் கின்றது.

1990ஆம் ஆண்டு ஜுலை மாதம், மூன்று மணி நேரத்தில் வீடு திரும்பலாம் என்ற எண்ணத்தில் இடம்பெயர்ந்த வலி. வடக்கு மக்கள், மூன்று தலைமுறைகள் கடந்தும் மீளவும் குடியமர முடியாத நிலை தொடர்கிறது.

இலங்கையின் இடப்பெயர்வின் ஆதிக் குடிகளென பெயரெடுத்த வலி. வடக்கு மக்கள் ஒருபோதும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது என்று அவர்களது மனங்களில் ஆழமான விதையை ஊன்றுவதற்கான சதி வலை மெல்ல மெல்லப் பின்னப்படுகின்றது. இதன் மூலம் அவர்களை வேறு இடங்களில் குடியமர்த்திவிட்டு, அவர்களின் நிலங்களை அபகரித்துக் கொள்வதற்குத் திட்டமிடுகிறார்கள். யாழ். மாவட்டத்தின் வளம் மிக்க பூமியான வலி. வடக்கில் 6 ஆயிரத்து 380 ஏக்கர் நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயம் அல்லது முகாம் பகுதி என்ற பெயரில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. போர் முடிந்த பின்னரும், வலி. வடக்கு மக்களின் மீள்குடியமர்வு எட்டாக் கனியாகவே இருந்து வந்தது.

கையகப்படுத்தி வைத்திருக்கும் காணிகளை சட்டரீதியாகத் தமக்கு எடுத்துக் கொள்வதற்காக, இராணுவத்தினரால் சுவீகரிப்பு நடவடிக்கைகள் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து வலி. வடக்கு நில மீட்புப் போராட்டம் தீவிரம் பெற்றிருந்தது. அந்தப் பகுதி மக்களால் காணி சுவீகரிப்புக்கு எதிராக நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த இழுபறி நிலைக்கு மத்தியிலும், வலி. வடக்கினுள் அடங்கும் மக்களின் வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள் என்பன இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு நிலையில் வலி. வடக்கில் மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுத்த இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். புதிதாகப் பதவியேற்ற இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா, வலி. வடக்கு விடயத்தில் முற்றாக மாறுபட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது போலக் காட்டிக்கொண்டார்.

ஊரெங்கும் அமைக்கப்பட்டிருந்த மினி முகாம்கள் இரவோடு இரவாக அகற்றப்பட்டன. யாழ். குடாநாட்டில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படுவதைப் போலான தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. அது மட்டுமல்லாது, மீள்குடியமர்வில் மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருந்த வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பிலும் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார் என்று காட்டிக்கொண்டார்.

வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழு. வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து வாழும் நலன்புரி நிலையங்களின் தலைவர்கள் ஆகியோரை கடந்த பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி அழைத்த. யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, மீள்குடியமர்வு தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கலந்துரையாடல்களில் மேஜர் ஜெனரல் உதய பெரேராவினால் உறுதி வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் வலி. வடக்கில் மீளக்குடியமர வேண்டியவர்கள் தொடர்பில் மாறுபாடான புள்ளி விவரங்கள் காணப்படுகின்றமையால் அவற்றை ஒழுங்குபடுத்திய பின்னர் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இதன் பின்னர் வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவினர் மற்றும் நலன்புரி நிலையத் தலைவர் ஆகியோர் இணைந்து, மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலான பதிவுகளை மேற்கொண்டனர். புதிதாக விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட்டு மீள் குடியமர்வு தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டன. இராணுவத்தினருக்கும், வலி. வடக்கு மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பேச்சுக்களின் போதும், மீள்குடியமர்வு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான நம்பிக்கைகள் இராணுவத்தினரால் மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அத்துடன் தகவல்கள் விரைவாகத் திரட்டித் தரப்பட்டால் உடனேயே மீள்குடியமர்வு என்றவாறே இராணுவத்தரப்பு பேச்சுக்களின் போது தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது. இவை அனைத்தும் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பிலான தீர்மான வரைவு முன்வைக்கப்படுவதற்கு முன்னதாக நடந்தது. ஆனால் தீர்மான வரைவு முன்வைக்கப்பட்ட பின்னர நடந்த கடைசி இரண்டு சுற்றுப் பேச்சுக்களில், இராணுவத்தினரின் தொனி மாறத் தொடங்கியது.

வலி. வடக்கில் சொந்தக் காணியில்லாது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களையே முதலில் குடியமர்த்த வேண்டும் என்ற தொனியில் அவர்களது பேச்சு நகர ஆரம்பித்தது. அந்த மக்களை முதலில் குடியமர்த்திய பின்னர், எஞ்சிய மக்களைக் குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்றனர்.

கடந்த புதன்கிழமை இராணுவத் தளபதிக்கும், வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவருக்கும் இடையில் நடந்த சந்திப்பில் இராணுவம் முற்று முழுதாக தனது சுயரூபத்தை வெளிக்காட்டியது. வலி. வடக்கு மக்களைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது சாத்தியமே இல்லை என்ற அடிப்படையில், இராணுவத் தளபதி கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆரம்பத்தில் வலி. வடக்கு மக்களுக்குத் தன்னால் வழங்கப்பட்ட, அனைவரையும் கட்டாயம் மீளக்குடியமர்த்துவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையில் தான் இல்லை என்று கூறியிருக்கிறார். வளலாயில் மக்களைக் குடியேற்றுவதே தங்களுடைய நோக்கம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மீளக்குடியேற வேண்டியிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் கடற்றொழில் செய்பவர்கள். அவர்கள் எப்படி கடலில் இருந்து வெகுதூரம் தள்ளியுள்ள வளலாயில் குடியமர முடியும்? கரையோரத்தை அண்டி வாழ்வதுதானே நியாயமானது? என்று எழுப்பப்பட்ட கே[illegible]கு, வேண்டுமானால் மயிலிட்டி தையிட்டி துறைகளுக்கு வந்து மீன்பிடித்துவிட்டுப் போங்கள் என்று இராணுவத் தளபதி கூறியிருக்கிறார்.

"அவ்வாறு தொழில் செய்ய முடியாது. மக்கள் தாங்கள் இருக்கும் இடங்களிலேயே தொழில் செய்வதற்கும் அனுமதி வேண்டும். மயிலிட்டியில் படகைக் கட்டி விட்டு, வளலாயில் குடியமர முடியாது" என்று மக்களின் பிரதிநிதியாகச் சென்றவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டுத் திரும்பினாலும் தனது வாழ்நாளில் ஊருக்குத் திரும்பிவிடும் கனவை எண்ணி வருத்தப்பட்டுப் போய் அமர்ந்திருக்கிறார் அவர்.

ஐ.நா. மனித உரிமைகள் அமர்வு, ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகத் தொடங்கப்பட்ட வலி.வடக்குப் பேச்சுவார்த்தை. மனித உரிமைகள் அமர்வின் ஆரம்பத்துடன் முடிவுக்கு வந்திருக்கின்றது.

இதற்கிடையே வளலாயில் மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரச அதிகாரிகளும் மேற்கொள்கிறார்கள். வளலாயைச் சேர்ந்த சில குடும்பங்கள் நலன்புரி முகாம்களில் இருக்கின்றன. அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சொந்த இடத்தில் குடியமர்த்தப்பட வேண்டும். அதேநேரத்தில் சொந்தமாகக் காணிகள் இல்லாத பலரும் நலன்புரி நிலையங்களில் வசிக்கிறார்கள், அவர்களையும் வளலாய்க்குக் கொண்டு சென்று காணிகளை வழங்கி குடியேற்ற முடியும் என்று அதிகாரிகள் கணிப்பிடுகிறார்கள்.

இப்படி அவர்களைக் குடியேற்றுவதில் யாருக்கும் எதிர்ப்பில்லை. அந்த மக்கள் விரும்பினால் அவர்களை வளலாயில் குடியிருத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் அதிகாரிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால், மூன்று நான்கு வாரங்களுக்கு முன்னர் வரைக்கும் மக்களைச் சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர விட இயலும் என்று கூறிவந்த இராணுவத்தினர், இப்போது திடீரென ஏன் மறுக்கிறார்கள் என்று கேள்வி எழுப்பும் சந்தேகங்கள் பல.

கடைசி இரண்டு பேச்சுக்கள் தவிர, அதற்கு முன்னர் நடந்த பேச்சுக்கள் அனைத்திலும் தற்போது தம்வசமுள்ள பகுதிகளில் பெருமளவானவற்றை விடுவிப்பதற்கு இராணுவம் சம்மதித்திருந்தது. நம்பிக்கை ஊட்டும் விதத்திலேயே அந்தப் பேச்சுக்கள் நடந்தன என்கிறார்கள் அதில் கலந்துகொண்டவர்கள். இராணுவக் குடியிருப்பு எனப் பொறிக்கப்பட்டு எல்லையில் உருவாக்கப்பட்ட அலங்கார வரவேற்பு வளைவு இடித்து அகற்றப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயத் தைச் சுற்றி இடப்பட்டிருந்த முட்கம்பிகள் அரைவாசி வரைக்கும் அகற்றப்பட்டன.

இவை எல்லாம் காணிகளை விடுவிப்பதற்கு இராணுவம் தயாராக இருந்தது என்பதற்கான அறிகுறிகளாகவே பார்க்கப்பட்டன.

அப்படியானால். மக்களின் காணிகள் படையினருக்குத் தேவை இல்லை என்பது புரிகிறது. முடிவு. பலாலி மற்றும் காங்கேசன் துறைமுகம் என்பவற்றின் பாதுகாப்புக்கும் இராணுவத்தின் தேவைக்கும் படைகள் தற்போது கையகப்படுத்தி வைத்துள்ள காணிகள் தேவையற்றவை, எனவேதான் அவற்றை விடுவிப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள் என்ற கருதுகோளுக்குத் தெளிவாகவே இடமுண்டு.

ஜெனிவா பிரேரணைக்கு முன்பாக சர்வதேச சமூகத்தை ஏமாற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக அல்லது சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தால் ஏற்பட்ட நடவடிக்கையாக இதனைப் பார்த்தாலும்கூட, அந்த இடங்களில் இருந்து அகல்வதற்கு இராணுவம் தயாராக இருந்தது: இருக்கிறது.

பின்னர் எதற்காக அவர்கள் இப்போது மறுக்கிறார்கள்?

இதற்கு இரண்டு விதமான பதில்கள் அல்லது ஊகங்கள் கூறப்படுகின்றன. இராணுவம் காணிகளை விடுவிப்பதற்குத் தயாராக இருந்தபோதும், முடிந்த வரைக்கும் பிரச்சினைகள் இன்றிக் காணிகளைத் தம்வசப்படுத்தி வைத்திருக்கவும் முயற்சிக்கின்றது என்பது அதில் முதலாவது ஊகம். அதாவது இடம்பெயர்ந்து தங்கியிருப்பவர்களில் எவ்வளவுபேரை வெளி இடங்களில் குடியமர்த்த முடியுமோ அவ்வளவு பேரை வெளியிடங்களில் குடியமர்த்திவிட்டு, எஞ்சியோரை மட்டும் மீளக்குடியமர அனுமதிப்பது. இதன் மூலம் மீளக்குடியமருவோரின் எண்ணிக்கையை முடிந்தவரையில் குறைப்பது. இதற்காகவே இனிமேல் வலி. வடக்குப் பகுதியில் மீள்குடியேற்றம் சாத்தியமற்றது என்ற தோற்றப்பாடு ஏற்படுத்தப்படுகின்றது என்று விளக்கமளிக்கப்படுகிறது.

இரண்டாவது, ஜெனீவாவில் காட்டமான ஒரு தீர்மானம் வருவதைத் தடுப்பதற்கான நாடகமே தவிர இராணுவத்தின் நடவடிக்கைகளில் உண்மையில் இல்லை என்கிற ஊகம். இது பரவலான குற்றச்சாட்டாக இருந்தாலும், முதலாவது ஊகத்தையே மீளக்குடியேற வேண்டியுள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் நம்புகிறார்கள். எனவே தாம் மீளக் குடியமரும் காலம் வரும் என்று அவர்கள் மீண்டும் காத்திருக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ ஜெரா

நீண்ட காலத்தின் பின் தன் சொந்த மொழியைக் காது குளிரக் கேட்டு, கருவில் இருந்த தன் குழந்தைக்கும் கேட்கும் படி செய்தாள். என்றோ வற்றி வறண்ட வயல் தரைகளை நடந்தே கடந்தாள். உப்புக் காற்றை அனுபவித்தாள். சிசுவுக்கும் பருகக் கொடுத்தாள்.

# உங்கள் குழந்தைகளுக்காக கவலை கொள்ளுங்கள்

ஆத்மாரத்தியின் கட்டில் அசைந்து கொண்டேயிருந்தது. தூக்கம் வரவேயில்லை. தாதியர் அடிக்கடி வந்து விசாரித்தனர். அவளுக்கு நாளை சுகப் பிரசவம் என்பதைத் தவிர வேறு எந்த பிரச்சினைகளும் இல்லை என்றே கட்டிலுக்கு கீழே படுத்திருக்கும் அவளது அம்மா நினைத்துக் கொண்டிருப்பார். அங்குள்ளவர்களும் அப்படித்தான் நினைத்திருக்க வாய்ப்புண்டு.

திடகாத்திரமான உடல் அவளுக்கு. சுகப்பிரசவம் என்பதை உறுதிப்படுத்தியும் இருந்தது. "இன்டைக்கு கொஞ்சமாவது நித்திரை கொள்ளவேணும்" என்ற எண்ணம் அடிக்கடி குட்டு வைத்தாலும், சரியான நேர இடைவெளியில் கத்தியபடி, காற்றை வீசியடிக்கும் காற்றாடியை வெறித்துப் பார்த்தபடி படுத்துக்கிடக்கிறாள் ஆத்மாரத்தி. அவ ளால் நிமிர்ந்து மட்டுமே படுக்க முடியுமாயினும் அசைகிறாள்.

நாளை பிரசவத்துக்காக அவளுடன் காத்திருக்கும் எல்லாக் கர்ப்பிணிப் பெண்களையும் போல அவளுக்கு வலியும் இருக்கவில்லை. அந்த வார்ட்டில் இருந்த அநேக கன்னித் தாய்கள் வலியால் துடித்துக் கொண்டிருந்தனர். நாளை நிலம் தொடப் போகும் சந்தோசத்தில் குழந்தைகளின் குட்டிக் கால்கள் அடிவயிற்றை எட்டி உதைத்துக் கொண்டிருந்தன. ஆனால் இவளின் மகனோ, மகளோ அவ்வப்போது ஒரு முனகல் மாதிரியான அசைவோடு வயிற்றுப் பைக்குள் உறங்கிக் கொண்டிருந்தது.

கர்ப்பம் தரித்த சில மாதங்களே அவள் பணியிடத்தில் பணியாற்றினாள். அந்தப் பணியிடத்தில் கணவனுக்கு இருந்த பதவிச் செல்வாக்கினால் வழமையை விடச் சற்றுக் காலத்துக்கு முன்னரே பிள்ளைப்பேறு ஓய்வும் பெற்றுக் கொண்டாள். ஆயினும் வீட்டில் ஏதோ வேலைசெய்து கொண்டேயிருந்தாள். இருப்புக் கொள்ளாத மனசு எப்போதாவது வீடு வரும் கணவனிடம் பிடிவாதம் பிடித்தது. அந்தப் பணி யாளர்களுக்கான குடியிருப்பிலிருந்து சில மைல்கள் தொலைவிலுள்ள அவளின் சொந்தக் கிராமத்துக்கு போய் முதல் குழந்தையைப்பிரசவித்துக்கொள்ள அவனிடம்மன்றாடினாள். சில கால தாமதத்திற்குப் பின் அதற்கான அனுமதியை அவன் கொடுத்தான்.

நீண்ட காலத்துக்குப் பின்னர் அவளது சொந்தக் கிராமத்துக்கு திரும்பியிருந்ததாலும், தாய்மையடைந்த காலத்தில் இயல்பாய் எழும் ஆசைகள் காரணமாகவும் தன் முதல் குழந்தையை சொந்த மண்ணில் பிரசவிக்கவே விரும்பினாள். அதற்காக ஊரவர் என்ன பேசினாலும் கவனத்தில் எடுக்கப் போவதில்லை என்ற முடிவோடு தன் கிராமத்துக்கு வந்திருந்தாள். நீண்ட காலத்தின் பின் தன் சொந்த மொழியைக் காது குளிரக் கேட்டு, கருவிலிருந்த தன் குழந்தைக்கும் கேட்கும்படி செய்தாள். என்றோ வற்றி வறண்ட வயல்தரைகளை நடந்தே கடந்தாள். உப்புக் காற்றை அனுபவித்தாள். சிசுவுக்கும் பருகக் கொடுத் தாள். அகன்று விரிந்த பாலை மர நிழல்களை, அதற்குக் கீழ் அமர்ந்திருக்கும் பிள்ளையாரை, கச்சான் விற்கும் கிழவியை, இன்னமும் செருப்புக்காக ஏங்கும் வெயில்கால பள்ளிச் சிறுசுகளின் குறும்போசையை என ஆத்மாரத்தி அந்த மண்ணில்தான் அனுபவித்த ஒவ்வொரு விடயத்தையும் சிசுவுக்கும் அறிமுகப்படுத்தினாள்.

சிசுவை வயிற்றில் சுமந்துகொண்டு தன் பூர்வீகக் கிராமத்தின் ஒவ்வொரு சந்திலும் ஆழ இறங்கினாள். கிராமம் இன்னும் அழுக்கேறியிருந்தது. புது மனிதர்களும், புது இடங்களும் ஆங்காங்கே தோன்றியிருந்தன. அந்த ஒவ்வொரு இடமும், இவள் தாங்கிய பழைய அவமானங்களை நினைவுபடுத்திக் கொண் டேயிருந்தன.

சிசுவுக்குச் சொன்னாள், "இதுதான் பிள்ளை யாரடி. இங்கதான் அம்மா பள்ளிக்கூடம் போகேக்க பெடியங்கள் இருந்து நக்கலடிக்கிறவங்கள். அம்மா திரும்பியும் பாக்கமாட்டன். ஆனா, பாவம் அந்த பெடியங்கள். நிறையப் பேர் கடவுளிட்ட போயிட்டாங்கள்" என்று சொல்லியவாறு தன் வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

> சிசுவை வயிற்றில் சுமந்துகொண்டு தன் பூர்வீகக் கிராமத்தின் ஒவ்வொரு சந்திலும் ஆழ இறங்கினாள். கிராமம் இன்னும் அழுக்கேறியிருந்தது. புது மனிதர்களும், புது இடங்களும் ஆங்காங்கே தோன்றியிருந்தன.

ஒற்றைத் தூண் மட்டும் இருந்த இடத்தைக் கடக்கையில் நின்றுகொண்டாள். சிசு எதையோ எதிர்பார்ப்பதை உணர்ந்தாள். வயிற்றைத் தொட்டுக்கொண்டே புலம்பினாள். "இந்த இடம்தான் அம்மாவின் தலைவிதியையே மாத்திய இடம். இங்கதான் அந்த நோட்டீஸ் ஒட்டியிருந்தவை. அதை வாசிச்சிட்டுதான் அம்மா இந்த வேலைக்கு போனன். வேலைக்கு எடுக்கேக்க கைநிறைய உழைக்கலாம் எண்டும் வீடு கட்டி சந்தோசமா இருக்கலாம் எண்டும் அம்மா நினைச்சன்..ம்.." என்று முடிக்க முன்பே எட்டி உதைத்தது சிசு. வெயில் வானைப் பிளந்து அவள் தலையில் கொட்டியது.

கொஞ்சம் நடந்தாள். பேரவமானப்பட்ட பள்ளிக்கூடம் வந்தது. கொஞ்சம் நினைவுதான் அது. ஆனாலும் கொடியது. சிசு கேட்காவிட்டாலும் சொல்லியே ஆகவேண்டும். "வேலைக்காக பெரிய பயிற்சி குடுத்தவ அம்மாக்கு. அம்மா ஈசியா பயிற்சிய முடிச்சிட்டன். பயிற்சி தந்த எல்லாரும் நல்லா சொன்னவ. பெருமையா இருந்தது அப்ப.. அதுக்காக நான் படிச்ச பள்ளிக்கூடத்திலயே விழா வைச்சி னம். என்னோட பயிற்சி எடுத்த எல்லாரை யும் அங்க வச்சி பெரிய நிகழ்வு செய்தவை. எங்கட ஊராக்கள், பள்ளிக்கூட பிள்ளையள், எனக்கு வேலை தந்த பெரிய ஆக்கள் எல்லாரும் இங்க வந்திருந்தவை. அதில பேரம்பலம் ஐயா எழும்பி என்னையும், இந்த வேலைக்கு சேர்ந்த என்ன மாதிரியான ஆக்களையும் மோசமா பேசினார். கெட்டவார்த்தையில எல்லாம் கேட்டார். விபச்சாரி ஆகிருவள் என்டு சத்தம் போட்டார்.. அங்க இருந்த எல்லாரும் பேரம் பலத்தாருக்கு வெறி எண்டு சொல்லி வெளியில அனுப்ப முயற்சி செய்தவை. அதோட நிகழ்வு குழம்பீற்றுது." சிசு உறங்கியிருக்க வேண்டும். அவளும் நினைவு சொல்லி அலுத்துப் போனாள்.

அடுத்து அந்த வீட்டைக் கடந்தாள். அந்த மரத்தடியில் எப் போதும் வைக்கப்பட்டிருக் கும் மண் பானைத் தண்ணீர் இப்போதும் வைக்கப்பட்டிருந் தது. குளிரான அந்தத் தண்ணீரை அள்ளிப் பருகிக் கொண் டிருக்கையில், சிசு உறக்கத்தில் இருந்து எழுந்திருந்ததை உதைத்து அறிவித்தது.

"ம். இந்த வீட்டில இருந்தவனதான் நான் காதலிச்சிருந்தன். கலியாணமும் அவனோடதான் என்டு இருவீட்டுக்காரரும் பேசியிருந்தவ. லீவில ஒரு காலத்தில நான் வந்திருந்தன். அப்ப கலியாணத்துக்கு கேட்க என் அப்பா இந்த வீட்டுக்குப் போனார். அங்க அவையள் அடிக்காத குறையாத் துரத்திவிட்டிட்டினம். நான் போன வேலைக்காக என்னைப் பிழையாப் பேசிச்சினம். அந்தக் கதை ஊரெல்லாம் பரவி, எங்கட ஊராக்கள் யாரும் என்னைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டன் என்டிட்டினம். தெருவில போனால் புழு மாதிரிப் பாக்கத் தொடங்கீட்டினம். அதுக்குப் பிறகு வேலைக்கு போய் அங்கயே இருந்திட்டன். கலியாணமே வேண்டாம், காசு மட்டும் போதும் எண்டு வீட்டுக்கு அனுப்பிக் கொண்டு இருந்தன்." அம்மா அதிகம் கதைக்கிறாள்' என்று சிசு உணர்ந்திருக்க வேண்டும். மறுபடியும் உறங்கிவிட்டது.

அவளது கட்டிலுக்கு கீழே படுத்திருந்த அம்மா அப்போதுதான் எழுந்து பார்த்தார். "என்ன பிள்ளை, இன்னும் நித்திரை கொள்ளேல்லயா..ஏதும் செய்யுதா?" எதுவும் சொல்லாத ஆத்மாரத்தி மறுவளம் சற்று சரிந்து படுக்க முயற்சித்தாள்.

சிசுவுக்கு அதன் அப்பாவைப் பற்றிச் சொல்லியே ஆகவேண்டும் என்று எண்ணினாள். அவள் சரிந்து படுக்கையில் சிசு கதை கேட்பதற்கு தயாரானது.

"ஊரில அம்மாவ கலியாணம் செய்ய யாரும் இருக்கேல்ல. எல்லாரும் மாட்டன் என்டிட்டினம். கொஞ்ச நாள் கவலப்பட்டன். பிறகுதான் அப்பாவ கண்டன். எங்கட அலுவலகத்துக்கு அடிக்கடி வாறவர். முதல் அவர் பேசுறது எனக்கு விளங்காது. பிறகு பிறகு அவர் பேசுறத புரிஞ்சிகொண்டன். அவர விட நல்லா பேசுறளவுக்கு அம்மா வளர்ந்திட்டன். நல்ல நண்பர்களாதான் இருந்தம். ரெண்டுபேரும் ஒரே வேலை செய்து கொண்டும், ஒரே நிறுவனத்தில இருந்ததால இன்னும் நல்ல நெருக்கம் இருந்தது. மன ஒற்றுமை இயல்பாகவே வந்திட்டு. கலியாணம் செய்துகொள்ள அப்பா தான் முதல்ல கேட்டார். அம்மாக்கு கொஞ்சம் பயம் இருந்தது. பிறகு எல்லாத்தையும் யோசிச் சன். ஒரே வேலை. ஒரே மாதிரி இருக்கிறம். அப்பாவ எங்க ஊருக்கு குடியிருக்க கூப் பிட்டன். வாறன் என்டார். அவரக் கலியா ணம் கட்டினா ஊராக்கள் ஏதுவும் கதைக்க மாட்டினம் என்டு தெரியும். அப்பாவின்ர வேலையில சரியான அதிகாரம் இருந்தது. எந்தப் பிரச்சினையும் எங்களுக்குள்ள இல்லாத மாதிரியிருந்தது. அதோட காதல் என் கண்ண நல்லா இறுக்கி கட்டிப் போட்டுது. கலியாணத்த கட்டிக் கொண்டம். ஆனாலும் நாங்க ஊருக்குள்ள இருக் கேல்ல. எங்களுக்கென்டு, எங்கட ஊருக்கு பக்கத்திலயே பெரிய கிராமம் மாதிரி ஒன்ட எங்கட கம்பெனி கட்டித்தந்தது. அங்க வாழத் தொடங்கீற்றம். அப்பதான் உனக்கு என்னோட ஊர காட்டி, அங்கயே உன்னை பெற்றுக்கொள்ள ஆசைப்பட்டன்.." என்று பெருமூச்சு விட்ட ஆத்மாரத்திக்கு மறுபக்கம் திரும்பிப் படுக்க வேண்டும் போலிருந்தது.

சரிந்து படுக்கையில் மெல்லிதான கண்ணீர் தலையணையில் விழுந்தது. ஏன் அழுதாள் என்று தெரியவில்லை.

என்றுமில்லாத கேள்விகளை, நாளை பிறக்கப்போகும் சிசு கேட்பதாக உணர்ந்தாள். அந்தக் கேள்விகள் அவளைக் குத்திக் குடைந்தன.

"அம்மா எனக்கு என்ன பேர வைப்ப? என்ன மொழியிலம்மா எனக்கு பேர் வரும்?"

"என்ர பேர கேட்டு பள்ளிக்கூடத்தில நக்கலடிக்க மாட்டினமா?"

"அதுக்காக என்னையும் தனிப்பள்ளிக் கூடத்தில சேர்ப்பியா?"

"நான் எந்த மொழியில அம்மா படிக்கிறது? கதைக்கிறது?"

"என் சாமி எப்பிடியம்மா இருப்பார்?"

"என் சொந்த ஊர் எது அம்மா?"

இப்படியே ஓராயிரம் கேள்விகளைச் சிசு கேட்டுக்கொண்டேயிருந்தது. அந்தக் கேள்விகள் அலைவடிவம் பெற்றுக்கொண்டிருக்க அவள் உணர்வை இழந்திருக்க வேண்டும்.

அப்போது ஆத்மாரத்தியைப் பார்த்து, பக்கத்து கட்டிலில் பிறப்பு சூடாறாத குழந்தையோடு படுத்திருந்த குமுதாயினி, தன் அம்மாவின் காதில் கிசுகிசுக்கிறுள்.

"அந்த ஆமிக்காரிக்கு குழந்தை செத்தே பிறந்திட்டுது."

ஆத்மாரத்திக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை. கட்டில் கம்பியைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாரத்தியின் அம்மாவினது கண்ணீர் இன்னும் பெருக் கெடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயை நாம் ஆள்வோம்

தமிழகத்தில் இருந்து
மருத்துவர் அறிவரசன்





> "குருதியில் குளுக்கோஸின் அளவு உயரும்போது கணையம் அதிகளவு இன்சுலினைச் சுரக்கிறது. குருதியில் உள்ள குளுக் கோஸின் அளவுக்கு ஏற்பவே கணையம் இன்சுலினை வெளிவிடும். அதாவது தேவைக்கேற்ப கூட்டியோ குறைத்தோ இன்சுலின் வெளியிடப் படும். இந்தச் செயல் நாள் முழுவதும் நடைபெறும்.



நீரிழிவு நோயில் பிரதான வகிபாகத்தைக் கொண்டிருக்கும் இன்சுலின் என்பது ஒரு புரத நுண் பொருள். இது 51 அமினோ அமிலங்களை உள்ளடக்கியது. இது கணையத்திலிருந்து உடலுக்கு நேரடியாக அனுப்பப்படுகிறது. இது குருதி ஓட்டத்தில் சேர்ந்து உடலிலுள்ள அனைத்து உயிரணுக்களையும் சென்றடைகிறது. உடலில் நடைபெறும் இந்தப் பொறிமுறை மிக முக்கியமானது. இது நமது அணுக்களினுள் குளுக்கோஸை ஏற்றி நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான சக்தி யாக அதனை மாற்றும். நமது அணுக்களில் உள்ள மெல்லிய சவ்வுகளில் இந்த இன்சுலின் பிணைக்கப்படுகிறது. இன்சுலின் குறியிடம் (receptor) என்று இது அழைக்கப்படுகிறது. குளுக்கோஸ் அணுக்களினுள் புகுவதற்கான வழி இதுதான். அதாவது பூட்டும் சாவியும் போன்று இவை தொழிற்படும்.

நாம் சாப்பிட்டவுடன் நமது குருதியில் குளுக்கோஸின் அளவு உயரும். நாம் உண்ணும் உணவு குடலில் சமிபாடடையும் போது ஹார்போஹைதரேற்று நுண்ணிய கூறுகளாக மாறுவதே குளுக்கோஸ் என்றழைக்கப்படுகிறது. குருதியில் குளுக்கோஸின் அளவு உயரும்போது கணையம் அதிகளவு இன்சுலினைச் சுரக்கிறது. குருதியில் உள்ள குளுக்கோஸின் அளவுக்கு ஏற்பவே கணையம் இன்சுலினை வெளிவிடும். அதாவது தேவைக்கேற்ப கூட்டியோ குறைத்தோ இன்சுலின் வெளியிடப் படும். இந்தச் செயல் நாள் முழுவதும் நடைபெறும்.

இந்த வகையில் தேவையான அளவு இன்சுலின் சுரக்கப்படாமல் விடுவதால் ஏற்படும் விளைவையே நீரிழிவு என்கி றோம். இவ்வாறு இன்சுலின் குறைவா கச் சுரப்பதற்கு அல்லது ஆற்றல் குறைந்த இன்சுலின் சுரப்பதற்கான காரணம் என்ன என்பது மருத்துவ உலகத்தால் இதுவரையில் திட்டவட்டமாகக் கண்டறியப்படவில்லை. எனினும் சில காரணிகள் இதில் முக்கிய பங்காற்றுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

**மரபணுக்கள்:** 50 சதவீத நீரிழிவு நோயாளிகளுக்கு அந்த நோய் அவர்களின் மூதாதையர்களிடம் இருந்தே வருகின்றது. இன்றுவரை நீரிழிவு நோய்க்கு மரபணுக்களின் பொறுப்பு தட்டிக்கழிக்கப்படவில்லை. அவற்றுக்கும் இந்த நோய்க்கும் பலமான தொடர்பு உண்டு என்றே அறியப்படுகின்றது.

**வாழ்க்கை முறை:** கலோரிகள் அதிகமுள்ள உணவு இன்சுலின் சுரப்பைப் பாதிக்கும் மற்றொரு காரணியாக உள்ளது. உடற்பயிற்சி செய்யாமை, உடலுக்கு வேலை கொடுக்காமை, உடல் பருமனைக் கட்டுப்படுத்தாமை போன்றவற்றிற்கும் நீரிழிவு நோய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

இன்றைய அவசர உலகில் யாரும் உடல் உழைப்புக்கு அதிக நேரம் செலவிடுவதில்லை. அதிலும் தெற்காசிய நாடுகளில் இந்த நிலைமை மிக அதிகமாக இருக்கிறது. முன்னர் ஆள்கள் செய்து வந்த வீடு கூட்டுதல், உடுப்புத் தோய்த்தல், சமைத்தல் போன்ற சாதாரண வேலைகளில் பெரும்பாலானவற்றைக்கூட இன்று இயந்திரங்களே செய்கின்றன. அதனால் நீரிழிவு நோய் எல்லோருக்கும் பரவலாக வரும் ஒரு நோயாக மாறிவிட்டது. செல்வத்துக்கும் இந்த நோய்க்கும் அதிக தொடர்பு உண்டு. செல்வம் அதிகரிக்க அதிகரிக்க இந்த நோய் தாக்குவதற்கான சாத்தியங்களும் அதிகரிக்கும். எனவே கட்டுப்பாடும், உடல் பற்றிய விழிப்புணர்வும் ஒவ்வொருவருக்கும் இன்று அவசியமாகிவிட்டது.

---

# அதிபுத்திசாலி குழந்தைகளை உருவாக்குவோம்

மரியான்



கலைஞர்கள் பிறக்கக்கூடும்; ஆனால் புத்திசாலிகள் உருவாக்கப்படுகிறார்கள் என்பதுதான் இன்றைய தத்துவம். எனவே உங்கள் பிள்ளைகளை நீங்கள் புத்திசாலிகளாக உருவாக்குகிறீர்களா, இல்லையா என்பதுதான் கேள்வி. அவர்கள் புத்திசாலிகளாக இல்லை என்றால் அதில் சரி அரைவாசிக்கும் அதிகமான பொறுப்பு பெற்றோர்களையே சாரும்.

இதனைக் கருத்தில் கொண்டு குழந்தை எதைக் கற்க ஆரம்பிக்கும் போதும் அதனை ஊக்கப்படுத்துவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். குழந்தை எழுதவோ வரையவோ பழகும்போது, உங்களிடம் கொண்டு வந்து காட்டும். உடனே நீங்கள் "என்ன இது, ஒன்றும் புரியவில்லையே! என்னதான் எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டுவிடாதீர்கள். முதலில் குழந்தையின் முயற்சியைப் பாராட்டுங்கள்; ஊக்கப்படுத்துங்கள். "அழகாக இருக்கிறதே. நீ எழுதியிருப்பது இதுதானா? இல்லை அதுவா?" என்று கேட்க வேண்டும். அப்படி இல்லை எனில் "நீ எழுதியதை அப்பாவால் கண்டு பிடிக்கவே முடியவில்லை; நீயே அது என்ன வென்று சொல்லிவிடு" என்று கேட்க வேண்டும். பிள்ளை அது என்ன என்று கூறும் போது, அதனைச் சிலாகித்து, ஓ! அதுவா இது என்று வியந்து பாராட்டி ஊக்கப்படுத்த வேண்டும். ஊக்கம் ஒன்றே வெற்றிக்கு வழிகாட்டி என்பதை மறந்துவிடாதீர்கள்.

பெரியவர்களுக்கு மட்டும் என்றில்லை, குழந்தைகளுக்கும் ஈகோ உண்டு. அவர்களுடன் பகிடி விடவோ, அவர்களைக் கேலியாகப் பேசவோ செய்யாதீர்கள். இவை எல்லாம் குழந்தைகளின் சிந்தனையை, மேம்பாட்டை, ஆர்வத்தை மழுங்க டித்து விடக்கூடியவை என்பதை அறிந்து வைத்துக்கொள்ளுங்கள். குழந்தை உங்களிடம் இருந்து எந்த ஒரு விடயத்தை அறிய முற்படும்போதும் கோபப்படாமல், பதற்றப்படாமல் பொறுமையோடு சொல்லிக் கொடுக்க முயலுங்கள். பதிலாக எதையாவது கேலி பேசி குழந்தையின் ஆர்வத்தை முனை மழுங்கச் செய்துவிடாதீர்கள்.

உதாரணமாக உங்கள் குழந்தை கிளியின் படம் ஒன்றைவரைகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். கிளியின் சொண்டு நிறத்தை அது சிவப்புக்குப் பதில் நீலத்தில் நிறந்தீட்டிக்கொள்கிறது என்றால், உடனே அதனைப் பகிடி செய்யாதீர்கள். எள்ளி நகையாடாதீர்கள். கிளியின் சொண்டு நிறம் கூடவா உனக்குத் தெரியாது என்றுநக்கல்அடிக்காதீர்கள். குழந்தை நிறந்தீட்டியிருக்கும் விதத்தை முதலில் பாராட்டுங்கள்.

பின்னர், மெல்ல கிளியின் சொண்டு என்ன நிற மானது என்று குழந்தையைச் சிந்திக்கத் தூண் டுங்கள். அதன் பின்னர் குழந்தை என்ன தவறி ழைத்திருக்கிறது, அதனை எப்படித் திருத்த முடியும் என்று எடுத்துக் கூறுங்கள். சில குழந்தைகள் மன எழுச்சி கொண் டவர்களாகப் புதிய புதிய கதைகளை உருவாக்கிக் கூறுவார் கள். 10 தலை காகத்தைத்தான் பார்த்ததாக வும், அது பறந்து சென்ற போது நாயைத் தூக்கிச் சென்றதாகவும், குழந்தை கதை சொன்னால் அதனை நக் கலடிக்காதீர்கள்; உனக்கு ஒன்றும் தெரியாது என்று ஒதுக்கித் தள்ளாதீர்கள். பதிலாக குழந்தை சொல் லும் கதையை ரசித்துக் கேளுங்கள். பொறுமை யாக, உண்மைக்கும் குழந்தை யின் கற்பனைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அதற்கு விளங்கப் படுத்த முயற்சியுங்கள். அத் தோடு பிள்ளையின் அத்தகைய கற்பனைக்குப் பின்னுள்ள காரணிகளை அறிய முற்படுங்கள். அது மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

குழந்தைகளை முன்பள்ளிகளுக்கு (நேசறி) அனுப்ப ஆரம்பித்து விட் டீர்களானால், ஒவ்வொரு நாளும் குழந்தை வீடுதிரும்பியதும் முன் பள்ளி யில் நடந்தவை குறித்துக் கேளுங்கள். குழந்தை அன்றைய தினம்நடந்ததாகக் கூறும் கதைகளை ரசியுங்கள். மேலும் மேலும் கதைகளைச் சொல்லும்படி ஊக்குவியுங்கள். அதைவிட்டு, குழந்தை வீடு வந்த உடனேயே ஏன் ஆடைகளை அழுக்காக் கினாய்? அதை விட்டுவிட்டு வந்தாய்? பேனாவை, பென்சிலை எங்கே தொலைத்தாய்? என்று எரிந்து விழாதீர்கள். வீட்டில் உங்க ளுக்கு இருக்கும் மன அழுத்தத்தைப் பிள்ளை யின் மீது இறக்கி வைக்காதீர்கள். நீங்கள் அப் படிச் செய்தால், அது சாதகமான விளைவுகளுக்குப் பதில், பாதகமான விளைவுகளையே தரும். கொஞ்சம் வசதி இருந்தால், குழந்தைகளுக்கு வாசிப்பு மற்றும் எழுத்துக்களைப் பழக்குவ தற்கு கணினிகளையும் பயன்படுத்தலாம். அவற்றுக்கான மென்பொருள்கள் இப்போது கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. அப்போதும் கூட பெற்றோர் அக்கறையுடன் அருகில் இருந்து ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொடுப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விலகாத மர்மங்களும் மாயமான வானூர்திகளும்

சாரி

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து பெய்ஜிங் சென்ற விமானம் 300க்கும் மேற்பட்ட பயணிகளுடன் மாயமாகி விட்ட மர்மம் இன்னும் விலகியபாடில்லை. விமானம் புறப்பட்டபோது வானிலை நன்றாகவே இருந்தது. கடல் மட்டத்துக்கு மேலே 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தது. விமானத்தில் நெருக்கடி ஏதும் இருந்ததற்கான சமிக்ஞை ஏதும் தரைக் கட்டுப்பாட்டுக் கோபுரங்களுக்கு வரவில்லை. விமானியும் ரேடியோ மூலம் அவசரச் செய்தி எதையும் சொல்லவில்லை. "எல்லாம் சரியாக இருக்கிறது; குட்நைட்" என்பதுதான் விமானியின் கடைசி வார்த்தைகள். விமானம் புறப்பட்ட ஒரு மணி நேரத்தின் பின்னர் ரேடாரிலிருந்து மறைந்துவிட்டது. விமானத்தின் கட்டுமானத்தில் கோளாறு ஏற்பட்டிருந்தால் விமானம் அப்படியே இரு துண்டுகளாக உடைந்திருக்கும் என்பது சிலரின் அனுமானம். விமானிகள் தவறு செய்திருக்கலாம்; பயங்கரவாதிகளின் தாக்குதலாக இருக்கலாம் என்றெல்லாமும்கூட அனுமானங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் தெளிவான பதில் ஏதும் இன்னும் இல்லை.

பொதுவாக, விமான விபத்துகள் ஏற்படப் பல காரணங்கள் உண்டு. விமானத்தில் எரிபொருள் தீர்ந்துபோவது, இயந்திரத்தில் திடீரெனக் கோளாறு ஏற்படுவது, நடுவானில் மற்றொரு விமானத்தின் மீது மோதிவிடுவது, நடுவழியில் மலை அல்லது உயரமான கட்டிடங்கள் மீது மோதுவது, விமானி தூங்கிவிடுவது, விமான நிலையக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து வரும் கட்டளைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் விபத்தில் சிக்குவது, புயல் - மழையில் சிக்குவது, பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டு வெடிவைத்துத் தகர்க்கப்படுவது என்று பல காரணங்களைப் பட்டியலிடலாம். ஆனால், விபத்து ஏன் ஏற்பட்டது என்பதற்கு ஆதாரமாக எதுவுமே கிடைக்காமல் - ஏன் விமானமே சிக்காமல் - நடந்த விபத் துகள் பல உண்டு. மலேசிய விமானமும் அந்த வரிசையில் சேர்ந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டி இருக்கிறது.

### உலகைச் சுற்ற நினைத்தவர் பயணம்

அட்லாண்டிக் கடலின் மீது பறந்து, உலகைச் சுற்றிவரப் புறப்பட்ட அமீலியா இயர்ஹார்ட் 1937 ஜூலை 2ஆம் திகதி விமானத்துடன் காணாமற் போனார். அவருக்கு வழிகாட்டியாக பிரெட் நூனன் என்பவரும் விமானத்தில் உடனிருந்தார். மத்திய பசிபிக்கில் ஹௌலேண்ட் தீவுக்கு அருகில் அவருடைய விமானம் காணாமற் போனது. எவ்வளவோ தேடியும் அவரும் கிடைக்கவில்லை, விமானமும் சிக்கவில்லை.

அமெரிக்க அதிபர் பிராங்ளின் டி. ரூஸ்வெல்ட்டின் உளவாளியான அவரை ஜப்பானியர்கள் சிறைப்பிடித்துவிட்டனர் என்றனர் சிலர். ஜப்பானியத் தீவில் மலை மீது விமானம் மோதி, இயர்ஹார்ட் மட்டும் உயிர் பிழைத்துக் கீழே விழுந்திருப்பார். மணல் நண்டுகள் அவரைத் தின்றிருக்கும் என்றனர் சிலர்.

விபத்துக்குப் பிறகு உயிர் தப்பிய அவர், நியூ ஜெர்சிக்குச் சென்று பெயரை மாற்றிக்கொண்டு ரகசியமாக வாழ்கிறார் என்றனர் சிலர். வேற்றுக்கிரகவாசிகள் அவருடைய விமானத்தை மறித்து; அவரைக் கடத்திச் சென்றிருக்கலாம் என்றும் சிலர் நம்பினர்.

### பெர்முடா முக்கோணம்

அமெரிக்க விமானப் படையில் புதியவர்களுக்குப் பயிற்சி தருவதில் அனுபவம் வாய்ந்தவர் சார்லஸ் டெய்லர். 1945 டிசெம்பர் 5இல், ஐந்து விமானங்களில் பயிற்சி விமானிகளை வழிநடத்திச் சென்றார். ஃப்ளோரிடா மாகாணத்தின் லாடர்டேல் கோட்டையிலிருந்து விமானங்கள் புறப்பட்டன. ஒன்றரை மணி நேரப் பயிற்சிக்குப் பிறகு, இளம் பைலட்டுகள் டெய்லரிடம் மன்றாடினர். தரையில் உள்ள எதுவுமே சரியாகத் தெரியவில்லை, தளத்துக்குத் திரும்பிவிடலாம் என்றனர்.

கடற்படைத் தளத்தை ரேடியோ மூலம் தொடர்புகொண்ட டெய்லர் தன்னிடமுள்ள இரு திசைகாட்டிக் கருவிகளும் பழுதாகிவிட்டன என்று அச்சத்துடன் கூறினார். விமானத் தளத்துக்குத் திரும்புவதற்குப் பதிலாக ஆறு விமானங்களும் திசை தவறி ஆளுக்கொரு மூலையாக எங்கோ பறந்தன. அப்போது பருவநிலையும் மோசமாகிக்கொண்டே வந்தது. டெய்லர், ஐந்து பயிற்சி பைலட்டுகள் ஆகியோருடன் விமானப் படைக் குழுவினர் எட்டுப் பேரும் அந்த விமானங்களில் இருந்தனர்.

அவர்களுடைய கதி என்னவானது என்று பார்த்து வர உடனே அனுப்பப்பட்ட மற்றொரு போர் விமானமும் அதேபோலக் காணாமற் போனது. இந்த மர்மத்தைத்தான் பெர்முடா முக்கோண மர்மம் என்கின்றனர். இன்று வரை இந்த மர்ம முடிச்சு அவிழவில்லை. பெர்முடா காவு கொண்ட கணக்கு இத்துடன் முடிந்துவிடவில்லை.

### ஸ்டென்டெக் மர்மம்

ஆர்ஜென்டீனாவின் புவனஸ் அயர்ஸ் நகரிலிருந்து சிலியில் உள்ள சான்டியாகோ விமான நிலையத்துக்கு 1947 ஓகஸ்ட் 2இல் ரெஜினோல்ட் குக் ஒரு விமானத்தைச் செலுத்திச் சென்றார். ஆண்டீஸ் மலைத் தொடரின் மீது பறந்த அந்த விமானம், சான்டியாகோ போய்ச் சேரவே இல்லை. ஆனால், விமானி மோர்ஸ் கோட் என்றதந்தி மொழியில் ஸ்டென்டெக் (STENDEC) என்றொரு தகவலை அனுப்பினார். அதற்கு என்ன பொருள் என்று இன்றுவரை வெவ்வேறு விளக்கங்களை அளிக்கின்றனர்.

நாசவேலையால் விமானம் வெடித்தது என்றும், வேற்றுக்கிரகவாசிகள் தாக்கிவிட்டார்கள் என்றும் பேசிக்கொண்டார்கள். பனிப்பொழிவுகளின் ஊடே பறந்தபோது, பனிக்கட்டிகள் அதை அழுத்தி மலையில் புதைத்திருக்க வேண்டும் என்றும் ஊகிக்கப்பட்டது. ஆனால் மிச்சம் மீதி என்று எதுவும் கிடைக்கவில்லை. விமானத்துக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே போய்விட்டது.

### மீண்டும் பெர்முடா

அசோரஸின் சான்டா மரியா விமான தளத்திலிருந்து பெர்முடாவுக்கு 1948 ஜனவரி 30இல் புறப்பட்ட அந்த விமானத்தில், இரண்டாவது உலகப் போரில் தீரச் செயல்கள் புரிந்த ஏயர் மார்ஷல் சர் ஆர்தர் கானிங்காம் உட்பட 25 பயணிகள் இருந்தனர்.

அப்போது பருவநிலை சரியாக இல்லாததால், பலத்த காற்றில் சிக்கிவிடாமல் இருக்கக் குறைந்த உயரத்தில் பறந்து செல்ல முடிவுசெய்யப்பட்டது.

இந்த விமானத்துக்கு வழிகாட்டி விமானம் ஒன்றும் முன்னால் பறந்தது. சுமார் 12 மணி நேரம் பறக்க வேண்டிய நீண்ட பயணம் அது. பின்னால் சென்ற விமானம் பாதையை விட்டு விலகிப் பறந்தது. பெர்முடா செல்வதற்கு முன்னதாக பெருங்காற்றில் சிக்கியது. காணாமற் போனது. வழிகாட்டி விமானம் போய்ச் சேர்ந்துவிட்டது. பின்னால் சென்ற விமானத்தின் சிதைவு களைக் கூடக் காண வில்லை.

இதேபோல, பெர்முடாவிலிருந்து ஜமைக்காவுக்கு 1949 ஜனவரி 17இல் புறப்பட்டது அந்த விமானம். புறப்பட்டபோது நீலவானில் எந்த மழை மேகமும் இல்லை. காற்றிலும் ஏதும் கோளாறு இல்லை. விமானம் எந்தத் தொல்லையும் இல்லாமற்தான் புறப்பட்டது. ஆனால், புறப்பட்ட சில நிமிடங்களுக்கெல்லாம் விமான நிலையங்க ளுடன் தொடர்புகொள்வதில் அடுத்தடுத்துப் பிரச்சினைகள் தோன்றிக் கொண்டே இருந்தன. 20 பயணிகளுடன் சென்ற அந்த விமானம் எங்கே போனது, என்ன ஆனது என்று எவருக்குமே தெரியவில்லை. சுமார் ஒரு வார காலம் தேடிப்பார்த்துவிட்டு, தன் முயற்சியைக் கைவிட்டது அரசு.

### அட்லி மர்மம்

பெர்முடாவில் 1948,1949களில் நடந்த இரு விபத்துகளுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இரண்டு விமானங்களுமே பி.எஸ்.ஏ.ஏ. நிறுவனத் தயாரிப்புகள். போர்ப் பயிற்சி பெற்ற ஒரு நாசக்காரரே இந்த இரு விபத்துகளுக்கும் காரணம். இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைத் தொடர வேண்டாம் என்று பிரிட்டிஷ் பிரதமர் கிளமென்ட் அட்லி தனிப்பட்ட முறையில் உத்தரவிட்டார் என்று பி.எஸ்.ஏ.ஏ. நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் டான் பென்னட் குற்றஞ்சாட்டினார். இதிலும் மர்மம் விலகவில்லை.

### வேற்றுக்கிரகவாசிகளின் தாக்குதல்

பொதுவாக, இப்படிப்பட்ட விபத்துகளின்போது நம்பக்கூடியதும் நம்ப முடியாததுமாகப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுவது உண்டு. அவற்றில் முக்கியமான ஒன்று, வேற்றுக்கிரகவாசிகளின் தாக்குதல்.

இப்படிப்பட்ட கதைகள் எல்லாம் ஒருபுறமிருந்தாலும், இன்னமும் மர்ம விமான விபத்துகள் தொடர்வதன் மூலம் நமக்குச் சுட்டிக்காட்டப்படுவது ஓர் உண்மைதான். தொழில்நுட்பம் எவ்வளவுதான் முன்னேறி விட்டதாக நாம் கூறிக்கொண்டாலும், அதன் போதாமை என்ற வெற்றிடம் இன்னமும் பெரியதாக இருக்கிறது என்பதே அந்த உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிகொட்டுவதைத் தவிர்க்க நெல்லிக்காய்த் தைலம்

பெரும்பாலானவர்களுக்கு முடி கொட்டுவது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இது அவர்களுக்கு மன உளைச் சலையும் ஏற்படுத்துகிறது. முடி அதிகம் கொட்டுகிறதே என்று கவலைப்பட்டால் அதிகம் முடி கொட்டும். கவலையை நிறுத்தி, நெல்லிக்காய்த் தைலத்தைத் தலையில் தேயுங்கள்.

பச்சை நெல்லிக்காய், துளசி இலை, கறிவேப்பிலை - தலா 100 கிராம் எடுத்து அவற்றைச் சேர்த்து கிரைண்டரில் நன்றாக அரைக்க வேண்டும். பின்னர் இந்த அரைத்த பவுடரை வைத்து மெல்லிய துணியில் மூட்டையாகக் கட்டித் தொங்க விட வேண்டும். அதிலிருந்து துளித் துளியாகச் சாறு சொட்டும். இந்தச் சாற்றைச் சேமித்து, இதன் அளவில் மூன்று மடங்கு தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்ச வேண்டும். இந்த எண்ணெயைத் தினமும் தலையில் தடவி வர முடி கொட்டுவது நின்று, அடர்த்தியாக வளரவும் தொடங்கும்.

இந்த எண்ணெயை தினமும் தலையில் தடவி வர முடி கொட்டுவது நின்று, அடர்த்தியாக வளரவும் தொடங்கும்.




# முகத்துக்கு ஏற்ற மூக்குத்தி





**நிறமாக உள்ளவர்கள்:**
பச்சைக்கல் மூக்குத்தி அணிந்தால் நன்றாக இருக்கும்.

**நீண்ட மூக்கு:**
நீண்ட, சப்பை, குடமிளகாய் வடிவங்களில் உள்ளது மூக்கு. அதனை மாற்ற முடியாது என்றாலும் மூக்குத்தி போட்டு ஓரளவு அழகாக்கலாம். கல் இல்லாத வெறும் மூக்குத்தி எந்த முகத்துக்கும் அழகாகப் பொருந்தும்.

**கறுப்பு நிறம் உடையவர்கள்:**
வெள்ளைக் கல் மூக்குத்தி அணிந்தால் அழகாக இருக்கும்.

**நீண்ட முகம்**
குறுகிய, நீண்ட முகம் உள்ளவர்களுக்கு ஒரு கல் மூக்குத்தியும், அகல முகம் உள்ளவர்களுக்கு கற்கள் பதித்த அகன்ற மூக்குத்தியும் அணிந்தால் பொருந்தும்.



**மா நிறத்தில் உள்ளவர்கள் :**
சிவப்புக்கல் மூக்குத்தி அணிந்தால் அழகாக இருக்கும்.

# பூந்தி லட்டு

*தேவையான பொருள்கள்:*
*கடலை மா- 1 குவளை*
*சர்க்கரை -1 குவளை*
*உப்பு - சிறிதளவு*
*நெய் - 2 தேக்கரண்டி*
*முந்திரிப் பருப்பு - 10*
*பிளம்ஸ் -20*
*கற்கண்டு- 1 மேசைக்கரண்டி*
*ஏலக்காய் -4*
*பச்சைக் கற்பூரம்-சிறிதளவு*
*மஞ்சள் தூள்- சிறிதளவு*



செய்முறை:
கடலை மாவைக் கட்டிகளில்லாமல் நன்கு கலந்து கொள்ளவும். சிறிதளவு உப்புச் சேர்த்து, தேவையான நீர் கலந்து தோசை மாவு பதத்துக்குக் கரைத்துக் கொள்ளவும்.
அடுப்பில் எண்ணெய்ச் சட்டியை வைத்து நெய் விட்டு காய வைக்கவும்.
துளைகள் உள்ள வேறு ஏதாவது பாத்திரத்தின் உட்புறமாக சிறிது எண்ணெய் தடவிவிட்டு, காய்ந்த நெய்க்கு நேராகப் பிடித்து, மாவை சிறிதுசிறிதாக போட்டால் முத்துமுத்தாக விழ ஆரம்பிக்கும். (விடும்போது நெய் நன்கு காய்ந்து, தீ மிதமான சூட்டில் இருக்க வேண்டும். குறைவான சூடோ, தீயோ இருந்தால் பூந்தி ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும்.)



எண்ணெய்ச் சட்டியில் நிறைத்து பூந்தி விழுந்ததும் நிறுத்திவிட்டு, திருப்பிவிட்டு வேகவிடவும்.
பூந்தி மிகவும் கரகரப்பாக ஆகும்வரை காத்திருக்காமல், வெந்ததும் சிறிது முன்கூட்டியே மென்மையான பதத்தில் எடுத்து, வடிதட்டில் கொட்டி நெய்யை வடித்து எடுக்க வேண்டும்.
கனமான சட்டியில் சர்க்கரையுடன் அரைக் குவளை தண்ணீர் சேர்த்து பாணி காய்ச்ச வேண்டும். கொதிக்கவிட்டு இறக்க வேண்டும். இறக்குமுன், ஏலப்பொடி, பச்சைக் கற்பூரம், நெய்யில் வறுத்த முந்திரி, பிளம்ஸ், மஞ்சள் தூள் சேர்த்துவிடவும். சிறிது சிறிதான கற்கண்டுகளை பூந்தியுடன் கலந்து, கலவையில் சிறிது சூடு இருக்கும்போதே கையில் நெய்யைத் தடவிக் கொண்டு சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்துவைக்கவும்.

# யோகா

# சயனாசனம்



செய்முறை :
முதலில் விரிப்பில் குப்புறப் படுக்க வேண்டும். பின்னர் இயல்பான சுவாசத்தில் கைகளை முட்டி வரை தரையில் ஊன்றி உடலைப் பின்புறமாக மேல்நோக்கித் தூக்க வேண்டும். உடல் எடை முழுவதும் கைகளில் பலமாக இருக்க வேண்டும்.
பின்னர் கை முட்டிகளைத் தரையில் ஊன்றியபடி உள்ளங்கைகளை தலையைத் தாங்கியபடி வைக்கவும். இந்த நிலையில் சில விநாடிகள் இருந்த பின்னர், மெதுவாக பழைய நிலைக்கு வரவும். இந்த ஆசனத்தை நன்றாகப் பயிற்சி பெற்ற ஆசிரியரின் துணையுடன் தான் செய்ய வேண்டும்.
இந்த ஆசனத்தை இதய நோய் உள்ளவர்கள் வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்தவர்கள், கர்ப்பிணிகள் செய்யக்கூடாது.

நன்மைகள்:
கால்களுக்கு நல்ல வலிமை கிடைக்கிறது. எதிர்மறை எண்ணங்கள் மறையும். உடல் முழுவதுக்கும் வலிமை தரும் ஆசனம் இது. மலச்சிக்கலை நீக்குகிறது.

*கே.எஸ்.சிவஞானராஜா,*
*கொக்குவில்*

# பொடுகை விரட்ட வேப்பம்பூ

50 கிராம் உப்புக் கலக்காத காய்ந்த வேப்பம்பூவை 100 கிராம் தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். இளம் சூடு பதத்துக்கு ஆறியதும், வேப்பம் பூவுடன் சேர்த்து எண்ணெயை தலையில் நன்றாகத் தேய்த்து அரை மணிநேரம் ஊறவிட்டுப் பின்னர் குளித்தால், பொடுகுப் பிரச்சினை தீரும். அதிகம் பொடுகு உள்ளவர்கள், வாரத்துக்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ, மூன்று வார காலத்துக்கு இவ்விதம் குளித்தால் பொடுகு சுத்தமாக நீங்கிவிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசித்திரமான பிராணிகள்



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எத்தனையோ வித மான பறவைகள், மிருகங்களைப் பார்க்கின்றோம். அவைகளில் விசித்திரமான சில வெளிநாட்டு பற வைகள் மிருங்களைப் பற்றி இன்று பார்ப்போம்.

ரம்யன்

## காண்டா மிருக கொம்பு பறவை

றைனோஸரஸ் ஹோர்ன் பில் அல்லது காண்டாமிருக கொம்புச் சொண்டு (Rhimoceros Hornbill) போர்னியோ, சுமாத்திரா, ஜாவா, மலே குடாநாடு, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்தின் தென்பகுதிகளில் காணப்படுகின்றது. ஹோர்ன் பில் வர்க்கத்தில் இதுவே மிகப் பெரிய பறவை. பெரும்பாலும் ஓர் அன்னப் பறவையின் அளவில் இருக்கும் 91-122 சென்ரி மீற்றர் நீளம் கொண் டது. பாரம் 2-3 கிலோ கிராமாக இருக்கும்.

இப்பறவை வீடுகளில் வளர்க்கப் படும்போது 90 ஆண்டுகள் வரை வாழக் கூடியது. ஆண் பறவையின் கண் இமையைச் சுற்றி சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்தைக் கொண் டிருக்கும். பெண் பறவை வயிற்றுப் பக்கம் குறிப்பாக வாலின் அடிப்பக் கம் வெள்ளை சிறகுகளைக் கொண் டிருக்கும்.


இந்தப் பறவை மரங்களின் இடுக்கு களில் காணப்படும் பொந்துகளில் முட்டையிடும். அடைக்காக்கும் காலத்தில் ஆண் பறவை, பெண் பறவைக்கும் பின்னர் குஞ்சு பொரித்த பின் குஞ்சுகளுக்கும் இரையளிக்க வேண்டும்.

பெண்பறவை முட்டையிட்ட பின் முட்டைகளை அடைகாத்துக் கொண் டும் குஞ்சுகளைப் பாதுகாத்துக் கொண்டும் இருக்கும். அடைகாத் தல் காலம் ஆரம்பித்தவுடன் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து துவா ரத்தை மண்கொண்டு அப்பி மூடி விடும். பெண் பறவைக்கும் குஞ்சு களுக்கும் ஆண் பறவை இரை அளிப்பதற்கு மாத்திரம் சிறு துவாரம் இருக்கும். குஞ்சுகள் வளர்ந்து செட்டைகள் முளைத்து பறக்கக் கூடிய நிலை வந்ததும் இரண்டும் சேர்ந்து மூடிய பகுதியை உடைத்து குஞ்சுகள் வெளியில் வர உதவும்.

றைனோசரஸ் ஹோர்ன்பில், பழங்கள், பூச்சிகள், சிறு ஊரும் பிராணிகள், சிறு பிராணிகள் மற்றும் சிறு பறவைகளை உண்ணும். இப்பறவை இனம் காடழிப்பால் வசிப்பிடம் இல்லாமை, இறைச்சிக் காக வேட்டையாடப்படுதல் மற்றும் ஆபரணம் செய்ய உதவும் அதன் சொண்டுகள் போன்றவைக்காக கொல்லப்படுதல் போன்றவற்றால் அழிந்து வரும் இனமாகக் கணிக்கப் பெறுகின்றது.



## ஒகாப்பி



இது ஒரு வகை ஒட்டைசிவிங்கி இனத்தைச் சேர்ந்த மிருகம். மத்திய ஆபிரிக்காவிலுள்ள கொங்கோ குடியர சின் வடகிழக்கு இட்டுரி மழைக்காடுகளில் இந்த மிருகம் காணப்படுகின்றது. ஒகாப்பி (Okapi) வரிக் குதிரையைப் போல இந்த மிருகம் உடம்பில் வரிக்கோடுகளைக் கொண்டிருந்தாலும் அது ஒட்டைச்சிவிங்கி இனத்துக்கே நெருங்கிய தொடர்பு கண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. ஒகாப்பியின் உடம்புகளும் சிவப்பு நிற உரோமங்களைக் கொண்டிருக்கும். முன்னாங்கால்களிலும் பின்னாங்கால் களிலும் கோடுகள் இருக்கும். இது வரிக்குதிரையை நினைவூட்டுவதாகக் காணப்படும். ஒகாப்பியின் நாக்கு நீளமானது- அதனைக் கொண்டு தனது கண்கள், காதுகளைக் கூட அதனால் சுத்தப்படுத்திக் கொள்ள முடியும். அவைகளின் நிறை 200 இல் இருந்து சராரி 300 கி.கி. வரை இருக்கும்.

மர இலைகள், மொட்டுகள், புல், பழங்கள் மற்றும் காளான்களை இது உணவாகக் கொள்ளும். இந்த மிருகம் சாப்பிடும் பல செடி வகைகள் மனிதருக்கு விஷச் செடிகளாகக் காணப்படும்.

## ரெமினிக்ஸ் ட்ரகோபான்
### (Temminick's Tragopan)



இப்பறவை தென் ஆஸியாவில் வட இந் தியாவில இருந்து வடமேல் வியட்னாம், திபேட் மற்றும் வடக்கு சீனக் காடுகளில் காணப்படு கின்றது. பீசன்ட் என அழைக் கப்படும் பறவை இனத்தில் இந்தப் பறவைதான் மிக அழகானது என்று கருதப்படுகின்றது.

அசைபோட ஒருவிடயம் 116

## பியரி-பில்ட் அரகாரி
### (Fierybilled Aracari)



கொஸ்டாரிக்காவின் தென் பகுதிகளிலும் பனாமாவின் மேற்குப் பகுதிகளிலும் இந்தப் பறவை காணப்படுகின்றது. இதன் சொண்டு மிகப் பெரிதாகக் காணப்படும். 43 கி.மீற்றர் நீளமாகக் காணப்படும் ஆண் பறவை பளிச் சிடும் சிறகமைப்பைக் கொண்டுள்ளதுடன் இதன் நிறை 250 கிராம் வரை இருக்கும். பெரும்பாலும் இப் பறவைகளில் ஆண், பெண் வித்தியாசம் தெரிவதில்லை. இப் பறவைகள் சிறு கூட்டங்களாக வாழும். அநேகமாக ஒரு கூட்டத்தில் 10 பறவைகள் காணப்படலாம்.

## கோல்டன் பொயிசன்டாட் தவளை
### (Golden Poisondart Frog)



இது ஒரு தவளை அல்லது தேரை இனத்தைச் சேர்ந்த பிராணி. எதிரிகளின் மீது நஞ்சை உமிழ்ந்து வீசும் திறமை கொண்டது. இதன் இரண்டு அங்குல நஞ்சானது 10 வளர்ந்த மனிதர்களை கொன்று விடும் சக்தி கொண்டது. கொலம்பியாவில் வாழும் சுதேசிகள் பல நூற்றாண்டு காலமாக இந்தத் தவளையின் நஞ்சைத்தான் தங்கள் அம்புகளின் முனைகளில் பூசி வேட்டை மிருகங்களை இலகுவாகக் கொன்று புசித்திருக்கிறார்கள். அதன் காரணமாகத் தான் நஞ்சை வீசும் தவளை என்ற பொருள்படும் படியான பெயர் அதற்கு. கொலம்பியாவின் மழைக் காடுகளில் பசுபிக் கரையோ ரப் பகுதிகளில் இவை காணப் படுகின்றன. எதிரிகளை ஏமாற்றி தப்பும் வகை யில் இதன் நிறங்களை மாற்றிக் கொள்ளும் தன்மை யுண்டு. பூச்சிகள், வண்டுகள், கறையான் போன்றவை இதன் உணவு. இப் பிராணிக்கு எவ்வாறு நஞ்சு கிடைக் கிறது என்பதில் விஞ்ஞானிகள் நிச்சயமற்று இருக்கி றார்கள். தான் சாப்பிடும் உணவுகளில் காணப்படும் நஞ்சுப் பொரு ளின் மூலம் கிடைக்கும் நஞ்சினை இதுதன் உடம்பில் சேமித்துக் கொள்கின்றது என்றும் கருதப்படுகின்றது. அவைகளின் வாழ்விடங் களில் இருந்து வேறுபடுத்தி உணவை மாற்றி வளர்க்கப்படும் இவ்விதத் தவளைகள் ஒருபோதும் நஞ்சை உற்பத்தி செய்து கொள்வதில்லை. இதன் நஞ்சை மருத்துவத் துறையில் பயன்படுத்திக் கொள்ள விஞ்ஞா னிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

## ஹியாசிந்த் மக்காவ்
### (Hyacinth Macaw)

இது ஒரு கிளி இனம். மத்திய, கிழக்கு மற்றும் தென் அமெரிக்க பகுதிகளில் மிகுதியாகக் காணப் படுகின்ற பறவை.

கிளி இனத்திலேயே பெரிய அளவிலான பறவை என்று கருதப்படுகின்றது. அதன் சொண்டிலி ருந்து வாலின் நுனி வரையில் அளந்தால் பெரும்பாலும் 100 சென்ரி மீற்றர் நீளமிருக்கும். இந்தப் பறவையின் உணவு பெரும்பாலும் பாம் மரங்களில் இருந்து கிடைக்கும்விதைகளும் கொட்டைகளுமாகும். கொட்டைகள், விதை களின் கடுமையான தடித்த மேல் கோதுகளை வெட்டி உள்ளே இருக்கும் பருப்பைச் சாப்பிடும் அளவுக்கு அவைகளின் சொண்டுகள் வலுவுள்ளவையாக இருக்கின்றன. இந்தப் பறவைகளால் தேங்காய் சிரட்டைகளையும் கூட வெட்டி உடைக்க முடியும் என்று கூறப்படு கின்றது. இவைகளின் நாக்கின் நடுவில் ஒரு சிறு எலும்பு காணப்படுகின்றது. அதன் உதவியால் பழங்களைக் குடைந்து உள்ளே இருக்கும் சாறினை உறிஞ்சிக் குடிக்க முடியும்.

இந்தப் பறவை கூடுகளில் வளர்ப்பதற்காக பிடிக்கப் படுவதாலும் வாழ்விடங்கள் அழிக்கப் படுவதாலும் அழிந்து வரும் பறவையினமாகக் கருதப்படுகின்றது.

1980 ஆம் ஆண்டளவில் சுமார் 10,000 ஹைசிந்த் மக்கோ பறவைகள் அவைகளின் வாழ்விடங்களில் இருந்து பிடிக்கப்பட்டு 50 வீதமானவை வெளிச் சந்தைகளில் விற்கப்பட்ட தாக அறிய வந்துள்ளது.

## புளு-பூட்டட் பூபி
### (Blue Footed Booby)



இது ஒருவகை கடல் பறவை. இதில் ஆறு வகை இனங்கள் இருப்பதாக கருதப்படுகின்றது.

இந்தப் பறவை பற்றி சார்லஸ் டார்வின் விரிவாக ஆராய்ந்திருப்பதாக கூறப்படுகின்றது. இதன் பெண் பறவை ஆணை விட சற்று பெரிதாகக் காணப்படும். அதன் இறக்கைகள் கூர்மையாகவும் நீளமாகவும் காணப்படும். அதன் கண்கள் முகத்தின் இரு பக்கமும் முன்நோக்கி அமைக்கப்பட் டிருக்கும். அதனால் பைனகூலர் மூலம் பார்ப்பது போன்ற தீட்சண்யமான பார்வை உண்டு அதற்கு. பசுபிக் சமுத்திரப் பிரதேசத்தில் கலிபோனியாவிலிருந்து கலபாகோஸ் தீவுகள் வரை மற்றும் பேரு நாட்டிலும் இப் பறவை காணப்படுகின்றது. இப் பறவையின் பிரதான உணவு மீன் தான். மிக உயரமான இடங்களில் இருந்து இந்தப் பறவை கடலில் செங்குத்தாக குதித்து வெகு ஆழத்துக்கு சென்று தன் இரையை வேட்டையாடி பெற்றுக்கொள்ளும். ஒன்றாக, இரண்டு சேர்ந்தும் சில சமயம் கூட்டம் கூட்டமாக வும் அது வேட்டையாடும்.

## ரோகோ ரவுக்கன்
### (Toco Toucan)



ரோகோ ரவுக்கன் என்பது இந்த வகை பறவைகளில் மிகப் பெரியது. தென்அமெரிக்காவின் மத்திய மற்றும் கிழக்கு பிரதேசங்கள் திறந்த வெளிகளை வாழ்விடமாக இது கொண் டுள்ளது. கருத்த உடம்பு வெள்ளைக் கழுத்து தொண்டை பகுதி வாலின் ஒரு பகுதி. இப்பறவையில் மிக தெளிவாகக் காணப்படுவது-கவர்வது அதன் பெரிய சொண்டாகும். அது மஞ்சள் மற்றும் ஆரெஞ்சு நிறத்தில் அமைந்திருக்கும்.

இப்பறவை பழங்கள், பூச்சிகள், தவளைகள், சிறிய ஊரும் பிராணிகள், சிறிய பறவைகள் மற்றும் பறவை முட்டைகள், குஞ்சுகள் முதலியவற்றை உண்ணும். எட்ட முடியாத உணவுகளை இலகுவாக எட்டிப்பிடிப்பதற்கு அதன் பெரிய சொண்டு உதவியாக இருக்கிறது. பழங்களை உரிக்கவும் எதிரிகளை அச்சுறுத்தவும் கூட அது பயன்படு கின்றது. இப் பறவை சோடியாக அல் லது கூட்டமாக வாழ்வதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமாக வாழ வாஸ்து சாஸ்திரம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வாஸ்து ஆலோசகர் எண் கணித நிபுணர் கலாநிதி
**ஜே.என்.எஸ்.செல்வன்**

## வாரம் - 16

**தென்மேற்கு மூலை நீண்டகாணி:**
காணியில் இவ்வாறு மூலை நீண்டு இருப்பதால் மூளைக் குழப்பங்கள், அதி தீவிர புத்தி, பிறர் சொல்வதைக் கேளாமை, தனக்குத்தானே எடுக்கும் வீண் முடிவுகளால் தொல்லை, கல்வித்தடை, ஆபத்துக்கள், அக்கினியால் ஆபத்து, பருவ வயதில் உள்ள பெண்கள் வீட்டை விட்டு ஓடிவிடுவது போன்றவை நிகழும். கண்பார்வைக் கோளாறு ஏற்படும். அயல்நாட்டில் வேலை செய்தாலும் பணம் தங்காது. தீவிரவாதத்தில் கொண்ட நம்பிக்கை காரணமாக இவர்களை மனித குலத்துக்குப் பிடிக்காமல் போய்விடும் வாய்ப்பும் உள்ளது. ஒருவேளை இந்தக் காணிக்குள் சொந்த வீடு அமைத்திருந் தால் தெற்கு நீண்ட பகுதியை தனிமைப் படுத்தி மேற்கண்ட குறைகளில் இருந்து தப்பமுடியும்.

**வடமேற்கு நீண்ட காணி:**
வீட்டில் இருப்பவர்கள் ஆளுக்கு ஒரு ஆலோசனை சொல்லிக் கொண்டேயி ருப்பர். ஆண்களாய் இருந்தால் பெண்கள் பேரில் கடும் இச்சை கொள்வதுடன், அவர்களுக்குத் துயரங்களையும் விளை விப்பர். வீட்டில் மனைவி இருக்க, வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு நிம்மதி இழப்பர்.
அடிக்கடி யாருடனாவது வீண் வம்புகளுக் குச் சென்று, நீதிமன்றம், வழக்கு என நிம்மதி இழந்து தவிப்பர். வெளியூர் செல் லும்போது தனது உடைமைகளைத் தவறவிட்டு நிற்பர். அடிக்கடி ஏற்படும் அநாவசியச் செலவு களைச் சமாளிக்க கடன் வாங்கிப் பின்னர் அதனால் அவதிப்படுவர்.
குழந்தைகள் பெற்றோரை மதிக்காமல் நடந்து கொள்வர் என்பதுடன் போதைப் பழக்கத்திற்கும் அடிமையாகும் வாய்ப்பு உள்ளது. இந்தக் குறை பாடுகளைக் களையவேண்டுமானால் இடம் அதிகமாக இருந்தால் வடமேற்கில் நீண்ட பகுதி இடத்தை துண்டித்து பயனற்றதாக ஆக்கிவிட் டால் மேற்காணும் குறைகள் ஏதும் வராது.




# ஜம்புவின் மின்னஞ்சல்

ஜம்புலிங்கம் ஒரு முறை வெளியூர் சென்று பெரியதொரு விருந்தினர் விடுதியில் தங்கி னார். அவரது அறையில் ஒரு கணினி இருந் தது. அவர் தனது மனைவிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்ப உத்தேசித்துக் கணினியை இயக்கி மின்னஞ்சலைத் தட்டச்சினார். அவசரத்தில் அனுப்பும் முகவரி இடப்படவேண்டிய இடத் தில் அவரது மனைவியின் மின்னஞ் சல் முகவரியைத் தட்டாமல் வேறு முகவரியைத் தட்டச்சிவிட்டார்.
ஜம்புலிங்கம் தான் செய்த பிழையை உணரவேயில்லை. மின்னஞ்சலும் பெறுநர் முகவரிக்குச் சென்றுவிட்டது.
வேறு ஒரு நகரம். அங்கே ஒரு விதவை. அவள் தனது கணவனை இரண்டு நாள்களுக்கு முன்னரே இழந்திருந்தாள். இறந்துபோன தனது கணவனை அடக்கம் செய்த பின்னர் துக்கம் தாங்காமல் அழுதுகொண்டிருந்தாள். அழுதழுதே, வந்திருந்த துக்க விசாரிப்புக் கடிதங்களைப் பிரித்துப் படித்து ஆறுதல்பட்டுக் கொண்டிருந்தாள்.
தபாலில் வந்த கடிதங்களைப் பார்த்து முடிந்ததும் மின்னஞ்சலில் ஏதாவது துக்க விசாரிப்புக் கடிதங்கள் ஏதாவது வந்திருக்கிறதா எனப் பார்வையிட்டாள். அவளுக்கு வந்திருந்த முதல் மின்னஞ்சல் கடிதத்தைப் படித்ததும் அவளுக்கு மயக்கம் வந்து தலைசுற்றத் தொடங்கிவிட்டது. மயங்கித் தரையில் வீழ்ந்துவிட்டாள்.
சிறிது நேரத்துக்குப் பிறகு அந்த விதவையின் மகன் அந்த அறைப் பக்கமாக வந்தார். தனது தாய் தரையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். மின்னஞ்சல் திறந்தபடியே இருந்தது. கணினியில் தெரிந்த வாசகங்களைப் படித்தார். அதில் பின்வருமாறு இருந்தது.

*அன்பான மனைவிக்கு,*
*எனது கடிதம் உனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். அவர்கள் இங்கே கணினியெல்லாம்கூட வைத்திருக்கிறார்கள். நமக்குப் பிரியமானவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அனுமதிக்கிறார் கள். நான் இங்கே நல்லபடியாக வந்து சேர்ந்தேன். இங்கே எல்லாம் தயாரான நிலையில் உள்ளது. நாளையே நீ இங்கே வந்துவிடலாம். உனது வரவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன்.*
*-இப்படிக்கு உன் அன்புக் கணவன்.*





# சுதந்திரம் மக்களுக்கே..

நாடு சுதந்திரம் அடைந்த நாளே
நாள்களில் எனக்குப் பிடித்த நாளாம்!
தேடு தற்கரிய சுதந்திர மூச்சை
தரணியுறு மக்கள் நுகர்ந்த நாளும்!

ஆதலால் ஒவ்வொரு தருக்கும் சுதந்திரம்
ஆனதாப் பொருளிலை அடக்கு முறையும்;
மீதமிங்கு உளவென் தனிமனித மீட்சி
மண்டல மெங்கணும் தோன்றவு மில்லை!

ஏகாதிபத்திய அடக்கு முறையால்
எம்மவர் மீட்சி அடைந்தது மேலாம்!
ஆகாது கையால் அந்நியர் கீழே
அடங்கிப் போதல் அடிமை யன்றோ?

அங்கங்கே நம்மவர் சிற்றாட்சி செய்த
அழகுறும் இலங்கைத் திருநாடு புக்கோன்;
பங்கமில் புதிதாய் நாகரிகம் தோற்றி
பரப்புறு எச்சங்கள் இன்னமும் உண்டே!

ஆங்கிலப் புலமை அவர்வழி மதங்கள்
ஆனதிப் பூமியில் உடலலங்காரமும்;
தேங்கிட எம்பண் பாட்டுடை அணிகளும்
தேய்வ தின்னுமாம் நின்றதா யில்லையே!

ஒருகுடைக் குள்முழு இனங்களும் சேர்ந்து
ஒற்றை யாட்சி முறையதைப் புக்கான்!
இருவுடை வெள்ளையர் மொழிமத
அனுகூலம்
திருப்தி கொளாதெம் மினத்தார் வீழ்ந்தார்!

பேரின வாதமே பெருதொல்லை யாச்சு
பேதையர் இலங்கையில் சிற்றின மக்கள்!
ஓரினம் மொழிமதம் ஓங்கிட ஆழ்வோர்
ஓங்கரிக் கின்றதால் ஒற்றுமை இல்லை!

அந்நியனிடமிருந்து பெற்ற சுதந்திரம்
அனைத்தி னத்துக்கும் கிடைக்க வில்லை!
அந்நியப் பட்டதாய் சிற்றினம் எல்லாம்
அடைந்திடு துன்பியல் சுதந்திர மாமோ?

சிற்றாட்சி சிறப்பா நடைபெறு காலமும்
சிதைவு றாட்சி மாற்றங்க ளாலே;
பெற்றனர் நம்மவர் நிம்மதி என்றால்
பொருந்தா அப்பவும் அழிவுபட் டாரே!

அந்நியன் ஆட்சியில் அடிமைக ளாயினும்
அருமந் தாப்போல் அனைத்தும் பெற்றோம்;
துன்பியல் இல்லா வாழ்வதும் கண்டோம்
துயரத்தை தெரியாமல் கழிந்தன காலமும்!

ஆயினும் சுதந்திரம் தாகம் கொண்டோர்
அந்நியனுக் கெதிராய் செயலும் பட்டார்!



காயினும் வயிறு நீருணவும் இன்றியே
கால்க ளெம்மது அன்றேல் வாழ்வோ?

என்பதால் சங்கிலி, பண்டாரன் கூடவாம்
தென்பால் புரானப்பு,
டிடிஜாஜா போன்றோர்;
வன்மையா யெதிர்த்த னராயினும் வெல்ல
வழியிலை பீரங்கி முன்னேது மார்க்கம்?

வந்தேறு குடிதான் இலங்கை தன்னில்
வாழும் இனங்கள் அனைத்து மாமே;
இந்நிலை மறந்து ஒருவரை மற்றோர்
இழிந்துரை செய்தல் மடமையிலும்,
மடமை!

நாடு விடுதலை பெற்றால் போதுமா
நாடு என்கத் துணியும் வாழ்கள
பாடு மக்களது என்பதற் கேற்ப
கூடும் சுதந்திரம் அவர்க்குத் தானே!

சுதந்திர மென்பது எல்லார்க்கு முடைதாம்
அம்மாத்தை ஆடுகின்ற குதர்க்கம் தள்ளி
இதந்தரு நல்லெண்ணத் தீர்வை பகிர்ந்தே
இலங்கையர் நாமெனும் இலக்கை
காண்போம்!

நவாலியூர்க் கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லினம் சுவாரஸியம்



படம் ஆரம்பிக்கும்போதே 'அனி மேஷன்' கதையொன்று காட்டப்படுகிறது. ஈட்டியைக் கண்டறிந்த ஆதி மனிதர்கள் காட்டில் வேட்டை யாடுகிறார்கள். சிங்கம் பாய்ந்து வருகிறது. இந்த நான்கு பேரின் பலம் பெரிதா, சிங்கத்தின் பலம் பெரிதா? வாழத் தகுதியான வல்லினம் மனிதனா, மிருகமா என்ற கேள்வி எழ, நான்கு மனிதர்களும் ஒன்றிணைந்து சிங்கத்தை வீழ்த்துகிறார்கள்.

படத்தில் சிங்கத்தின் இடத்தில் கிரிக்கெட். பன்னாட்டு நிறுவனங்களின் உலகம், பணக்கார விளையாட்டு, கோடிகளில் புரளும் அனுசரணை, வீரர்களுக்குக் கிடைக்கும் பணம், பரிசுகள்... விளையாட்டு என்றால் அது கிரிக்கெட்தான் என்ற ஊடகங்களின் ஒரு சார்பான சித்தரிப்பு என வாழ்க்கையில் கிரிக்கெட் செலுத்திவரும் வலுவான செல்வாக்கையும், அதனால் மற்ற விளை யாட்டுக்கள் கவனம் பெறத் தவறி விட்டதையும் கதை யாக்கியிருக்கிறார் 'ஈரம்' படத்தின் மூலம் கவர்ந்த இளம் இயக்குநர் அறிவழகன்.

வலிமை பொருந்திய சிங்கம் போன்ற கிரிக்கெட்டுக்கும் இதர விளையாட்டுகளுக்கும் இடையே நடக்கும் போட்டியில் வென்றது எது என்பதே 'வல்லினம்' படத் தின் ஒருவரிக் கதை.

திருச்சியில் ஒரு கல்லூரியில் படிக்கும் கிருஷ்ணாவுக்கு (நகுல்), கூடைப்பந்து விளையாடும் சிவா (கிருஷ்ணா) நண்பன். விளையாடும் போது சிவா எதிர்பாராத வித மாக இறந்து போய்விட, இனிமேல் கூடைப்பந்தைத் தொடுவதில்லை என்று முடிவெடுக்கிறான். கல்லூரி யையும் மாற்றிச் சென்னைக்கு வந்துவிடுகிறான். கல்லூரியில் புதிய நண்பர்கள் கிடைக்கிறார்கள். அழகான ஒரு பெண்ணின் (மிருதுளா) நட்பும் கிடைக்கிறது. அந்தக் கல்லூரி கிரிக்கெட்டில் தொடர்ந்து வெற்றிபெற்று வருவதால் கல்லூரியில் கிரிக்கெட் விளையாட்டே முன்னால் நிற்கிறது. கூடைப்பந் தாட்டம் முதலான விளையாட்டுக்கள் அலட்சியப் படுத்தப்படுகின்றன. அவற்றை ஆடுபவர்கள் அவ மானப்படுத்தப்படுகிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும் கிருஷ்ணா மீண்டும் கூடைப்பந்தைக் கையில் எடுக்கிறான். ஒரு கட்டத்தில் கிரிக்கெட் குழு, கூடைப்பந்தாட்டக் குழு இரண்டும் முட் டிக்கொண்டு நிற்கின்றன. கூடைப்பந்து அணிக்குக் கல் லூரி நிர்வாகத்தின் ஆதரவு கிடைக்கவில்லை. அவர்கள் சுற்றுப்போட்டிகள் ஆட எந்த உதவியும் கிடைக்கவில்லை. கிரிக்கெட் அணியினர் கோப்பை வென்றதால்தான் அவர்கள் கல்லூரியில் ஆதிக்கத்துடன் இருக்கிறார்கள். தாங்களும் கோப்பையை வென்றால்தான் ஆதிக்கம் பெற முடியும் என்பதை உணர்ந்த கூடைப்பந்து அணி, கோப்பையை வெல்லும் முனைப்புடன் போராடுகிறது. இந்தச் சவாலை அந்த அணி எப்படி எதிர்கொண்டது? என்பதற்கான விடைதான் படத்தின் மிகுதிக் கதை.

இளம் விளையாட்டு வீரனின் கல்லூரி வாழ்க்கையை யும் காதலையும் கொண்டு கதையை சுவாரஸ்யமாகக் கட்டமைத்திருக்கிறார் இயக்குநர். கிரிக்கெட்டின் புகழுக்கும் செல்வாக்குக்கும் பின்னணியில் இருக்கும் பணபலம் குறித்த அம்பலங்களைக் கதையினூடே இயல்பாகக் கொண்டு வருகிறார். பன்னாட்டு நிறுவன உலகின் நிழலாகவே கிரிக்கெட் இருக்கிறது என்பது இரண்டு தொழிலதிபர்கள் பேசிக்கொள்வதன் வழி யாகச் சொல்லப்படுகிறது.

கூடைப்பந்து விளையாட்டை முன்னிறுத்திய விதத்தி லும் அதனைக் காட்சிப்படுத்திய விதத்திலும் 'ஈரம்' அறி வழகன் பளிச்செனத் தெரிகிறார். மாண வர்களிடையே வரும் மோதலையும் நட்பையும் நன்றாகச் சித்தரித் திருக்கிறார். ஆனால் பணக்காரக் காதலி, பணக்கார வில்லன், காதலியும் வில்லனும் நண்பர்கள், காதலியின் அப்பா நாயகனுக்கு உதவுவது எனத் தொன்றுதொட்டு வரும் காட்சிகள் சலிப் பூட்டுகின்றன.

விளையாட்டுக் காட்சிகள் செறிவாகக் காட்சிப் படுத் தப் பட்டிருக்கின்றன. மற்ற காட்சிகளில் சினி மாத்தனம் தெரிகிறது. காட்சிகளுக்கு அழகு சேர்ப் பதையும் தாண்டிக் கதாநாயகி மிருதுளாவுக்குச் சில பங்களிப்புகள் இருக்கின்றன. அவற்றை அவர் நிறை வாகச் செய்திருக்கிறார்.

பாஸ்கரனின் ஒளிப்பதிவு கல்லூரி காட்சிகள், கூடைப்பந்து விளையாட்டுக் காட்சிகள், ரயில் காட்சிகள் என வித்தியாசப்படுத்தியிருக்கிறது. படம் முழுவதும் சிவப்பு நிறப் பின்னணி அமைத்திருப்பது அழகு. பாடல்கள் கதையிலிருந்து விலகி நிற்கின்றன.

கூடைப்பந்து மீது பெரும் நேசமுள்ள அணியினர் ஒரு கட்டத்தில் அதில் கிடைக்கப்போகும் பரிசுப் பணத்தின் மீது ஆசைப்படுவதையும் இயக்குநர் காட்டுகிறார். இந்தக் காட்சி இந்திய விளையாட்டுத்துறையின் யதார்த்தமாக நிற்கிறது. முக்கியமான கருவை எடுத்துக்கொண்டு வலுவான திரைக்கதையுடன் சுவாரஸ்யமாகச் சொல்லி இருக்கிறார் இயக்குநர். ஒரு தடவை பார்க்கலாம்.

# ஒஸ்கார் வென்ற குறும்படம்

மிஸ்டர் ஹுீப்ளட், இந்த ஆண்டுக்கான சிறந்த 'அனிமேஷன்' குறும்படத்திற்கான ஒஸ்கர் விருதைப் பெற்றுள்ளது. ஹுீப்ளட், ஓர் இயந்திர அனி மேஷன் பாத்திரம். ஆனால் அதன் மூலம் இன்றைய வாழ்வில் உள்ள நெருக்கடிகள், அதனால் அடையும் மனப் பாதிப்பு என்பவற்றை உணர்ச்சிபூர்வமாக இப் படம் விவரிக்கிறது. இயந்திர நாய்க்கும் ஹுீப்ளட்டுக்கும் இடையிலான வெறுப்பு, நெருக்கத்தின் மூலம் குடும்ப அமைப்பின் சாதக மற்றும் பாதக அம்சங்களையும் சித்தரிக்கிறது.

அது முற்றிலும் இயந்திர மயமான ஒரு எதிர்கால நகரம். அடுக்குமாடி குடியிருப்புக்கு வெளியே மனிதர்கள் ரோப் காரில் வேலைக்குச் செல்கிறார்கள். சாரதி இல்லாத வாகனங்கள் சாலைகளில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் தொழிற் சாலைகள்தான். அந்த நகரத்தில் செடிகள், நாய்கள் எல்லாம் ரோபாக்கள்போல இயந்திரங்கள்தான்.

அங்கு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் வாழ்ந்து வருகிறார் மிஸ்டர் ஹுீப்ளட். அவர் ஒரு மனநோயாளி.



ஒப்ஸிவ்கொம்புள்சிவ் டிஸோடர் (Obsessive compulsive disorder) என அழைக்கப்படும் மன நோயால் பாதிக்கப்பட்டவர். அவருக்கு எல்லாமே சுத்த மாக இருக்க வேண்டும். சுத்தமாக இருந்தாலுமே துடைத்துக்கொண்டே இருப்பார். வீட்டிற்குள் தூசி வரக் கூடாது என்பதற்காக கதவுக்கு நாலைந்து தாழ்ப்பாள் வைத்திருக்கிறார்.

அதுபோல வரவேற்பறையில் தொங்கவிடப்பட்டுள்ள படங்களை எல்லாம் சரிசெய்வதைத் தன் தலையாய கடமையாகக் கொண்டிருக்கிறார். அந்தப் படங்கள் எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கின்றன. ஆனாலும் தினமும் அதைச் சரி செய்வார். பிறகு அறையின் விளக்கை போட்டு அணைத்து அது சரியாக இயங்கு கிறாதா எனத் தினமும் சோதித்துப் பார்ப்பார். அவர் முகமும் எப்போதும் தீவிரமான பாவனையிலேயே இருக்கிறது.

ஒருநாள் வெளியே தெருவில் ஓர் அநாதை இயந்திர நாய்க் குட்டியைப் பார்க்கிறார். அது, குப்பைத் தொட்டிக்கு அருகில் கிடக்கும் ஒரு அட்டைப் பெட்டியை வசிப்பிடமாக வைத்திருக்கிறது. மழைபெய்த ஒருநாளில் நாய்க்குட்டி அட்டைப் பெட்டிக்குள்ளே முடங்கிவிடுகிறது. அப்போது குப்பை எடுக்கும் வாகனம் வருகிறது. அதனுள் போடும் குப்பைகளையெல்லாம் தூள் தூளாக்கும் எந்திரம் சுற்றிக்கொண்டிருக்கிறது. குப்பை எடுப்பவர்கள், அந்த நாய்க்குட்டியுள்ள அட்டைப் பெட்டியையும் எடுத்து விடுகிறார்கள். இதையெல்லாம் மேலே இருந்து பார்க் கும் ஹுீப்ளட் நாய்க் குட்டியைக் காப்பாற்றுவதற்காக வேகமாக இறங்கிவருகிறார். அதற்குள் வாகனம் சென்றுவிடுகிறது.

ஹுீப்ளட் குப்பை வண்டி போன தடத்தையே வெறித் துப் பார்க்கிறார். பின்னால் இருந்து அந்த நாய்க்குட்டி யின் குரைப்புச் சத்தம் கேட்கிறது. அவருக்குச் சந் தோஷம். தூக்கிக் கொண்டுபோய் வீட்டில் வைத்து வளர்க்கிறார்.

அந்த நாய்க்குட்டியும் அசுரத்தனமாக வீட்டின் கூரையைத் தொடுமளவுக்கு வளர்ந்துவிடுகிறது. அது லேசாகச் சாய்ந்தாலேயே வீட்டில் உள்ள பொருள்கள் விழுந்து உடைகின்றன. அவரது தனிமையான வாழ்க்கை பறிபோய்விடுகிறது. பொறுக்க முடியாமல் ஒருநாள் டிரில்லிங் மெஷின் வைத்துக்கொண்டு நாயை நெருங்குகிறார் ஹுீப்ளட். அந்த நாய்க்கு என்ன ஆனது? ஹுீப்ளட் தன் தனிமை வாழ்க்கையைத் திரும்பப் பெற்றாரா? என்பதை இயல்பான தொனியில் சுவாரஸ்யமாகச் சொல்லியிருக்கிறார் இயக்குனர் லாரன் விட்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைவரையும் வசீகரிக்க

நிலாமகன்

எங்கு போகிறீர்கள் என்பது தெரியவில்லை எனில், அது எந்தத் தெருவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

உங்களுக்கென ஒரு நோக்கம் அல்லது பார்வைக் கோணம் இல்லையென்றால் மற்றவர்களுக்கு நீங்கள் சுவாரசியம் இல்லாதவராக ஆகிறீர்கள். அதனால் உங்கள் கவர்ச்சி வலுவிழக்கிறது. மற்றவர் மீது வலுவான தனிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களுக்கு சொல்வதற்கு ஏதாவது இருக்கும். அவர்கள் வழக்கமாகச் சொல்லும் சொற்றொடர்கள்:

"என்னுடைய கருத்து...."

"இதை நான் பார்க்கும் விதம் என்னவென்றால்...." "அதை என்னால் ஏற்க முடியாது, ஏனென்றால்..."

"இது பற்றி எனக்கு எது முக்கியமானதாகத் தோன்றுகிறது என்றால்...."

"நான் விரும்புவது என்னவென்றால்..."

"நான் எதைத் தேர்ந்தெடுப்பேன் என்றால்....."

"என் கண்ணோட்டத்திலிருந்து...."

போன்றவையாகும்.

ஒரு பிரச்சினை அல்லது சூழ்நிலைப் பற்றிய உங்கள் கருத்து என்ன என்பதைக் கண்டுபிடிப்பது உங்களுக்கு சில நேரங்களில் கடினமாக இருக்கிறதா? அதனால் கூட்டங்களில் மௌனமாக அமர்ந்து, விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம் பற்றித் தெளிவான கருத்தை எடுப்பது சிரமமானதாக இருக்கிறதா? ஏன் இவ்வாறு நடக்கிறது என்பதற்குப் பல காரணங்கள் இருக்கக் கூடும்.

முதலாவதாக, பிரச்சினை அல்லது அந்தச் சூழ்நிலை உங்களது அறிவுக்கும் அனுபவத்துக்கும் அப்பாற்பட்டதாகத் தோன்றும். இரண்டாவதாக அது பற்றிய கருத்து உங்களிடம் உண்மையில் இருக்கக் கூடும். இருப்பினும் அந்த நேரத்தில் அது உடனடியாக உங்களுக்குத் தோன்றாமல் போகலாம். பின்னர் எப்போதாவது அது நினைவுக்கு வரும்போது சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல இயலாததால் ஏற்படும் எரிச்சல் உங்களை வதைக்கும்.

மூன்றாவது உங்கள் கலாசாரப் பின்னணியின் காரணமாக ஏற்படுவது. சாதாரணமாக மற்றவர்கள் எதிர்பார்க்காமல் இருக்கும்போது அதுவும் மற்றவர்கள் கேட்காமல் இருக்கும்போது ஒரு கருத்தைச் சொல்வது உங்களுக்குப் பழக்கமில்லாத விடயம். இது மூன்றாவது காரணமாகும்.

காரணம் எதுவாக இருந்தாலும், தயார் செய்வது, கேள்விகள் கேட்பது, மேலும் தகவல்களைப் பெறுவது, தவிர ஏற்கெனவே தெரிந்த ஒன்றோடு தொடர்பு படுத்துவது மூலமாக ஒரு பிரச்சினை பற்றிய உங்கள் கண்ணோட்டத்தை உருவாக்க முயலலாம்.

*தயார் செய்வது:* அந்த நொடியின் தீவிரத்தின் போது அடைய முடியாததாகத் தோன்றும், அதற்கு முன்னரே தயாரிப்பதன் மூலம் முழுமையாகப் பல வகையான கருத்துகளைப் பெற்றுத் தரலாம். ஒரு கூட்டத்தில் பேசுவது, ஒருவரோடு ஒருவர் பேசுவது, மற்ற முக்கியமான தகவல் பரிமாற்றச் சூழ்நிலையின் போது எதையாவது சொல்வதற்குத் தயாராக வைத்துக் கொண்டு பங்கேற்கவும். முன்னரே தயாரிக்கப்பட்ட விவரக்குறிப்பு, அந்த விடயத்தின் தலைப்பு, நிறையப் படிப்பது, முன்னரே மற்றவர்களிடம் பேசி விடயங்களைப் பெறுவது என்று உங்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தித் தூண்டிவிடப் பல வழிகள் உள்ளன.

*கேள்விகள் கேட்பது* - இதன் மூலம் ஒரு விடயம் ஆரம்பமாகிறது, அதிகப்படியான தகவல்களைப் பயன்படுத்தி ஒரு கருத்தை வெளிப்படுத்த உங்களைத் தூண்டுகிறது; இல்லை, ஆம் போன்ற எளிமையான பதில்களைத் தருகின்ற கேள்விகளாக இல்லாமற் விரிவான பதில்களைத் தருவதான கேள்விகளைக் கேட்டு மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

*ஏற்கெனவே தெரிந்த ஒன்றோடு தொடர்பு படுத்துவது:* ஒரு அபிப்பிராயத்தை அடைய கற்பனைத் திறன் கொண்ட தூண்டுதலாக இது இருக்கக் கூடும் (உ-ம்) இவற்றை நீங்கள் பயன்படுத்தலாம்:

உங்களுடைய தனிப்பட்ட மதிப்புகள், ஒழுக்கக் கோட்பாடுகள்.

பழைய அனுபவம் அல்லது ஏதாவது ஒன்றை உங்களுக்கு நினைவூட்டுவதாக இருக்கும்.

ஏற்கெனவே இருக்கும் ஒரு கொள்கை அல்லது வழிமுறை.

மற்றவர்களின் வலுவான கருத்துக்கள், தவிர அவை உங்களை எவ்வாறு உணரச் செய்கிறது.

சற்றும் தொடர்பில்லாத ஏதோ ஒன்று உங்களுக்குள் புதுப் பார்வையை உருவாக்கிறது.

**அதை வெளிப்படுத்துங்கள்**

ஒரு அபிப்பிராயத்தை வைத்துக் கொள்வது என்பது மட்டும் போதுமானதல்ல, அதை வெளிப்படுத்துவதற்கான துணிவும், மன உரமும் உங்களுக்கு வேண்டும்.

இது சில நேரங்களில் மற்றவர்கள் கேட்பதற்கு முன்பே உங்கள் கருத்தை வெளிப்படுத்துவதாகும். மற்ற நேரங் களில் மற்றவர்கள் அதைக் கேட்பதற்குத் தயாராக இருக்கும் பொருத்தமான நேரம் வரும்வரைக் காத்திருப்பது சிறப்பானதாக இருக்கக் கூடும்.

எப்போதும் உங்களுக்கென்று ஒரு கருத்து இருக்கும் என்பதை மக்கள் புரிந்து கொண்டு விட் டார்கள் என்றால், அதைக் கேட்பதற்குத் தயாராக இருக்கத் தொடங்குவார்கள். அதனால்தான் கூட்டங்களில் எதிர்பார்ப்போடு சில நபர்களின் கருத்தைத் தெரிந்து கொள்ள மக்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். இந்த நபர்களுக்கென்று சில கருத்துகள் இருக்கும் என்பதை அனுப வத்திலிருந்து புரிந்து கொண்டு அதைத் தெரிந்து கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

மௌனமாக இருப்பது, கருத்துக்களை வெளியிடாமல் இருப்பது போன்றவற்றால் மர்மமாக இருக்கிறார் என்ற பிரமையை நீங்கள் உருவாக்கக்கூடும். ஆனால் சிரமப்பட்டுதான் மக்கள் உங்களின் கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்தினால் இது உங்கள் தாக்கத்தின் வரம்பைக் குறைத்துவிடும். மாறாக, ஒரு கருத்தை உருவாக்குங்கள், உரையாடலின் போக்கில் ஒரு இடைவேளை ஏற்படுவதைக் கவனித்து, சரியான நேரத்தில் துணிவுடன் அதை வெளிப்படுத்தவும்.

எல்லோருமே மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்தால், அந்த நேரத்தில் எதுவும் பேசாமல் மௌனமாக இருப்பது சிறந்ததாக இருக்கும். இருப்பினும் அது மிகவும் அதிகமாகச் சத்தம் போடுபவர்களுக்கு இடம் கொடுப்பது போலாகிவிடும். மேலும் உங்களது கருத்தை வெளியிட வாய்ப்பே கிடைக்காமலும் போகும்.

உரையாடலில் இடைவெளியே இல்லை என்றால், 'பின்னணியில் மெதுவான குரல் உத்தி' என்பதை முயற்சிக்கவும். யாராவது ஒருவர் முடிக்கும் வரை காத்திருங்கள்.

அப்போது கோபப்படாமல் தெளிவாக "நான் சில விடயங்களைச் சொல்ல விரும்புகிறேன், தயவு செய்து அனுமதிக்கவும்" என்று சொல்லவும். மற்றவர்கள் இதைக் கவனிக்கவில்லை என்றால், மற்றவர் பேசிக் கொண்டிருக்கும்போது கூட மறுபடியும் கூறுங்கள் "நான் சில விடயங்களைச் சொல்ல விரும்புகிறேன், ப்ளீஸ்", என்று சொல்லிக் கொண்டே இருங்கள். சிறிது சிறிதாகக் குரலை உயர்த்தவும். இறுதியில் உங்கள் குரலைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்ற நிலையில் அவர்கள் தங்கள் பேச்சை நிறுத்தி விட்டு உங்களைக் கவனிப்பார்கள். இந்த உத்தியைக் கடைப்பிடிக்க அதிக அளவு மனத் துணிவு நிச்சயம் தேவை.

ஆனால் நிச்சயம் உன்னிப்பாகக் கேட்பவர்களின் கவனத்தை இது பெற்றுத் தரும்.

(தொடரும்)






## கண்களை....

இனியவளே இனி
யாரையும் நிமிர்ந்து
பார்க்காதே
உன் கண்களை
பார்த்தே- என்னை
கண்டு பிடித்து
விடுவார்கள்

## நிஜம்

நீ
பேசுவதெல்லாம்
நிஜம் என்று
நினைக்கும்
[illegible]
நீ நிஜமாக
பேசாமலிருக்கிறாய்



## கவிதையே தெரியுமா?

எனக்கு தெரியும்
நீ விரும்புவது
என்னை அல்ல
என் கவிதைகளை
தான் என்று
ஆனால் உனக்கு
தெரியுமா?
உன்னை விரும்புவது
கவிதைகள் அல்ல
நான் என்று?

என்.ஜெரின்சன்
சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்புரம்
சி. கதிர்காமநாதன்

# “வராது ஆனால்... வரும்”

வைத்தியசாலையில் வேலை செய்தாலும் அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தாலும், பல பேருக்கு ஆலோசனை செய்தாலும், வழி காட்டினாலும் எமக்கொரு பிரச்சினை வரும் போதுதான் சிலபல உண்மைகள் தெரியத் தொடங்குகின்றது. கொஞ்ச நாள்களாக உடம்பு பிரச்சினை கொடுத்தது. களைப்பாக இருந்தது. மூச்சு வாங்கியது. வயிறு பெருத்து (இனப் பிரச்சினையை விட) பொருமலாக இருந்தது. இரவில் நித்திரைவிட்டு விழித்தால் வயிற்றுள் உள்நாட்டுப் போர் போல் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

தெல்லிப்பழையிலிருந்து மாற்றலாகி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வந்த பிறகு, தற்போது குருந்தம் நிலையத்தில் வேலை செய்து வருகிறேன்.

அது என்ன குருந்தம்?

உங்களுக்கு அது பற்றி சொல்லாமல் இருப்பேனா?

சொல்கிறேன். அது மது அடிமை நிலையிலிருந்து விடுபடுவதற்கான பிராந்திய புனர்வாழ்வு நிலையம். சரி இனி எனது பிரச்சினைக்கு வருவோம். எனது நிலை பற்றி சக பணியாளர்களிடம் கதைக்க அவர்கள் பல்வேறு விதமாக கருத்துக்கள் சொன்னார்கள்.

"நாதன் கடைசியாக" கொலஸ்ரோல், யூரின் எப்போது "செக்" பண்ணியது? நியாயமான கேள்வி, அவை செக் பண்ணி மூன்று வருடங்கள் ஆகி விட்டன.

"3 வருடமானால் இப்ப ஒருக்கா திரும்ப செக் பண்ணியிருக்க வேண்டுமெல்லே?"

"உங்களுக்கு இப்ப எத்தனை வயசு?"

சொன்னேன்.

"இந்த வயசில் ஒருக்கா செக் பண்ணுறது நல்லதெல்லே? என்ன கதிர் ஆஸ்பத்திரியில் வேலை செய்து கொண்டு செக் பண்ணாமல் இருக்கிறியள்"

"வயிது ஊதி பெருத்தெல்லே கிடக்கு" (அப்பாக்கும் இந்த வயசில உப்பிடித்தான் ஊதி இருந்தது பரம்பரையை ஒத்துக் கொள்வார்களா)

"சுணக்காமல் செக் பண்ணும்"

என்னை பயப்பட வைக்கத் தொடங்கினார்கள். ஒருவர் விரும்பியோ, விரும்பாமலோ குடிப் பழக்கத்துக்கு ஆளாகி போல்நோய்க்கும் நாம் ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. யோசித்து பிரயோசனமில்லை. துணிவுடன் களத்தில் இறங்க வேண்டியதுதான். எனது ஊருக்குப் பக்கத்தில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெறலாம் என யோசித்தேன். அந்தரம் ஆபத்தென்டால் போக முடியும்.

வேலைக்குப் போகாமல் விடுமுறை எடுத்தாக வேண்டும். சமூக சேவை பணியாளர் ரவிந்திரனிடம் தகவல் சொன்னேன். பல நாடுகளில் இருக்கும் அரசியல் கூட்டணியை, விட எமது கூட்டணி நல்ல கூட்டணி ஒத்துழைத்தார். சித்தன்கேணியில் கண்ணா கிளினிக் நிலையத்தில் கடமை புரியும் பெண் ஊழியர் விசியத்தை கேட்டார். சொன்னேன். உட்கார வைத்தார். சில நிமிடங்களில் திரை போட்டிருந்த அறையிலிருந்து அழைப்பு வந்தது.

கைத்தொலைபேசி அடித்தது.

"அது எனது மனைவி"

"என்னப்பா காட்டிப் போட்டு வாங்கோ, சும்மா வைச்சுக் கொண்டு இருக்காதையுங்கோ" (சாமி நானென்ன நோயை விரும்பியே வைச்சுக் கொண்டு இருக்கிறன்)

"நான் லீவு எடுத்திட்டன் இப்பா டொக்டரிட்ட போறன்"

பிறகு எடுக்கிறன்.

உள்ளே போய் கதிரையில் இருந்து டொக்கடரை பார்த்தேன். கண்ணாடி போட்டிருக்கவில்லை (சினிமாவில் கண்ணாடி போட்ட டொக்கடரைத்தான் காட்டுவார்கள்)

"சொல்லுங்கோ என்ன பிரச்சினை?"

"களைப்பு, இளைப்பு, சோர்வு, சாப்பிட்ட உடன் வயிறு வீங்கிப் போவது ஆஸ்த்துமா பிரச்சினையும் உண்டு."

மூச்சு விடச் சொன்னார். நன்றாக இழுத்து விட்டேன்

'முட்டுக் குணம் இல்லையென்றார்.

சற்று நேரம் என்னை ஆழமாய் பார்த்தார்

"எங்க வேலை செய்யிறீர்?

சாவகச்சேரி....



"E.C.G. ஒருக்கா செக் பண்ண வேணும்!!!!"

"பிரச்சினையில்லை இங்கேயே செக் பண்ணுங்கோ"

"'சரி இந்த கட்டிலில் ஏறி படுங்கோ"

உதவிக்கு ஒரு தம்பியும் வந்தார்.

கட்டிலில் ஏறி படுத்தவுடன் நோயாளியாகவே ஆகிவிட்டேன்.

"சட்டை பனியன் எல்லாம் கழட்ட வேணும்"

E.C.G. பார்க்க வேண்டி கருவிகள் பொருத்தப்பட்டன.

"கடவுளே மனுசி பிள்ளைகளை கூட்டி வராமல் இப்படி தனிய வந்து மாட்டிக் கொண்டேனே. அவர்கள் வந்திருந்தால் பக்கத்தில் ஆதரவாய் நின்றிருப்பார்கள். கடைசியில் நாடகம் படங்களில் வருவது போல் தாலியை எடுத்து கண்ணில் ஒற்றியிருப்பார் கண்களை மூடினேன். வெற்று மார்புடன் மல்லாந்து கிடந்தேன். ஒளி விளக்கு திரைப்படத்தின் சௌகார் ஜானகி போல் மனைவி ஓடி மறைந்தார்.

"இந்த ஓர் உயிரை நீ வாழ வைக்க இன்று உன்னிடம்
கையேந்தினேன் முருகையா"

என்னோடு இவ்வளவு காலமும் பழகிய நண்பர்கள், சக பணியாளர்கள் எல்லோரும் கண் முன்னே வந்து போனார்கள். நான் பணியாற்றிய காலத்தில் வேலையாற்றிய மருத்துவர்கள் அநேகர் உள மருத்துவ சேவையாற்றியவர்கள் பேராசிரியர் தயா சோமசுந்தரம் ஐயா தொடங்கி உள வைத்திய நிபுணர் சிவயோகன் ஐயா வரை பார்த்துக் கொண்டு போனார்கள்.

கண் விழித்தால் ஒருவரையும் காணவில்லை.

"ஐயா எழும்பிட்டியளே" அதற்குள்ள சின்ன நித்திரை.

"E.C.G. பிரச்சினையில்லை. கொலஸ்ரோல், யூரின் செக் பண்ண வேணும். இரவு 8 மணிக்கு முன்னம் சாப்பிட்டுப் போட்டு காலையில் வாங்கோ எடுக்க வேணும்."

இரவு 8 மணிக்கு முன்னர் சாப்பாட்டை முடிந்தேன். மறுநாள் காலை 8 மணிக்கு "இரத்தம்" கொடுக்கத் தயாராக நின்றேன். கொடுத்தேன். ஞாயிறு காலை ரிப்போர்ட் பார்க்க வரும்படி சொன்னார்கள்.

ஞாயிறு காலை, புதிதாக வாங்கிய காஞ்சிபுர சேலையை விரிப்பது போல் எனது மருத்துவ ரிப்போர்ட்டை கவரிலிருந்து அந்த பெண் எடுத்தாள். எனக்கு சற்று உதறலெடுத்தது. எப்போது பள்ளி போனோமோ அன்று தொடங்கி இந்த ரிப்போர்ட்டானது எம்மைப் பயமுறுத்திக் கொண்டுதான்

> “ என்னோடு இவ்வளவு காலமும் பழகிய நண்பர்கள், சக பணியாளர்கள் எல்லோ ரும் கண் முன்னே வந்து போனார்கள். நான் பணியாற்றிய காலத்தில் வேலை யாற்றிய மருத்துவர்கள் அநேகர் உள மருத்துவ சேவையாற்றியவர்கள் பேராசிரியர் தயா சோமசுந்தரம் ஐயா தொடங்கி உள வைத்திய நிபுணர் சிவயோகன் ஐயா வரை பார்த்துக் கொண்டு போனார்கள்.

இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் 3 ஆவது தவணைப் பரீட்சை முடிய வரும் ரிப்போர்ட்டில் 'வகுப்பேற்றப்பட்டுள்ளார்' என்ற வசனத்திலேயே எல்லோரும் அக்கறையாய் இருப்பார்கள்.

பாடப் புள்ளிகளைப் பற்றி பிரச்சினையில்லை. அதிகளவு "மார்க்" பெற்றால் பெரிய ரிப்பேர்ட்டில் பெரியளவு சந்தோஷமே. ஆனால் இந்த மருத்துவ ரிப்போர்ட் "புள்ளிகள்" என்ன சொல்லப் போகின்றதோ. "ஐயா வுக்கு கொலஸ்ரோலும், சுகரும் கூடித்தான் காட்டுது. புள்ளி களை ஒப்பிட்டுக் காட்டினாள். சரிதான் இந்த மருத்துவ ரிப்போர்ட்டில் அதிகளவு "மார்க்" பெற்றால் ஆபத்துதான்.

பின்னர் மருத்துவரை சந்திக்க சென்றேன். பார்த்தார்.

"இனி நீங்கள் சாப்பிட்டில கவனமெடுக்க வேணும். இனிப்பு சார்ந்த கிழங்கு வகைகளை நீங்கள் சாப்பிடக்கூடாது.... அதோட இனி நல்லா நடவுங்கோ. வயிற்றுப் பிரச்சினைக்கும் மருந்து தந்தார். "மோட்ட சைக்கிள் வைச்சிருக் கிறியளோ?

"எங்கட தெருவில மோட்ட சைக்கிள் ஓடாத ஆள் நான் மட்டும்தான். சைக்கிள் தான் ஓடுறனான்......."

"இனி நீங்கள் நடவூங்கோ. சீனி பாவனையை குறையுங்கோ.

"நான் கண்டபடி ரீ குடிக்கிற பழக்கமில்லை. கூட பிளேன்ரிதான். காலையும் பின்னேரமும் தான்.

"நான் உங்களுக்கு diabetes என்று சொல்லேல்ல. போடரில நிக்குது. இனி கவனமாய் இருக்க வேணும். மம ஏப்படி கவனமாய் இருந்தும் என்ன? நோயானது மனிதர்களை தாக்க தயாராகவே உள்ளது.

"கொலஸ்ரோல் மருந்துகளை 2 கிழமைக்கு போடும். பிறகு வந்து பாருங்கோ. வெளியே வந்தேன், பணிபுரியும் பெண் சிரித்தாள். "நடக்கட்டாம், மோட்டர் சைக்கிள் வாங்காமல் விட்டது எவ்வளவு நல்லதாய் போட்டுது. வீடு வந்து விட்டேன்.

சிறிய பேட்டி மனைவி நடத்தினாள். "சரியப்பா தப்பிட்டியள் "போடர் தானே.... (என்னை பாகிஸ்தானிலிருந்து, காஷ்மீருக்கு தப்பி வந்த தீவிரவாதியாக கருதுகிறாளா) என்ன போடர், கவனமாய் இருக்கட்டாம், நல்லா நடக்கட்டாம். "என்ன நடக்கப் போறியளோ?"

காலமை வெள்ளன எழும்பி நடக்க வேண்டியதுதான். காலையில் இலங்கை வங்கியில வேலை செய்யும் நண்பர் சரவணபவன் மற்றும் சிலரும் நடப்பது. தெரிய வந்தது. ஆனால் அவர்கள் சும்மா நடக்காமல், கைகளில் பாதுகாப்பு ஆயுதங்களோடு தானே நடக்கின்றார்கள். தெருவில் பள்ளம், இருட்டு எதிரே வருவோர் தெரியாது அதற்கு ஒருகையில் டோர்ச் லைற் அடுத்த தெரு முழுக்க நாய்கள் குலைத்தபடி துரத்திக் கொண்டு வரும். அவைகளை விரட்டியடிக்க மறு கையில் அளவான தடி.

இவைகளோடு நடக்க வேண்டும். இறைவா இது என்ன சோதனை? இந்த பக்தர்கள் தம்மை பீடித்திருக்கும் நோய்களையும் விரட்ட வேணும். நம்மை தாக்க வாற "நாய்களையும்" விரட்ட வேணும்.

நானும் கர்ணன் போல் போருக்கு ஆயத்தமானேன். ஆயுதம் தரித்தேன். வலது கையில் டோச். இடது கையில் தடி. தலையில் கம்பளி குல்லாய் உடலில் கம்பளிச் சட்டை.

நண்பர்களோடு அதிகாலையில் புறப்பட எங்களை கடந்து ஒரு கூட்டம் அந்த வேளையில் விரைவாக ஓடினார்கள். எனக்கு காரணம் அறிய ஆவலாய் இருந்தது. நாங்களும் விரைந்து ஓடி விசாரித்தோம். "என்ன தம்பியவை விழுந்தடித்து ஓடிறியள். உங்களுக்கு "கொலஸ்ரோல் நல்லாய் கூடிப் போட்டுதா?

"சும்மா இருங்கோ, நாங்கள் பாங்கில வேலை செய்யிற ஆக்கள். கடனை கொடுத்துப் போட்டு வாங்குறதுக்கு ஓடித் திரியிறம். இப்ப போனாத்தான் ஆக்களை பிடிக்கலாம். பிறகு எங்கையும் ஓடி ஒளிஞ்சு போடுங்கள்."

எனக்கு "குருதியமுக்கம்" அதிகரிப்பது போல் தெரிந்தது. முன்னர் இது இல்லை.

*(யாவும் கற்பனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ செந்தூரி

# பலிக்கூடத்
# பீடங்கள்



இராணுவ
விசமத்தன
பொது மக
விகிதத்தில்
நிறுத்தி வை
மல், குருதி
பலி கொடு
களை பல
தின் நோக்
நன்மை கி

விடுமுறை தினமொன்றின் மத்தியான வெய்யிலின் உக்கிரத்தினை சற்றும் கவனியாமல் அந்த வீதியோர விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களைப் பார்த்ததுமே, அவர்களது சுதந்திரம் நமக்குள்ளும் தொற்றிக் கொள்கின்றது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட நீர்வேலி வில்லுமதவாயிலில் உள்ள பொது மக்களின் வீடுகளுக்கான மறுசீரமைப்பு வேலைகளில் பெரியவர்கள் கருமமாயிருக்க, அவர்களின் குழந்தைகள் முன்னாலுள்ள முன்னாள் இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் "சொர்க்கமே என்றாலும், அது நம்மூரைப் போல வருமா...." இசைஞானியின் மெல்லிசையால் நினைவுகளில் நிரம்பி வழிந்து கொண்டிருந்தனர், அந்த இடத்தைக் கடந்த சில நிமிடங்கள் தொடர்ந்தும்.

அடுத்த கணமே, "விடுவிக்கப்படாத பிரதேசங்கள்" எனும் பெயருக்குரிய பாதுகாப்பு வலயங்கள் மற்றும் நவீன இராணுவக் குடியிருப்புக்களினால் கபளீகரம் செய்யப்பட்ட வீடு வளவுகளையும், பரம்பரையொன்றின் நிம்மதியான உறக்கத்தினையும் இன்றளவும் மீள மீட்கும் பாக்கியம் வாய்க்காத லட்சம் விழிகளின் ஏக்கம் கூர்முனை கொண்டு சுள்ளென வலித்தது.

வெறும் பன்னிரண்டாயிரம் துருப்புக்களையே வடமாகாணத்தினுள் நிறுத்தி வைப்பதாக கணக்கு காட்டும் பாதுகாப்பு அமைச்சு, ஏற்கெனவே சாமானியார்களின் வாழிடங்களையும் - பொருளீட்டுப் புலங்களையும் - வருமான வாய்ப்புக்களையும் படைவீரர்களுக்காக பிடுங்கல் செய்துள்ள நிலையில், வடபுலத்து இளைஞர்களிடமும் துருப்புச் சேர்க்கைக்கான விண்ணப்பங்களைக் கோரி பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றது. படையில் சேர்வதற்கான தகைமைகள், நிபந்தனைகள், சம்பளம் உள்ளிட்ட சலுகைகள் மற்றும் ஆண்டுகள் நான்கைந்து ஆயினும் துர்வாசம் குறையாத பிண வாடையையும் விசிறியபடி, முல்லைத்தீவு-பரந்தன் சாலையின் புதுக்குடியிருப்புச் சந்தியில் சுமார் 20 அடி உயரமுள்ள துணிப் பதாகை ஒன்று தொங்குகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, வட்டக்கச்சி, முரசுமோட்டைப் பகுதிகளில் வீட்டுக் கதவுகளைத் திறந்து கொண்டு ஆள்சேர்ப்புக்காக நுழையும் சப்பாத்து தடங்களை நிரந்தரமாக கழுவி அழுத்திவிட இயலாமல் வன்னியில் தொழில் தட்டுப்பாடு இளைஞர், யுவதிகளை வாட்டுகின்றது.

மல்லாவி-துணுக்காய் பிரதேசங்களில் மக்கள் தொடர்பாடல் அலுவலகங்களில் இலவச விண்ணப்ப உதவியையும், 24X7 மணி நேர பரப்புரையையும் பிறப்பிக்கும் மெருக்கூட்டப்பட்ட சிவில் நிர்வாகக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு ஆள்பிடிக்க முயற்சிக்கின்றன.

வீழ்ந்து கிடக்கும் இழிவிலிருந்து எழுந்து சுயம் தேட முயற்சிக்கின்ற இனக் கூட்ட மொன்றுக்கான அவகாசங்களை முற்றிலுமாக அடைத்து, நீண்ட திட்டமிடலுடன் பிணைந்த தான இனக் கலப்புக்குள் ஈழத் தமிழர்களை நேரம் பார்த்து தள்ளி விடுவதற்கு "சீருடைகள்" பின்னிற்பதில்லை.

அதுவும், பாதுகாப்புச் செயலாளர், கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் ஆளுநர்கள் ஆகியோரோடு இறுதி வெளியீடான பாதுகாப்புச் சேவைகள் அமைச்சின் செயலாளரும் முன்னாள் சேனையைச் சேர்ந்தவர்களாய் இருக்கும் நிகழ்காலத்தை விட்டால், தமிழினச் சிதைப்புக்கான நல்லநேரம் பிறகெப்போதும் வாய்க்காது என்பதையும் நன்குணர்ந்து கொண்டுடிருக்கிறார்கள்.

முன்பள்ளிகளில் தொடங்கி தமிழ் யுவதிகளை திருமணம் செய்து கொள்ளும் நேரடிப் பிணைப்புக்கள் வரை முன்னேற்பாட்டுடனான பேரினத்தின் உள்வாங்கல் நடவடிக்கைகளில், பரப்புரைகளுக்கும் - விளம்பரங்களுக்கும் பெருவலுவுண்டு.

காலூன்றும் பிரதேசங்களின் சமூகப் பின்னணி, பொருளாதார வலு, புவியியல் அமைவிடம், கல்வி நிலை, பிணக்குகளும்- பிரச்சினைகளும், தேவைகளும்- விருப்பங்களும் போன்ற காரணிகளின் வேறுபாடுகளுக்கேற்ப இராணுவச் சமூக மயமாக்கலுக்கான உத்திகளை மாற்றிக்கொள்வதன் மூலம், தமிழர் தாயகத்தில் 'ஆமி விரும்பி'களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வது இவ்வேலைத் திட்டங்களின் மூத்த விளைவுகளில் ஒன்று!

சுற்றியுள்ள சமூகத்தினைக் காணும் தோற்ற நிலைப்பாடுகளின் படிமுறை வளர்ச்சியின் ஊடாகப் புரிந்துகொள்ள முயல்பவர்கள் பாடசாலைச் சிறார்களே! தரம் ஒன்றில் சமூக அவதானம் பூச்சிய நிலையில் உள்ளவர்களாக பாடசாலைகளின் வாசலில் காலடியெடுத்து வைப்பவர்கள் உடலுறுதியும் உளப் படபடப்பும் மிகுந்தவர்களான பதின்ம வயதினராக உயர்தரப் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும்போது, சரியாகத் திசைமுகப்படுத்தப்பட்ட பத்தொன்பது வயதுப் பெண் பிள்ளையொன்றின் சமூக அவதானம் சுமார் 22% ஆகவும், அதே வயது ஆண்பிள்ளை யொன்றின் சமூக அவதானம் சுமார் 20% ஆகவும், உள்ளதாக ஆசியப் பிராந்தியத்துக்குரிய உலக வங்கியின் ஆய்வொன்று குறிப்பிடுகின்றது.

மோட்டார் ஈருளியின் தரிப்பு நிலை தாங்கி (Side Stand) எடுக்கப்படாமல் - மேலே தூக்கி விடப்படாமல் - ஓட்டிச் செல்லும் யாரென்றே தெரியாத வீதிப் பயணி ஒருவரைத் தனது மிதிவண்டியால் துரத்திச் சென்று சைகை கொடுத்து, நேரவிருந்த கவனவீன விபத்திலிருந்து காப்பாற்றுகின்ற முன்னவதானமுள்ள பாடசாலை மாணவன் உங்களுக்கு பக்கத்து வீட்டிலும் வசிக்கக்கூடும்.

இதுபோன்ற வெகு சாராதாரணமான பல்வேறு உதாரணங்களையுடைய - அளவீட்டுப் பெறுமானங்களால் கணிக்கப்படுகின்ற 175 சுட்டிகள் மூலம் பதின்ம வயதுக்குரியவர்களின் சமூக அவதான வீதப் பெறுமானம் கணிப்பிடப்படுகின்றது.

கல்வி முறைமையிலிருந்து தொழில் முறைமை உடைய சமூகக் கட்டமைப்புக்குள் பிரவேசிக்கின்ற வயதில், முன்னர் சமூக அவதானம் என்று சுட்டப்பட்ட இதே கணிப்பீடு, சமூகத்துக்கான அவர்களின் துலங்கலாக மாற்றம் பெறுகின்றது.

இவ்வகை பருவத்தில் சந்திக் காவலரணில் ஆயுதம் தரித்தவனாக தூங்கி வழிகின்ற "சுமார் மூஞ்சி குமாரான" சிங்க றெஜிமெண்ட் ஆளைக் காதலிக்கத் துணிந்து விட்ட- 'தல் செவன' விடுதியில் கட்டளைத் தளபதியின் முன்னால் பதிவுத் திருமண பந்தத்தில், உலகின் இணைய வழிக் கண்களின் முன்னிலையில் இனத்துரோகிப் பட்டத்துடன் மிரட்சி வெளிப்படும் கண்களுடன் புகைப்படத்துக்கு விரக்தியுடன் சிரிக்கின்ற தமிழ் தங்கைகளையும் -

முகாம் வாசல்களில் திறந்து வைக்கப்பட்ட கொத்துறொட்டிக் கடைக்கு இரவு உணவுக்காக செல்பவனாக அறிமுகமாகி அவர்களுடன் தொலைபேசி நினைவக அட்டையினை (Memory Card) பரிமாற்றிக் கொள்ளும் அளவுக்கு நெருக்கமாகி, முன்னாள் போராளிகளையும் குடும்பங்களையும் எண்ணற்ற இட்டுக்கட்டல்களுடன் போட்டுக் கொடுக்கும் அல்லது மறுமுறையும் காட்டிக் கொடுக்கும் புறப்புலனாய்வாளர்களாக பதவி உயர்வு பெறும் செம்மொழித் தம்பிகளையும் -

முளையிலேயே கிள்ளாமல் விளைச்சற் பருவத்தில் நொந்து கொள்வதில் எவ்வித பயனுமேயில்லை.

பாடசாலைக் காலத்தில் அப்பியாசக் கொப்பி தருகின்ற அன்பான இராணுவத் தளபதியையும், விளையாட்டுப் போட்டிக்கு விருந்தினராக விறைப்பான கம்பீரச் சீருடையில் வருகின்ற பிரதேசக் கொமாண்டரையும் அவரின் பின்னால் அங்கம் புழுதிபடத் தொழாக் குறையாக உபசரித்துக் களிக்கும் அதிபர் ஆசிரியர்களையும், இரணுவ வதிவிடப் பயிற்சியில் கௌரவ கேணல் பதவி பெற்றுத் திரும்பியதை பெருமை பொங்க நினைவுச் சின்னங்களாலும் - புகைப் படங்களாலும் அலுவலகத்தை அலங்கரித்து வைத்திருக்கின்ற தங்களது பாடசாலை அதிபருக்கு இராணுவ மட்டத்தில் கிடைக்கின்ற செல்வாக்கையும் பயிற்சிகளை வழங்குவதற்காக ஒருமுறை அழைத்ததும் நிகழ்வுக்கு முந்திய மாதம் முழுவதும் மைதானமே கதி எனக் கிடந்து பயிற்சியாளர் அவதாரம் எடுக்கும் சிப்பாய்களையும் பார்த்துப் பார்த்து பழகும் இன்றைய பதின்ம வயதுப் பாடசாலைச் சிறார்களின் (சமூக அவதானம்) அடுத்த ஐந்து முதல் பத்து வருடங்களில் 'சமூகத் துலங்கலாக' முதிர்வடைகின்றபோது எதிர்பார்க்கப்படும் விளைவுகளை இந்த அரச இயந்திரத்தின் ஆணி நட்டுக்களாக தம்மைத் தாமே உயர்வு நவிற்சி செய்து வைத்துள்ளவர்கள் எவராவது கற்பனை செய்ததுண்டா? பாடசாலைகளில்



வீழ்ந்து கிடக்கும் இழிவிலிருந்து எழுந்து சுயம் தேட முயற்சிக்கின்ற இனக் கூட்டமொன்றுக்கான அவகாசங்களை முற்றிலுமாக அடைத்து, நீண்ட திட்டமிடலுடன் பிணைந்த தான இனக் கலப்புக்குள் ஈழத் தமிழர்களை நேரம் பார்த்து தள்ளி விடுவதற்கு "சீருடைகள்" பின்னிற்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வலுப்பிரயோகத்தின் விசமத்தனமான செறிவூட்டலோடு 44 பொது மகளுக்கு ஒரு படைவீரன் எனும் விகிதத்தில் வட புலத்தில் படைகளை நிறுத்தி வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல், குருதிக் கோடுகள் காயுமுன்னரே பலி கொடுக்கப்பட்ட இனத்தின் இளசுகளை படைச் சேர்ப்புச் செய்யும் பேரினத்தின் நோக்கங்களில் அணுவளவேனும் நன்மை கிடைக்கப்போவதில்லை.



இருந்தும்- பல்கலைக்கழகத்தில் இருந்தும் வெளித் துப்பப்படும் மனிதச் சக்கைகளை பொருத்தமான தொழிலிடங்களுக்குள் பிரதியீடு செய்யும் வெளிப்படையான பொறிமுறை எதுவுமே இன்னமும் இலங்கையில் அறிமுகம் செய்யப்படவில்லை. மேலும், செய்முறையறிவற்ற புத்தகப் புழுக்களாக வெளியேற்றப்படும் பட்டதாரிகளை தொழிற் சந்தைகளின் தேவை நிரம்பல் களுக்கேற்ப தயாரிக்க முடியாத சுண்ணாம்புச் சுவர்களில் மேலும் மேலும் முதலிடுவதாக இலங்கையின் உயர் கல்விச் சட்டகத்தின் மீதும் பெரிய குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இதே காலத்தில் தனக்கான எதிர்காலம் என்ன என்பதை எதிர்வு கூற இயலாதவனாக பாடசாலைப் பொறியிலிருந்து வெளியேறுகின்ற யௌவனன் ஒருவன் பாதுகாப்புப் படை விண்ணப்பத்தை யும் அதற்கான கடித உறையையும் காசு கொடுத்து வாங்கி, நிரப்பிக்கையெழுத்திட்டு, அஞ்சலகத்துக்கு பதிவுத் தபாலிடச் செல்வதை தடுக்க விரும்புவர், எவராயினும் அவனுக்கான மாற்று ஏற்பாடு ஒன்றை தயார் செய்த வர்களாகவே இருக்க முடியும். 'ஆனைப் பசிக்கு சோளப் பொரி போலும்'. பதவியணிகளை மட்டுமே கோரக்கூடிய மாகாண சபை அதிகாரத்தை மட்டும் வைத்துக் கொண்டு, அங்கேயும் அண்ணன், தம்பி ஒன்றுவிட்ட மச்சான், அப்பப்பாவின், அம்மாவின் பேரனின் மகள் யாவர்க்கும் கொடுத்தவை போக எஞ்சியுள்ள தொழில் வெற்றிடங்களை ஒவ்வொரு டிசெம்பரிலும் ஓகஸ்டிலும் பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றிய பின் வெளியீடு செய்யப்படும் இளைஞர்களுக்கு பகிர்ந்தளிப்பதும் இப்போதைக்கு இயலாதது.

ஆக மாற்றுடையதும் தற்காப்புடையதுமான ஏக வழியாக கற்றல்- கற்பித்தல் பருவத்தில் ஈழத் தமிழ்ச் சிறுவர்களையும் இளைஞர்களையும் இராணுவ வாடை நிரம்பிய சமூக அவதானத்திலிருந்து விலகக்ளிப்பதும் - விலக்கி வைப்பதுமே வட புலத்துக்கு "ஒளி மயமாகத்" தெரிகின்றது. ஆனால் நடப்பவை முற்றிலும் மறுதலையானவையே!

இலங்கை கல்வி நிர்வாக சேவையினுள் மூப்பு அடிப்படை வகுதிக்குள் அதிபர் சேவையிலிருந்து உள்வாங்கப்படுகின்றவர்கள் பெரும்பாலும் ஐம்பத்தியைந்து வயதைக் கடந்தவர்கள் சேவைக் காலத்தின் இறுதி ஐந்து வருடங்கள் அல்லது அதிலும் குறைந்த காலப் பகுதிகளில் நிர்வாக சேவைக்குரிய பதவிகளுக்கு நிரப்பப்படுவதற்கு முன்னரான தலைமைத்துவப் பயிற்சியின் தொடர்ச்சியாக சுய விருப்பத்தின் பேரான தெரிவின் மூலம் ஏதேவொரு தேசிய பாதுகாப்புப் படை (Ncc) பயிற்சி முகாமில் 30-45 நாள்கள் இராணுவ வதிவிடப் பயிற்சியை பெற்றுக்கொள்கின்றார்கள். கௌரவ கேணல் அல்லது லெப். கேணல் தர இராணுவ அதிகாரிகளாகச் சின்னமிடப்படுவதுடன் தற்போதுள்ள சேவைக் கொடுப்பனவுக்கு யாவற்றையும் பெறுவதற்கும் இவ்வதிகாரிகள் உரித்துடையவர்களாகின்றனர்.

அரச சேவையின் இறுதிப் பருவத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் மூத்தவர்களாகையால் பாடசாலை அதிபர் கதிரை தந்த சொகுசிலிருந்து இறங்கவும் மனமில்லாமல் இலங்கை கல்வி நிர்வாக சேவையுடன், இராணுவப் பதவியையும் பெற்றுக் கொண்ட இவர்களை சும்மா இருக்க அனுமதிப்பதில்லை பாதுகாப்பு அமைச்சு. இவர்களின் பெயர் விவரங்கள் அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டு இவர்களுக்கான இராணுவத் தர வரிசைப்படுத்தலும் வழங்கப்பட்டு அவரவர் ஊர்களில் மற்றும் அவரவர் பணியிடங்களில் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட கல்வி சார்ந்த பாதுகாப்புப் படைச் சிறார்களை உருவாக்கும் முன் - இராணுவ செயற்றிட்டங்களின் தொழிற்படு புள்ளிகளாக களம் இறக்கி விடப்படுகின்றனர்.

வர்த்தமானிப் பிரசுரம் அறிவிப்பதன்படி யாழ்ப்பாணத்தின் தேசிய பாடசாலைகள் சிலவற்றினதும், பிரபலமான மாகாணப் பாடசாலைகள் சிலவற்றினதும் முதல்வர்கள் என கைவிரல்களுக்குள் அடங்காத தொகையினர் - 'ஆமி' அதிபர்கள் இப்போது. வடமராட்சியின் பிரபல பாடசாலையின் இவ்வருட விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப வைபவத்தில் வேட்டொலி முழங்கித் தொடங்கி வைத்த சம்பவம் நினைவுக்கு வந்தவர்கள் அல்லது பத்திரிகைகளில் புகைப்படச் செய்தியாகப் படித்தவர்கள் உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங் கள் "சபாஷ்" ?

அடுத்தடுத்த வருடங்களுக்குள் ஓய்வூதியத்தோடு வீட்டு முகப்பில் சாய்வு நாற்காலிகளில் சாய்ந்துவிடப் போகின்ற எம்மூரின் கல்வியியலாளர்கள் எனும் பதவிப் பெயர்களினுள் ஒளிந்திருப்பவர்களின் சில ஆயிரம் ரூபாய் சம்பள ஏற்றத்துக்கும் - இராணுவ அறிமுகங்களுக்குமான பேராசைகளுக்கும் சாவிறுதி வரை முடி நரைப்பதில்லை!

அறுதிக் கால ஆசையின் பேரால் கதிரைகளில் ஒட்டிக் கிடப்பதற்கான பசைத் தயாரிப்பின் பக்க விளைவாக முற்றிலும் பொருத்தமற்ற வாழ் சூழலுக்கு நேரெதிரான நடைமுறைகளையும், இன மொழி அவப் பிரயோகத்துக்கான அகண்ட வாசலையும் தம்மைத் தொடருகின்ற மாணவர்களிடமும் ஏனைய ஆசிரியர்களிடமும் எச்சங்களாக விதைத்துச் செல்வதில் சிறு குற்றவுணர்ச்சி கூட எழாமை தொடர்பில் இவ்வாறானவர்களின் மனநிலையைச் சந்தேகிப்பினும் தகுமே?

எழுமின் விழிமின் வடபுலத்துப் பெற்றோர்களே! பாடசாலை அனுமதிக்காக விண்ணப்பிக்கும்முன் உங்கள் பிள்ளை கல்வியைத் தொடரப் போகும் கல்விக்கூட நிர்வாகிகள் பின்புலத்தையும் தகைமைகளையும் - தகுதியீனங்களையும் சீர் செய்து நோக்கி நிதானிப்பதில் தவறேதுமில்லை.

நாங்கள் விதை தெரிதலில் கவனங் கொண்ட இடைவேளைகளில் அவர்கள் விளைகளங்களில் வேர் எரிக்கும் விஷம் பரவியதை பார்த்தும் விலகிட மறுத்தால், அறுவடை நாளும் அவர்களுக்காக மட்டுமே விடியும்.

இராணுவ வலுப்பிரயோகத்தின் விசமத்தனமான செறிவூட்டலோடு 44 பொது மகளுக்கு ஒரு படைவீரன் எனும் விகிதத்தில் வட புலத்தில் படைகளை நிறுத்தி வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல், குருதிக் கோடுகள் காயுமுன்னரே பலி கொடுக்கப்பட்ட இனத்தின் இளசுகளை படைச் சேர்ப்புச் செய்யும் பேரினத்தின் நோக்கங்களில் அணுவளவேனும் நன்மைகிடைக்கப்போவதில்லை.

நிறைவேற்றதிகாரமுள்ள உயர் தலைமைத்துவத்துக்குத் தமிழினத்தையோ மாற்றுச் சிறுபான்மையினத்தையோ சேர்ந்த எவரும் தகைமை பெற இயலாத அரசமைப்புச் சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்தும் அடக்கியாளும் சிந்தனை முதன்மை பெற்ற தேசமொன்றின் பாதுகாப்புச் சேவையினுள் உள் வாங்கப்படுவதனால் சிறுபான்மையினருக் கான சமத்துவம் கிடைத்து விட்டதாகக் கருதவே இயலாது.

எதிரில், வலிந்தழைக்காத - கட்டாயப்படுத்தாத, வேறெந்த மென்முறை வழிகள் பிரயோகிக்கப்படுவதன் மூலமும் தாம் நினைத்தவாறு தமிழ் இளைஞர், யுவதிகளை படைச் சேர்ப்பினுள் புகுத்தக் கூடிய நிலைமை வடபுலத்திலும் ஏற்படுத்தப்படாமல் தடுப்பதற்காக, பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட தொடக்கப் புள்ளிகளை வெகு கவனமாக கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இத்தினத்துக்குரிய மிகப் பெரும் இனக் கடமையாகும்.

தனித்துவம் தவறேல் தமிழா.

---

லயன் அம்பலவாணர் துரைசிங்கம்



# ஆங்கில மொழியின் முக்கியத்துவம்

மொழி என்றால் என்ன? குறிப்பிட்ட ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களினால் ஒருவருக்கொருவர் பேச்சு மூலம் அல்லது எழுத்து மூலம் தொடர்புகொள்ளும் முறையே மொழி எனப்படும். ஒருவன் தனது சிந்தனைகளை மொழி மூலமே சொற்கள் மூலமாகவும் எழுத்துருவிலும் வெளிக்கொணருகின்றான். இந்த உலகிலே ஏறத்தாழ 7000 மொழிகள் இருப்பிலும் "ஆங்கில மொழி" சர்வதேச மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான காரணம் அநேக நாடுகளில் பாவனையில் உள்ளமையாகும். இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் ஆங்கில மொழியானது எல்லாவகையான தொடர்பாடல்களிலும் முக்கிய பங்காற்றுகிறது.

ஆங்கிலம் உலக மொழியாகவிருப்பதுடன் அம்மொழியினை நன்றாகப் பேச, எழுத இயலுமானால் ஒருவன் உந்துசக்தியைப் பெற்றுக்கொள்ள முடியும். சிறிது காலத்துக்கு முன்புவரை ஆங்கில மொழி உயர் மதிப்பு உடைய வகுப்பினரின் சொத்தாகவே காணப்பட்டது.

இன்று நிலைமை அப்படியல்ல. எமது நாட்டில் ஆங்கிலமொழி தொடர்பு மொழியாக விளங்குவதுடன், தொழில் வாய்ப்பு மற்றும் உயர்கல்வி பெறுதல் போன்றவற்றுக்கும் உதவுகின்றது. தமிழர்கள் சிலர் வெளிநாடு செல்லவும், வாழவும் வேண்டியிருப்பதால் ஆங்கில மொழியின் தேர்ச்சி இன்றியமையாததாக உள்ளது.

தற்போது கிராமங்களிலும் ஆங்கில மொழிப் போதனை ஆரம்பிக்கப்பட்டிருப்பது கண்கூடு. இன்று ஆங்கில மொழி பல அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் புலமைசார் கருவியாக உபயோகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்வியில் அபிவிருத்தியடைந்து வரும் இந்நாட்டிலும் ஆங்கிலக் கல்வியினை புகட்டுவதிலும், கற்பதிலும் உகந்த முறைகள் பின்பற்றப்படின், ஏனைய மனித திறமைகள் போன்று ஆங்கிலமொழித் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

அறிவு என்ற சக்தி கல்வியின் ஊடாகவே பெறப்படுகின்றது. கல்வி ஒருவருடைய பல்வேறு ஆளுமைகளிலும் முக்கிய பங்காற்றுகின்றது. இலங்கையில் பெற்றோர் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதனை தமது முக்கிய பணியாகக் கருதுகின்றனர். அதன் பயனாக கல்வி மிகவும் போட்டித்தன்மையுடையதாக மாறியுள்ளது. இந்தப் பின்னணியில் புரிந்துகொள்ளக்கூடிய காரணங்களையிட்டு ஆங்கிலக் கல்வி மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

1815 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இலங்கையில் ஆட்சி அமைத்ததுடன் ஆங்கிலம் உத்தியோக மொழியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் பாடசாலைகளும் நிறுவப்பட்டன.

இலங்கை 1948 இல் சுதந்திரம் அடைந்த போதும் 1950 இன் நடுப்பகுதிகள் வரையில் ஆங்கில மொழியின் தனித்துவம் இழக்கப்படவில்லை. பின்பு பொது நிர்வாகம் மற்றும் போதனா மொழிகளாக தாய்மொழிகள் கொண்டு வரப்பட்டதால் ஆங்கிலமொழி புகட்டலிலும், கற்றலிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் தற்போது வளர்ந்துவரும் விஞ்ஞான, தொழில்நுட்ப காரணிகள் ஆங் கில மொழியின் தேவையைக் கோரி நிற்கின்றன. கடந்த சில வருடங்களாக நாட்டின் பல பாகங்களிலும் சர்வதேச பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இதனாலேயேயாகும்.

விடயங்களை சரியாகக் கணித்து நாட்டில் சமூக , சமய மற்றும் தொடர்பாடல் விடயங்களில் முன்னேற்றம் காணவும் ஒற்றுமையை ஏற்படுத்தவும் வெளிநாடுகளுடனான தொடர்புகளைப் பேணவும் கல்வித்துறையில் முன்னேற்றம் அடையவும் ஆங்கிலக்கல்வி அவசியமானது. எனவே இளஞ் சந்ததியினரை ஆர்வமான முறையில் ஆங்கிலக் கல்வியை பயனுறுதியுடனும், வினைத்திறனுடனும் கற்குமாறு ஊக்குவிப்பது எமது கடமை.

மொழி என்பதில் கேட்டல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய திறன்கள் சம்பந்தப்பட்டுள்ளன. பிள்ளைகள் முதலில் கேட்டல் மூலமே மொழியை அறிந்து பின்னரே பேசவும் வாசிக்கவும், எழுதவும் பயில் கின்றனர். ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற குடும்பங்களில் பேசுவதற்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதால் பிள்ளைகளும் இலகுவாகக் கற்றுக் கொள்ள ஏதுவாகின்றது.

ஆங்கில மொழியில் சொற்களின் உச்சரிப்பு சில சமயங்களில் ரசனை மிகுந்ததாக அமைவதுண்டு. எனவே பயில்வோர் சரியான உச்சரிப்பை பயில முயல்வது ஆரோக்கியமானது. எத்தனையோ மாணவர்கள் உச்சரிப்புப் பிரச்சினை காரணமாக தங்கள் திறமைகளை வெளிப்படுத்தத் தயங்குவது இயல்பு. அவர்கள் தயக்கத்தை தொடரான பயிற்சி மூலம் தகர்க்க முடியும்.


உச்சரிப்பு சம்பந்தப்பட்டவரின் பேச்சுக்கு உதவும். இதற்கு உறுப்புக்கள் ஒத்துழைக்க வேண்டும். பேசுவதற்கு உதவும் உறுப்புக்கள் நாக்கு, பற்கள், உதடுகள் மற்றும் அண்ணம் என்பனவாகும். அவை உரிய முறையில் இயங்கினால் உரிய உச்சரிப்பைப் பெற முடியும். அவ்வாறு உச்சரிப்பை முன்னேற்றுவதற்கு பிள்ளைகள் ஆங்கிலப் பாடங்களை தினமும் அதிகாலையில் உரத்து வாசிக்க வேண்டும்.

இதனால் இரண்டு பயன்கள் கிடைக்கும். முதலாவதாக உச்சரிப்பு வளம் பெறும். இரண்டாவதாகப் பெற்றோர் மகிழ்ச்சியடைவர். அகராதி உபயோகிக்கும் பழக்கத்தையும் சிறு வயது முதலே மேற்கொண்டால் பல விடயங்களை அதாவது சொல்லின் வகை, உபயோகிக்கும் பாங்கு என்பவற்றையும் சுலபமாக அறிய முடியும். மேலும் எழுத்துக் கூட்டல் மிகமிக முக்கியம். ஏனெனில் சரியான கருத்தைப் பெற சரியான எழுத்துக்கூட்டல் (Spelling) அவசியம். சரியான எழுத்துக்கூட்டலை மாணவர்கள் பிரயோசனமான பொழுது போக்காகவும் மேற்கொள்ள முடியும்.

மாணவர்களை ஊக்குவிப்பதன் பொருட்டே சம்பந்தப்பட்டவர்கள் ஆங்கில மொழித் தினப் போட்டிகளை எழுத்துக்கூட்டல் (Spelling), ஒப்புவித்தல் (Recitation) கையெழுத்து (hand-Writing) மற்றும் ஆக்கபூர்வமான படைப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய போட்டிகளை நடத்துகின்றனர். சில வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட வாசித்தல் (Reading) கைவிடப்பட்டுள்ளது. அதனை மீளவும் நடைமுறைப்படுத்தல் வரவேற்கத் தக்கது. ஆங்கில மொழி கற்பதில் மாணவ சமுதாயம் ஆர்வம் காட்ட வேண்டும். அவர்களைக் கூர்மையாக கற்க விரும்புபவர்களாக மாறுவதுடன் உரிய வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர் மற்றும் சம்பந்தப்பட்டோரின் தார்மீகக் கடமை. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை நினைவுபடுத்துவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயச் சிற்பி



கலிங்க தேசத்தை அக்காலத்தில் காரவேல் மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அம்மன்னர்களில் ஒருவன் ஜகந்நாதர் ஆலயத்தைச் சிறப்பாகக் கட்டி முடித்தான். அழகிய ஜகந்நாதரின் சிலையைச் செய்து முடிக்க திறமை வாய்ந்த சிற்பிகளுக்கு அவன் அழைப்பு விடுத்தான்.

"யார் ஆழகிய ஜகந்நாதரின் சிலையை. அற்புதமாகச் செய்து கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு லட்சம் பொன் வழங்கப்படும். அவ்வாறு அழகிய சிலையைச் செய்ய முடியாதவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும்."

இதுதான் அந்த மன்னனின் விசித்திரமான அறிவிப்பு. இந்த நிபந்தனையை ஏற்று எந்தச் சிற்பியும் சிலை செய்ய அரசனிடம் வரவில்லை.

அரசன் கவலை கொண்டான்.

ஆனால், வயதான சிற்பி ஒருவர் அரசனிடம் வந்து அழகிய ஜகந்நாதரின் சிலையை வடித்துத் தருவதாகக் கூறினார். "என்னுடைய நிபந்தனை உங்களுக்குத் தெரியுமல்லவா?" மன்னன் கேட்டான்.

"பலர் பாராட்டும் வண்ணம் ,அழகிய ஜகந்நாதர் சிலையை வடித்துத் தர வேண்டும். அவ் வளவுதானே?"

"இல்லை. இன்னுமொரு நிபந்தனையும் உண்டு. சிலை அழகாக இல்லாவிட்டால் அதைச் செய்த சிற்பிக்கு மரண தண்டனையும் உண்டு"

"மன்னா ! உம்மால் எனக்கு மரண தண்டனை விதிக்க முடியாது."

"ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? அரச நீதிக்கு அப்பாற்பட்டவரோ நீர்?"

" அந்தப் பொருளில் நான் பேசவில்லை. அற்புதமாக சிலையைச் செய்துவிடுவேன். பின்னர் எப்படி நீர் எனக்கு மரண தண்டனை அளிக்க முடியும்?"

"நன்று பெரியவரே. நாடு போற்றும் நல்லதொரு சிலையை வடித்துத் தாருங்கள்."

"மன்னா, எனக்கும் ஒரு நிபந்தனை உண்டு. சிலை செய்ய, சரியாக முப்பது நாள்கள் ஆகும். அந்த முப்பது நாள்களும், நான் கோயிலுக்குள்தான் தாழிட்டுக் கொண்டு இருப்பேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நானும் கதவைத் திறக்கமாட்டேன். நீங்களும் கதவைத் திறக்கக் கூடாது. நீங்கள் கதவைத் திறக்கும் பட்சத்தில் அழகிய சிலைக்கு நான் உத்தரவாதமளிக்க முடியாது."

"நிபந்தனையை ஏற்றுக்கொள்கிறேன். உமக்கு வேண்டிய உணவு?"

"முப்பது நாள்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, காய்கறிகளை எல்லாம் அளித்து விடுங்கள். நானே சமையல் செய்து கொள்வேன்."

இருவரும் நிபந்தனையை ஏற்றுக் கொண்டார்கள். மறுநாள் கோயிலுக்குள் சென்று சிற்பி கதவைச் சாத்திக் கொண்டார். அரசனும் அமைச்சர்களும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். எழுபது வயதைக் கடந்த, முதிர்ந்த அனுபவமிக்க சிற்பி நிச்சயமாக, அழகான ஜகந்நாதரின் சிலையை வடிப்பார் என்று அவர்கள் நம்பினார்கள்.

சிற்பம் செதுக்கும் கல் உளியின் சப்தம் வெளியில் கேட்கத் தொடங்கியது. மூன்றாம் நாள் செதுக்குவது போன்ற ஓசை கேட்கவில்லை. யாரோ சுத்தியல் கொண்டு கற்களை உடைப்பது போன்ற ஓசை கேட்டது. மன்னனிடம் அரண்மனைக் காவலர்கள் சென்று முறையிட்டார்கள்.

கல்தச்சர்கள் சிற்பம் செய்யும் போது எப்படிப்பட்ட நுணுக்கமான சங்கீத ஒலி வரும் என்பது மன்னனுக்குத் தெரியும். ஓசையைக் கேட்டு சற்று திகைத்த மன்னன், "இரண்டு மூன்று நாள்கள் தொடர்ந்து இந்த ஒலியை கேட்டுக் கொண்டிருந்தால், என்னை வந்து அழையுங்கள்" என்றான். பத்தாவது நாள் சப்தம் இதைவிடப் பலமாக இருந்தது. இந்த ஓசையைக் கேட்ட சிற்ப வல்லுநர்கள், "மன்னா, நாங்கள் சத்தியம் செய்து கூறுகிறோம். இது சிற்பம் செதுக்கும் ஓசையே இல்லை" என்று உறுதிபடக் கூறினார்கள்.

"அரசே . கதவைத் திறந்து நாம் பார்த்துவிடுவதுதான் நல்லது" என்றனர் அமைச்சர்கள்.

"வேண்டாம் விபரீதம். சிற்பியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நாம் மீறவேண்டாம். சிலைக்குக் களங்கம் ஏற்படலாம்."

பதினைந்தாவது நாள்-

கடப்பாரை கொண்டு இடிப்பது போன்ற ஓசை. "மன்னா, இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. சிற்பி சிலை செதுக்கவில்லை. மண்டபத்தை உடைத்துக் கொண்டிருக்கிறான்."

"இன்னும் சில நாள்கள் பொறுப்போம். இதே ஓசை தொடர்ந்து வந்தால் என்ன செய்யலாம் என்று சிந்திப்போம், நாமாக நிபந்தனையை மீற வேண்டாம் என்று நினைக்கிறேன்."

பதினெட்டாவது நாள் - தூண்கள் 'டமார் டமார்' என இடிந்து விழுவது போன்ற ஓசை.

"வேந்தே, இனியும் தாமதிக்க வேண்டாம். ஏதோ விரும்பத்தகாத நிகழ்ச்சி கோயிலின் உள்ளே நடக்கிறது."

"ஒரு முதியவருக்குத் தூண்களை உடைத்தெறியும் அளவுக்கு வலிமையா?"

"மன்னா . நாம் எதையும் சற்று மாறுபாடாகச் சிந்திக்க வேண்டும். நம் எதிரிகள் கோயிலின் உள்ளே சென்று கோயிலை இடிக்கலாம் அல்லவா? நாம் உள்ளே அனுப்பிய சிற்பி, ஒருவேளை நம் எதிரிகளின் ஒற்ற னாகக் கூட இருக்கலாம்."

"நீங்கள் சொல்வதும் சற்று சிந்திக்கக்கூடிய விடயமாகத்தா்ன் இருக்கிறது. நாமாகக் கதவை உடைக்க வேண்டாம். அவராகவே கதவைத் திறக்க வைக்க வேண்டும். அதற்கு ஆலோசனைகள் கூறுங்கள்:"

"கோயில் வாசலில் தாரை தப்பட்டைகளை முழங்கச் செய்யலாம். அது ஏன் என்று பார்க்க அவர் கதவைத் திறக்கலாமல்லவா?"

"அதுவும் நல்ல யோசனைதான். அப்படியே செய்யுங்கள்" கோயில் வாசலில் கொம்பு ஊதி, தாரை தப்பட் டைகள் முழக்கினார்கள். சிற்பி அதைக் கண்டுகொள்ளவில்லை. கதவும் திறக்கப் படவில்லை.

இருபதாம் நாள்-

பகலில் எழுந்த இடியோசை போன்ற சப்தம் இரவிலும் தொடர்ந்தது.

கோயில் இடிக்கப்படுகிறது என்ற முடிவுக்கு அரசனும், அமைச்சர்களும் வந்துவிட்டார்கள். மன்னன் சிறப்புப் படைகளை கோயிலைச் சுற்றி அணிவகுத்து நிற்கும்படி கூறிவிட்டுகோயில்கதவுகளை உடைத்துக்கொண்டு மதிமந்திரிகளுடன் உள்ளே சென்றான்.

என்ன ஆச்சரியம் ! கோயிலில் தூண்களும் ,பிரகாரங்களும் ,மண்டபமும் அப்படியே இருந்தன. ஒரு சிறு கல்கூட பெயர்ந்து விழவில்லை. உள்ளே சென்ற அத்தனை பேருக்கும் பெருத்த ஆச்சரியமாகப் போய்விட்டது. சிலை வடிப்பதை நிறுத்திவிட்டு ,சிற்பி மிகக் கோபமாக எழுந்து நின்றார். மன்னன் அவர் வடித்த சிலையை அருகில் சென்று பார்த்தான். சிலையா அது? மிகக் கண்றாவியாக இருந்தது. கையும் காலும் உடைந்திருந்தன. மூக்கு மூளியாக இருந்தது. மன்னனுக்கு பெருங்கோபம் வந்துவிட்டது.

"இதுதான் நீர் சிலை செய்யும் லட்சணமோ?"

"கொடுத்த வாக்கைக் காப்பாற்றாத உனக்கு சிலையைப் பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது?"

"உன்னை என்ன செய்கிறேன் பார் !"

"இந்த மிரட்டல்களுக்கு எல்லாம் நான் பயந்தவன் அல்லன். அதை வேறு இடத்தில் வைத்துக்கொள்."


அரசன் அவர் கையைப் பிடித்து இழுத்தான். சிற்பி தன் சுத்தியைத் தூக்கி அரசனை அடிக்கச் சென்றார். இடையில் நின்றவர்கள் மோதலைத் தடுத்தார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருந்த போதே மந்திரம் போட்டது போல் மறைந்து விட்டார், அந்தச் சிற்பி. 'அழகில்தான் ஆண்டவன் இருக்கிறான்' என்ன மன்னனின் கருத்தை மாற்ற வந்த ஜகந்நாதரே அவர் என்று மக்கள் கருதுகிறார்கள்..ஆண்டவன் உலகப் பொருள்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கிறான். அழகுள்ள இடத்தில்தான் ஆண்டவன் இருக்கிறான் என்பது தவறான வாதம் என்பதை விளக்க வந்த தத்துவக் கதை இது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பின் உருவில் ஆழ்வார்





புலோலி என்ற ஊரிலே சேரன் என்ற ஒரு சிறுவன் வசித்து வந்தான். அவன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரனாக விளங்கியதுடன் தனது பெற்றோர்களிடம் மிகுந்த மரியாதையும் கொண்டிருந்தான். அவனது தந்தையாரான கந்தசாமி மந்திகையில் அமைந்துள்ள சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றார். அதில் கிடைக்கும் வருவாய் மூலமாகவே அவர்களது குடும்பம் காலத்தை கடத்தி வருகின்றது. சேரன் அவனது பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை என்பதால் அவனுக்கு செல்லம் அதிகம். அவனும் பொறுப்புடன் தனது கல்வியைத் தொடர்ந்து வருகின்றான்.

மேலும் அவன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தனது தந்தையாருடன் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபடுவது வழமை. ஒரு ஞாயிற்றுக்கிழமை அவனது தந்தைக்கு உடல் நலன்குறைவாக இருந்ததால் வல்லிபுர ஆழ்வாரைத் தரிசிக்க முடியவில்லை. இதனால் சேரன் மிகுந்த கவலையுடன் படுத்திருந்தான். அப்போது உஸ்...உஸ்... என்ற சத்தம் அருகில் கேட்டது. சேரன் திரும்பிப் பார்த்த போது பெரிய நாக பாம்பொன்று பட மெடுத்த வாறு அவனது தலைமாட்டில் நின்றது. சேரன் புத்திசாலி என்பதால் பாம்பைக் கண்டு அஞ்சவில்லை. பாம்பைப் பார்த்து நீ போ. நான் வருகிறேன் என்று தெரிவித்தான். உடனே அந்தப் பாம்பு மறைந்து விட்டது. அப்போது உடல் நலக் குறைவுடன் படுத்திருந்த அவனது தந்தையார் பூரண சுகத்துடன் அவன் அருகில் வந்து கோயிலுக்குச் செல்வோமா என்று கேட்டார்.

நடந்த அதிசயத்தை உணர்ந்து கொண்ட சேரன் உடனே எழுந்து குளித்து விட்டு தனது தந்தையாருடன் சென்று வல்லிபுர ஆழ்வாரை மனமுருகி வழிபாடு செய்தான்.

*சு.றிசானிகா, சுன்னாகம்.*

## நிலத்தில் வாழும் மீன்



அன்பான்ட்டிடே குடும்பத்தைச் சேர்ந்த மீன்கள் தென்கிழக்கு ஆசியாவிலும், ஆபிரிக்காவின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன. மீன்கள் நீரில் உள்ள காற்றை செதில் களால் சுவாசிப்பதுதான் வழக்கம். ஆனால் இந்த மீன்கள் மட்டும் நீரை விட்டு வெளியே வந்துதான் சுவாசிக்கின்றன. அதற்கான துணைச் சுவாச உறுப்பைக் கொண்டுள்ளன. இதற்கு "லே பிரிந்த் உறுப்பு" என்று பெயர். இது செதில் பகுதிக்கு மேற்பரப்பில் கண்களுக்கு பின் பகுதியில் இருக்கும். இதில் பல மடிப்புகளைக் கொண்டே லேமெல்லேக்கள் உள்ளன.

இந்த மீன்கள் அடிக்கடி வெளிக் காற்றைச் சுவாசிப்பதற்காக நீரின் மேற்பரப்புக்கு வரும். அப்போது நாம் மூச்செடுப்பது போல அவை காற்றை உள்ளிழுத்துச் செல்லும். இந்த வகை மீன்கள் நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியவை.

*சா.ஜிந்துஜா.*

## சோமசுந்தரப் புலவர்



யாழ்ப்பாணத்தில் நவாலி என்னும் கிராமத்தில் சோமசுந்தரப் புலவர் பிறந்தார். இவர் தங்கத் தாத்தா என எல்லோராலும் அன்பாக அழைக்கப் பட்டார். சிறுவயதிலேயே பேச்சாற்றலும் விவாதத் திறமையும் கொண்டிருந்தார். ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை போன்ற பாடல்களை எளிய தமிழில் பாடினார். இவர் பிறந்த நவாலி மண்ணில் பிறந்ததையிட்டு பெருமையடைகிறேன்.

*யோ.விதுஷன்,*
*விவேகானந்தா வித்தியாசாலை, மானிப்பாய்.*

மலருக்கு அழகு மணமாம்
மனிதனுக்கு அழகு நற்குணமாம்
உணவுக்கு அழகு சுவையாம்
உறவுக்கு அழகு ஒற்றுமையாம்
வாழ்வுக்கு அழகு இலட்சியமாம்
வெற்றிக்கு அழகு நேர்மையாம்
மன்னனுக்கு அழகு வீரமாம்
மாணவனுக்கு அழகு பணிவாம்




*கு.ஸகிந்தவி, தரம்-3,*
*அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்*

CMK

## உலகின் பெரிய பாலைவனங்கள்

சஹாரா - வடஆபிரிக்கா
அரேபியன் - மத்திய கிழக்கு
கோபி - சீனா
படகோனியன் - ஆர்ஜென்டீனா
கிரேட் விக்டோரியா- ஆஸ்திரேலியா
கலஹாரி - தென் ஆபிரிக்கா
கிரேட் பாசின் - அமெரிக்கா
தார் - இந்தியா, பாகிஸ்தான்
கிரேட் சாண்டி - ஆஸ்திரேலியா
காரா - கும் - மேற்கு ஆசியா
கொலராடோ - மேற்கு அமெரிக்கா
இப்சன் - ஆஸ்திரேலியா
சொனோரன் - அமெரிக்கா
இசில் கும் - மேற்கு ஆசியா
தாக்ளா மக்கான் - சீனா
ஈரானியன் - ஈரான்
சிம்ப்சன் /ஸ்போனி - வட அமெரிக்கா
மோ ஹேவ் - அமெரிக்கா
அட்டகமா - சிலி
நமீப் - ஆபிரிக்கா

*சி. சிந்து, சுதுமலை.*

## உங்களுக்குத் தெரியுமா?


- மீன் இனங்களில் அதிக ஆண்டுகள் வாழ்வது ஸ்டார்ஜியன் என்னும் மீன். அது 100 ஆண்டுகள் வாழும்.
- திமிங்கலத்தின் மூளையின் எடை 250 இறாத்தல்கள்.
- பின்பக்கமாக நீந்தும் ஒரே மீனினம் இறால்.
- முதன்முதலாக மனிதனால் பிடித்து வளர்க்கப்பட்ட மீன் கோல்டு பிஷ்
- முதலையால் எலும்புகளையும் செரிக்க முடியும்.



அ.ஆதித்தன், தரம்-2
யாழ்ப்பாணக் கல்லூரி




கு.ஜெயராமன், தரம்-8
யாழ். மத்திய கல்லூரி



எம்.அரவிந்தா, தரம்-3
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்

## விடை தெரியுமா ? 254

### உங்களுக்கும் பரிசுகள்

1. யூதர்களின் தாயகம் என்ன பெயரால் அழைக்கப்படுகின்றது?
2. முக்கனிகள் எவை?
3. ரஷ்ய நாட்டின் ஜனாதிபதி யார்?
4. திருவாசகத்தைப் பாடியவர் யார்?
5. உலகிலேயே அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர் யார்?

சிறுவர் கதிருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### விடைகள் 252

1. தென் கிழக்கு ஆசியா
2. 28
3. நைத்திரஸ் ஒட்சைட்
4. [illegible]
5. [illegible]



### விடை தெரியுமா?

தெரிந்தால் 22.03.2014 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (252)

- ♥ செ. விஜித்தா, தரம்-10, கிராஞ்சி அ.த.க.பாடசாலை, பூநகரி.
- ♥ கு.ஸகிந்தவி, தரம்-3, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.
- ♥ அ. ஆதித்தன், தரம்-2ஏ, யாழ்ப்பாணக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களுக்கு வேண்டும் சமஉரிமை

அ.ஜீன்காந்திகா

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று பாடினான் புரட்சிக் கவி பாரதி.

சமகால உலகப் போக்கும் அதன் தாற்பரியங் களும் இன்று புறந்தள்ள முடியாத வகையில் இருக்கின்ற அதே வேளை அவற்றுடன் இணைந்து தான் பயணிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஏனெனில் யதார்த்தம் அதுவாகவே இருக்கின்றது. சமூக மாற்றங்களும், அதில் தாக்கம் செலுத்தும் அக-புற விசைகளும், அதனால் இடம்பெறும் சமூக அசை வியக்கமும் நிகழ்கால பயணங்களாகி விட்டன.

வீட்டு வேலைகளைச் செய்யவும், ஆண்களைச் சந்தோசப்படுத்தவும் மட்டுமே பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர் என்ற ஆணாதிக்கக் கருத்து மேலோங்கியிருந்த காலத்தில் கல்வியறிவு, பொருளாதாரம், சுதந்திரம், சம உரிமை போன்றவை மறுக்கப்பட்ட நிலையில் பெண்கள் நசுக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் பெண் விடுதலைக்காகப் பழங்கால கிரேக்க நாட்டைச் சேர்ந்த வைசிஸ்ட்ரா குரல் கொடுத்தார். நாடுகளுக்கிடையே நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டுவர போராட வேண்டுமென்று பெண்களைத் திரட்டினார். அதைத் தொடர்ந்து பிரஞ்ச் புரட்சியின்போது அந்த நாட்டுப் பெண்கள் ஓரணியில் திரண்டு "சுதந்திரம்-சம உரிமை-சமூக உரிமை" போன்றவை ஆண்களுக்கு இயைபாக பெண் களுக்கும் கிடைக்க வேண்டும் என்று பேரணி நடத்தினர். இவ்வாறான போராட்டங்களும் பெண்களின் உரிமைக் குரல்களும் பல்வேறு நாடுகளிலும் ஒலிக்கத் தொடங்கின. எண்ணற்ற நாடுகளும் அதனையே வலியுறுத்தின.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடும் யோசனை பரவலாக எழுந்தது: 1909 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சோசலிஸ்ட் கட்சி "தேசிய பெண்கள் தினம்" கொண்டாடப்போவதாக அறிவித்து பெப்ரவரி 28 ஆம் திகதி தேசிய பெண்கள் தினமாக அமெரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்டது. 1913 ஆம் ஆண்டுவரை இது நடைமுறையிலிருந்தது.

இந்நிலையில் அமெரிக்க நாட்டில் உள்ள கோபன் கெகன் நகரில் 1910 ஆம் ஆண்டு நடந்த சர்வதேசப் பெண்கள் மாநாட்டில் சர்வதேச மகளிர் தினம் ஒன்றை உருவாக்கும் கருத்து எழுந்தது. இந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

பின்லாந்து நாட்டு நாடாளுமன்றத்துக்கு முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பெண் உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் கூட்டத்தில் திகதி எதுவும் முடிவு செய்யப்படவில்லை.

கோபன் கெகன் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவைத் தொடர்ந்து 1911 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. ஆஸ்திரேலியா, டென்மார்க், ஜேர்மனி மற்றும் சுவிற்சர்லாந்து நாடுகளில் பேரணிகள் நடத்தப்பட்டன. சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் இதில் கலந்து கொண்டனர். வாக்குரிமை, வேலைக்குச் செல்லும் உரிமை, ஆட்சி நிர்வாக உரிமை, கல்வி உரிமை என்ற கோஷங்கள் இந்தப் பேரணியில் முழங்கின.

பெண்களின் உரிமைக்குரல் சோவியத் யூனிய (இன்றைய ரஷ்யா) னிலும் எதிரொலித்தது. 1913 ஆம் ஆண்டு முதல் பெப்ரவரி மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமையை அவர்கள் பெண்கள் தினமாகக் கொண்டாடினார்கள். முதல் உலகப் போரில் இலட்சக்கணக்கான ரஷ்ய வீரர்கள் இறந்ததைத் தொடர்ந்து பெண்கள் அமைதிக்கான போராட்டத்தில் திரண்டனர். உலகம் முழுவதும் பெண்களின் சம உரிமைக்குரல் பரவலாக ஓங்கி ஒலித்தது.

பெண்களுக்கான சமஉரிமை வழங்கும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபையும் தீவிரமாக ஈடுபட்டது. இதன் காரணமாக 1945 ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோ நகரில் நடந்த மாநாட்டில் பெண்க்ளுக்கு சமஉரிமை கொடுக்க அனைத்து நாடுகளும் முன்வர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதையடுத்துப் பெண்கள் உரிமையை நிலைநாட்ட தனி அமைப்புகள் சர்வதேச அளவில் உருவாக்கப்பட்டன. சமூக பொருளாதார ரீதியில் பெண்களுக்கு சம உரிமையும் முன்னேற்றமும் கிடைக்க இந்த அமைப்புகள் பாடுபட்டன.

ஒவ்வொரு நாட்டிலும் வேறு வேறு நாள்களில் சர்வதேச மகளிர் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இந்த நிலை யில் மார்ச் 8 ஆம் திகதியைப் பெரும் பாலான நாடுகள் கடைப்பிடித்து வந்ததால் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் மார்ச் 8 ஆம் திகதிக்கே கிடைத்தது. மேலும் பெண்களுக்குச் சிறப்புச் செய்யும் வகையில் 1975 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் ஆண் டாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டது.

பெண்களின் முன்னால் காணப்படும் சமூகப் பொறுப்புக்கள் என்ன?, இன்றைய யதார்த்த வாழ்வில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்-பிரச்சினைகள் எவை? என்ற ரீதியில் ஒரு பரந்த பார்வை தேவைப்படுகின்றது.

கடந்து வந்த எமது பாதையை ஒரு கணம் திரும்பிப் பார்க்கையில் எமது பெண்கள் ஒரு பக்கம் சுதந்திரம் என்ற மெழுகு பூசப்பட்ட காற்றையும் மறு பக்கம் வன் முறை ஒடுக்குதல்களையும் அனுப விக்கின்றனர். குடும்பம் மற்றும் வீட்டுக் கடமைகளுடன் கல்வி, தொழில் என அவர்களின் நடிபங்கு இடத்துக்கிடம் மாறுபடுகிறது. இன்று உயர் கல்வி நிலை யங்களிலும் அலுவலகங்களிலும் பெண்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாகும். ஆனால், பெண்கள் மீதான வன்முறைகள் நவீன தொழில் நுட்பவேகத்தில் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. வீராங்கனைகளாகத் திகழ்ந்த எம் பெண்கள் "பெண்" என்ற கட்டுக்குள் சமூகத்தால் அடக்கி வைக்கப்படுகிறார்கள். இருப்பினும் சுயசிந்தனை, தகவல்களின் உள் வருகை, மனிதம் என்ற உணர்வோட்டம் ஒவ்வொரு பெண்ணிடத்திலும் மேலோங்கி வளருகின்றபோது ஒவ்வொரு நாளும் இந்த உலகில் பெண்களின் நாளாகவே அமையும். ■



# சாதிக்கப் பிறந்தவர்கள் பெண்களே!

அம்பிகை பஞ்சலிங்கம்

இன்றைய உலகின் நிலைப்பாட்டை நாங்கள் ஒரு நீண்ட மலைப்பாம்புக்கு ஒப்பிட முடியும். அந்த மலைப்பாம்பின் தலை அண்டம்முதல் அணுவரை ஆராய்ந்து கொண்டு எங்கேயோ போய்க்கொண்டிருக்க அதன் வாலோ இன்றும் சாதித்துவத்தையும் பெண்ணடிமையையும் பேசிக்கொண்டு தனது வளர்ச்சியைத் தானே மட்டுப்படுத்திக் கொண்டு இருக்கிறது. இந்த இரண்டு கருத்துக்களையும் பேசுகின்ற நேரத்தில் எதையாவது புதியதைப் படைப்போம் என்கிற எண்ணம் ஏன் வர வில்லை? என்பது நகைப்புக்குரியது.

பிறக்கும் போது எல்லா உயிரும் ஒன்றுதான் ! ஏன் இந்த உலகு பெண்களைப் பிரித்துப்பார்க்கத் தொடங்கியதோ தெரியவில்லை. பெண் பேணும் தகைமை உடையவள். அகிலத்தின் மூலமாயிருக்கும் மாபெரும் சக்தியை பெண்ணாகத் தானே வழிபடுகிறார்கள் பூவைப் பெண்ணாகப் பார்க்கிறார்கள். நிலவைப் பெண்ணாகப் பார்க்கிறார்கள் எல்லாம் சரி! ஆனால் ஏனோ தெரியவில்லை பெண்ணைப் பெண்ணாகப் பார்ப்பதில்லை. பூ ,பூமி ,நிலவு என எல்லாப் பேசாப் பொருள்களாகவும் தானே பெண்ணை நோக்குகிறார்களே தவிர, அவளுக்கும் ஒரு உள்ளமிருக்கு. அவளும் ஒரு உயிர் தானே என உலகு பார்க்க மறுக்கிறது.

பெண்ணென்றாலே நினைவுக்கு வருபவன் ஒருவன் தான் சென்ற நூற்றாண்டு அந்தப் பெரும் கவிஞனையும் விழுங்கி ஏப்பமிட்டும் கொண்டது. அந்தக் கவிஞன் ஒரு தீர்க்கதரிசி. அவன் என்ன சொன்னாலும் நடக்காமல் போகாது. படைப்பதனால் கவிஞனும் ஒரு கடவுளே! ஆனால் கடவுளின் எண்ணத்தையே ஆதிமனிதன் நிராசை ஆக்கினான் தானே! அந்த விந்து தானே நாமும்! அதனால் தான் அந்த பழம் பெரும் கவிஞனின் எண்ணம் வீணானதோ புரியவில்லை.

பெண்களின் சுதந்திரத்துக்காகவும் அவளைப் புதுமைப்பெண்ணாகப் பார்ப்பதற் காகவும் அவன் பாடினான்; பாடுபட்டான். அவளது எண்ணம் நிறைவேறத் தொடங்கியபோதும் இன்றும் சில ஆபிரிக்க நாடுகளில் மூட நம்பிக்கைக்காக மார்பகச் சிதைப்பு. பெண்ணுறுப்பு சிதைப்பு என அப்பப்பா சொல்ல முடியாத வேதனையைப் பெண்கள் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்;

அண்மையில் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கும் சகுந்தலாவின் கதையை எல்லோரும் படித்திருப்பீர்கள்: கேவலம் கணவன் அவளின் கருமுட்டைகளை விற்றுத் தனது குடித் தேவையை பூர்த்தி செய்கிறானாம். கேட்கும் போதே இரத்தம் கொதிக்கிறதல்லவா...?

இன்று வளர்ந்த பெண்களை மட்டுமல்ல, சின்னஞ் சிறுமிகளையும் ஆணாதிக்க வலை விட்டுவைக்கவில்லை. கேவலம் பெண் தோற்றத்தில் பிறந்ததால் எத்தனை பிரச்சினைகள்?? அண்மையில் இந்தியாவில் 2 மாதப் பெண் குழந்தையை ஒரு கொடியவன் வல்லுறவுக்கு உட்படுத்தியிருக்கின்றான். இதைப்பற்றி என்ன சொல்ல?

அன்று அடுப்பெரிக்கும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பூட்டி வைத்தாலும் இன்று நிலைமாறி ஆண்களுக்கே சோறு போடக்கூடிய நிலையில் பெண்கள் வளர்ந்து விட்டார்கள். சிறிமாவோ தொடக்கம் இந்திரா காந்தி வரை எத்தனை பெண் பிரபலங்கள். நாங்கள் அவர்களைத்தான் பார்க்கிறோமே தவிர அவர்கள் பெண்ணாக இருந்து எத்தனை சிரமப்பட்டார்கள் என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

மகாத்மாகாந்தி, ஒரு நள்ளிரவு நேரம் ஒரு பெண் நிறைந்த அணிகலன்களுடன் தனியாகச் சென்றால்தான் அந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது என்று கொள்ள முடியும் என்றார். ஆனால் கிளின்டன் அம்மையார் பேசும் போது எப்போது ஒரு பெண் கர்ப்பப்பை இல்லாமல் பிறக்கிறாளோ அப்போதுதான் அவள் சுதந்திர மடைகிறாள் என்கிறார். ஆக எந்தத் துறையில் பெண் முன்னேறினாலும் அவள் உடலியல், உளவியல் ரீதியாக அசுத்தப்பட்டுக்கொண்டு தான் இருக்கிறாள். அப்படியென்றால் பிறக்கும் போது தொப்புள் கொடியை வெட்டுவது போல கர்ப்பப் பையையும் வெட்டி விட வேண்டி வரும்.

இது நடக்கக்கூடிய காரியமா! ஓ ஆண் சமூகமே! பெண்ணடிமைக் கருத்துக்களையும் செயலையும் செய்து உன் ஆணாதிக்கத்தை வலுப்படுத்தி உனது நேரத்தை வீணடிக்கலாமா? ஆனால் பெண்கள் அப்படியல்ல. அவர்களுக்கு நிறையக் கடமையிருக்கிறது. நீ என்ன செய்தாலும் மன்னிக்கும் மனோ தைரியமும் அவர்களிடம் தான் இருக்கிறது. அதே நேரம் எத்தனையோ புரட்சிகள், போர்களுக்கு அடித்தளமிட்டவர்கள் அவர்கள் தான் என்பதையும் நீ நினைவில் வைத்துக்கொள்!

*வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்*
*வேண்டி வந்தோமென்று கும்மியடி*
*சாதம் படைக்கவும் செய்திடுவோம்*
*தெய்வச் சாதி படைக்கவும்*
*செய்திடுவோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வதை படுகாலப் பிரகடனம்

அவஸ்தைகளின் உச்சம்
நிறைந்துபோன
ஒரு கொடுங்காலத்தின்
விம்பத்தை இனம்புரியாத ஒரு
காற்றின் உஷ்ணம்
உணர்த்தத் தொடங்கியது

யார் யாராலோ
எங்களுக்கு மாத்திரம்
பிரகடனப்படுத்தப்பட்ட
வதைபடுகாலப் பிரகடனத்தில்
பிள்ளைகளைத் தொலைத்தவர்களின்
மூச்சுக்காற்று
சூறாவளியாய் வார்த்தைக்குள்
அடங்காமல் திமிறத் தொடங்கிற்று

துயர் நிறை அரங்காடல்
நிறைந்து போன
சாட்சிய வெளியில்
கண்ணீரும், ஓலங்களும் மாத்திரமே
அஞ்ஞாத சாட்சியங்களாய்
விகாரமாய் எஞ்சி நிற்கின்றன

அந்தரத்தில் உலவும்
தொலைத்தலின் வலி
முற்றுப்பெறாத முடிவிலியாய்
ஊசலாடிக் கொண்டிருந்தது

இழத்தலின் வலி
சாதாரணமாகிப் போன
எங்கள் நிலத்தில் தொலைத்தல் வலி
கொடிதிலும் கொடிது என
வதைபடுகாலப் பிரகடனத்தின்
உச்சவலி குறித்து
தலையடித்து புலம்பிக்
கொள்கிறாள்
மூன்று பிள்ளைகளை
தொலைத்த தாயொருத்தி


மௌனங்களை மொழிபெயர்க்க
முடியாதவர்கள்
உண்மைக் கதறல்களை
மாறுதல்களாய்
மொழி பெயர்த்தார்கள்

கண்ணீரினால் நனைந்து
அனல் காற்றாய் நிறைந்து
ஓலங்களின் வெளியாய்
உருப்பெறத் தொடங்கிற்று
இந்த வதைபடுகாலப் பிரகடனம்

- வெற்றி துஷ்யந்தன்



## சொற்சிலம்பம் - போட்டி இல: 308



அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. ஒரு நாட்டுக்கு அவசியமான துறை இது
5. தோழன்
7. மரத்துண்டு.
8. புதினம்
10. ஒரு திசையின் சுருக்கம்
11. குறி
12. இது தலை காக்கும்
15. விவசாயச் செய்கை நிலம்
16. ஒன்று சேர்
17. எடை
18. ஊனம்
19. சேமம்
20. உருவில் பெரிய, ருசியான பழம் தரும் மரம்
21. தூர அலகு
22. அழுது அரற்றுதல்

### மேலிருந்து கீழ்

1. கதா காலாட்சேபம் செய்பவர்
2. கெட்டது செய்பவர்
3. ஒரு புள்
4. ஒரு கிரகம்
5. பிணம்
6. அரையின் அரை
9. நித்திரையில் வருவது
11. ஓர் இராசி
13. இதுவும் ஒரு இராசியே
14. வாய் ஓயாமல் பேசுதல்
16. தாண்டு
17. கசப்பான மரக்கறி வகை
18. நகைகளை பளபளப்பாக்க பூசப்படும் வெளிப்பூச்சு
19. பாரம்
20. சில அல்ல

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 306 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சாசுவாதம் (5) கதி (7) கத்திரி (8) கருணை (9)சதி (10) சபலம் (12) கனல் (13) புசி (15) வாரம் (16) தலித் (17) மானம் (18) கலை (19) தர (20) நானாவிதம் (22) விம்பம் (23) திசை

**மேலிருந்து கீழ்**

(1) சாகசம் (2)சுத்தி (3) வதி (4) தரிசனம் (5) கரும்புலி (6) திணை (8) கல (11) பல் (12) கரம் (14) சித்தம் (15) வானரம் (16) தலைவிதி (17) மாதவி (18) கனா (20) நாம் (21) தசை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 308**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (26.03.2014) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.308இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 30.03.2014 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 306 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கு.கஜேந்திர சர்மா,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

**2 ஆம் பரிசு**
ஏ.பெஞ்சமின்,
இல.25, வேளாங்கன்னி வீதி, சாவல்காட்டு, மன்னார்.

**3 ஆம் பரிசு**
மேரி றீற்றா பாலேந்திரா,
இல.23/27 குளக்கட்டு வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியா.

**4 ஆம் பரிசு**
ச.சாம்பவி,
உடுவில் பெண்கள் கல்லூரி, சுன்னாகம்.

**5 ஆம் பரிசு**
ஜே.சலோமி,
இல.16/15 பெரியகமம், மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

ச.ஜீவஜோதி,
இல.12, 2/4 புகையிரத நிலைய வீதி, கொழும்பு - 6

ஜெ.குபிதா,
அம்பன், குடத்தனை.

ந.பாலகுமார்,
இல.89/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற் பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ள [illegible] மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந் தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலதும் பத்தும் 1

கலாபூஷணம்
மு.மாசிலாமணி

தங்கம்மா அக்கா கண்ணீர் விட்டுக் கொண்டே ஒரு மாதிரி சமைச்சு முடிச்சுப் போட்டா. மனுசன் கேட்டாராம் "ஏன் தங்கம்மா அழுகிறாய்? நீ கேட்டது மாதிரி இரண்டு பவுணிலை சங்கிலி செய்து தாறனப்பா அழாதை" எண்டு. ஆனால் நடந்த சங்கதியோ வேறை பாருங்கோ. இப்ப யாழ்ப்பாணத்திலை வெங்காயம் குப்பை மலிவு எண்டதாலை தங்கம்மா கறியளுக்கு வெங்காயத்தைத் தாராளமாய் உரிச்சு வெட்டிப் போட்டவ எண்டதை ஐயாத்துரையர் கண்டால்தானே. காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதை மாதிரி தங்கம்மா உடனைறைக் கோட்டை மாத்தி முகத்தை முந்தானைத் தலைப்பாலை துடைத்து மூக்கையும் சீறிவிட்டா- தமிழ்ப் படத்திலை வாற சோகக் கட்டத்திலை பெண்டுகள் அழுகிற மாதிரி . ஆனால் உள்ளுக்கை நல்ல புளுகத்தோடை- "இரண்டு பவுணிலை சங்கிலி செய்யேலுமோ, குறைஞ்சது 5 பவுணிலை செய்தால்தான் சங்கிலி சங்கிலி மாதிரி இருக்கும் எண்டா. அதுக்கும் ஐயாத்துரையர், "சரியப்பா சரி, எண்டு வில்லுப்பாட்டு ரியூனிலை அப்புறாவல் குடுத்திட்டார். பெண்டுகளின்ரை கண்ணீருக்கு எவ்வளவு பவர் இருக்குது எண்டதுக்கு இது சின்ன உதாரணம். ஆனால் தங்கம்மா விட்ட கண்ணீருக்கு வெங்காயத்துக்குத் தான் தாங்கியூ சொல்ல வேணும். அது சரி விடயத்துக்கு வருவம். வெங்காயத்திலை கண்ணீரை வரவழைக்க ஓர் இரசாயனப் பொருள் இருக்குது. அது ஆவியாகி கண்ணைத் தாக்கும். அப்ப கண்ணீர் பொல பொல எண்டு கொட்டும். சினிமாப் படங்களிலை கதாநாயகி கண்ணீர் விட்டு கதறி அழுகிறதெல்லாம் கிளிசறீன் உதவியோடைதான். பொதுவாய் அடிக்கடி கண்ணீர் விட்டால் கண்ணுக்கு நல்லது எண்டு டாக்குத்தர்மார் சொல்லுவினம். ஆனால் கவலைப்பட்டுக் கண்ணீர்விடக்கூடாது. சரி. வெங்காயத்துக்கு வருவம். வெங்காயத்திலை "ப்ரொப்பேன்தையொல் ஒக்சைட்" எண்ட இரசாயனப் பொருள் ஆவியாகித்தான். கண்ணைத் தாக்கி கண்ணீரை வரவழைக்குதாம். கண்ணுக்கு அப்படியொரு தீமை இல்லைப் போலை கிடக்கு. இல்லாட்டி தங்கம்மா அக்கா தங்கச்சங்கிலியோடை தனக்கொரு கூலிங் கிளாஸ்ஸும் மெல்லோ கேட்டிருப்பா.

தங்கம்மா ஒரு கல்லிலை இரண்டு மாங்காய் விழுத்திறதிலை கெட்டிக்காறி எண்டதையும். இந்தக் கண்ணீர் விடு தூது நிரூபிச்சுப் போட்டுது பாருங்கோ. என்னெண்டு கேக்கிறியளோ- அவ விட்ட கண்ணீருக்கு வெங்காயம் மட்டும் காரணமில்லை. அடுப்பிலைளியமாட்டன்எண்டுவேலை நிறுத்தம் செய்து புகைஞ்சுக் கொண்டு கிடந்த விறகும். அடுத்த வீட்டு அழகக்கா அழகான காஸ் குக்கர் வேண்டிப்போட்டா எண்ட செய்தியும் தங்கம்மா அக்காவின்ர கண்ணீருக்கு "கற்றாலிஸ்ற்". இது என்ன புதுச் சொல்லாய் இருக்கு எண்டு மண்டையைப் போட்டு குழப்ப முதல், நானே சொல்லுறன். ஆங்கிலத்திலை இரசாயனவியல் படிச்ச ஆக்களுக்கு விளங்கும். என்ன எனக்கு விளங்கேல்லஎண்டுஉங்களிலை சில பேர் முணு முணுக்கிறது எனக்குச் சாடையாய் காதிலை விழுது பாருங்கோ. சரி, விடயத்துக்கு வருவம். கற்றாலிஸ்ட் எண்டால் தமிழிலை ஊக்கி எண்ணுவினம். அப்பவும் விளங்கேல்லையோ. இரண்டு இரசாயனப் பொருள்கள் ஒண்டோடை ஒண்டு தாக்கம் ஏற்படுத்த இந்த கற்றாலிஸ்ட் அல்லது ஊக்கி ஊக்கப் படுத்தும். ஆனால் அந்த இரசாயனத் தாக்கத்திலை பங்குபற்றுதாம். இதைப்போலைத்தான் தங்கம்மா அக்காவின்ரை கண்ணீரும் அழகக்கா வாங்கின அழகான காஸ் குக்கரும், தங்கச் சங்கிலியும் வாங்க ஊக்கியாக இருந்திருக்கு பாருங்கோ. சரி காஸ் குக்கர் எல்லாருக்கும் தெரிஞ்ச சாமான் தான்.

ஆனால் அதோடை எல்.பி.காஸ் சிலிண்டர் எண்டொரு சாமான் இருக்கெல்லோ? அதைப்பற்றி ஒரு சின்ன விளக்கம். இங்கிலீசிலை லிக்குடைட் பெற்றோலியம் காஸ் எண்ட பதத்துக்கு சுருக்கம் தான் எல்.பி.காஸ். இந்த காஸிலை என்ன இருக்கு எண்டும், எப்படித் தயாரிக்கலாம் எண்டும் அறிஞ்சிருக்கிறது நல்லது தானே? நிலத்துக்கடியிலிருந்து எடுக்கிற சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யிலிருந்து தானே எஞ்சின் ஓயில், டீசல் , மண்ணெண்ணெய், பெற்றோல் எல்லாம் சுத்தப்படுத்தி எடுக்கினம். அப்பிடி எடுக்கேக்கை பல பக்க விளைவுள்ள பொருள்களும் வரும். அதிலை ஒண்டுதான் பியூட்டேன். புறெப்பேன் எண்ட வாயுக்கள் கலந்த பொருள் தான் எல்.பி காஸ். இந்த எல்.பி. காஸ் காற்றிலும் பார்க்க பாரம் கூடியது. நிறமற்றது. நச்சுத் தன்மை அற்றது, மணமற்றது. என்ன நான் மணமற்றது எண்டு சொல்ல ஒரு மாதிரி விறைச்சுப் பாக்கிறியள். மணமற்றதை மணமாக்கினது அதை தயாரிக்கிறவர்கள். ஏன் சொல்லுங்கோ பாப்பம், காஸ் லீக் பண்ணினால் மணத்திலை கண்டு பிடிச்சு அதுக்கேற்ற நடவடிக்கை எடுக்கத்தான். அது கிடக்கட்டும். அமெரிக்காவிலை காஸ் எண்டால் பெற்றோல். அப்ப காருகளுக்கு காஸ்தான் அடிப்பினம் போலை கிடக்கு. பங்கை பாருங்கோ நான் கணக்கக் கதைச்சுப் போட்டன் எண்டு தங்கம்மா அக்கா என்னை முறைச்சுப் பாக்கிறா. அகப்பைக் காம்பையும் காட்டுறா.

நிண்டால் பிழை. நான் போட்டு வாறன் அடுத்த கிழமை சந்திப்பம். ரற்ரா பை..பை



## வேரை மறந்த விழுதுகள்

ஓங்கி வளர்ந்த ஒரு
ஒற்றைப் பனையடி
ஊர்ந்து திரியும் -
பல எறும்புகளுக்கான
சந்துகளாய் பிரிக்கப்பட்ட
சரித்திர ஒழுங்கை

சரீரத்தில் தெம்பில்லை
மேல் சட்டையில்லை
சல்லடை போடப்பட்ட
சாறம் சரிந்து கிடக்க
ஒற்றைப் பனையடி கட்டக் கிழவன்
ஒய்யாரமாக உறங்கிக்
கொண்டிருந்தான்
பனை மட்டைப் பஞ்சணையில்

கிட்டச் சென்று தட்டிப் பார்த்தேன்
ஐயா என்று திடுக்கிட்டு திகென்று
சொன்னான் வா மகனே வா! என்று

பாசத்தின் இதிகாசம்
பரிந்துரைத்தார் ஏன் ஐயா
இப்படிப் படுக்கை? வினா
ஒன்று கொடுத்தேன்

இதை மட்டும் கேளாயம்பி
பதின்மூன்று வயதில்- என்
மூத்தவன் படுததுறங்கிய
பனை மட்டைப் பஞ்சணையிது
இப்போ அவன் பாரிஸ் நாட்டில்
என் இளையவள் இதிகாசக் காதலால்
இருப்பிடமற்றாள்- கடையவன்
கனடா போய் என் கதை மறந்தான்
என்னவள் இறைபதம் சென்று
இரைட்டு மாதம்

சரீரம் சாயுமுன் சரித்திரம்
எழுத வேணும்- என்
சாவும் பனை மட்டைப் பல்லக்கென்று
சரி போடாம்பி நீயெதுக்கு
வேர் மட்டும் விழுது காற்று
ஊன்றிக் கிடக்கு பொழுது சாயுமுன்
சந்துகளால் பிரிக்கப்பட்ட
சரித்திர ஒழுங்கையை கடந்துவிடு.....

- பளையூர் அசோக்

### மேடம்



அடகு வைத்த பொருள்களை மீட்பதற்கான, பணவசதி திருப்திகர அளவில் கிடைக்கும். எதிர்மறையாக இருந்த செயல், அனுகூலம் தருவதாக மாறும். இல்லறத்துணையின் கருத்துக்கு, உரிய முக்கியத்துவம் தரவேண்டும். தொழில், வியாபார நடைமுறை வளர்ச்சி சுகமாக இருக்கும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, சம்பள உயர்வு கிடைக்கும். மாணவர்கள் வெளியிடங்களில் சுற்றுவதைக் குறைப்பதால், படிப்பில் கவனம் வளரும்.

### இடபம்



உங்கள் பேச்சு, செயலில் வசீகரம் உருவாகும். புதியவர்களின் நட்பு. உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். பூர்வீக சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வியல் நடைமுறை இருக்கும்.

### மிதுனம்



கடந்த தினங்களில் சரி எனக் கருதி எடுத்த சில முடிவுகளை மறு பரிசீலனை செய்கின்ற எண்ணம் கொள்வீர்கள். உங்கள் நலனில் அக்கறை உள்ளவரின் ஆலோசனையையும் கேட்பது நல்லது. எதிர்மனப்பாங்குடன் பேசுபவரிடம் விலகுவது நல்லது. இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். பணியாளர் ஒருமுகத்தன்மையுடன் பணிபுரிவதால், குளறுபடி வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.

### கடகம்



ஆடம்பரச் சிந்தனைகளால், பணச்செலவில் தாராள குணம் பின்பற்றுவீர்கள். இல்லறத்துணையின் கவனக்குறைவான பணிகளை பெருந்தன்மையுடன் சரிசெய்வதால், குடும்ப ஒற்றுமை வளரும். தொழிலில் வளர்ச்சிபெற, கிடைக்கின்ற வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும். பணியாளர், பணியிடத்தில் தேவையற்ற விவாதம் பேசக்கூடாது. மாணவர்கள் அக்கறையுடன் படிப்பதால் மட்டுமே தேர்ச்சி சீராகும்.

### சிங்கம்



செயல்களில் லட்சியத்தின் வெளிப்பாடு மிகுந்திருக்கும். பேசுவதில் நிதானம் பின்பற்றுவதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். எதிர்ப்பாளரால் உருவாகிய தொந்தரவு பலமிழக்கும். இல்லறத்துணையின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் குறைத்து உற்பத்தி, விற்பனையில் இலக்கை அடைவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைப்பதில் தாமதம் இருக்கும். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக் கூடாது.

### கன்னி



மதி நுட்பத்துடன் பணிபுரிந்து எதிர்காலத்தில் பெற வேண்டிய நன்மையை உறுதி செய்வீர்கள். உங்கள் சொல்லுக்கு மரியாதை தருபவரிடம் மட்டும், பொது விடயம் பேசலாம். வீட்டிற்கு வரும். உறவினர்களை உபசரிப்பதில் தாமதம், தயக்கம் உருவாகாமல் உரிய அன்பு பாராட்ட வேண்டும். மாணவர்கள் ஆசிரியரின் கண்டிப்புக்கு ஆளாகாதவாறு படிப்பில் கவனம் கொள்ளவேண்டும்.

### துலாம்



நீண்ட நாள் மனதில் இருந்த எண்ணம் செயல்வடிவமாகும். புதியவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி பெற, சில மாற்றம் செய்வீர்கள். புத்திரரின் எதிர்கால நலனுக்குத் தேவையான பணி மேற்கொள்வீர்கள். கூடுதல் உழைப்பால், தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வர். மாணவர்கள் படிப்பில் உரிய கவனம் கொள்வதற்கான சூழ்நிலை இருக்கும்.

### விருச்சிகம்



சுபநிகழ்ச்சி நடத்துவதிலும், கலந்து கொள்வதிலும் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் ஆலோசனை, உதவி மனதில் நம்பிக்கையை அதிகரிக்கும். இல்லறத்துணை ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். மாணவர்கள், சாகச விளையாட்டுகளில் ஈடுபடுவதைத் தவிருங்கள்.

### தனுசு



நீங்கள் பேசும் வார்த்தை இனியவையாக அமைந்து பழகுபவர்களிடம் கூடுதல் மதிப்பு, மரியாதை பெற்றுத் தரும். வெளியூர்ப் பயணத்தினால் சில நன்மை வந்து சேரும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர், புதிய சொந்தங்களை அறிமுகம் செய்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அபரிமிதமாகும். மாணவர்கள் நன்றாகப் படித்து ஆசிரியர், பெற்றோரிடம் பாராட்டு பெறுவர்.

### மகரம்



எந்தச் செயலையும் உரிய பரிசீலனைக்கு பின் மேற்கொள்வது நற்பலன் பெற உதவும். அயல் வீட்டாரின் விவகாரங்களில் கருத்து கூற வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகின்ற இடையூறை தாமதமின்றி சரி செய்யவும். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப் படுத்துவதால் பணி இலக்கு சீராக நிறைவேறும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் கொள்வது நல்லது.

### கும்பம்



வாழ்வில் தடையாக இருந்த சில விடயங்கள் விலகி நன்மை உருவாகும். உறவினர்களிடம் பேசுவதில் அலட்சிய குணம் தவிர்ப்பது நல்லது. இல்லறத்துணை நல்அன்பு பாராட்டுவார். தொழிலில் வளர்ச்சி பெற, மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள். பணியாளர்கள், பணியிடத்தில் தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். பெண்கள், குடும்பச் செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படுத்துவர். மாணவர்கள் புதிய பயிற்சி முறையைப் பின்பற்றி திட்டமிட்ட தேர்ச்சியைப் பெறுவர்.

### மீனம்



பொது இடங்களில் நண்பரிடம் அதிக நேரம் பேசல், நிகழ்வுகளை [illegible] பாதுகாக்கலாம். பணிகள் நிறைவேற உருவாகின்ற புதிய வாய்ப்பை தவறாமல் பயன்படுத்த வேண்டும். தொழில், வியாபார நடைமுறை சிறக்க சிலமாற்றம் பின்பற்ற வேண்டியிருக்கும். பணியாளர் உடல்நலம் பேணுவதால்,. பணியில் ஆர்வம் வளரும். மாணவர்கள் ஆசிரியரின் கண்டிப்புக்கு ஆளாகாதவாறு பொறுப்புணர்வுடன் படிக்க வேண்டும்.

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி...?

16.03.2014 முதல்
22.03.2014 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இசைத்துறையை மற்றவர்களுக்கும் போதிக்க வேண்டும் என்பதில் எனக்கு அதிக ஆர்வமுண்டு. கலைகள் ஒரு தலை முறையோடு முடிவுறுபவை அல்ல. அவை அடுத்த சந்ததியினருக்கும் கொண்டு செல்லப்பட வேண்டியவை. இதனைச் சிந்தித்தே நான் அதனைப் போதிக்கத் தொடங்கினேன்.

# கலைகளை அடுத்த சந்ததியினருக்கும் கொண்டு செல்ல வேண்டும்...

## கூறுகிறார் இசைத்துறை வித்தகர் திருமதி கோகிலத்வனி விஜயராகவன்

நேர்கண்டவர்
தட்சா. ஜோ

திருமதி கோகிலத்வனி விஜயராகவன். யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த இசைக் கலைஞர்களில் ஒருவரான என். எஸ்.உருத்திராபதியின் பேர்த்தியாவார். இசைத்துறை வித்தகரான இவர் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் இசை வகுப்புக்களை இலவசமாக நடத்தி வருகின்றார். அண்மையில் இவரை சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

### இசைத்துறைப் பிரவேசம்

நான் பிறக்கும் போதே இசைக் குடும்பத்தில் பிறந்ததை ஒரு பாக்கியமாகவே கருதுகின்றேன். இந்நிலையில் எனது கல்விக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் களம் அமைத்துத் தந்தன. பின்னர் உயர்கல்விக்காக இந்தியா சென்று அடையார் பல் கலைக்கழகத்தில் இசைத் துறையைப் பயின்றதுடன் சென் னைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் இணைந்து கல்வியை மேற் கொண்டேன். இதுவே எனது கல்விப் பயணம்.

### இசைத் துறையில் குரு

எனது பேரனாரிடமிருந்து எனது தாயார் கற்றுக் கொண்ட இசையை அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன். இவரைத் தவிர நான் குரு என்று குறிப்பிடுவதானால் மாலினி ஸ்ரீனிவாசனை இவ்விடத்தில் நினைவு கூர விரும்புகின்றேன்.

இசைத்துறையை மற்றவர்களுக்கும் போதிக்க வேண்டும் என்பதில் எனக்கு ஆர்வம் அதிகமுண்டு. கலைகள் ஒரு தலை முறையோடு முடிவுறுபவை அல்ல. அவை அடுத்த சந்ததியினருக்கும் கொண்டு செல்லப்பட வேண்டியவை. இதனைச் சிந்தித்தே நான் அதைப் போதிக்கத் தொடங்கினேன். இன்று யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரத்தில் ஐம்பதுக்கும் குறையாத மாணவர்களுக்கு இசையைக் கற்பிக்கின்றேன் என நினைக்கும் போது மகிழ்சியாக உள்ளது. அதிலும் இலவசமாக கற்பிக்கும்போது ஒரு அமைதி ஏற்படுகின்றது. அதையே நான் பெரிதும் விரும்புகின்றேன்.

நிரந்தரமான தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள் வரவில்லை எனக் கூறமாட்டேன். கிழக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த அழைப்பை ஏற்று ஒரே யொரு நாள் மட்டுமே பணிக்குச் சென்றேன். பின்னர் ஈடுபாடு இல்லாமற் போய்விட்டது. இதற்குக் காரணம் கலையை நான் ஒரு தொழிலாகக் கருதவில்லை. வேலைக்குச் செல்லவில்லை அல்லது விரிவுரையாளராகவில்லை என்ற கவலை என்னை ஒருபோதும் ஆட்கொண்டதில்லை. எனது தாயாரும் இசை ஞானிதான். ஆனால் அவரும் அரச பணிக்குச் செல்லவில்லை. அதே நிலைமைதான் எனக்கும். இதன் காரணமாகவே நான் எனது ஊரில் உள்ள மாணவர்களுக்கு இசையைப் புகட்டி வருகின்றேன்.

### பிருந்த கானம் உருவான கதை

நான் பிருந்த கானத்தை ஆரம்பித்தது கொழும்பில்தான். 1990 களில் நான் மாணவர்களுக்கு இசையைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். அப்போது தான் திணைக் களத்தில் எமது நிறுவனத்தைப் பதிவு செய்யுமாறு தெரிவிக் கப்பட்டது. 1996ல் எமது நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. வாய்ப் பாட்டு மட்டுமன்றி இசைக் கருவி களையும் நாம் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கின்றோம்.

### இசைத்துறையில் சாதனை

இலங்கையில் முதற்தடைவையாக மென்டலீன் வாத்தியக் கருவியைப் பயின்று அரங்கேற்றியவர் எனது மாணவர் என இவ்விடத்தில் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். சிவகுமார் விஸ்வநாதக் குருக்கள் என்ற மாணவரே அவர். அவர் இந்தியாவிலும் இசைத் துறையில் பயிற்சி பெற்றார். இன்று அவர் ஒரு கலைஞர் என்பதில் பெருமைப்படுகின்றேன்.

### சந்தித்த சவால்கள்

எனது தாயார் வழியால் நான் இசைக் குடும்பத்தை சேர்ந்தவள். இந்த வகையில் என்னால் இசையைக் கற்கத்தான் முடிந்தது. ஆரம்பத்தில் என்னால் அதை எவ்வாறு வெளியே கொண்டுவரப்போகின்றேன் எனத் தெரியாத நிலையில் தான் இருந்தேன். இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது ஒரு சில கலைஞர்கள் குறித்த தப்பான அபிப்பிராயமாகும். நிறையக் கற்கத் தொடங்கினால் வெளி உலகில் தொடர்புகள் அதிகரிக்கும். அதனால் பிரச்சினைகள் உருவாகும் என்ற சிலரின் வாய்ச் சொற்கள் என்னை முடக்கத் தொடங்கின. வீட்டிலும் என்னை எனது தாயார் முதலில் கட்டுப்படுத்தத் தொடங்கினார். பின்னர் அதை எல்லாம் தகர்த்தே என்னால் இன்று இந்த நிலைக்கு வர முடிந்துள் ளது.

தற்போது மாவிட்டபுரத்தில் அற நெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இசை மற்றும் வாத்தியக் கருவி களில் பயிற்சி அளித்து வருகின்றேன். அத்துடன் பாடசாலை மற்றும் பல்கலை மாணவர்களும் கல்வி கற்கின்றனர். அவர்களிடம் பணம் ஏதுவும் அறவிடுவதில்லை. எமது இந்த கலைச் செயற்பாட்டில் பலர் எமக்கு ஆதரவளிக்கின்றார்கள். மனம் நிறைவாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தேர் மற்றும் சிறப்பு தினங்களில் ஆலயத்தில் எமது மாணவர்களின் இசை நிகழ்ச்சிகள் நடை பெறும். இவை தவிர அனுசரணையாளர்களுடனும் எமது நிகழ்சிகள் அரங்கேறி வருவதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

உண்மையில் யாழ்ப்பாண இசைத்துறை மாணவர்களைப் பாராட்டியே ஆகவேண்டும். மிகவும் ஆர்வத்தோடு இருக்கின்றனர். யாழ். மண் போரில் இழந்தவைகள் பல. ஆனால் அவர்களின் இசை ஆர்வம் கொஞ்சமும் விலகாமை கண்டு வியக்கின்றேன். நான் அவர்களுக்கு சொல்ல விரும்புவது ஒன்றுதான்.

வெறுமனே வாய்ப்பாட்டை மட்டும் கற்றுக் கொள்ளாமல் இசைக் கருவிகளை இசைக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் நாம் கற்றுக் கொள்ளும் இசைக் கல்வி பூரணமடைகின்றது. இதை மாணவர்கள் கவனத்தில் கொண்டால்போதும். அவர்கள் இசைத்துறையில் வல்லுநர்கள் ஆகிவிடுவார்கள்.

### ஏனைய பகுதிகளில் வகுப்புக்கள் நடத்தும் திட்டம்

எமக்கு மாணவர்கள் எங்குள்ளார்கள் என்பது முக்கியமில்லை. வகுப்புக்களை நடத்துவதற்கு இட வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் நிச்சயமாக யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் எம்மால் வகுப்புக்களை நடத்த இயலும். அவ்வாறு ஏதும் செய்ய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ள முடியும்.



# கற்பிழந்த சட்டம்



சட்டம்
ஏழைகளுக்கு சவக்குழி
பணக்காரர்களுக்கு
நந்தவனம்

சட்டம்
வறியவனுக்கு தீ மிதிப்பு
வசதியானவனுக்கு
பல்லக்கு

சட்டம்
கோழைக்கு போர்க்களம்
கோடீஸ்வரனுக்கு
மாளிகை வாசம்

சட்டம் ஒருமைப்பாட்டுக்கு
உருவாக்கப்பட்டதா?
பஞ்சத்தால்
பழிவாங்கப்பட்டவர்களுக்கு
எதிராக வீசப்படும்
போர்வாளா?

பொருளாதார மிருகம்
வறுமையுடைய வயிறுகளை
அதிகாரத்தின் கால்கொண்டு
நசிப்பதுதான் சட்டமா?

விபசாரம் புரிந்தவள் மீது
கற்கள் வீசப்பட்ட போது
"பாவம் செய்யாதவர்
எவராவதுஇருந்தால்
இவள் மீது கற்களை
வீசுங்கள்" என்றார் யேசு

காக்கிச் சட்டைக்கும்
காசுள்ளவனுக்கும்
சட்டம்தான் கவசம்
இந்தச் சட்டம்
தேசத்தின் ஒழுக்கத்தையோ
நீதியையோ காப்பற்றவில்லை
ரத்தத்தில் தோய்ந்த
ஆடைகளை அதிகம்
இதுதான் நெய்து
கொடுத்தது நமக்கு

சட்டமென்னும் கழுகுவாயில்
அதிகம் கொத்தி
உண்ணப்படுவது
ஏழை மனிதர்கள்தான்
குற்றங்கள் விளைவதற்கு
நிலங்களை உருவாக்கிவிட்டு
சட்டமென்னும் அரிவாளால்
அறுவடை செய்வதை நிறுத்துங்கள்

வலுவிழந்தோன்
சட்டத்துக்குள்
ஊன்று கோல் தேடுகிறான்
வல்லமையுள்ளோன்
சட்டத்தைப்
போர்வைகளாக்குகிறான்

வாழத் தெரியாமல்
செத்துக் கொண்டிருக்கும்
ஏழைகளுக்கு சட்டத்தால்
சவக்குழி தோண்டாதீர்கள்

ஒடுக்கப்பட்டவர்களின்
மூச்சிலே ஒளிந்துபோகும்
உங்கள் சட்டம்
கற்பிழந்த சட்டத்தை
முதலில் தூக்கிக்
குப்பையில் போடுங்கள்

எம். நேதா,
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின்

## ஏகாதிபத்திய எதிர்ப்பு



சந்திரசேகர ஆசாத்

அண்மைக் காலங்களில் இலங்கையின் அரச தரப்பிலிருந்து பல முனைகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. குறிப்பாக இவை அமெரிக்காவை மையமாகக் கொண்டு பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொட்டு அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மஹிந்த சமரசிங்க ஆகியோர் தீவிரம் காட்டி வருகின்றனர். இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என பிரிட்டன் அழுத்தம் கொடுக்கும் எனத் தெரிவித்ததையடுத்து. இலங்கை சார்பில் பிரிட்டன் இலங்கையைத் தனது குடியேற்ற நாடாகக் கருதுகிறது எனக் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டன.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அதன் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்பும், அமெரிக்கத் தீர்மானத்தின் முன்வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பின்பும், இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல்கள் வலுப்பெற்று வருகின்றன. அண்மையில் மேல் மாகாண சபையின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கம்பஹாவில் இடம்பெற்ற போது உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் மக்களுக்கு மட்டுமே தலை வணங்குவதாகவும், ஏகாதிபத்திய சக்திகளுக்கு தலை சாய்க்கப் போவதில்லை எனவும் ஆக்ரோசமாகத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் தன்னை மின்சாரக் கதிரையில் ஏற்றவோ அல்லது தூக்கு மேடைக்கு அனுப்பவோ எவராலும் முடியாது எனச் சவால் விட்டார்.



அவர் மக்களுக்குத் தலை வணங்கும் விதம் பற்றி மக்கள் ஏற்கெனவே தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர்.

அவர் கட்டுநாயக்காவில் கட்டாய ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய தொழிலாளர் மீதும், நீர்கொழும்பில் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய மீனவர்கள் மீதும் சுத்தமான குடிதண்ணீர் கோரிப் போராடிய மக்கள் மீது வெலிவேரியாவிலும் குண்டர்களையும் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் ஏவிவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி உயிர்களைப் பலி கொண்டு மக்களுக்குத் தலை வணங்கிய விதத்தை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. போரின் இறுதி நாள்களில் அப்படியான தலைவணங்கலை அவர் மேற்கொண்டார் என்றே பல நாடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்காவோ. பிரிட்டனோ அல்லது வேறு எந்தவொரு நாடோ மின்சாரக் கதிரை பற்றியோ. தூக்கு மேடை பற்றியோ இதுவரை எதுவுமே குறிப்பிட்டதில்லை. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ, தான் மின்சாரக் கதிரைக்கோ தூக்கு மேடைக்கோ அஞ்சாத ஒரு மாபெரும் வீரனாகத் தன்னை சிங்கள மக்கள் மத்தியில் காட்டுவதில் தீவிரம் காட்டி வருகிறார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி திருமதி தமரா குணநாயகம் இன்னும் ஒரு படி மேலே போய், அமெரிக்கா தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாகவோ மனித உரிமைகள் சம்பந்தமாகவோ உண்மையில் அக்கறை காட்டவில்லை எனவும் அவற்றைப் பயன்படுத்தி இலங்கையில் தனது தளத்தை நிறுவும் முகமாகவே செயற்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார். இவர் 2012 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவையில் சரியான முறையில் இலங்கையைப் பாதுகாக்கத் தவறியவர் என்ற குற்றச்சாட்டில் பதவி இடமாற்றம் செய்யப்பட்டவர். அவரும் இப்போது ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரலை வெளியிட்டுள்ளார்.

உண்மையிலேயே இலங்கை ஒரு காலத்தில் தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தது என்பதை எவரும் மறந்துவிட முடியாது. அமெரிக்க எரிபொருள் நிறுவனங்களைத் தேசிய மயமாக்கியமை முதற் கொண்டு, அந்நிய நிறுவனங்களின் தோட்டங்களைத் தேசிய மயமாக்கியமை, இலங்கையிலிருந்து பிரிட்டிஷ் தளங்களை அகற்றியமை, வங்கிகளைத் தேசிய மயமாக்கியமை போன்ற துணிச்சலான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டது.

அவற்றின் காரணமாக இலங்கை பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்ட போதிலும் முன்னாள் பிரதமர்களான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவோ, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவோ அவற்றுக்குப் பணிந்து போய்விடவில்லை. அதன் காரணமாக இலங்கை சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரத்தை நோக்கி வேகமாக முன்னேறியது.

எல்லாவற்றையும் விட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைவியாக இருந்தபோது, அந்த அமைப்பு ஏகாதிபத்திய நாடுகளுக்குப் பெரும் சவாலாக விளங்கியது. அது அடிப்படையில் ஏகாதிபத்திய சுரண்டலிலிருந்து விடுபட்டு ஒரு சுதந்திரப் பொருளாதார அமைப்பைக் கொண்ட ஒரு நாடாக இலங்கையை உருவாக்க நேர்மையாக உழைத்த காலம்.

ஆனால் இன்று இலங்கையின் சகல பொருளாதார மூலங்களும் ஏகாதிபத்திய நுகத்தடியில் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டு விட்டன. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் அந்நிய முதலீடுகளை ஊக்குவித்தல் ஒரு பிரதான பொருளாதார வழிமுறையாகியது. அவர் அன்று தொடக்கி வைத்ததை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு பல மடங்கு விரிவுபடுத்தி இன்று இலங்கையின் பொருளாதாரம் முழுமையாக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நிலைக்கு மாறிவிட்டது.

இன்று இலங்கையின் தேசிய வருமானம் நான்கு துறைகளில் கிடைக்கப் பெறுகின்றது. சுற்றுலாத்துறை, மனித உழைப்பை விற்பது. அதாவது வெளிநாட்டு வேலை வாய்ப்பு, தைக்கப்பட்ட ஆடைகள் ஏற்றுமதி, தேயிலை ஏற்றுமதி என்பனவே இந்த முக்கிய நான்கு துறைகளுமாகும். இவை நான்குமே ஏகாதிபத்திய நாடுகளிலேயே தங்கியுள்ளன. ஏகாதிபத்திய நாடுகள் கைவிடுமாயின், இலங்கை தாங்க முடியாத பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்படும். பட்டினிச் சாவு போன்ற அவலங்கள் தவிர்க்க முடியாதவையாகிவிடும்.

இலங்கையின் சுற்றுலாத்துறையில் மேற்கத்தைய நாடுகளே பெருமளவில் முதலீடு செய்துள்ளன. இலங்கையில் இருக்கும் ஐந்து நட்சத்திரச் சுற்றுலா விடுதிகள் அனைத்துமே அந்நிய நாட்டுப் பல்தேசிய நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. அவை சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்கள், மதுவகைகள், சிகரெட்டுகள் என்பவற்றை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கின்றன. அதுமட்டுமன்றி இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 80 வீதத்துக்கும் அதிகமானோர் மேற்கு நாடுகளிலிருந்தே வருகை தருகின்றனர்.

இலங்கை உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்புநிலைப்பாட்டை எடுக்குமானால் இலங்கையின் சுற்றுலாத்துறை விழுந்து படுத்துவிடும். ஏகாதிபத்திய நாடுகளுடனான உறவுகள் துண்டிக்கபடுமானால் இலங்கைக்கு அதிகூடிய அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் சுற்றுலாத்துறை வருமானத்தை இல்ங்கை முற்றாகவே இழந்துவிடும் நிலை ஏற்படும்.

தைக்கப்பட்ட ஆடைகளில் 60 வீதமானவை அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆடை உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள், துணிகள், நூல் என்பன போன்ற முக்கிய மூலப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. மின்சாரமும் மனித உழைப்பும் மட்டுமே இலங்கையால் வழங்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம், ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை நிறுத்திய பின்பு பல ஆடைத் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டு விட்டன. ஏகாதிபத்திய நாடுகளுடன் பொருளாதார உறவு துண்டிக்கப்படுமானால் முழு ஆடைத் தொழிற்சாலைகளுமே மூடப்படும் அபாயம் ஏற்படும்.

**இன்று இலங்கையின் சகல பொருளாதார மூலங்களும் ஏகாதிபத்திய நுகத்தடியில் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டு விட்டன.**

இதன் காரணமாக இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானத்தில் பெரும் இழப்பு ஏற்படுவதுடன், பல்லாயிரக் கணக்கானோர் வேலைகளை இழக்கும் நிலையும் ஏற்படும்.

தேயிலைத் தோட்டங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமை, மீள்நடுகையில் போதிய அக்கறை காட்டாமை என்பன காரணமாக தேயிலை உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சியடைந்து வருகிறது. அத்துடன் தேயிலையின் தரமும் நலிவடைய ஆரம்பித்துவிட்டது. மத்திய கிழக்கே இலங்கையின் பிரதான தேயிலைச் சந்தையாக இருந்து வந்தது. தற்சமயம் அங்கு நிலவும் குழப்பங்கள் காரணமாக தேயிலை வர்த்தகம் வீழ்ச்சியடைந்து விட்டது. எனவே தேயிலை வர்த்தகத்தில் இப்போது பிரிட்டனையும் ரஷ்யாவையும் இலங்கை நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பது நிரந்தரமான வருவாய் வாய்ப்பு என்று சொல்லிவிட முடியாது. ஓர் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்படுமானால் பலர் வேலையிழக்கும் நிலை தோன்றி விடும்.

எப்பிடியிருப்பினும் இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய அந்நிய செலாவணியில் பெரும் பங்குக்கு இன்று இலங்கை ஏகாதிபத்திய நாடுகளிலேயே தங்கியுள்ளது. இப்படியான நிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது சிங்கள மக்களை ஏமாற்றும் ஒரு போலிப் பரப்புரையாகும்.

ஏகாதிபத்திய நாடுகளுடன் முரண்பட்டால் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் கைகொடுக்கும் எனப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் நம்புகின்றனர். அவர்கள் நம்புகின்றார்கள் என்பதை விட நம்ப வைக்கப்படுகின்றனர் என்பதுதான் உண்மை.

இன்று சீனா பழைய மாஓசேதுங் காலத்துச் சீனா அல்ல. அக்காலத்தில் சீனா வளர்ச்சியடைந்து வரும் நாடுகளை ஏகாதிபத்திய சக்திகளின் சுரண்டலிலிருந்து விடுவிக்கும் முகமாக அவற்றை வலுவான அணியாக உருவாக்குவதில் பாரிய பங்களிப்பை வழங்கியது. இப்போது அந்த நிலைமை இல்லை. தற்சமயம் சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார வல்லரசாகத் திகழ்கிறது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தனது பொருளாதார அரசியல் மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதில் குறியாகச் செயற்பட்டு வருகிறது.

தைக்கப்பட்ட ஆடைகள், விளையாட்டுப் பொருள்கள் என்பவற்றின் மிகப் பெரும் சந்தையாக இன்று சீனாவுக்கு அமெரிக்காவே விளங்குகிறது. எனவே இலங்கைக்காக சீனா அமெரிக்காவைப் பகைக்கும் என யாராவது எதிர்பார்த்தால் அது வெறும் ஒரு நப்பாசையாகவே இருக்க முடியும். சீனா, ஈராக்கின் சதாம் ஹூசைனுக்கும், லிபியாவின் கடாபிக்கும், பேராதரவு கொடுப்பதாகவே காட்டிக் கொண்டது. அந்த நாடுகளில் அமெரிக்கா படையெடுத்து ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்திய போது சீனாவோ, ரஷ்யாவோ தமது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்துக் கூட அவற்றைத் தடுக்க முயலவில்லை.

எப்படியிருந்த போதிலும் இலங்கையால் ஏகாதிபத்திய நாடுகளைப் பகைக்க முடியாது. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது சிங்கள மக்களை ஏமாற்றும் ஒரு நாடகமே.

அடிப்படையில் இலங்கை எதிர்ப்பது ஏகாதிபத்தியத்தையல்ல. அது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையே எதிர்க்கிறது. அதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு வர்ணம் பூசி ஏமாற்றுகிறது. இன்றும் இலங்கை ஏகாதிபத்திய முதலீடுகளுக்கு கதவைத் திறந்தேதான் வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரசியலில் அழகிரி

## திகைத்துப் பார்த்து நிற்கிறது திமுக



வெள்ளிக்கிழமை அதிகாலை திடீரென ரஜினியை சந்தித்தார் மு.க.அழகிரி. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து அவர் வெளியேற்றப்பட்ட சூழ்நிலையில் இந்தச் சந்திப்புப் பெரும் பரபரப்பைக் கிளப்பியது. அவருடன் மகன் துரை தயாநிதி, மாநிலங்களவை உறுப்பினர் கே.பி.ராமலிங்கம் ஆகியோரும் ரஜினியுடனான சந்திப்பில் உடனிருந்தனர். சுமார் 20 நிமிடங்கள் கழித்து மூவரும் வெளியே வந்தனர்.

கட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் அழகிரி - ரஜினி சந்திப்பு புதிய கட்சிக்கான தேர்தல் நகர்வாக இருக்குமோ என்ற ஊகங்களுக்கும் இடமில்லாமல் இல்லை. சந்திப்புக் குறித்துச் செய்தியாளர்களிடம் பேசிய அழகிரி, "என் மகன் படம் எடுக்கப் போகிறான். அதைப் பற்றிப் பேச வந்தேன். கோச்சடையான் பற்றியும் பேசினோம். அரசியல் பேசவில்லை" என்றார் சிரித்துக்கொண்டே. ஆனால் உள்ளே நிறையவே அரசியல் பேசப்பட்டது என்கின்றன தகவல் அறிந்த வட்டாரங்கள்.

### பாஜகாவுக்கு ஆதரவு

இந்த அரசியல் நகர்வுகள் பரபரப்புகள் குறித்து அழகிரி தரப்பில் கூறப்பட்டதாவது: "கட்சி தூக்கி எறிந்த பின்னர் அழகிரியின் தற்போதையத் திட்டம், திமுகவை மூன்றாவது இடத்துக்கு தள்ளுவதும் - அதன் மூலம் தனது இழப்பை கட்சிக்குப் புரியவைப்பதும்தான். அதற்காகவே டில்லியில் அவர் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்தார். அவரிட்ம் தென் மாவட்டம் முழுவதும் பாஜக வெற்றிபெறத் தான் உதவி புரிவார் என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல்தான் அழகிரி, நடிகர் ரஜினிகாந்தையும் சந்தித்தார். அவரைச் சந்திக்க கடந்த வியாழக்கிழமை நேரம் கேட்கப்பட்டது. உடனே நாளைக் காலை 10.30 மணிக்கு ரஜினிகாந்தின் போயஸ் கார்டன் வீட்டில் சந்திக்கலாம் என்று ரஜினி தரப்பில் சொல்லப்பட்டது. அதன்படியே அழகிரி ரஜினிகாந்தை சந்தித்தார்.

ரஜினியிடம் அழகிரி, *1996ஆம் ஆண்டு கிடைத்த வாய்ப்பை நழுவ விட்டீர்கள். அதன் பின்பு இப்போது காலம் கனிந்துள்ளது. விஜயகாந்த் அரசியலுக்கு வந்து 10 சதவீதம் வாக்குகளைப் பெறும்போது நீங்கள் அரசியலுக்கு வந்தால் 35 சதவீதம் வாக்குகளையாவது அள்ளலாம். தமிழகத்தில் சாதி, மதம் இவற்றுக்கு எல்லாம் அப்பாற்பட்டு உங்களுக்கு மட்டுமே மக்களின் செல்வாக்கு இருக்கிறது. எனவே, தயங்காமல் அரசியலுக்கு வாருங்கள். நான் உங்களுக்கு தோள் கொடுக்கிறேன். இப்போதும் 40 சதவீதம் திமுகவினர் என்னுடன் இருக்கிறார்கள். மேலும் 10 சதவீதம் பேர் ரகசியமாக எனக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்* என்று சொன்னார்.

ரஜினி தரப்பில் பேசியவர்கள், ரஜினி காரணம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டார். அவர் அரசியலில் இறங்க நினைத்திருந்தால் எப்போதோ இறங்கியிருப்பார். அழகிரி சில விடயங்களைச் சொன்னபோது அமைதியாகக் கேட்டுக் கொண்டார். அவருக்கு அரசியலில் ஆர்வம் இல்லை என்பதுதான் உண்மை. கோச்சடையான் பற்றி இருவரும் நிறையப் பேசினார்கள் என்கின்றனர். இந்த சந்திப்பின்போது உடன் இருந்த கே.பி.ராமலிங்கத்திடம் ஒரு குட்டிப் பேட்டி கண்டோம்.

### நாளை அறிவிப்பு

*கட்சியிலிருந்து அழகிரி நீக்கப்பட்டுள்ள நிலையில் அவருடன் டில்லி சென்று பிரதமர், பாஜக தலைவர் ராஜ்நாத் சிங், இப்போது நடிகர் ரஜினிகாந்த் இவர்களை எல்லாம் சந்தித்திருக்கிறீர்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?*

அண்ணன் அழகிரி கட்சியில் இருந்து நீக்கப்பட்டதால் திமுக தலைவர் கலைஞரின் பிள்ளை இல்லை என்றாகிவிடுமா? எனது 32 வருட கால அரசியல் வாழ்க்கையில் அண்ணன் அழகிரிதான் எனக்கு எல்லாமே. நான் எப்போதுமே அவரது தம்பிதான். அழகிரியின் மொழிப் பிரச்சினையில் உதவி செய்வதற்காக டில்லிக்குச் சென்றேன்.

*அழகிரி பாஜகவுக்கு ஆதரவு அளிக்கப் போகிறார், தனிக்கட்சி தொடங்கப்போகிறார் என்றெல்லாம் தகவல்கள் வருகின்றன. உண்மை என்ன?*

16ஆம் திகதி (இன்று) அண்ணனின் வீட்டில் அவரது ஆதரவாளர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடக்கிறது. அப்போது அண்ணன் சில முடிவுகளை அறிவிப்பார்.

*ரஜினியுடன் என்ன பேசினார் அழகிரி?*

தான் கட்சியில் இருந்து நீக்கப்பட்டது குறித்துப் பேசினார். ரஜினி வருத்தம்தோய அதைக் கேட்டுக்கொண்டார். அழகிரி தனது எதிர்கால அரசியல் திட்டங்கள் குறித்து ரஜினியுடன் நிறையப் பேசினார்.

நம்பிக்கையின் அடிப்படையில் அங்கே என்னையும் இருத்தி வைத்திருந்தார்கள். அதனால், நான் இதற்கு மேல் வெளிப்படையாக நான் எதுவும் சொல்லக் கூடாது என்று முடித்துக் கொண்டார்.

### கனிமொழிக்கு தூது

அழகிரி தரப்பில் இருந்து முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவர் கனிமொழியை சந்தித்து அழகிரிக்கு ஆதரவு தரும்படி கேட்டிருக்கிறார். இதுகுறித்து கனிமொழி வட்டாரங்கள் கூறுகையில், கடந்த வியாழன் மதியம் அழகிரிக்கு நெருக்கமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கனிமொழியைச் சந்தித்து அழகிரிக்கு ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். அவரிடம் கனிமொழி, கட்சியை பலவீனப்படுத்தும் வகையில் எதுவும் செய்ய வேண்டாம். அண்ணனை பொறுமையாக இருக்கச் சொல்லுங்கள் என்று சொன்னார்.

பின்னர் மாலையில் முன்னாள் அமைச்சர் ஒருவர் அழகிரி சார்பாக கனிமொழியைச் சந்தித்துப் பேசினார். அவரிடமும் இதையேதான் கனிமொழி கூறியுள்ளார் என்றனர்.

இதற்கிடையே மு.க.அழகிரியை நேரில் பிடித்து அவரிடமே ரஜினியின் சந்திப்பு மற்றும் இன்றைய அரசியல் நிலை குறித்துக் கேட்டோம்.

*ரஜினிகாந்தைச் சந்தித்தன் நோக்கம் என்ன?*

அவர் நடித்த கோச்சடையான் திரைப் படம் வெளிவர உள்ள நிலையில் அவருக்கு வாழ்த்து தெரிவித்தேன். நாங்கள் இருவரும் நீண்ட கால நண்பர்கள். தனிப்பட்ட முறை யில் பல்வேறு விஷயங்களைப் பேசிக்கொண் டோம். அதையெல்லாம் வெளியில் சொல்ல முடியாது.

*சமீப காலமாக மிக முக்கிய பிரமுகர்களையெல்லாம் சந்தித்து வருகிறீர்களே. இதில் ஏதாவது அரசியல் நோக்கம் உள்ளதா?*

எனது நண்பர்களை மரியாதை நிமித்தமாகச் சந்திக்கிறேன்.

*நீங்கள் புதிய கட்சி தொடங்கப் போவதாகவும் திமுகவை எதிர்த்துத் தேர்தல் பரப்புரை செய்யப் போவதாகவும் செய்திகள் வருகின்றனவே?*

தற்போது புதிய கட்சி தொடங்கும் முடிவை எடுக்கவில்லை. அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆதரவாளர்களுடன் பேசி முடிவு எடுப்பேன்.

*நீங்கள் வேறு கட்சியில் சேருவீர்களா? அல்லது திமுகவிலேயே இருக்க விரும்புகிறீர்களா?*

நானும் எனது ஆதரவாளர்களும் தொடர்ந்து திமுகவில்தான் நீடிக்க விரும்புகிறோம். கட்சியில் இருந்து கொண்டே மக்கள் பணியாற்ற நினைக்கிறோம். வேறு எந்த முடிவும் தற்போது எடுக்கவில்லை - என்றார்.



# கல்லறைத் தோட்டத்தில் துயிலும் 'கார்ல் மார்க்ஸ்'

உலகிலேயே அழகும், அமைதியும், ஏகாந்தமும் நிலவும் தோட்டங்களில் ஒன்றாக இது இருக்கக்கூடும். நூற்றாண்டுகளைக் கடந்த மரங்கள் சூழ்ந்த, மலைப்பாங்கான சரிவுகளில், புதிர்ச் சுற்றுகளைப் போலச் சுழலும் பாதைகள் நிறைந்த இடம் இது. உலகையே மாற்றிய அறிஞர்கள் இங்கே இறுதித் துயில் கொள்கிறார்கள்.

வடக்கு லண்டன் பகுதியில் 1839இல் திறக்கப்பட்ட கல்லறைத் தோட்டம் இது. கிழக்கு, மேற்கு என்று இரண்டு பகுதிகளைக் கொண்ட இத்தோட்டம் பாரம்பரிய இயற்கைப் பூங்காவாகவும் போற்றிப் பராமரிக்கப்படுகிறது.

இதன் கிழக்குப் பகுதியில்தான் உலக மக்களின் சிந்தனைப் போக்கையே மாற்றிய பேரறிஞர் கார்ல் மார்க்ஸ் துயில்கிறார். நாவலாசிரியர் ஜார்ஜ் எலியட், வெர்ஜினியா வுல்ஃபின் தந்தை விமர்சகர் லெஸ்லி ஸ்டீபன், விஞ்ஞானி மைக்கேல் பாரடே, சமீபத் தில் காலமான வரலாற்றறிஞர் எரிக் ஹாப்ஸ்பாம் போன்றவர்களின் கல்லறைகள் இங்குதான் உள்ளன.

சாவு எவ்வளவு மதிப்புள்ளது என்பதைப் பார்க்க ஒருவர் நிச்சயம் ஹைகேட்டுக்கு வர வேண்டும். கோத்திக் பாணியில் அழகுற வடிவமைக்கப்பட்ட நினைவுக் கற்களும், சமாதிகளும் இந்த இடத்தை ஒரு அருங்காட்சியகமாக மாற்றியிருக்கின்றன.

மரங்கள், செடிகள், காட்டுப் பூக்கள், புதர்களாக அடந்திருக்கும் இப்பகுதி பறவைகள் மற்றும் நரி போன்ற சிறிய பிராணிகளின் இருப்பிடமாகவும் உள்ளது.

ஹைகேட் தோட்டத்தின் நாயகர் என்றால் அவர் கார்ல் மார்க்ஸ்தான். கார்ல் மார்க்சின் கல்லறையைப் பார்க்க உலகம் முழுவதும் இருந்து பயணிகள் தினந்தோறும் வருகின்றனர். பார்வைக்குக் கட்டணமும் உண்டு. அழகிய பளிங்குப் பீடத்தின் மீது மார்க்சின் தாடியுள்ள பெரிய முகம் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த நினைவிடத்தில் கம்யூனிஸ்ட் அறிக்கையின் புகழ்பெற்ற வாசகமான உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அதற்குக் கீழே மார்க்ஸ் சொன்ன இன்னொரு வாசகமும் பொறிக்கப்பட் டுள்ளது.

தத்துவவாதிகள் பல்வேறு விதங்களில் இந்த உலகத்தைப் பற்றிய விளக்கத்தை மட்டுமே சொல்லியிருக்கிறார்கள்; என்றாலும், அதை மாற்றுவதுதான் முக்கியமான விடயம்.

பேதங்கள், அநீதிகள் அதிகமாகிவரும், மனித குலத்தின் விடுதலைக்கு சாத்தியங்கள் மீதம் இருக்கின்றவா என்பதை இன்னமும் யோசித்துக்கொண்டிருப்பதைப் போல, ஹைகேட் தோட்டத்தில் உள்ள கார்ல் மார்க் சின் உருவச் சிலை வீற்றிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# காகித உருவாக்கத்தின் கனதியான கதை

காய் லூன் (Cai Lun), கியாங் (Gui yang) என்னும் ஊரில் கி.பி. 50இல் பிறந்தார். இவர் கி.பி. 75ஆம் ஆண்டு சீனாவின் ஹான் அரச வம்சச் சபையில் அடிமைப் பணியாளனாகச் சேர்ந்தார். அந்தக் காலத்தில் சீனாவில் அரசவைப் பணியாளர்களுக்குப் பல கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தன. அதையெல்லாம் மீறித்தான் லூன் அங்கு வேலை பார்த்துவந்தார்.

முதலில் ஏவல் பணிகள் மட்டுமே லூனுக்கு வழங்கப்பட்டு வந்தன. எந்தப் பணியாக இருந்தாலும் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை முடிப்பதில் லூன் கண்ணும் கருத்துமாக இருந்தார். வேலையில் அவர் காட்டிய அர்ப்பணிப்பால் அவருக்கு வேலையில் உயர்ந்த பொறுப்புக் கொடுக்கப்பட்டது. அரசவை உயர் அதிகாரிகளின் செல்வாக்கும் அவருக்குக் கிடைத்தது. மேலும் மன்னன் ஹீயின் (He) நன்மதிப்பையும் விரைவாகப் பெற்றார். அதனால் பதவி உயர்வு அளிக்கப்பட்டுக் கி.பி. 89ஆம் ஆண்டு அரசின் கருவிகள் மற்றும் ஆயுதத் தயாரிப்பு அலுவலகத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். ஹான் அரச வம்சம் முறையான எழுத்து மரபு கொண்டது. அரசு ஆவணங்கள், ஒப்பந்தங்கள், அறிவிப்புகள் போன்றவற்றை எழுத்து முறையில் ஆவணப்படுத்தும் வழக்கத்தை அவர்கள் பின்பற்றி வந்தனர். களிமண்ணால் உருவாக்கப்பட்ட சிலேட்டு போன்ற சாதனமும், பட்டுத் துணிகளுமே அதுவரை எழுதுவதற்குப் பயன்பட்டு வந்தன. அவை கையாள்வதற்குக் கடினமானதாகவும் பட்டுத்துணிகள் விலையுயர்ந்தவையாகவும் இருந்தன. அதனால் இந்தப் பழைய முறைகளுக்கு மாற்றாகப் புதிய பொருளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இருந்தது. இந்த நிலையில் அரச தயாரிப்பு அலுவலகத்தின் பொறுப்பாளரான காய் லூன், சுய ஆர்வத்தால் புதிய பரிசோதனைகளை முயன்று பார்த்தார். அப்படித்தான், மரத்துகள்களைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் புதிய தொழில்நுட்பத்தை அவர் கண்டுபிடித்தார். இதற்கு ஆதாரமாக இருந்தது குளவி கூடு கட்டும் முறைதான்.

ஒரு நாள் குளவி மரத்தைத் துகள்களாக்குவதைக் கவனித்தார். அது கூடு கட்டுவதற்காக மரத்தைக் குடைந்து துகள்களைச் சேகரித்துக் கொண்டிருந்தது. அப்படிச் சேகரித்த துகள்களை உமிழ் நீரில் நனைத்துக் கூடு கட்டியது அந்தக் குளவி. அப்போது எழுதுவதற்காகப் புதிய சாதனம் தயாரிக்கும் வேட்கையில் இருந்த லூனுக்குப் பொறி தட்டியது. இதுபோன்ற மரத் துகள்களையே எழுதுவதற்கான சாதனம் தயாரிக்கும் மூலப் பொருளாக மாற்றலாம் என நினைத்தார்.

காய் லூன் முதலில் கண்டுபிடித்த தயாரிப்பு முறை, மல்பெர்ரி மரப் பட்டைகளை மூலப்பொருளாகக் கொண்டதாகும். இந்தத் தயாரிப்பு முறையைக் குளவியின் செயல்முறையை அடிப்படையாகக்கொண்டு ஐந்து நிலைகளாகப் பிரித்தார். நசுக்கப்பட்ட மர நார்களை நீரில் ஊறவைத்து, வேகவைத்து, நன்கு ஊறி ஒன்றுடன் ஒன்று அவை கலக்க வேண்டும். பிறகு அக்கலவையில் உள்ள நீரை வடிகட்ட வேண்டும். எஞ்சும் மரத் துகள்களை விரிப்பில் இடவேண்டும். விலங்குகளின் தோல்களால் ஆன விரிப்பில் வைக்கப்பட்ட மரத் துகள்களின் கலவைக்கு நல்ல அழுத்தம் கொடுக்க வேண்டும். இறுதியில் விரிப்பில் உலர்ந்த பொருள்தான் காகிதம் என இன்று நாம் அழைக்கும் எழுதப் பயன்படும் சாதனம். ஆனால் லூன், இந்த முறையை அவ்வளவு எளிதாகக் கண்டுபிடித்துவிடவில்லை.

காய் லூன் கண்டுபிடித்த இந்தக் காகித வடிவம் முதலில் ச்சீ (chi) என அழைக்கப்பட்டது. அவர் தன் புரவலர்களில் ஒருவரான அரச துணைவி டெங்க்கிடம் கி.பி.102இல் இதனை முதலில் காண்பித்தார். ச்சீ மாதிரிகள் அரசி டெங் மூலமாக அப்பிரதேசத்தின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுக் கருத்துக் கேட்கப்பட்டது.

இறுதியில் செம்மைப்படுத்தப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட காகிதத்தையும் தயாரிப்பு முறைகுறித்தான அறிக்கையையும் கி.பி. 105இல் ஹான் வம்ச அரசர் ஹீயின் அவையில் சாய் லூன் அறிமுகப்படுத்தினார். அவரின் தொழில்நுட்ப முறை அங்கீகரிக்கப்பட்டது. சாய் லூனுக்கு பிரபு அந்தஸ்து அளிக்கப்பட்டது. இன்றைய நவீனத் தொழில்நுட்ப முறைக்குச் காய் லூன் கண்டுபிடித்த இந்த முறைதான் ஆதாரம்.



காய் லூன் கண்டுபிடித்த இந்தக் காகித வடிவம் முதலில் ச்சீ (chi) என அழைக்கப்பட்டது. அவர் தன் புரவலர்களில் ஒருவரான அரச துணைவி டெங்க்கிடம் கி.பி.102இல் இதனை முதலில் காண்பித்தார். ச்சீ மாதிரிகள் அரசி டெங் மூலமாக அப்பிரதேசத்தின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுக் கருத்துக் கேட்கப்பட்டது.




# தொழில்நுட்பத்தை குறைகூறாதீர்கள்...

■ இ.பரணீதரன்

சங்க காலத்தில் தன் நண்பன், மன்னன் கோப்பெருஞ் சோழன், வடக்கிருந்து உயிர் துறக்கப் போகும் செய்தியறிந்த புலவர் பிசிராந்தையார், தானும் வடக்கிருந்து உயிர் துறக்க முடிவு செய்து நண்பனைத் தேடி வருகிறார். இதில் வியப்பென்னவென்றால் இவர்கள் இருவருமே அதுவரை ஒருவரையொருவர் நேரில் கண்டதில்லை. அதேபோல் துரியோதனன் - கர்ணன் நட்பும், நட்புக்கு இலக்கணமாகச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இப்படி மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்ட நட்புக்கு, புதிய வடிவமாகத்தான் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு பேனா நட்பு என்ற முகமறியா நண்பர்கள் வட்டம் உருவானது. பலரும் பல்வேறு ஊர்களில் வசித்தாலும், நேரில் சந்தித்துக் கொள்ளாமலே தங்களது நட்பினை கடிதங்கள் மூலம் வளர்த்து வந்தனர்.

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, பேனா நட்பு என்பது, வடிவம் மாறி, இன்று சமூக வலைதளங் களாக உருப்பெற்றுள்ளன. இவற்றின் மூலம் நம் சிறு வயது நண்பர்கள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழகத் தோழர்களை உலகின் எந்த மூலையில் இருந்தாலும் கண்டுபிடித்து அவர்களு டன் நட்பைப் புதுப்பித்துக் கொள்ளமுடியும். மேலும், நண்பர்களின் நண்பர்களையும் நாம் நட்பாக்கிக் கொள்ளமுடியும். ஒருமித்த கொள்கை களும் கருத்துகளும் உடையவர்கள் ஒரு குழு வாகச் செயல்பட முடியும். இன்றைய காலகட்டத்தில் அரசியல் கட்சிகள், தலைவர்கள், சினிமா நட்சத்திரங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும், நட்பு வட்டத்தை விரிவுபடுத்திக்கொள்ளவும் சமூக வலைத் தளங்களையே பயன்படுத்துகின்றனர். இன்று தேர்தல் பரப்புரைகள்கூட தற்போது இவற்றின் மூலமாகத்தான் [illegible] பெறுகின்றன. இதன் மூலம் வேட்பாளர்களின் வாக்குறுதிகள் இளைஞர் சமுதாயத்தை எளிதில் சென்றடைகின்றன. ஆனால், அதே நேரத்தில் இந்த விடயத்தில் நன்மையோடு தீமையும் சேர்ந்தே இருக்கிறது. இது போன்ற சமூக வலைதளங்களில் உறுப்பினர்களாகச் சேரும் நபர்கள், தங்களைப் பற்றிய உண்மைத் தகவல்களை மறைத்து, போலியான பெயர்களில் மற்றவர்களை ஏமாற்றுவதும் நடக்கிறது. இதில் பெரும்பாலும், ஆண்கள் தங்களைப் பெண்களாகச் சித்திரித்து ஏனைய பெண்களின் நட்பைப் பெற்று, அவர்களைக் காதல் வலையில் வீழ்த்த முயற்சிப்பதும், சில பெண்கள், ஆண்களை ஏமாற்றி பணம் பறிக்க முயல்வதும் தொடர்கதையாகி வருகிறது. மேலும், பிரபலமானவர்களின் பெயரில் சமூக வலைத்தளக் கணக்கைத் தொடங்கி, அவரே கருத்து வெளியிடுவதுபோல கருத்துகளை வெளியிட்டு, அப்பிரபலத்தின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் செயல்களும் அவ்வப்போது நடைபெறுகின்றன.

இத்தகைய குற்றங்களை கண்காணிப்பதற்கென்றே தனியாக 'சைபர்' குற்றப் பிரிவு பொலீஸார் செயற்பட்டு வருகின்றனர். இவர்களது பணி, இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் தகவல் தொழில்நுட்பத்துறையில் கைதேர்ந்த குற்றவாளிகளைக் கைது செய்வதுதான். இலங்கையில் அவர்கள் எவ்வளவு திறம்படச் செயற்பட்டு எத்தனை குற்றவாளிகளை இதுவரையில் கைது செய்து நீதியின் முன் நிறுத்தியிருக்கிறார்கள் என்றால், அது கேள்விக்குறிதான்.

இளைஞர்கள் சமூக வலைதளங்களின் பயன்பாட்டை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், அதனை ஒரு பொழுதுபோக்கு அம்சமாகக் கருதி தங்களின் முழு நேரத்தையும் இதிலேயே கழிக்கின்றனர். நண்பர்களை உருவாக்கிக் கொள்ளவும், நட்பு வட்டத்தைப் பெரிதாக்கிக் கொள்ளவும், பயனுள்ள பல்வேறு தகவல்களைப் பகிர்ந்துகொள்ளவும் உருவாக்கப்பட்ட இந்த சமூக வலைதளங்கள், கிட்டத்தட்ட இளைஞர்களை இணைய அடிமைகளாகவே மாற்றி விட்டன என்பது கசப்பான உண்மையே.

சமூக வலைதளங்கள், உலகையே நட்பு என்னும் குடைக்குள் அடக்கி, உலகை ஒன்றாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டவை. ஆனால், இவ்வ இளைஞர்களின் சிந்தனை, செயற்பாடு மற்றும் பொன்னான நேரம் அனைத்தையும் தின்று தீர்த்துவிடும் சமூகக் கவலைத் தளமாக மாறி வருகின்றன என்பதும் கவலையளிக்கும் செய்தி.

ஒரு சில தற்கொலைகளுக்கு சமூக வலைத்தளங்களே காரணம் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து, முகப்புத்தகம் போன்ற சமூக வலைத் தளங்களை இலங்கை அரசு தடை செய்யப்போவதாக அண்மையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. ஆனால் அவை பொய்யான கருத்துக்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்னர் அறிவித்தார். சகல கண்டுபிடிப்புக்களிலும் நன்மையும் தீமையும் கூடவே இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தும் நாம்தான் அதில் எதனை அதிகமாக உபயோகிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதைவிடுத்து எமது தவறான பாவனைக்காக தொழில்நுட்பங்களைக் குறை சொல்லக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனிவா கள நிலவரம்

● இந்திரா

ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத் தின் திருத்தப்பட்ட இரண்டாவது வரைவு நேற்று உறுப்பு நாடு களுக்கு வழங்கப்பட்டன. முதல் வரைவு தமிழர் தரப்பில் கடும் கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், இந்த இரண் டாவது வரைவு ஆரம்பத்தில் தமிழர்களிடம் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

முதல் வரைவு வெளியானபோது அதில் சர்வதேச விசாரணை ஒன்று வலியுறுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டன என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ அறிக்கை தவிர, ஏனைய தமிழ்க் கட்சிகள், அரசியல் வாதிகள் (இதில் கூட்டமைப்பின் அரசியல் வாதிகளும் உள்ளடக்கம்) இந்த வரைவை முழுமையாக எதிர்த்தனர்.

பெரும் சர்ச்சையை முதல் வரைவு ஏற்படுத்தியமைக்கான காரணம், இந்தமுறை சர்வதேச விசாரணை ஒன்றுக்கான கோரிக்கை தீர்மானமாக முன்வைக்கப்படும் என்று ஏற்படுத்தப்பட்ட பிம்பம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இந்த விம்பத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்காற்றியது. எனவே கூட்டமைப்புக்கு எதிரான கட்சிகள் முதல் வரைவைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு கூட்டமைப்பையும் போட்டுத் தாக்கின.

ஆனால், இந்த வரைவு காத்திரமான சில உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கிறது என்று கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் போன்றவர்கள் கூறிவந்தனர். எனினும் தீர்மானத்தின் முதல் வரைவை எதிர்ப்போரின் குரலே ஓங்கியிருந்தது.

முதல் வரைவில் கூறப்பட்டிருந்த பரிந்துரைகளின் 8ஆவது பந்தியில் கூறப்பட்டிருந்த விடயங்களே சாதகமாகவும் பாதகமாகவும் விமர்சிக்கப்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன.

"உருப்படியான விளைவுடன் கூடிய, நம்பத்தகுந்த தேசிய செயல்திட்டம் ஒன்றை உள்நாட்டில் ஏற்படுத்தத் தவறியதன் காரணமாக சுயாதீனமான நம்பத்தகுந்த சர்வதேச விசாரணை ஒன்றின் தேவை எழுந்திருக்கின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரை மற்றும் முடிவுகளை வரவேற்கும் அதேவேளை, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை நோக்கிய உள்நாட்டு நடவடிக்கைகளை மற்றும் அதுபோன்ற தேசிய நடவடிக்கைகளை ஆணையாளர் அலுவலகம் மதிப்பிடுவதுடன் இலங்கையில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில், விசேட நடவடிக்கைக்கான நெறிமுறைகளின் உள்ளடக்கங்களையும் பெற்று விசாரணையும் நடத்த வேண்டும். இது தொடர்பிலான வாய்மூல அறிக்கையை 27ஆவது கூட்டத் தொடரிலும் முழுமையான அறிக்கையை 28ஆவது கூட்டத் தொடரிலும் முன்வைக்க வேண்டும்" என்று அந்தப் பந்தியில் கூறப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் இலங்கையில் உள்ளக விசாரணை ஒன்றை நடத்துவதற்கே இந்தப் பிரேரணை மீண்டும் கால அவகாசம் வழங்கியிருக்கிறது என்றும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவல கத்திற்கு வெறுமனே கண்காணிக்கும் அதி காரம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் காட்டமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

தமிழர் தரப்பில் இருந்து எறியப்பட்ட இந்தக் காட்டமான விமர்சனங்களால், தீர்மானத்தை முன்வைத்த அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகளும் ஏனைய நாடுகளும் ஆடிப்போய்விட்டதென்னவோ உண்மை. தமிழர்கள் தீர்மானத்தை அடியோடு நிராகரிக்கிறார்கள் என்ற சாரப்பட எழுப்பப்பட்ட கருத்துக்களை அடுத்து, அப்படியானால் இந்தத் தீர்மானத்தையே கைவிடுவோம் என்று சில நாடுகள் செல்ல மிரட்டல் விடுமளவிற்கு நிலைமை முன்னேறியது.

இந்த நிலைமையைச் சமாளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கடுமையாக முயற்சிக்க வேண்டியிருந்தது. விமர்சனங்கள் தமிழ் மக்களினதோ அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதோ உண்மையான கருத்து அல்ல என்று மேற்கு நாடுகளின் அதிகாரிகளிடம் கூட்டமைப்பின் உயர் மட்டம் மன்றாட வேண்டிய நிலைமையையும் இது ஏற்படுத்தியது.

இதனை அடுத்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்று அவசரமாக, கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ கருத்தாக வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை, முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் முதல் வரைவு தொடர்பில் மிகக் கவனமாகக் கருத்துக்களை முன்வைத்தது.

"ஒரு கட்டத்தில் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் ஜெனிவாவில் தெரிவித்த விமர்சனங்கள் குறித்தே எம்மிடம் கேள்வி எழுப்பும் நிலை ஏற்பட்டது. அது அவர்களின் சொந்தக் கருத்து என்றும், ஜனநாயகக் கட்சி ஒன்றுக்குள் இப்படிக் கருத்து முரண்பாடுகள் கொண்டவர்கள் இருப்பதைத் தவிர்க்க முடியாது என்றும் அவர்களுக்குப் புரிய வைத்து, கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு அது வல்ல என்று மன்றாட வேண்டியிருந்தது. சிலரின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் இந்த நிலை ஏற்பட்டது" என்றார் கூட்டமைப்பின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர்.

இதை அடுத்தே கூட்டமைப்பு தனது உத்தியோகபூர்வ கருத்தை அறிக்கையாக வெளியிட்டது. தீர்மானத்தின் முதல் வரைவை அது வரவேற்றது. எனினும் போர்க்குற்ற விசாரணையில் மேலும் இறுக்கமான நிலைப்பாடு வேண்டும் என்று அது வலியுறுத்தியது. அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

அமெரிக்கா, பிரிட்டன் முன்னாள் யூகோஸ்லேவிய குடியரசு நாடான மொண்டினிகாரோ, மெஸிடோனியா, மொறீஸியஸ் ஆகிய நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25ஆவது அமர்வை ஒட்டி இலங்கை தொடர்பாக முன்வைத்துள்ள தீர்மான நகலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கவனமாகப் பரிசீலனை செய்தது. இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் கௌரவம், சமத்து வம், நீதியுடன் வாழக்கூடிய வகையில் நிலையான சமா தானத்தையும் நல்லிணக்கத்தையும் எட்டுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திடசித்தம் கொண்டுள்ளது. அமைதியான, ஐக்கிய இலங்கையை அடைவதற்கு பொறுப்புக் கூறும் விடயத்தில் தெளிவான முன்னேற்றமும், உண்மை யான நல்லிணக்கமும் அவசியமான அடிப்படைகள் என நாம் நம்புகிறோம்.

உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வு எட்டப்பட்டு, அதனடிப்படையில் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது, இப்போது நாட்டை இந்த அரசு கொண்டு போய் நிறுத்தியுள்ள தீங்கான போக்கு நிலையிலிருந்து விடுவித்து வழமை நிலைக்கு மீளத்திருப்பிக் கொண்டு வருவதற்கு மிக அத்தியாவசியமானதாகும்.

இராணுவம் பெருமளவு நிலத்தை ஆக்கிரமித்திருப்பது, சிவிலியன் வாழ்வில் இராணுவத்தின் அதீத தலையீடு, வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பெண்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக அதிகரித்து வரும் முறையீடுகள் என்பனவே தமிழ் மக்களை இப்போது குறிப்பாகக் கவலை கொள்ள வைத்துள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் குடிப்பரம்பல் கட்டமைப்பை மாற்றுவதிலும் இந்தப் பிரதேசத்தின் கலாசார, மொழியியல் அடையாளங்களை சீரழிப்பதிலும், இலங்கை அரசு தீவிரத்தோடு ஈடுபட்டிருக்கின்றது.

இத்தகைய செயற்பாடுகள் நல்லிணக்கத்துக்கு உகந்த சூழலை உருவாக்க மாட்டா என்பதோடு, நாட்டின் மீது தமிழ் மக் களுக்கு நம்பிக்கையையும் ஏற்படுத்தமாட்டா.

ஆகவே, போர்க் காலத்தில் இரு தரப்பினராலும் புரியப்பட்ட மீறல்கள் மற்றும் போர் முடிந்த காலம் முதல் நாடு முழுவதும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் ஆகிய இரண்டும் குறித்தும் விசாரிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வழிநடத்தலில் சர்வதேச விசாரணையை நிறுவுவதற்கு உதவும் விதத் தில் தீர்மானம் அமைந்துள்ளமையை நாம் வர வேற்கிறோம்.

இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்த இணைத் தரப்புக்கள் வரும் வாரங்களில் இந்த நகலில் மேலும் திருத்தங்களைச் செய்து வரவிருக்கும் விசாரணைப் பொறிமுறையைத் தெளிவுபடுத்தி வலுப்படுத்தும் என எதிர்பார்க்கிறோம்.

தற்போது முன்வைக்கப்பட்டு, பரிசீலனையில் இருக்கும் நகல் வடி வத்தின் அடிப்படை, இலங்கையில் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தச் செய்யும் திசை நோக்கிய பாதையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் குறிப்பிடத்தக்க அடுத்த அடியாக அமையும்.

இந்த அறிக்கை சூட்சுமமாகச் சில விடயங்களைத் தொட்டு நிற்கிறது. போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்று இந்தத் தீர்மான வரைவு கோடிகாட்டுவதாகக் கூட்டமைப்பின் அறிக்கை தொட்டு நிற்கிறது. ஏனைய தமிழ்த் தரப்புகள், சர்வதேச விசாணை ஒன்று கோரப்படவில்லை என்று அமெரிக்காவையும் மேற்குலக நாடுகளையும் விமர்சித்துக் கொண்டிருக்கையில், கூட்டமைப்பு மட்டும் அதில் சர்வதேச விசாரணை ஒன்று கோரப்பட்டிருப்பதாகக் கோடிகாட்டுவதுடன் அது இனிவரும் நாள்களில் மேலும் தீவிரமாக்கப்பட - இறுக்கமாக்கப்பட - வேண்டும் என்றும் கோரி நிற்கின்றது.

இந்தப் பின்னணியில் தீர்மானத்தின் இரண்டாவது வரைவு உறுப்பு நாடுகளிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வரைவில் கூட்டமைப்பு கோரியிருந்த திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கூட்டமைப்புக் கோரியிருந்த வகையில் போருக்குப் பின்னர் தற்போதும் தொடரும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் புதிய வரைவு கருத்தில் எடுத்துக் கொள்கிறது.

அத்துடன், இலங்கையின் மனித உரிமைகள் நிலையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தொடர்ந்து கண்காணிப்பதுடன் அது தொடர்பிலான தேசிய நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும்-

பொருத்தமான வல்லுநர்களின் உதவியுடன், தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படும் மரபை ஒழிக்கும் நோக்குடனும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் நோக்குடனும் இரு தரப்பினராலும் புரியப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களை ஒட்டுமொத்தமாக விசாரிப்பதுடன் அத்தகைய மீறல்களதும் குற்றங்களதும் விவரங்களையும் அவை நடைபெற்ற சூழ்நிலைகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்றும் -

அது தொடர்பிலான வாய்மொழி அறிக்கையை 27ஆவது கூட்டத் தொடரிலும் முழுமையான அறிக்கையை 28ஆவது கூட்டத் தொடரிலும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் புதிய வரைவு கோரி நிற்கின்றது.

புதிய வரைவில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த மாற்றம் தீர்மானத்தை மேலும் இறுக்கமாக்கி, சர்வதேச விசாரணை என்ற விடயத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

"அதாவது, இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நடத்தக்கூடிய விசாரணைப் பொறிமுறைக்கான வரைவிலக்கணத்தை – அந்தப் பொறிமுறை நிறைவு செய்ய வேண்டிய தேவைப்பாடுகளை, தற்போதைய திருத்தப்பட்ட நகல் பிரேரணை வரைவு மேலும் தெளிவாகவும், குறிப்பாகவும் வெளிப்படுத்தி நிற்கின்றது" என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு ஊடாக பெறப்படக்கூடிய மிகச் சிறந்த அடைவாக இந்த இரண்டாவது வரைவைக் கொள்ளலாம் என்று தற்போது ஜெனிவாவில் நிற்கும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கிறார்.

இந்தத் தீர்மான வரைவு அப்படியே நிறைவேற்றப்பட்டால், அது தமிழர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்று பல நாட்டு அரசியல் வல்லுநர்களும் எதிர்வுகூறுகிறார்கள். இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அது ஐ.நா. ஆணையாளருக்கு விசாரணையை முன்னெடுக்கும் அதிகாரத்தைக் கொடுக்கும். அதன் மூலம் அவர் எந்தவகையிலான விசாரணையை முன்னெடுப்பது என்று தீர்மானிப்பார். வெறுமனே தரவுகளைத் தேடியறியும் அல்லது உண்மைகளைத் தேடியறியும் ஒரு குழுவாக அல்லாமல் குற்றங்களுக்குப் பொறுப்பான வர்களைக் கண்டறிந்து பகிரங்கப்படுத்துவதுடன் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை குறித்தும் அது பரிந்துரைகளை வழங்கக்கூடும் என்று கூறுகிறார்கள். எனவே தீர்மானம் மூல மாக ஒரு விசாரணை ஆணைக்குழுவை நிய மிப்பதிலும் பார்க்க, ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்படுவதன் மூலம் அதிகூடிய பயனைப் பெறமுடியும் என்பது அவர்களது வாதம். ஹெய்ட்டி போன்ற நாடுகளிலும் ஏற்கனவே இத் தகைய பொறிமுறைகள் செயற்படுத்தப்பட்டிருக் கின்றன என்பதால் இந்தத் தீர்மான நகல் கூறும் விடயங்கள் பாதுகாப்பானவை முன்னேற்றகரமா னவை என்பதும் அவர்களின் கருத்து.

என்றாலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தல், இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கக் கோரிய சொற்பதத்தை நீக்கியமை போன்ற பாதகமான அம்சங்களும் இரண்டாவது வரைவில் காணப்படுகின்றன.


என்னதான் தீர்மானத்தின் இரண்டாவது வரைவு மிகச் சிறப்பானது என்று கொண்டாடப்பட்டாலும், இது அப்படியே நிறைவேற்றப்படுமா என்பது கேள்விக்குரியதே. அடுத்தடுத்து நடக்க இருக்கும் பக்கக் கூட்டங்களில் பிரேரணை நீர்த்துப் போகச் செய்யப்படக்கூடும். குறிப்பாக கடைசி நேரத்தில் சகுனி வேலைகளில் ஈடுபடும் இந்தியா, இந்த முறையும் அவ்வாறான கைங்கரியத்தில் ஈடுபடக் கூடும் என்ற பரவலான எதிர்பார்ப்பு இருக்கிறது. சிலவேளைகளில் தீர்மானம் இன்னும் இறுக்கமாகவும் கூடும். அவை அனைத்தும் தமிழர்களின் இராஜதந்திர நகர்வுகளின் வேகத்திலும் விவேகத்திலுமே தங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது பிள்ளையைத் தானே கடத்த முயன்றாராம் டில்ஷான்

கிரிக்கெட் வீரர் திலரட்ண டில்ஷான் தங்களது ஒரே பிள்ளையைக் கடத்திச் செல்ல முயற்சிக்கிறார் என அவரது முன்னாள் மனைவி தலங்கம பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

நீதிமன்ற உத்தரவுப் படி சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும், பௌர்ணமி விடுமுறை தினத்திலும் டில்ஷான் தமது குழந்தையைச் சந்திக்க முடியும். ஆனால மருத்துவப் பரிசோதனை என்ற பெயரில் தனது பிள்ளையைக் கூட்டிச் சென்று அவுஸ்திரேலியாவுக்குத் தம்முடன் கடத்திச் செல்ல டில்ஷான் முயற்சிக்கிறார் என அவரது முன்னாள் மனைவி தமது பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (த)



# 116 வயது இளைஞர் இவர்



தனக்கு 116 வயது என்று கூறும் தர்மபால் குஜ்ஜார் தன்னுடைய தடகளத் திறமையின் மூலம் புகழ் தேடிக் கொண்டவர். அவர் கோயம்புத்தூரில் நடந்த 35 ஆவது தேசிய மாஸ்டர்ஸ் தடகள வாகையர் போட்டிகளில் 200மீற்றர் தொலைவை 46.74 வினாடிகளில் கடந்து சாதனை படைத்துள்ளார். மிகவும் நன்கு அறியப்பட்ட நூறு வயதுக்கு மேலான தடகள வீரர் பாஜா சிங்குடன் தன்னை ஒப்பிட்டுக் கொள்வதை அவர் மிகவும் விரும்புகிறார். அவர் இதே போட்டியில் செவ்வாயன்று 400மீற்றர் ஓட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் மேற்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள மீரட் மாவட்டத்தின் குதா கிராமத்தில் 6-10-1987 அன்று பிறந்தார். மிக சாதாரணமான விவசாயக் குடும்பத்தில் அவர் பிறந்தார் என அவருடைய சொந்த முகநூல் கூறுகிறது. ஆடம்பர வாழ்க்கைக்கும், உயர்கல்விக்கும் இருந்த வாய்ப்புகள் குறைவானதவை. குடும்பத்தின் முக்கிய வேலையாக விவசாயம் இருந்தது. 200 மீட்டரில் உசேன் போல்ட்டின் உலகச்சாதனை நேரம் 19.19 வினாடிகள் என்னும் போது குஜ்ஜாரின் 116 வயதுச் சாதனை பிரமிக்க வைப்பதாகும். நிகழ்ச்சிகளில் பங்கேற்க சக விவசாயிகள் தனக்கு பணம் கொடுத்து உதவுகின்றனர் என அவர் கூறியுள் ளார். சில வேளைகளில் அவருக்கும் அவர்கள் உணவும் கொடுக்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார். அரசிடமிருந்து எவ்வித நிதியுதவியையும் கேட்டதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். நிதியின்மை காரணமாக தன்னால் சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்க முடியாததமை குறித்து அவர் வருத்தம் தெரிவித்தார். பிரிட்டனில் வாழும் இந்திய வம்சாவளி வீரரான 103 வயதான பாஜா சிங் ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்ட பின் இவர் மட்டுமே உலகின் மூத்த வீரர் என்ற தகுதியைப் பெற்றுள்ளார். இவர்தான் உலகின் மூத்த மனிதராகவும், முகநூல் வைத்திருக்கும் மூத்த நபர் என்ற பெயரையும் பெறுகிறார். (த)

# பந்து வீசுவதற்கும் தயாராகிறார் யுவராஜ்



20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் போது பந்து வீச்சிலும் சிறப்பான பங்களிப்பை ஆற்ற பயிற்சி மேற்கொண்டு வருவதாக யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

முதல் முறையாக நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் ஒரே பந்துப்பரிமாற்றத்தில் அனைத்துப் பந்துகளையும் சிக்ஸருக்கு விளாசி யுவராஜ் சிங் சாதனை படைத்தார்.

அப்போது முதல் 20/20 கிரிக்கெட் என்றால் இந்திய ரசிகர்களால் யுவராஜ் சிங் பெரிதும் எதிர்பார்க்கப்படும் வீரராகியுள்ளார்.

இந்நிலையில் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் பங்களாதேஷில் இன்று தகுதிச் சுற்று ஆட்டங்களுடன் தொடங்குகிறது. இதற்காக அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன. இப்போட்டிக்கான இந்திய அணியில் இடம் பெற்றுள்ள சகலதுறை வீரர் யுவராஜ் சிங் அளித்த பேட்டியில் கூறியிருப்பது:-

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்டில் இந்தியாவின் பந்து வீச்சு சிறப்பாக இல்லை. களத்தடுப்பில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதும், இந்திய வீரர்களின் பந்தில் அதிக ஓட்டங்கள் சென்றதற்கு முக்கியக் காரணம்.

அதே நேரத்தில் 20/20 கிரிக்கெட் என்பது ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. எனவே இப்போட்டியில் நமது பந்து வீச்சு முன்பை விட சிறப்பாக இருக்கும் என்றே எதிர்பார்க்கிறேன். இப்போட்டிக்காக துடுப்பாட்டம் மட்டுமின்றி பந்து வீச்சிலும் கடுமையான பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்-என்றார்.

இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்ள இருப்பது குறித்துப் பேசிய யுவ்ராஜ் சிங், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி இரு நாட்டு ரசிகர்களுக்கும் விருந்தாக அமையும். நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்றார். (த)

# மூன்று நாடுகளில் ஐ.பி.எல்

ஆசியக் கண்டத்தின் ஏழாவது ஐ.பி.எல் போட்டிகள் ஏப்ரல் 16 முதல் நடைபெறும். மூன்று கட்டங்களாக நடைபெறும் போட்டிகளில் முதல்கட்டப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும், இரண்டாம் கட்டப் போட்டிகள் பங்களாதேஷிலும், மூன்றாம் கட்டப் போட்டிகள் இந்தியாவிலும் நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதனால் ஐ.பி.எல் அணிகளின் விளம்பரதாரர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளனர்.

எட்டு அணிகள் பங்கேற்கும் ஐ.பி.எல் போட்டிகளின் முதல் கட்டப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும் நடைபெறும். ஏப்ரல் 30ஆம் திகதி முதல் கட்டப் போட்டிகள் முடிந்து விடும். இரண்டாம் கட்டப் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்குப் போதுமான பாதுகாப்பு அளிக்க இந்திய அரசு மறுக்கும் பட்சத்தில் அவை பங்களாதேஷில் நடத்தப்படும். அங்கு மே 12 ஆம் திகதி வரை போட்டிகள் நடத்தப்படும். மே 13ஆம் திகதி தொடக்கம் போட்டிகள் முடிவடையும்வரை இந்தியாவில் நடத்தப்படும். மே 12ஆம் திகதி இறுதிக்கட்ட தேர்தல் வாக்களிப்பு முடிந்துவடைகிறது. வாக்குகள் எண்ணப்படும் மே 16 ஆம் திகதி போட்டிகள் நடைபெறாது.

இந்திய நாடாளுமன்றத்துக்கு ஒன்பது கட்டங்களாக ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெறுவதால் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க முடியாது என்று மத்திய அரசு தெரிவித்தது. இதனால் போட்டிகளை வெளிநாட்டில் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தென்னாபிரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட சில நாடுகளில் போட்டிகளை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. தென்னாபிரிக்காவில் நடத்துவதால் தங்களது விளம்பரம் பயனற்று போய்விடும் என்று பல விளம்பர நிறுவனங்கள் இந்தியக் கிரிக்கெட் சபைக்கு நெருக்கடி கொடுத்தன. இதனால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இறுதியாகத் தேர்வு பெற்றுள்ளது. இந்திய கிரிக்கெட் சபையின் முடிவை ஐ.சி.சி வரவேற்றுள்ளது. அங்கு 20/20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தகுதிப் போட்டிகளும், 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகளும் அண்மையில் நடந்து முடிந்துள்ளன. அந்நாட்டு ரசிகர்களுக்கு இதுவொரு பொற்காலம் என்று ஐ.சி.சி தலைமை நிர்வாக அதிகாரி டேவிட்ரிச்சர்ட்சன் கூறியுள்ளார். ஆசிய மண்ணில் நடப்பதாலும் மூன்று நாடுகளில் உள்ள ஆடுகளங்களில் பெரும் வேறுபாடு இருக்காது என்பதாலும் அணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளன. (த)



# ஆப்கான் கிரிக்கெட்டுக்கு உதவுகிறது இலங்கை

ஆப்கானிஸ்தானில் கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை உதவும். ஆப்கான் அதிபர் ஹமீட் கர்சாய் கடந்த வாரம் இலங்கைக்கு பயணம் செய்திருந்த சமயம் இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பினராலும் செய்து கொள்ளப்பட்டது. இதற்காக ஜனாதிபதி கர்சாயுடன் ஆப்கான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் நூர் முகமட் முராட்டும் கொழும்பு வந்திருந்தார். டெஸ்ட் விளையாடும் தரம் பெற்றுள்ள இலங்கையிடம் இருந்து கிரிக்கெட் விளையாட்டின் தரத்தை உயர்த்துவதற்கான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதில் ஆப்கான் ஆர்வமாக உள்ளது. எமது இளைஞர்களுக்கு விளையாட்டிலும் கல்வியிலும் இலங்கையின் உதவியை எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

ஆப்கான் அதிபர். அண்மையில் பங்களாதேஷில் நடைபெற்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய ஆப்கான், சுற்றுப் போட்டியை நடத்திய பங்களாதேஷின் அணியைத் தோற்கடித்து. சுற்றுப் போட்டியில் நான்காவது இடத்துக்கு முன்னேறியிருந்தது என்பதும் - இம்முறை அந்தச் சுற்றுப் போட்டியின் எந்த ஆட்டத்திலும் தோல்வியுறாமல் வெற்றியீட்டி ஆசியக் கிண்ணத்தை ஐந்தாவது தடவையாக இலங்கை சுவீகரித்தது என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடத்தப்பட்டிருக்கலாம் பிந்திய செய்தி**

*மிகப் பிந்திக் கிடைத்த செய்திகளின்படி மலேசிய விமானம் கடத்திச் செல்லப்பட்டிருப்பதற்கு நம்பகமான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக வால்ஸ்ட்ரீட் ஜேர்னல் அறிவித்துள்ளது. விமானம் கடைசியாக நிலை கொண்டிருந்த பகுதியில் நான்கரை மணி நேரத்துக்கும் மேலாக இருந்துள்ளமை பதிவுகளில் காணப்படுகின்றது. விமானத்தின் இயந்திரம் தன் சுய இயக்கத்தின் வாயிலாக பூமிக்கு அனுப்பிய சமிக்ஞைகளின்படி விமானம் 5 மணி நேரம் பறந்திருப்பது தெரிய வந்துள்ளது. எனவே 239 பயணிகளைக் கொண்ட விமானம் வேறு ஓர் அறிவிக்கப்படாத இலக்குக்கு தனிப்பட்ட காரணத்துக்காக திசை திருப்பப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்தவர்கள் கருதுகிறார்கள். அமெரிக்க பயங்கரவாதிகள் தொடர்பான நிபுணர்களின் கருத்துப்படி விமானி அல்லது வேறு ஒருவர் விமானத்தின் தொடர்பு கருவிகளின் இயக்கத்தை துண்டித்துவிட்டு வேறு ஒரு நாட்டுக்கு அதனைத் திசை திருப்பி இருக்கலாம் என்று சந்தேகிக்கிறார்கள்.*

உலக

ரெங்கன்

# மறைந்த விமானம் தேடும் பணியில் சர்வதேச முயற்சி




- மலேசிய விமான மர்மம் தொடர்கிறது. தேடுதல் பணியில் 40 கப்பல்கள்.
- 35 விமானங்கள் தீவிரம்.
- விண்கலங்களை அனுப்பி சீனாவும் தேடுதல் களத்தில் இறங்கியது.
- விஸ்தாரமான கடற்பரப்பில் சர்வதேச தேடுதல்.
- உக்ரேன் விவகாரம் : ஏட்டிக்குப் போட்டியாக ரஷ்ய நடவடிக்கை.
- உக்ரேன் எல்லையில் நேட்டோ படை பயிற்சி



மலேசிய பயணிகள் விமானத்துக்கு என்ன நேர்ந்தது என்பதை கண்டுபிடிப்பதற்கு சர்வதேச மட்டத்தில் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளது. தாய்லாந்தின் குடாக்கடல் மற்றும் தென் சீனக்கடல் பகுதியிலுள்ள விஸ்தாரமான கடற் பிரதேசத்தில் கப்பல்களும் விமானங்களும் சல்லடை போட்டு தேடும் பணியில் இறங்கியுள்ளன. அந்தப் பகுதிக்கு அமெரிக்கா தனது இரண்டாவது கப்பல் ஒன்றையும் அனுப்பி தேடுதல் வேட்டையில் உதவி வருகிறது. ஏற்கெனவே சுமார் 10 நாடுகளைச் சேர்ந்த 40 கப்பல்களும் 34 விமானங்களும் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

மலேசிய சிவில் விமானத்துறை பணிப்பாளர் நாயகம் அஸாருதீன் அப்துல் ரகுமான் தெரிவிக்கையில்; இந்த விமானம் காணாமற் போயிருப்பது மர்மமாகவே இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

தாய்லாந்தில் பட்டாயா என்ற கரையோர காரியாலயம் ஒன்றைச்சேர்ந்தபயண முகவர் சிலரை அதிகாரிகள் தீவிரமாக விசாரணை செய்தனர். இங்கு வைத்துத்தான் இரண்டு பயணிகளுக்கு அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. பின்னர் இவர்கள் தாம் திருடிய கடவுச்சீட்டுகளைப் பாவித்து விமானத்தில் ஏறினார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் தமது அடையாளத்தை மறைத்துள்ளமையில் விமானம் காணாமற் போனதில் பயங்கரவாதிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த போயிங் 777 பயணிகள் விமானம் 239 பயணிகளுடன் கோலாலம்பூரிலிருந்து புறப்பட்டு பெயிஜிங் (பீகிங்) நோக்கி செல்கையில் கடந்த சனிக்கிழமை காணாமற் போனது.

### பயங்கரவாதிகள் சம்பந்தமா?

விமானம் காணாமற் போனதில் பயங்கரவாதிகள் சம்பந்தப் பட்டிருப்பதற்கான ஆதாரம் எதுவும் கிடைத்திருப்பதாக தெரியவில்லை என்று அமெரிக்க மற்றும் வேறு அதிகாரிகளும்தெரிவித்திருந்தார்கள். விமானம் காணாமற்போனமைக்கு தாங்கள் தான் பொறுப்பு என்று தியாகிகளின் படையணி என்றஒருசீனஅமைப்புகோரிக்கை விடுத்திருப்பதாக ஒரு செய்தி கூறியது. அப்படியான ஓர் அணி இருப்பதாக இதுவரை ஆதாரம் கிடைக்கவில்லை என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இந்த படையணியின் பின்னால் இருப்பவர்கள் யார் என்றும் தெரிய வரவில்லை.

விமானம் மாயமானதற்கான காரணம் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்காத நிலையில் விமானம் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த போது வெடித்துச் சிதறியிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். அந்த உயரத்தில் எது நடந்தாலும் விமான நிலையங்களுடன் தொடர்பு இருப்பதில்லை எனக் கூறப்படுகின்றது. இன்னொரு கருத் தின்படி விமான ஓட்டி தற்கொலை செய்வதற்காக விமானத்தை சிதறடித்திருக்கலாம் என்றும் அப் படி நடப்பது மிகவும் அரிதான காரியம் என்றும் கூறப்படுகின்றது.

விமானத்துடனான தொடர்புகள் ரேடர் சாதனங்களினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டதாகவும் அந்தத் தொடர்புகள் திடீரென்று அறுந்து போனதாகவும் மலேசிய விமான அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். விமானத்தின் சமிக்ஞை தொடர்புகளும் வானொலி தொடர்புகளும் விமானியினாலேயே கட்டுப் படுத்தப்படுவதாகும்.

மியாமியைச் சேர்ந்த விமானப் பயண சட்ட நிபுணர் ஸ்டீவ் மார்க் என்பவர் இது பற்றிக் கூறுகையில் ; மிக உயரத்தில் விமானம் பறக்கும் போது இயந்திரக் கோளாறுகள் ஏற்படுவதுண்டு. அந்த நேரம் விமானியால் அதனை நிலையத்துக்கு அறிவிக்க முடியாமல் போகும். ரேடரிலும் அது மறைந்துவிடும் என்று கூறினார். எதுவானாலும் இந்த விமானத்தின் எல்லாவித தொடர்புகளும் செயற்படாமல் போயிருப்பது மிகவும் மர்மத்துக்குரியதாகவே இருக்கிறது என்றார் அவர்.

துர்அதிர்ஷ்டத்துக்குள்ளான அந்த விமானத்தில் கடைசி நேரத்தில் கள்ள பாஸ்போர்ட்டுடன் ஏறியதாகக் கூறப்படும் இரண்டு பயணிகளின் படங்கள் இப்பொழுது ஆய்வுக்குட்படுத்தப் பட்டிருக்கின்றனவென்று மலேசிய அதிகாரிகள் கூறினார்கள். விமானத்தில் கடைசி நேரத்தில் ஏறத் தவறிய 5 பேரின் பொதிகள் விமான நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறினார்கள்.

### விண்கலங்கள் மூலம் சீனா தேடுகிறது

மலேசிய விமானம் காணாமற் போன மர்மம் நீடித்துக் கொண்டிருக்கும் நிலையில் சீனா 10 விண்கலங்களைச் செலுத்தி விமானத்தின் மர்மத்தைக் கண்டறிய நடவடிக்கை எடுத்துள்ளது. சீனக்கடல் பகுதியில் விமானம் விழுந்திருக்கும் தடயங்கள் ஏதும் கிடைக்கின்றதா என்பதைக் கண்டறிய இந்த விண்கலங்கள் உதவும் என்று தெரிகின்றது. காணாமற் போன விமானத்தில் 227 பயணிகள் இருந்ததாகவும் அவர்களில் 154 பேர் சீனர்கள், 5 பேர் இந்தியர்கள், 12 பேர் விமான சிப்பந்திகள் என்று ஷின் ஹூவா அறிவித்துள்ளது.

காணாமற் போன சீன பயணிகளின் உறவினர்கள் சீன அரசை அழுத்தி வருவதன் காரணமாக விமானத்தைத் தேடும் முயற்சிகளை வேகப் படுத்துமாறு மலேசியாவை வற்புறுத்தியிருப்பதுடன் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்றையும் கோலாலம்பூருக்கு சீனா அனுப்பியிருக்கிறது.

காணாமற் போன விமானம் மலேசிய விமானத்துறைக்குரியது. எனவே விமானத்தைத் தேடுவதிலும் பயணிகளைக் காப்பாற்றுவதிலும் அவர்கள் அதிக தீவிரம் காட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமானது என்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் குயின் என்பவர் தெரிவித்தார். விமானத்தில் 150 சீனர்கள் வரை பயணிகள் இருந்துள்ளனர். எனவே இதில் அதிக பொறுப்பு நிலைப்பாட்டை சீனா எடுத்துள்ளது. அத்துடன் முழு அளவில் தேடுதல் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்றார் அவர். தேடுதலில் 10 நாடுகளின் 40 கப்பல்கள், 34 விமானங்களும் ஈடுபட்டுள்ளன. விமானம் இடை நடுவில் திருப்பி அனுப்பப் பட்டிருக்கலாம் என்ற வகையில் ஒரு ரேடார் சமிக்ஞை கிடைத்திருப்பதால் அந்தமான் கடல் பிரதேசத்திலும் தேடுதல் பணி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

### ரஷ்ய அதிபர் புட்டின் எதிர் நடவடிக்கை

உக்ரேன் பிராந்திய மாகாணமான கிரிமியாவில் ரஷ்ய படைகள் இறங்கியுள்ளதையடுத்து ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய யூனியன் நாடுகளும் அமெரிக்காவும் பொருளாதார தடையொன்றை நடைமுறைப்படுத்தக் கூடும் என்ற நிலைமை உருவாகியிருப்பதால் தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகின்றது. அந்த வகையில் ரஷ்யாவில் செயற்படும் ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்க நிறுவனங்களின் சொத்துக்களை முடங்கச் செய்வதற்கான சட்டவரைவு ஒன்றை மாஸ்கோ அதிகாரிகள் தயாரிக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதார தடை நடவடிக்கை எதிலும் இறங்கும் வாய்ப்பு ஏற்படுமானால் அதற்கு தகுந்த பதில் அடி கொடுக்கும் வகையில் ரஷ்ய அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள். ரஷ்ய நாடாளுமன்ற மேல் சபையின் அரசமைப்பு சட்ட குழுவின் தலைவ ரும் மேல் சபையின் தலைவருமான ஆந்தி ரேகினிஷாஸ் உட்பட வேறு சில நாடாளுமன்ற உறுப்பினர்க ளையும் கொண்ட குழுவொன்று இந்த வகையில் இப்பொழுது செயற்பட்டு வருகின்றது.

ரஷ்யர்களுக்கான விசா வழங்கலை அமெரிக்கா இப்பொழுது கட்டுப்படுத் தியுள்ளது. மேலும் தனிப்பட்ட ரஷ்யர் கள் மீதும் பொருளாதார தடை விதித் துள்ளது. இவர்கள் உக்ரேனில் ரஷ்ய தலையீட்டுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரிவித்திருப்பதுடன், கிரிமியாவை உக்ரேனிலிருந்து பிரித்து ரஷ்யாவுடன் இணைப்பதற்காக உத் தேச பொதுசன வாக்கெடுப்பிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. கிரிமியாவில் உள்ள மாகாண சபைஉறுப்பினர்கள் தமது மாநிலம் ரஷ்யாவுடன் இணைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித் திருப்பதுடன் மார்ச் 16 ஆம் திகதி அதற்கான பொது சன வாக்கெ டுப்புநடத்தவும் தீர்மானித்துள்ளனர்.

### நேட்டோ படைகள் உக்ரேன் எல்லையில் போர்ப் பயிற்சி

உக்ரேனின் கிரிமியா பிரதேசத்தின் தென் பகுதியில் ரஷ்ய படைகள் போய் இறங்கியுள்ளதால் ஏற்பட்டுள்ள பரபரப்பை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் உக்ரேனின் எல்லைப் பகுதியில் நேட்டோ படைகள் போர் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளன.

கருங்கடல் பகுதியில் கப்பல் பயிற்சிகளை அங்கு மோசமான கால நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக பிற்போட்டுள்ள வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் படைகள் உக்கிரேன் எல்லைப் பகுதியில் விமான பயிற்சிகளை நடத்த ஆரம்பித்துள்ளன.

போலந்தின் மத்திய பகுதியிலுள்ள லாக்ஸ் விமான தளத்தில் கடந்த செவ்வாயன்று போர்ப் பயிற்சிகள் ஆரம்பித்தன. அந்தப் பகுதியிலிருந்து 4 போலிஷ் எப் 16 எஸ் இரக விமானங்கள் பயிற்சிக்காக புறப்பட்டுச்சென்றதாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஹேர்குலிஸ் போக்குவரத்து விமானமும் அரச சிப்பந்திகளுடன் வந்து இறங்கியது. மேலும் எப் 16 போரிடும் ஜெட் விமானங்களும் 300 சிப்பந்திகளும் வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதுவானாலும் இந்தப் போர் பயிற்சியானது உக்ரேன் நெருக்கடி தோன்றுவதற்கு முன்பே திட்டமிடப்பட்டிருந்ததாக வாஷிங்டனில் அதிகாரிகள் கூறினார்கள்.

உக்ரேன் நெருக்கடிகளை கண்காணிப்பதற்காக விண்ணிலிருந்து எச்சரிக்கைகளை விடுக்கும் மற்றும் கட்டுப்பாட்டு பொறி அமைப்புகளை கொண்ட உளவு விமானங்களை போலந்து மற்றும் ரோமானிய விண் பிரதேசத்தில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக நேட்டோ தலைமை நிலையம் அறிவித்துள்ளது. இதற்கிடையில் அமெரிக்க கடற்படையின் ஏவுகணை நாசகாரி எஸ் எஸ் எஸ் ட்ருக்ஸ்டன் துருக்கியின் பொஸ்பொரஸ் குடாக்கடலை கடந்து சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது கருங்கடலை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் உக்ரேன் நெருக்கடி தொடர்பாக வாக்குவாதங்கள் முற்றிக் கொண்டிருந்த அதே வேளை ரஷ்ய நாடாளுமன்றம் அளித்த அதிகாரமொன்றையடுத்து ரஷ்ய அதிபர் புட்டின் அந்தப் பகுதியில் ரஷ்ய நலன்களை பாதுகாக்கும் பொருட்டு ரஷ்ய இராணுவத்தை அந்தப் பகுதிக்கு அனுப்பியுள்ளார். கருங்கடல் பிரதேசம் தொடர்ந்து உக்ரேனிடமே இருக்க வேண்டுமா அல்லது ரஷ்யாவுடன் இணைய வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க கிரிமிய தலைவர்கள் 16 ஆம்திகதி (இன்று) பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் சூரியகாந்தி தரும் பரிசு மழையில் நனையுங்கள்

# வாரம் 50 பரிசுகள்

# வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

## E.com computer training center

No.95 A,
Temple Road,
Jaffna.

3,500/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 10

## வெற்றி நிச்சயம்

கடந்தவார வெற்றியாளர் விவரம் நேற்றைய உதயனில்

## கிறீன் கிறாஸ் ஹோட்டல்

யாழ்ப்பாணம்.

Green Grass

7,550/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 1

## லலிதா ஜுவலறி

யாழ்ப்பாணம்.

1,000/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 5

## அருள்நாயகி

கொடிகாமம்.

## மோகன் ஸ்ரோர்ஸ்

ஏ-9 வீதி,
யாழ்ப்பாணம்

## பொதிகை மல்ரி சென்ரர்

புதுக்குடியிருப்பு.

200/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 14

## உதயா ஸ்ரோர்ஸ்

ஏ-35 வீதி, விசுவமடு

## யுனிலங்காஸ் பப்ளிகேஷன்

கொழும்பு.

## Abans காட்சியறை

கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

## அபி பேபி மாட்ஸ்

55, கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.

## பொன்னம்பலம் ஸ்ரோர்ஸ்

ஏ-9 வீதி, கரடிப் போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

## வணிகா சேர்ஜிகல்ஸ்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

500/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 20

இங்குள்ள பரிசுக் கூப்பனை வெட்டி நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அல்லது ஏ-9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி (சென்.திரேசா பெண்கள் பாடசாலை அருகில்) அல்லது 104, மேல்மாடி, பஸ் நிலையம், வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன் மாவட்ட அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளுக்கு நேரடியாக இடுங்கள்.

- ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை 6 மணிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் போட்டியாளர் விவரம் பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும்.
- ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- வெற்றிபெறுவோர் விவரம் சனிக்கிழமை உதயன் பத்திரிகையில் முழுமையாக வெளிவரும்.
- வெற்றியாளர்களுக்கான பரிசுக் கூப்பன்கள் அடுத்தவாரம் புதன்கிழமை உதயன் தலைமை அலுவலகம் அல்லது மாவட்ட அலுவலகங்களில் வைத்து வழங்கப்படும்.
- உதயன் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர் போட்டிகளில் பங்குபற்ற முடியாது.
- அபி பேபி நீட்ஸ் வழங்கும் பரிசுக் கூப்பனை உபயோகிக்க அங்கு 1000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்ய வேண்டும்.
- கிறீன்கிறாஸ் வழங்கும் 7,500/= பெறுமதியான பரிசுக் கூப்பன் [illegible] கிறீன் கிறாஸ் விடுதி அறையில் [illegible] (உணவு, ஏனையவை தவிர்த்து)

முழுப்பெயர்: ..............................
..............................
பிறந்த திகதி: ..............................
தெளிவான முகவரி: ..............................
..............................
..............................
தொடர்பு எண்: ..............................

16.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org